அடமானக்
என் பணி கடன் செய்து கொடுப்பதே!
CENTUM Optima Mortgages Inc.
Das Narayanasamy AMP
Lic# M08007147 Mortgage Agent
Cell: 416-543-6614
Tel: 905-470 2845 Fax: 905 470 2219
E-mail: das@centumoptima.com
Website: centumoptima.com


# தாய் வீடு

THAIVEEDU — யூலை 2009 — HOME & LIVING


FREE REAL ESTATE CLASSES
வீடு வாங்க, விற்க மற்றும் வருமான வரி, அடமானக் கடன் சம்பந்தமான சகல ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்
SELVA VETTYVEL
Broker of Record
Cell: 416.568.4301
Bus: 905.201.9977
HomeLife Future Realty Inc. Brokerage
205-7 Eastvale Drive, Markham, ON L3S 4N8
*Independently Owned and Operated, REALTOR®



## சர்வதேச மன்னிப்புச் சபையின்

# உலக அகதிகள் கிராமம்

படம்: கருணா

சர்வதேச மன்னிப்புச் சபையின் "உலக அகதிகள் கிராமம்" நிகழ்வும், கண்காட்சியும் ஜூலை 1ம் திகதி கனடா தினத்தன்று Harbourfront Centreஇல் நடைபெற்றது. கனடியத் தமிழர் பேரவையும் இந்நிகழ்வில் கலந்து கொண்டது. அகதிக் குழுமங்கள் தமது பண்பாட்டு அம்சங்களை பரிமாறும் வகையில், பேரவையின் தொண்டர்களான அபிராமி இளையதம்பியும் சோதிமலர் பரஞ்சோதியும் அங்கு வந்திருந்த நல்ஷா தக்லீக்கிற்கு தமிழர் பாரம்பரிய உடையான சேலையை அணிவிக்கின்றனர். பக்கம் 3

RAMAN APPLIANCES
Air Conditioning & Heating
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
General Contractors For:
• Air Conditioning • Gas Furnaces • Central Vacuum
• Air Cleaners • Gas Fireplaces • Garage Door Openers
• Security Alarm
Tel: 416.332.1989
Cell: 647.893.4414
Raman Chelliah
President
3021 Markham Rd., Unit 51,
Scarborough, ON - M1X 1L8

THE LAW OFFICE OF
GaryAnandasangaree
Tel: 416 321 1100 Fax: 416 321 1107
gary@galaw.ca

BUYING, SELLING,
INVESTING & MORTGAGE NEEDS CALL
SUN SANMUGATHAS
Broker & Manager
One stop shopping for all your mortgage & realestate needs.
Buying - Selling - Investing
PROPERTY MAX Realty Inc. Brokerage
Dir: 416.948.0693
Bus: 416.291.3000
PMCI

விபத்து
Accident Claim Services
AAA
Theven Kankesu
Tel : 416-939-8789/416-720-6587
Lawyer Consultation will be arranged
TORONTO AND GTA, OTTAWA, LONDON AND WINDSOR

PMCI MORTGAGE CANADA INC.
Buying - Selling - Investing
PROPERTY MAX Realty Inc. Brokerage
One Source For Many Type of Properties & Mortgages
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300

MARGOSA CREDIT UNION
Nurturing the Community
Tax Free Savings Account (TFSA) 2.00%
Premium Savings @ 2.00%
Opening Hours: Mon-Fri: 10.00 a.m. to 5.00 p.m.
Suite 100A, 2100 Ellesmere Road, Toronto, ON. M1H 3B7
Tel: 416-915-8989

இனிய இல்லம் ஒளிமயமான எதிர்காலதிற்கு அடித்தளம்
மகேன் சிங்கராஜா
Sales Representative
Direct: 416.302.7283 (SAVE)
E-mail: msingarajah@trebnet.com
web: www.mahenonline.com
RE/MAX Vision Realty Inc., Realtor
2210 Marham Road, Unit-1, Toronto, ON M1B 5V6
Tel: 416.321.2228, Fax: 416.321.0002



# R&S AUTO SALES

HONDA - TOYOTA - GM MINI VANS ON THE SPOT FINANCING

சிறந்த சேவைக்கான பல விருதுகளைப் பெற்ற வாகன விற்பனை முகவர்

Tel: 416.412.3838
Fax: 416.412.1174
5310 Finch Ave, Unite 23, Scarborough
between Markham and middlefield

Radha





# VN FINANCIAL SERVICE

உங்கள் அனைத்து மோட்கேஜ் தேவைகளையும் சிறந்த முறையில் செய்திட உடனே அழையுங்கள்

"I AM DEDICATED TO PROVIDING YOU WITH PROFESSIONAL SERVICE AND GUIDANCE THROUGHOUT THE MORTGAGE PROCESS."

VASANTHY NIRANJAN
MORTGAGE AGENT
LIC# M08010387

Phone: 905-415-1676
Direct: 416-845-8272

# வீடு வியாபாரம் வாங்க விற்க நாடுங்கள்

- Residential
- Industrial
- Commercial
- Investment

*Professional & Friendly Services*

Logan Appulingam
Sales Representative
Direct : 416-200-6120
Email : logan7@rogers.com

HomeLife/GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Road, Suite 206, Toronto, ON. M1S 3Y3
Bus.: 416-321-6969 Fax : 416.321-6963
*Independently Owned and Operated, REALTOR

*Highest Standard Agents.... Highest Results!...*

416.200.5470

ELECTRICAL - PLUMBING & DRAINAGE SERVICES

SANTHA

www.santha.ca
416-200-5470

# வீடு வியாபார நிலையம் வாங்க விற்க...

வீடு வாங்க விற்க அல்லது அது சம்பந்தமான வியாபாரங்களுக்கும் குறைந்த வட்டி விகிதத்தில் மோட்கேஜ் செய்யவும் நட்புடன் அழையுங்கள்....

| Price | Location | Details |
|---|---|---|
| $145,900 | Middlefield / Finch | 1+1 Bedrooms 1 Washroom |
| $179,000 | Tapscott / Mclevin | 3 Bedroom 2 Washroom Hardwood Floor |
| $237,500 | Townline & Adelaide | 3Bedrooms 3 Washroom Part Finished Basement |
| $269,900 | Morningside & Finch | 3+2 Bedrooms 4 Washroom |
| $239,900 | Keele & Finch | |
| $289,900 | Brimley & Danforth | 3+1 Bedrooms 2 Washroom |
| $334,900 | Warden & St.Clair | 2+1 Bedrooms 2 Washroom |
| $339,000 | Morningside & Staines | 3 Bedrooms 3 Washroom |
| $349,900 | 9 th Line & Hoover Park | 3 Bedrooms 3 Washroom |
| $339,900 | Whites & Highview | 4 Bedrooms 3 Washroom |
| $359,900 | Hwy10 / Steeles | 4+2 Bedrooms 4 Washroom |
| $395,900 | Bloor & Dufferin | 4 + 1 Bedrooms 1 Washroom Finished Basement |
| $479,900 | 14 th & McCowan | 3 Bedrooms 3 Washroom Part Finished Basement W / O |



Looking for New & Experienced Sales Rep. Please Contact Us...

Ravi Logarajah B.Sc
Tharsi Rajenthiram B.B.A
*Sales Representative
Call : 416-843-7474

HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
*Independently Owned and Operated, Realtor
BUS: 416-298-3200 / FAX: 416-298-3440

## அடுத்த காலடி என்ன?

தமிழீழ விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடித்த பின்னர் இலங்கைத் தமிழர்களின் அரசியல் எதிர்காலம் என்னவாகும் என்ற கேள்வி முன் எப்போதும் இல்லாத வகையில் பலமாக எழுந்திருக்கின்றது.

விடுதலைப் புலிகள் நடவடிக்கைகள் அழிக்கப்பட்டுவிட்டதால் இலங்கைத் தமிழர்களின் அரசியல் அபிலாசைகள் அழிக்கப்பட்டு விட்டது என்று யாரும் கருதினால் அது மிகத் தவறான அரசியல் முடிவாகும். ஆனால் விடுதலைப் புலிகளை தோற்கடித்ததின் பின்னர் ‘இலங்கையில் சிறுபான்மையினம் என்ற பிரச்சனையே இல்லை’ என்று இலங்கை அரசாங்கம் முடிவெடுத்துள்ளது.

இந்த நிலையில் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளையும், அரசியல் உரிமைகளையும் வென்றெடுப்பதற்கான ஒரு சரியான தலைமை இப்போது உள்ளதா? என்று இலங்கைத் தமிழர்கள் அங்கலாய்கின்றனர்.

இலங்கையில் தற்போது உள்ள தமிழ் கட்சிகள், தமிழ் மக்களின் ஒரு மித்த ஆதரவைப் பெற்றுக்கொள்ளவில்லை. இந்த கட்சிகளுக்கிடையில் தமிழர்கள் அரசியல் உரிமைகள் தொடர்பாக ஒருமித்த கருத்து ஒற்றுமையும் இல்லை. கடந்த காலங்களில் இவர்கள் செய்த அரசியல் தவறுகள், மக்கள் விரோத நடவடிக்கைகள் காரணமாக தமிழ் மக்களின் அளவற்ற வெறுப்பையும் சம்பாதித்துள்ளனர்.

இன்று உள்ள கட்சிகளின் நோக்கம் எல்லாம், ஏதாவது ஒரு நகராட்சி மன்றத் தேர்தலில், மாகாண சபை அரசில் அல்லது பாராளுமன்றத் தேர்தலில் ஒரு கதிரையை ஆவது வென்றெடுக்க வேண்டும் என்பதேயாகும். ஆதற்காக எந்த தியாகத்தையும் செய்யவும், யாருடை காலில் விழுவதற்கும் தயாராக உள்ளனர்.

இந்த நிலைமையை இலங்கை இனவாத அரசாங்கம் வெகு புத்திசாலித்தனமாகப் பாவிக்கின்றது. தான, பேத, தண்ட முறைகளைப் பாவித்து தமிழ் அரசியல் கட்சிகளை மேலும் தனது காலடியில் பணியவைப்பதுடன், இதே வழி முறையில் இலங்கையின் ஊடக, அரசியல் சுதந்திரத்தையும் தமது “சப்பாத்துக்” கால்களுக்கு கீழ் கொண்டுவந்துள்ளது.

தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரசு செய்கின்ற எந்த ஒரு ஜனநாய மீறலையும், மனித உரிமை மீறலையும், சிறுபான்மை இனங்களுக்கு எதிரான ஒடுக்கு முறையையும் தட்டிக் கேட்கும் எந்த வல்லமையும் இல்லாத கட்சிகளே இன்றைய தமிழ் அரசியல் கட்சிகள். தமிழ் கட்சிகள் என்று இவைதான் இன்று எஞ்சியுள்ளன.

இந்த துயரமான, அபாயகரமான சூழ்நிலையில் இலங்கைத் தமிழ் மக்களின் எதிர்காலம் என்ன? அவர்களின் அடுத்த காலடிதான் என்ன?

வெளிநாடுகளில் வாழும் புலம் பெயர்ந்த தமிழர்கள், இந்த தமிழர்களின் புதிய இளைய தலைமுறை இரண்டும் இணைந்து தமது பாரிய பங்களிப்பை செலுத்த வேண்டும். இதுவே எமது அடுத்த காலடியை எடுத்து வைக்க உதவும் பெரும் சக்தியாக இருக்கும்.

எம்மிடையில் கட்சிகள், அமைப்புகள், ஊடகங்கள் பலவாய் இருக்கலாம். ஆனால் நாம் அனைவரும் தமிழர்களின் அரசியல் உரிமை தொடர்பாக ஒருமித்த கூட்டு முடிவுக்கு வரவேண்டும். அந்த இடத்தில் இருந்து எமது அடுத்த காலடியை நாம் எடுத்து வைக்கலாம்.

III

# சர்வதேச மன்னிப்புச் சபையின் “உலக அகதிகள் கிராமம்”

ஜுலை 1ம் திகதி கனடா தினத்தன்று சர்வதேச மன்னிப்புச் சபை ‘உலக அகதிகள் கிராமம்’ என்ற பெயரில் ஒரு நிகழ்வையும், கண்காட்சியையும் Harbourfront Centreஇல் நடத்தியது. இந்த நிகழ்வில் எரித்தியா, கொலம்பியா, சோமாலியா, ஆப்கானிஸ்தான், இலங்கை(தமிழர் சமூகம்), ஈராக், எல்சல்வடோர், ஈரான்(அசர்பைஜான் சமூகம்) ஆகிய நாடுகளின் அகதிகள் குழுமங்கள் கலந்து கொண்டன. இந்த சமூகங்கள் தமது இசை, நடனம், விளையாட்டுக்கள், கலை, பண்பாட்டு ஆடைகள், வாழ்க்கை முறை என்பவற்றை ஏனைய சமூகங்களுடன் பகிர்ந்து கொண்டன. இந்த நாடுகளிடுகளில் நடைபெறும் போர், அகதிகளின் நிலை தொடர்பான தகவலகளும் அங்கு பரிமாறப்பட்டதுடன் சர்வதேச மன்னிப்புச் சபை ஒரு தகவல் மையத்தையும் அமைத்திருந்தது.

Harbourfront Centreஏற்பாடு செய்திருந்த ஏனைய கனடா தின நிகழ்வுகளில் 30,000க்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் அகதிகள் தொடர்பான விழிப்புணர்வையும், தகவல் பரிமாற்றத்தையும் ஏற்படுத்தும் முகமாக ‘அகதிகள் கிராமம்’ கண்காட்சி ஏற்பாடு செய்யப்படுவதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்த கண்காட்சியில் கனடிய தமிழர் பேரவையும் தமிழ் கிராமம் என்ற தலைப்பில் ஒரு கூடத்தை அமைத்திருந்தது. அங்கு கடந்த காலத்திலும், தற்பொழுதும் தமிழ் மக்கள் அனுபவித்து வரும் இன்னல்கள் தொடர்பான நிழற் படங்கள், பதிவுகள், தமிழர் வாழ்க்கை முறை, தமிழ் உணவுப் பொருட்கள், ஆடைகள் என்பன காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. ஏனைய இனத்தவருக்கு எமது ஆடைகள் உடுத்துக் காட்டப்பட்டதுடன், உணவு வகைகளும் பரிமாறப்பட்டன.

கனடியத் தமிழர் பேரவை ஏற்கனவே சர்வதேச மன்னிப்புச் சபையுடன் இணைந்து பல செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தாலும், பன்னாட்டு அகதிகள் சமூகங்களுடனான



இது போன்றதொரு கண்காட்சியில் இதுவே முதற்தடவையாக இணைவதாக அதன் அமைப்பாளர்களில் ஒருவரான டேவிட் பூபாலபிள்ளை குறிப்பிட்டார். இதன் மூலம் தமிழர் போராட்ட வரலாற்றையும், தமிழ் மக்கள் இலங்கையில் எதிர்கொள்ளுகின்ற பிரச்சினைகள், அடக்குமுறைகள் போன்றவற்றை ஏனைய சமூகத்தவரிடம் இலகுவாக எடுத்துச்செல்ல முடியுமென்றும், அவர்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த முடியுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

■ ■ ■


Publisher & Editor : P.J. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜே. டிலிப்குமார்

ஆலோசகர் குழு : ஞானம் லம்பேட், மாமூலன், கருணா, பொன்னையா விவேகானந்தன், சுந்தர் சின்னத்தம்பி.

தட்டச்சு : கௌரி, கௌசலா, ஜீவா, பிரியதர்சினி, மஞ்சுளா ராஜலிங்கம்.

ஒப்புநோக்கல் : சாவையம்பதி சுப்ரமணியம், கௌரி. மஞ்சுளா ராஜலிங்கம்.

வரைகலை ஆலோசனை : கருணா (டிஜி வரைகலை அமையம்)

தொடர்புகள் - For More Info : Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

Toronto விநியோகம் : கிளி (சிவராஜா)
Montréal விநியோகம் : சுகுமாரன் சின்னையா 1-514-299-3186
Ottawa விநியோகம் : அலெக்ஸ் சிவசம்பு 1-613 -276-7253

Tel : 416-646-3422, 416.400.6406
Fax : 416.849.0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com



பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு. கனடியத் தமிழ் வானொலியில் ஒலிபரப்பாகி பின்னர் எமக்குத் தரப்பட்ட விளம்பரங்கள் இலவசமாகப் பிரசுரமாகின்றன. அவற்றின் சரிபிழைகளுக்கு தாய்வீடு பொறுப்பல்ல. ஏனைய விளம்பரங்கள் இலவசமல்ல. ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.



இடியப்ப மெசின்
சகலவிதமான வீட்டு வர்த்தக இடியப்ப மெசின்கள்
மின் தேங்காய் துருவி
உலகம் முழுவதும் இவற்றை பெற்றுக்கொள்ள அழையுங்கள்
(Pay Mohan in Canada, He will deliver Worldwide)
Canada- S. Mohan P.Eng
416-433-6006 / 905-273-6836
email: mohan@stringhoppermachine.com
www.stringhoppermachine.com
www.worldtamil.com




தமிழில் பேசுவோம்!
தமிழில் பெயர் வைப்போம்!!
தமிழில் வழிபடுவோம்!!!


www.inayam.net

- கலை விழாக்கள்
- எழுச்சி நிகழ்வுகள்
- ஊர்ச்சங்க ஒன்றுகூடல்கள்
- திருவிழாக்கள்
- கொண்டாட்டங்கள்
- நடன, நாடக, இசை விழாக்கள்
- குடும்ப நிகழ்வுகள்
- மரணச் சடங்கு நிகழ்வுகள்

எதுவானாலும்,

இணையம் .net மூலமாகத் தெரியப்படுத்துங்கள்.

உங்களுக்கு அனுகூலமான இடம், காலம், நேரங்களில் ஏனைய நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளனவா என்பதை முன்கூட்டியே அறிந்துகொண்டு உங்கள் நிகழ்வுகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.

முன்கூட்டியே inayam.net இல் பதிவு செய்துகொள்வதன் மூலம் ஏனைய நிகழ்வுகளோடு போட்டிகள் உருவாகுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் நிகழ்வுகள் திருப்திகரமாக நடந்தேறுவதற்கு பங்குபெறும் மக்களின் அனுகூலம் முக்கியமானது.

இதைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் தளமே inayam.net

முயற்சி செய்யுங்கள்!

முற்றிலும் இலவசம்

inayam
416-400-6406

digi

# வன்னி மக்களின் வாழ்க்கையில் அடுத்த கட்டம் எதில் தொடங்குகிறது?

- அ. கணபதிப்பிள்ளை -

வன்னி மக்கள் எவ்வளவு காலத்துக்குள் சொந்த வீடுகளுக்குச்சென்று வசிப்பதற்கு இலங்கை அரசால் அனுமதிக்கப்படுவார்கள் என்ற வினா பலதரப்பினராலும் கேட்கப்பட்டிருந்தாலும் அதற்கான தெளிவான விடை கிடைக்காதிருப்பது வன்னி மக்களுக்கு என்ன நடக்கும் என்ற ஐயப்பாட்டினை ஏற்படுத்தியிருக்கிறது.

வன்னியில் உள்ள பெரிய அகதி முகாமிலிருக்கும் மக்களுக்கான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படும் பாங்கினை அவதானித்ததிலிருந்து வன்னி மக்களின் மீள் குடியேற்றம் துரித கதியில் நிகழப்போவதில்லை என்ற சந்தேகத்தை ஐ.நா.உயரதிகாரி மார்க் கட்ஸ் தெரிவித்திருப்பதான செய்திகள் வெளிவந்த வேளையில், இலங்கை அரசு ஜோன் ஹோம்ஸுக்கு வழங்கிய உறுதி மொழியான 6 மாத காலக்கெடுவை எவ்வாறு நம்பலாம் என்றதொரு ஐயப்பாடும் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. இலங்கையின் நிர்வாக சேவைக்குட்பட்ட திட்டமிடலாளர்களால் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களில் இன்னமும் ஆறுமாத காலத்துக்கு வன்னி மக்களை முகாம்களில் வைத்திருப்பதற்கான முதற்கட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் வரைவு செய்யப்பட்டிருப்பதான செய்திகள் வெளிவந்திருந்தன. அத்தகைய செய்திகளே அரசாங்கம் வன்னி மக்களை அகதி முகாம்களில் ஆறு மாத காலத்துக்கு மட்டுமே வைத்திருக்கும் என்ற உறுதிப்பாடு இருப்பதாக வன்னி மக்களும் ஏனைய தமிழ் மக்களும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

அண்மைய கணக்கெடுப்புகளின்படியில்லாது மதிப்பீட்டின் அடிப்படையில் சுமார் 3 இலட்சம் மக்களை ஆறு மாதத்துக்குள் மீளக் குடியமர்த்துவது என்பதே இயலுமான செயற்பாடாகத் தோற்றமளித்தாலும் அதற்கு இலங்கை அரசும் இலங்கை இராணுவமும் சம்மதம் தெரிவிக்கவேண்டுமென்ற தடை முன்னணியிலிருக்கிறது.

இனிவரும் ஒருவருட காலத்துக்குள் சுமார் அறுபதாயிரம் மக்களையே அரசு மீளக் குடியேற்றத்தக்க சாத்தியக் கூறுகளிருப்பதாகப் பாதுகாப்புத் தரப்பினர் குறிப்பிட்டிருக்கும் அதேவேளை மனித உரிமைகள் அமைச்சர் அகதிகளை மீளக் குடியேற்ற அதிக காலம் எடுக்காது எனத் தெரிவித்திருப்பது உண்மையில் திட்டமிடுபவர்களும் செயற்படுத்துபவர்களும் எவ்விதம் இணைந்து செயற்படக்கூடும் என்ற கருத்துக்கு விளக்கம் தேவை என்பதனைத் தெளிவுபடுத்துகிறது.

## மனித உரிமை என்ற கருத்து முன்னவைக்கப்படும் பொழுது இலங்கை தான் துரித கதியில் செயற்படுவதாகக் காட்டிக் கொள்கிறது

மனித உரிமை என்ற கருத்து முன்னவைக்கப்படும்பொழுது இலங்கை அரசாங்கம் துரித கதியில் செயற்படுவதாகக் காட்டிக்கொள்ளுவது இயல்பானதாகும். வன்னி மக்களின் தற்காலிக வாழ்விட முகாம்களின் வசதிகள் குறித்தும் மக்களின் குடிஅடர்த்தி, போசாக்கு, வாழ்க்கைத்தரம் ஆகியன குறித்தும் அகதிகள் வாழ்வில் அக்கறையுடைய தனியார்களினாலும், நிறுவனங்களினாலும் கரிசனைகள் தெரியப்படுத்தப்பட்டிருக்கின்றன.

வன்னியிலிருந்து கடந்த ஆண்டு சர்வதேச தொண்டு நிறுவனங்களின் சேவை சட்டரீதியில் தடைசெய்யப்பட்டிருந்தது முதலாக இன்று வரையில் தொண்டு நிறுவனங்கள் வழங்கிவரும் எந்தவொரு பரிந்துரைகளுக்கும் இலங்கை அரசு உத்தியோகபூர்வமாகத் தீர்க்கமான முடிவெதனையும் தெரிவித்திருப்பதாகத் தெரியவில்லை. சர்வதேச தொண்டு நிறுவனங்களின் உள்ளூர் முகவர்கள் அரச அனுசரணை பெற்றிருக்கும் சந்தர்ப்பங்களில் வன்னி மக்களின் வாழ்க்கையில் தமது பங்கினைச் செய்வதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டாலும் அதன் உண்மை நிலைமையினை வெளியிட அத்தகைய நிறுவனங்களுக்கு அதிகாரமிருப்பதாகத் தெரியவில்லை.

ஐ.நா.வின் பொதுச் செயலர் பான் கீ மூனுடைய இலங்கை வருகையைத் தொடர்ந்து வன்னி மக்களின் வாழ்விட முகாம்களின் அவலத் தன்மை நம்பத்தகுந்ததான செய்திகளாக வெளிவந்தன. இரண்டாம் உலகப் போரின் போது காணப்பட்ட ஐரோப்பிய அகதி முகாம் களை ஒத்த தோற்றப்பாட்டினையே மனிக்பாம் போன்ற அகதி முாகம்கள் கொண்டிருப்பதாகவும் அவற்றில் வாழும் மக்களின் அவலம் சொல்லொணாத் துயர் கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## இம்முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருப்பவர்கள் அகதிகளா கைதிகளா?

அகதிகள் போன்ற தோற்றப்பாடில்லாது கைதிகள் போன்ற தோற்றப்பாட்டையே அவர்கள் அனுபவிக்கிறார்கள் என்று குறிப் பிடப்படுவதனால் மீள் குடியேற்றச் சர்ச்சைகள் எழலாயின. அகதிகளை மீளக் குடியேற்றக் காலம் நிர்ணயம் தேவையற்றது என்றும், கைதிகளின் மீளக் குடியமர்வுக்கு நிச்சயம் அதிக காலம் தேவை என்ற கருத்தும் பின்னணியில் தொனிப்பது எல்லோருக்கும் தெரிந்ததொன்று.

இலங்கை அரசோ இலங்கை இராணுவமோ வன்னியில் தன்னாட்சி அரச ஆள்புலத்துக்குட்பட்டிருந்த மக்களைச் சுதந்திரமாக நடமாட விடுவதற்கு அனுமதிக்கப்போவதில்லை என்பதனைச் சுட்டிக்காட்டியே வன்னி அகதி முகாம்கள் குறிப்பிடத்தக்க அளவு நிரந்தரமாக்கப்படும் அபாயம் இருப்பதாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் எச்சரித்துமிருக்கிறது. அகதி முகாம்களின் தொகை நாற்பதுக்கு மேற்பட்டிருக்கிறது என்பதுடன் அவற்றில் பெரும்பாலானவை நிரந்தரக் கட்டிடங்களில் அமைந்திருப்பதனால் இன்னமும் சில ஆண்டுகளுக்கு வன்னி மக்களை அடைத்து வைக்கக்கூடியதான அடிப்படை வசதிகளை அவற்றில் ஏற்படுத்துவது சாத்தியம் என்பதனையும் அதன்மூலம் நிரந்தர பலஸ்தீன அகதி முகாம்களை ஒத்த குடியிருப்புகளை ஏற்படுத்தி வன்னி மக்களை வெளியுலகிலிருந்தும் தனிமைப்படுத்தக்கூடிய மறைமுகத் திட்டங்கள் இருக்கலாமென்ற கருத்தும் மேலோங்கியிருக்கிறது. விசாரணை என்ற போர்வையினுள் மக்களின் கடந்தகால நடவடிக்கைகள் குற்றச் செயற்பாடுகளை நோக்கித் திருப்பப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமிருப்பதுவும் அத்தகைய அரச எதிர்ப்பாளர்களைத் தனிமைப்படுத்தி, பிரத்தியேகத் தடைமுகாம்களில் அடைக்கப்படக் கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாகவும் அவதானிகள் கருத்து வெளியிட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## வன்னி முகாம்கள் மக்கள் நிர்வாகத்திடம் கையளிக்கப்பட வேண்டும்

வன்னி முகாம்கள் மக்கள் நிர்வாகத்திடம் கையளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தாலும் அதற்குச் சாதகமான ஆதரவுக் குரல்கள் இன்னமும் பலமாக ஒலிக்கவில்லை. பொதுமக்கள் நிர்வாகமும் அரச பொது நிர்வாக உறுப்பினர்களும் தனித்தனியாக தமது கடமைகளை மேற்கொள்ளும் பொழுதில் வன்னி மக்களின் மீள்குடியேற்ற வாழ்வு விரைவில் செயற்படுத்தப்படக் கூடியதாக உள்ளது. வன்னிக் கிராமங்களிலுள்ள வாழத்தகுந்த வீடுகளின் எண்ணிக்கையினைக் கணக்கெடுப்பதும் அதில் வாழக்கூடிய மக்களை அனுமதிப்பதும் ஆகிய உடனடி நடவடிக்கையினை இராணுவமும், சாராத அரச பொதுத் துறையும் மேற்கொள்ளும் அதேவேளை, பொது மக்கள் நிர்வாகம் அதனைக் கண்காணிக்குமாயின் மீள்குடியேற்றத்துக்கு எந்தவிதமான தடங்கலும் ஏற்படப்போவதில்லை. அத்துடன் மீள் குடியேற்றம் என்பதும் உடனே செய்யத்தக்கதான சூழலை ஏற்படுத்தும். இது வன்னி மக்களின் வாழ்வில் அடுத்த கட்டம் தொடங்குவதற்கான சூழலைத் தோற்றுவிக்கும்.

## வன்னிமக்களின் உடனடி மீள் குடியேற்றத்தக்குத் தடையான இரண்டு கருத்துக்கள்

வன்னிமக்களின் உடனடி மீள்குடியேற்றத்திற்குத் தடையாக இரண்டு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

ஒன்று வன்னிக் கிராமங்களில் புதைத்து வைத்திருப்பதாகச் சொல்லப்படும் கண்ணி வெடிகள். மற்றையது வன்னிக் காடுகளில் ஒழித்து வைத்திருப்பதாகச் சொல்லப்படும் போராயுதங்கள்.

கண்ணி வெடிகள் வன்னியில் மீளக் குடியேறும் மக்களின் அன்றாட வாழ்க்கையினைக் கட்டுப்படுத்தும் என்பதும் போராயுதங்கள் பொதுமக்களிடம் சிக்குவதன் மூலம் அமைதியற்ற சூழல் தோற்றுவிக்கப்படும் என்பதும், அரச நிர்வாக இயக்கம் சொல்லிக்கொள்ளும் சாட்டுப்போக்கானது நிலைபெறும் சாத்தியம் உள்ளமை, வன்னி முகாம்கள் நிரந்தரமாக்ககப்படக்கூடும் என்ற ஐயப்பாட்டினை மேலும் வளர்ப்பதாக இருக்கிறது.

இலங்கை அரசாங்கம் கிழக்கு மாகாணத்தில் ஏற்படுத்திய மீள்குடியேற்றங்கள் இன்னமும் முற்றுப் பெறாதநிலையிலும், ஆழிப் பேரலை மீள்குடியேற்றம் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களில் முடிவு ஏற்பட்டிராத நிலையிலும், அகதிகள் முகாம்களின் உடனடி மூடுதல் என்பது சாத்தியமற்றதொன்று என்ற கருத்துக்கு உரமூட்டுவதாகவுள்ளது.

வன்னியில் இருந்து வெளியேறிய மொத்தத் தொகையினரும் வன்னியில் இருக்கும் முகாம்களில் மட்டும் அடைக்கப்பட்டிருக்கவில்லை. அவர்கள் இலங்கையின் பல பாகங்களிலும் உள்ள முகாம்களுக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறார்கள் என்பதும் தமது பிள்ளைகளை, கணவன்மாரை, தந்தையரை, தாயரை காணாது தவிப்பவர்களின் ஆதங்கம் வெளிக்கொணரப்பட்டிருக்கின்றது. வன்னி மக்களின் மொத்த சனத்தொகையில் எத்தனை சதவீதத்தினர் எங்கிருக்கிறார்கள், அவர்கள் எத்தகைய சூழலில் அடைக்கபட்டிருக்கிறார்கள் என்ற தெளிவான விளக்கம் இன்னமும் கொடுக்கப்படவில்லை என்பதும், தினம் தினம் சொல்லப்படும் செய்திகளில் அகதிகளின் தொகை, முகாம்களில் இருப்பவர்களின் தொகை என்பன எண்ணிக்கை அளவில் நம்பகத்தன்மை கொண்டனவாக இல்லாத காரணத்தினால், எத்தனை பேர் எங்கிருக்கிறார்கள் என்ற கேள்விக்கு விடை கிடைக்காத நிலையிலேயே மக்கள் இருக் கிறார்கள். ஆரம்பத்தில் 3,30,000 பேராகச் சொல்லப்பட்ட தெகையானது 2,76,000 எனக் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. போரின் கடைசி நாட்களின் பின்பாக 20,000 ஆயிரம் பேர் இறந்ததாகச் சொல்லப்பட்ட தொகை 53,215 பேரென அதன்பின்னரான புள்ளி விபரங்களும் வெளிவந்தன. 13,130 பேரைக் காணவில்லை என்பதுவும் அதிர்ச்சியையே ஏற்படுத்தியிருக்கிறது.

குறைந்தபட்சம் ஒவ்வொரு கிராமத்தில் இருந்த மக்களை ஒன்றாக்கி அவர்களை மீண்டும் ஒன்றிணைப்பதன் மூலம்தான் அண்ணளவாகவாவது எத்தனை பேரினை அம்மக்கள் அடையாளம் கண்டுகொள்ளுவார்கள் என்பதும் எவ்வளவு பேர் காணாமல் போயிருக்கிறார்கள் என்ற உண்மையும் வெளி

28ம் பக்கம் பார்க்க...



வீடு வாங்குவதற்கும் விற்பதற்கும்

CENTURY 21 SERVICES PLUS
5955, Taschereau blvd (office 207)
Brossard, Quebec
J4Z 1A5
sugumaran@sympatico.ca

SUGUMARAN SINNIAH
(Chartered real estate broker)
Office : (514) 299-3186
(450) 926-1881



## இது ஓர் ஈழத்துக் கலைஞர்களின் பதிவுத் தொடர்

# ஆழத்து முத்துக்கள்



கே. எஸ். பாலச்சந்திரன்
ks@thaiveedu.com

நாங்கள் எங்கள் வரலாற்றை எழுதவில்லை. பாரம்பரியம் என்பது பேச்சோடு நின்று விடுகிறது. நாங்கள் எதையுமே பேணிப்பாதுகாப்பதில்லை. மன்னன் சாஜஹான் காலையில் என்ன உணவு அருந்தினான் என்று தொடங்கி அத்தனையும் பதிவு செய்யப்பட்டன என்று ஒரு பத்திரிகையாளரான நண்பர் சொன்னார். அந்தளவு இல்லையென்றாலும் எங்கள் வாழ்வு, எங்கள் மக்கள், எங்கள் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும். பதிவு செய்யப்படவேண்டும்.

இந்த நோக்குடன் "தாய்வீடு" பத்திரிகை எங்கள் ஈழத்து மண்ணின் கிராமங்களில், ஊர்களில் வாழ்ந்த பிரபலமடைந்தவர்களுடன், தெரியப்படாமல் போய்விட்ட எங்கள் கலைஞர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டுகோள் விடுக்கிறது. கட்டுரைகளை சுருக்கமாக, எழுதி அனுப்புங்கள். களம், 'தாய்வீடு' தரக்காத்திருக்கிறது. கருத்து உங்களுடையது. கட்டுரைகளை செதுக்கி சொற்சித்திரங்களாக்கும் பொறுப்பு எங்களுடையது.

## உடப்பு பெரி. சோமாஸ்கந்தர்

இந்த கலைஞரைப்பற்றி எழுதப்புறப்படும் போது இவரது ஊரைப்பற்றி சொல்லித்தானாக வேண்டும். இலங்கையின் மேற்குப் புறத்தே புத்தளம் மாவட்டத்தில், சூழவர சிங்கள ஊர்கள் சூழந்திருக்க, தமிழையும், தங்கள் தனித்தன்மையையும் பேணிக்கொண்டு எங்கள் பாரம்பரியக்கலைகளான கூத்து, வில்லுப்பாட்டு, கரகம் போன்றவற்றுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் அழகிய தமிழ்ச் சிற்றூர் இது. உடப்பு அல்லது உடப்பூர் என்று இதன் பெயர் வருவதற்கான காரணம், மழைக்காலங்களில் பெருக்கெடுத்துப்பாயும் உப்புநீரேரியின் நீரை வாய்க்கால் வெட்டி இந்து மகாசமுத்திரத்தில் கலக்கவிடுவதினால் 'உடைப்பு' என்பது பெயராகி, உடப்பு என்று மருவியிருக்கலாம் என்கிறார்கள்.

கடலோர தென்னைகளும், கோயில்களும், குச்சொழுங்கைகளும், பாடசாலைகளும், கள்ளம் கபடமற்ற கிராமியத்தன்டையுடைய மக்களும் எங்கள் கிராமமொன்றில் திரியும் அனுபவத்தை பல ஆண்டுகளுக்குமுன் எனக்கு தந்திருக்கிறது.

17ம் நூற்றாண்டில் தென்னிந்தியாவின் ராமேஸ்வரம் பகுதியில் இருந்து அங்கு ஆண்ட மன்னவனின் கொடுமைக்கு அஞ்சி, இம் மக்கள் இரவோடிரவாக குடிபெயர்ந்து இலங்கைக்கு வந்து நன்னீர் இலகுவாக கிடைக்கும் பகுதியாக உடப்புவைத் தெரந்தெடுத்து இங்கே வாழத்தொடங்கினார்கள் என்று ஒரு ஐதீகக்கதை உண்டு. திரௌபதியை வழிபடும் இந்த ஊரில் பெண்களே அதிகம் என்று ஒரு குறிப்பு கூறுகிறது. மகாபாரக்கதையை அடிப்படையாக்கொண்டு உடப்பு திரௌபதியம்மன் ஆலயத்தில் ஆவணி மாதக்காலத்தில் 18 நாட்களாக நடைபெறும் விழாவும், அதில் முக்கிய அம்சமாக ஊரின் பெரும்பான்மையானவர்கள் கலந்து கொள்ளும் 'தீமிதிப்பு' விழாவும் மெய்சிலிர்க்க வைக்கும் நிகழ்வுகளாகும்.

இந்த மண்ணிலே பிறந்து, வெளியுலகிற்கு அறிமுகமான கலைஞர்களில் முக்கியமானவர் உடப்பு பெரி. சோமாஸ்கந்தர் என்ற வில்லிசைக்கலைஞர். ஆசிரியராகவும், அதிபராகவும் பணியாற்றிய இவர், மலையகத்தில் ராகல என்ற இடத்தில் தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியராக பணியாற்றிய காலத்தில் தனது முதலாவது வில்லிசை நிகழ்ச்சியை நடத்தி, தொடர்ந்து 40 ஆண்டுகளாக ஏறக்குறைய 2,000 நிகழ்ச்சிகளை இலங்கையிலும், சிங்கப்பூர், மலேசியா நாடுகளிலும் நடத்தியிருக்கிறார் என்று அறிகிறோம். சமயகுரவர்கள், மகாபாரதம், இராமாயணம், முகம்மது நபி, இயேசு, காந்திமகான் கதை என்பவை இவர் வில்லுப்பாட்டில் இடம்பெற்றன. பல விருதுகளை அவ்வப்போது பெற்ற இவர் 1997ம் ஆண்டில் இலங்கை அரசின் கலாபூஷணம் விருதைப் பெற்றிருக்கிறார்.

ஆரம்பத்தில் நகைச்சுவை நடிகனாக அறிமுகமாகி பின்னர் நாடகாசிரியராக, நெறியாளராக, ஒப்பனைக்கலைஞராக விளங்கி உடப்பு நாடகத்துறைக்கு புதுப்பாய்ச்சலை உருவாக்கியவர் என்று இவரைப்பற்றி, உடப்புவைச் சேர்ந்த கவிஞரும், பத்திரிகையாளருமான வீரசொக்கன் அவர்கள் 'மல்லிகையில்' குறிப்பிட்டிருக்கிறார். பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிலும் காலத்தில்



பெரி.சோமாஸ்கந்தர் அவர்கள் "உடப்பின் பாரம்பரியம்" என்ற கட்டுரைத்தொகுதியை எழுதியிருக்கிறார். திரௌபதையம்மன் ஆலய விழாவின்போது பாடப்படும் பாரதகதையினை நாடகங்களாக நடித்ததாலும், அதன் பாடல்களை பாடிய பரிச்சியத்தினாலும் வில்லுப்பாட்டிலே இவரது பாடல்கள் தனித்தன்மையுடன், மிக இனிமையான சந்தத்தடன் விளங்கின. அத்தோடு சிறந்த பேச்சுவன்மை உடையவராகவும் இருந்திருக்கிறார். 2003ம் ஆண்டில் காலமான இவர், உடப்பு என்ற அழகிய தமிழ்க்கிராமத்தை பலரும் அறியப் பண்ணியவர். கொழும்பில் முகத்துவாரப் பகுதியில் ஒரு ஆலயத்திருவிழாவில், இரவு நேர சீதளக்காற்றில் சிலிர்த்துக்கொண்டு இவரது தெம்மாங்கு, சிந்துநடையில் அமைந்த இனிய பாடல்களை கேட்ட ஞாபகம் வருகிறது.

■ ■ ■

## ரி. ராஜேஸ்வரன்

இலங்கை வானொலி நாடகத்துறையின் பிதாமகரான சானா. சண்முகநாதன் அவர்களின் அபிமானத்துக்குரிய கலைஞராக அக்காலத்தில் விளங்கியவர். வானொலி, மேடை நாடகம், திரைப்படத்துறை, தொலைக்காட்சி நாடகம் என்று முத்திரை பதித்த அற்புதமான கலைஞன். 1966ன் முற்பகுதியில் உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தில் நான் இணைந்துகொண்ட காலம். 22 வயது.(எனக்குத்தான்) எங்கள் கலை, எங்கள் கலைஞர்கள் என்று அபிமானம் கொண்டிருந்த காலம். (இப்போது மட்டுமென்ன) அவ்வாண்டின் நடுப்பகுதியில் கல்வித்திணைக்களத்திலிருந்து மாற்றலாகி ஒருவர் எங்கள் திணைக்களத்திற்கு, அதுவும் எனது அருகில் உள்ள மேசைக்கே வந்தார். சற்றுப்பெருத்த ஆகிருதியுடன், அசப்பில் அக்கால தென்னிந்திய நடிகரைப்போலவிருந்தார். வாயில் வெற்றிலைச் சிவப்பு. அத்தர், சந்தனாதித்தைல கம, கம வாசம் அவர் பக்கத்திலிருந்து வந்து கொண்டிருக்கும். விசாரித்துப்பார்த்ததில், அவர் நிறைய வானொலி நாடகங்களில் நடிப்பதோடு, சரித்திர இதிகாச நாடகங்களில் நடித்துப்புகழ்பெற்றவர் என்பதோடு, அவர் கதாநாயகனாக நடித்த "டாக்ஷி டிரைவர்" என்ற இலங்கைத்திரைப்படம் அவ்வாண்டின் இறுதியில் திரைக்கு வரப்போகிறது என்று சொல்ல என்பாடு, பழம் நழுவி தேனில் (அப்போது பால் எனக்கு பிடிக்காது) விழுந்த மாதிரித்தான். நானும் வானொலி, சினிமாக் கனவுகளோடு அப்போது திரிந்து கொண்டிருந்-தவன். பிறகென்ன. அவர் பின்னால் தான். பாரதியின் குவளைக்கண்ணன் போல என்று வைத்துக்கொள்ளுங்கள். எனது 'அண்ணை றைற்' நிகழ்ச்சியின் முன்னோடியான எனது பிரதியை அவரது பலத்த சிபார்சின் அழுத்தத்தினால் 'சானா' வானொலியில் ஒலிபரப்பச் சம்மதித்து, நான் வானொலி எழுத்தாளனாகியது தனிக்கதை.

ரீ.ராஜேஸ்வரன் அவர்கள் நடிக்கும்போது எளிதில் உணர்ச்சிப்பட்டு விடுவார். மேடை நாடகங்கள், திரைப்படங்களில் நடிப்பதைப்போலவே தாரை, தாரையாக கண்ணீர் விட்டு வானொலி நாடகங்களில் சோகக்கட்டங்களில் நடிப்பதை பார்த்திருக்கிறேன். 'தேரோட்டி மகன்' நாடகத்திலே நானும் அவரும் இணைந்து நடித்திருக்கிறோம். நான் கண்ணனாக, அவர் சாத்தகேசி என்ற பாத்திரத்தில். அட்டகாசமான நடையுடன், பொறிபறக்கும் தமிழுடன் எனக்கு ஆதர்ச நடிகராக அப்போது இருந்தார். சொல்ல மறந்து விட்டேன். அவரது "டாக்சி டிரைவர்" திரைப்படம். 27.12.1966 திரைக்கு வந்தது.

காலப்போக்கில் அவர் வேலையிலிருந்து ஓய்வுபெற்றபின், மருதானையிலுள்ள "தீவுக் கோயில்" என்றழைக்கப்படும் விநாயகர் ஆலயச்சூழலில் நிரந்தரமாக வசித்து, கோயில் காரியங்களில் உதவி செய்து கொண்டிருந் தார். கலையுலகத்திலிருந்தும் ஒதுங்கியே இருந்த காலம்.

1983ன் ஆரம்பத்தில் இலங்கை ரூபவாகினி தொலைக்காட்சிக்காக தயாரிப்பாளராக விருந்த பி. விக்னேஸ்வரன் தான் எழுதிய "நிஜங்களின் தரிசனம்" என்ற நாடகத்தை தயாரித்தார். அதில் தந்தை பாத்திரத்தில் நடிப்பதற்கு ரி.ராஜேஸ்வரன் பொருத்தமாகவிருப்பார் என்று தீர்மானித்து என்னை அனுப்பினார்கள். மிகுந்த பிரயத்தனத்துடன் அவரை அழைத்து வந்ததாக ஞாபகம். சிரமம் வீண்போகவில்லை.

கதாநாயகன் தன்னிஸ்டத்துக்கு காதல் திருமணம் செய்து கொண்டு கொழும்பில் இருக்க, (வசதியாக என்றில்லை). அவனை



நம்பி இருந்த தங்கையின் திருமணச்செலவுக்காக கடிதம் எழுதி அலுத்து நேரே வந்து விடுகிறார், அந்த யாழ்ப்பாணத்துத் தந்தை. வந்த நேரம் அதிகாலை. கதவைத்திறந்தவள், அவர் முன்காணாத அவரது இளம் மருமகள். மகன் மீதுதானே கோபம். இந்தப்பிள்ளை பாவம் என்ன செய்யும் என்ற மனப்பாங்கு முகத்தில் தெரிய, சட்டென்று பார்வையை நிலத்தில் பதித்து, கௌரவமாக, "தம்பி எங்கை" என்று கேட்பார். அந்தக்காட்சி எனது நினைவில் என்றும் இருக்கும். ஒரு பார்வையால் இத்தனை உணர்வுகளையும் கொண்டு வரமுடியும் என்று அந்த குணசித்திர நடிகர் எனக்கு நிரூபித்தார்.

ரி.ராஜேஸ்வரன் பேசப்படாத கலைஞராகப் போய்விட்டாரே என்று நினைத்துக் கொண்டிருந்த எனக்கு "தாய் வீடு" வழி காட்டியிருக்கிறது.

■ ■ ■

## நித்தி கனகரத்தினம்

போர்த்துக்கேயர்களினால் இலங்கை 1505ம் ஆண்டில் கைப்பற்றப்பட்டு 1656ல் டச்சுக்காரர்களிடம் தோற்றுப்போகும்வரை, அவர்கள் ஆட்சிக்காலத்தில் உள்ளூர் வாசிகளுக்கு 'பைலா' என்ற ஒரு புதிய இசைவடிவத்தையும் அறிமுகப்படுத்திவிட்டுப்போனார்கள். 'பைலா' என்ற இந்தச்சொல் கூட 'ஆடுவதற்காக' என்று பொருள்படும் 'பைலார்' என்ற போர்த்துக்கேயச் சொல்லில் இருந்தே வந்திருக்கிறது.

'பைலா' இசையின் தாளக்கட்டுக்கு ஏற்றபடி அமைந்து, சமூக சீர்திருத்த கருத்துக்களை தமிழ் பொப்பிசை மூலம் 1967ம் ஆண்டளவில் சொல்லப் புறப்பட்டோம் என்கிறார் பொப்பிசைப்பிதா நித்தி கனகரத்தினம். இவரைத் தொடர்ந்து பலர் துள்ளிசைப்பாடல்களை பாடிப் பிரபல்யம் அடைந்தாலும் நித்தியின் 'சின்னமாமி' இப்போதும் இலங்கை, இந்தியா, மலேசியா, மற்றும் தமிழர் வாழும் இடங்களிலெல்லாம் ஒலித்துக்கொண்டுதான் இருக்கிறது.

ஒரு சுவையான தகவல். 1977ம் ஆண்டு டிசம்பர் 10ந்திகதி மலேசிய மன்னரின் 60வது பிறந்தநாள் வைபவத்தின் போது 'சின்னமாமி' பாடப்பட்டிருக்கிறது. அதுமாத்திரமல்ல அண்மையில், 2008ல் மலேசியாவின் 45வது மெர்டெகா தினத்தில் (சுதந்திர தினம்) ஊர்வலமாகப்போன பல்லின மக்களில், தமிழ் மக்கள் பாடிக்கொண்டு போன பாடல் 'சின்ன மாமி'தான், என்கிறார் நித்தி.



இலங்கையில் உரும்பிராயில் பிறந்த நித்தி தற்போது அவுஸ்திரேலியாவின் விக்டோரியா பல்கலைக்கழகத்தில் உணவு ரசாயன விரிவுரையாளராக இருக்கிறார். அண்மையில் அவுஸ்திரேலிய சஞ்சிகை ஒன்றில், நித்தியின் பெயர் ஒரு நிகழ்ச்சி விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டிருந்து. அடடா.. எங்கோ.. சின்ன

14ம் பக்கம் பார்க்க...

# வர்த்தக நிறுவனங்கள் வாங்க, விற்க

**Home Life**
GTA Realty Inc., brokerage
206-1711 McCowan Road, Scarborough, ON. M1S 3YS
Bus: 416-321-6969 Fax: 416-321-6963

HOMELIFE HIGHER STANDARDS

**Baskaran Sinnadurai**
Commercial & Residential Sales Representative
**416-880-8585**





Space for banquet hall
liqurar licence for 1000 people ,
very good location , plenty of parking ,
lease for up to 25 years




Weekly Sales $11,000-$13,000
Very Low Rent ($1200/Over 2000 Sq. Ft)
Canada Post, Purolator, Greyhound Bus Depot,
Lotto 639, Nevada Tickets



Dollar store
Only for 39,900
Good locatiion



INDUSTRIAL BUINDING WITH
40,000SQ
$3595000.00



BANQUET HALL WITH 250SEATS
$190,000



10 ACRE LAND WITH
INDUSTRIAL ZONING
$1100,000.00

# RBC RESIDENTIAL MORTGAGES

- 1st Time Home Buyers
- Pre–Approvals
- Builder Rate Hold Programs
- Refinance, Renewals & Switch for Free
- Debt Consolidation
- Home Equity Line of Credit
- New Immigrant & Self Employed Programs



| RATE SPECIAL | |
|---|---|
| 4 Yrs Fixed | **4.29 %** |
| 5 Yrs Fixed | **4.34 %** |
| Variable Closed | **3.30 %** |
| Variable Open | **3.50 %** |

**Three Locations to Serve you**

**Royal Bank**
Eglinton & Sinnott
2043 Eglinton Ave E
Scarborough, ON
M1L 2M9

**Royal Bank**
Kingston & Steeple Hill
670 Kingston Road
Pickering, ON
L1V 1A6

- digi Media -

RBC

**Ram Krish**
RBC Mortgage Specialist
Direct **416-526-4996**
Email: ram.krish@rbc.com



# ஒன்ரேறியோ மாகாணத்தில் வீடுகளை வாடகைக்கு விடுதல்

## Renting in Ontario

எமது தமிழ் சமுதாயம் நாட்டை விட்டு புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும், தாம் வாழும் நாட்டில் தம்முயற்சினால் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு தம் தரத்தினை உயர்த்தி வருகின்றனர். அந்த ரீதியில் நம்மவர் பலர் தமக்கென ஒரு வீடு வாங்கி தற்பொழுது வணிக ரீதியில் அடுத்த வீட்டினை வாங்கி வாடகை அமர்த்துகின்றனர். எனவே அவர்களுக்கு இக் கட்டுரை உதவும் என்ற ரீதியில் தொடர்கின்றேன்.

கனடாவின் மிகப் பெரியதும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்ததுமான ஒன்ரேறியோ மாகாணத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் தொடர்மாடிக் கட்டிடங்கள், தனியாருக்கு சொந்தமான வீடுகள், கொண்டோமினியம் அலகுகள் (Condominium Units) என்பவற்றில் வாடகை செலுத்தி வசிக்கின்றனர்.

### கட்டுப்படுத்தும் அமைப்பு Governing or Regulatory body

வாடகை வதிவிடங்கள் தொடர்பான விடயங்கள் அனைத்தையும் வீட்டுரிமையாளர்களுக்கும் வாடகைக்கு குடியிருப்பவர்களுக்குமான சபை (Landlord and Tenant Board) என்ற அமைப்பு கட்டுப்படுத்தப்படுகிறது.

தற்போது இது தொடர்பான இரு சட்டவிதிகள் செயற்படுகின்றன அவை பின்வருமாறு.

- வதிவிடக் குடியிருப்பாளர்கள் சட்டம் (Residential Tenancies Act)
- Statutory Powers procedure Act

வசிப்பிட வாடகை வீடுகளில் பின்வருவன மாகாண சட்டத்தில் இருந்து விதிவிலக்கு வழங்கப்பட்டுள்ளன.

### வசிப்பிட வாடகை வீடுகளில் விலக்குதல் வழங்கப்பட்டுள்ள வீடமைப்புக்கள்:

- Co-op அமைப்பின் உறுப்பினர்கள் வசிக்கும் Co-op வீடுகள்
- Hotels, Motels விடுமுறைக் கால வதிவிடங்கள், சுற்றுலாப் பயணிகள் தங்கும் Camp, கோடைக்கால வதிவிடங்கள், விடுமுறைக்கால வீடுகள் (Cottages)
- பண்ணைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கான வதிவிடங்கள்
- இலாப நோக்கமுற்ற தன்மையாக இயங்கும் வீடமைப்புக்கள்
- குற்றவாளிக்கான சீர்திருத்த பயிற்சி நிலையங்கள்
- வைத்தியசாலைகள், Nursing Homes
- புனர்வாழ்வு அல்லது சிகிச்சை மையங்கள்
- குறுகியகால அவசர சூழ்நிலையில் வழங்கப்படும் வதிவிட வசதிகள்
- ஓர் கல்வி நிறுவனத்தில் பணிபுரிபவர்களுக்கு, அந்த நிறுவனம் வழங்கிய வசிப்பிடங்கள்.
- வீட்டுரிமையாளரும், வாடகைக் குடியிருப்பாளரும் குளியலறை, சமையலறை என்பவற்றை பகிர்ந்து பாவனை செய்ய வேண்டிய தன்மையான வசிப்பிடங்கள்.

### கையெழுத்திடப்பட்ட குத்தகை ஒப்பந்தம் அவசியமா?

இல்லை. வாடகைக்கு விடுதல் பற்றிய எழுத்து மூலமான ஒப்பந்தம் இல்லாவிடில் வாடகைக்குடியிருப்பாளர் வாடகை வீட்டில் குடியிருக்க ஆரம்பித்த 21 நாட்களுக்குள்




வீட்டுரிமயாளரின் சட்டபூர்வமான பெயரும், முகவரியும் பற்றிய விபரம் குடியிருப்பாளருக்கு வழங்கப்பட வேண்டும். இவ்வாறு செய்யாவிடில் குடியிருப்பாளர் வாடகை செலுத்த வேண்டிய கட்டாயம் தற்காலிகமாக இடை நிறுத்தப்படுகிறது.

### ஒரு வதிவிடத்தில் வாடகை செலுத்தி குடிபுகுவதற்கு அல்லது வெளியேறுவதற்கு முன்பு வதிவிடத்தின் நிலை எவ்வாறு உள்ளது என்பது பற்றி கையெழுத்திட்ட ஓர் அறிக்கை அவசியமா?

இல்லை. ஆனால் வதிவிடத்தினுள் உள்ள சில பிரதானமான விடயங்களை பற்றி பரிசோதித்தல் பயனுடையது.

### வைப்பு பணம் (Deposits)

வீட்டுரிமையாளர் வாடகைக் குடியிருப்பாளரிடமிருந்து ஒரு மாத வாடகையை வைப்பு பணமாக பெற முடியும். அனால் இது பாதுகாப்பு வைப்பு பணம் (Security deposit) அல்ல. ஒன்ரேறியோ மாகாணத்தில் இது தடை செய்யப்பட்டுள்ளது. கடைசி மாத வாடகையாக முன்கூட்டியே பெற்ற பணத்தில் இருந்த கட்டிடச் சேதங்களுக்கான செலவுகளை கழிக்க முடியாது.

வீட்டுரிமையாளர் ஒவ்வொருவருட ஆரம்பத்திலும் கடைசி மாத பணத்திற்கான வட்டியை குடியிருப்பாளருக்கு வழங்க வேண்டும்.

### Key Money

ஓர் வதிவிடத்தை விடுவதற்காக, மேலதிக பணம் எதனையும் குடியிருப்பாளரிடமிருந்து அறவிட முடியாது.

### பிந்திய திகதியிடப்பட்ட காசோலைகள் (Post Dated Cheques)

வாடகைக்கு வசிக்க விரும்புவரிடம் இவற்றை வழங்கும்படி வீட்டுரிமையாளர் கோர முடியும். ஆனால் இதனை வழங்காவிடில் ஒரு குடியிருப்பாளர்ருக்கு வாடகைக்கு அனுமதி மறுக்க முடியாது.

### குத்தகை ஒப்பந்த காலத்தை மீள் புதுப்பித்தல் (Renewal of a lease term)

வீட்டு உரிமையாளரும் குடியிருப்பாளரும் ஏற்கனவே ஒப்புக்கொண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் அல்லது புதிய மாற்றியமைக்கப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் குத்தகைக் காலத்தை நீடிக்க முடியும். குத்தகைக் காலம் முடிவடையும் காலப் பகுதியில், இரு பகுதியினருக்கும் கருத்து ஒருமித்தல் ஏற்படாவிடில் குத்தகை ஒப்பந்த காலத்தின் முடிவில், வாடகை ஒப்பந்தம் எதுவுமின்றி மாதா மாதம் வாடகை செலுத்தும் தன்மையான நிலை ஏற்படும்.

### குத்தகை வாடகை ஒப்பந்தத்தை நிறுத்துதல்: முன்னறிவித்தலும் காலமும்

ஓர் வாடகை ஒப்பந்தம் காலாவதியாகுவதற்கு முன்பு அதனை நீடித்தல் அல்லது அதனை முடிவுக்கு கொண்டுவருதல் வீட்டு உரிமையாளர், வாடகைக் குடியிருப்பாளர்

மகேன் சிங்கராஜா
- வீடு விற்பனைப் பிரதிநிதி -



இருவரதும் இணைந்த பொறுப்பாகும். குறிப்பிட்ட ஒப்பந்த காலம் முடிவடைந்ததைக் காரணமாகக் காட்டி ஒரு வீட்டுரிமையாளர் தன்னிச்சையாக அந்த ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டுவரமுடியாது. சட்டபூர்வமான குறிப்பிட்ட சில காரணங்களுக்காக மட்டுமே ஓர் வீட்டுரிமையாளர் வாடகை ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வரமுடியும். எனினும் இவ்வாறு செய்வதற்கு பொருத்தமான கால அவகாச முன்னறிவித்தல் வழங்கப்பட வேண்டும்.

ஓர் ஒப்பந்தம் மீள் புதுப்பிக்கப்பட்ட பின்பு இணைக்கப்பட்ட சில புதிய விதிமுறைகளைத் தவிர ஏனைய நிபந்தனைகள் எவையும் மாற்றமடையாமல் இருக்கும்.

ஆனால், வாடகையை உயர்த்துவதற்கு சட்டபூர்வமாக இடம் உண்டு. இதற்காக குடியிருப்பாளருக்கு 90 நாட்கள் முன் அறிவித்தல் வழங்கப்பட வேண்டும்.

### Assignments and sublets

ஒரு வாடிக்கையாளர் ஒரு வதிவிடத்தை வேறு ஒருவருக்கு வாடகைக்கு விடுவதற்கு முன்பு வீட்டுரிமையாளரிடம் எழுத்து மூலமாக விண்ணப்பிக்க வேண்டும்.

### வாடகை அதிகரித்தலுக்கான முன்னறிவிப்பு

12 மாதங்களுக்கு ஒரு தடவை மட்டுமே வாடகையை அதிகரிக்க முடியும். வாடகை அதிகரிப்புக்கான அறிவிப்பை வீட்டுரிமையாளர் 90 நாட்களுக்கு முன்பு எழுத்து மூலமாக அறிவிக்க வேண்டும்.

ஓர் வதிவிடத்தில் பாரிய அளவில் பராமரிப்பு குறைபாடுகள் இருந்தால் வாடகை உயர்வை நிறுத்தும்படி Land Lord & Terant சபைக்கு விண்ணப்பிக்க முடியும்.

### வசிப்பிடத்தில் இருந்து வாடகைக் குடியிருப்பாளரை வெளியேற்றுதல்.

இதற்கு பல காரணங்கள் உள்ளன. எனினும் வாடகைகளை ஒழுங்காக செலுத்த தவறுதலே இதற்கான முக்கிய காரணம்.

அடுத்த இதழில் ஒரு வாடகை குடியிருப்பாளர் வாடகையை செலுத்த தவறும் சந்தர்பத்தில் எப்படி வெளியேற்றலாம் என பார்ப்போம்.

mahensingaraja@thaiveedu.com

■ ■ ■

ROYAL SHUTTERS & BLINDS INC.
DIRECT FROM MANUFACTURER
Everything Factory Direct Prices



உங்கள் இல்லத்தின் உட்புறத்திற்கு ஏற்றவகையில் யன்னல்களை மறைப்புச் செய்திடவும் அழகு படுத்திடவும் நாடுங்கள்

Sales - Service - Installations

Custom Made

| Wood & Vinyl Shutters | Blinds | Draperies |
|---|---|---|
| California Style Shutters | Vertical Blinds | Swags |
| Plantation Style Shutters | Venetian Blinds | Sheers |
| Traditional Style Shutters | Wood Blinds | Valance |
| Arches | Bamboo Shades | Curtains |
| | Roller Shades | And More |
| (We Do Any Colour Of Paint & Stain) | And More | |



Workmanship Guaranteed
Free Shop At Home
CALL FOR A FREE ESTIMATE:
தாஸ் Thaas Sivathason
13 Years of Experience in Shutter Business
Tel: (416) 562-0340
Full Satisfaction Guaranteed

# All your Real Estate needs

ஞானி நரசிங்கம்
Sales Representative
**416-937-8090**



ஜூடி ஞானேந்திரன்
Sales Representative
**416-629-9797**

## "வீடு வியாபார நிலையங்கள் வாங்க விற்க"

**Office: 416-321-6969**

CHANCE TO WIN ..... 1ST **BMW CAR**

CHANCE TO WIN ..... 2ND **TRIP TO CUBA**

CHANCE TO WIN ..... 3RD **PLASMA TV**

### Weston/Ruterford



**$619,000**

Detached brick 2 Storey
4 bedrooms/ 2full washrooms
one years old, Fully Hardwood
Approx 3100 square feet
Library Room in Main Floor

### Brampton



Tobram/Sandlewood

**$449,000**

Detached brick 2 Storey
4 bedrooms/ 3 full washrooms
Parquet floor, Hardwood fully
Approx 3000 square feet
Den in Main Floor, open Concept

### Brimley/ Denison



**$359,900**

Detached brick 2 Storey
3 bedrooms with 2 full washrooms
Finished Basement/Approx 1600 Sq ft
many upgrades to list
50 k on renovation, Hardwood

### Markham/Lawrence



**$289,900**

Detached brick bangalow
3 bedrooms with 2full washrooms
Finished Bsmt with Sep entrance
2BR in Basement, close to TTC

### Brimley / Eglinton




**$499,000**

Golden opportunity to own attractive
updated Medical /Prof Building
Main floor has 5 fully equipped Exam
rooms, 1 W/R and reception area.
2nd floor has 7 examination rooms
2 washrooms and office

### 9th Line/ 14th Ave



**$549,800**

Detached brick 2 Storey
4 bedrooms with 3 full washrooms
Library room, hard wood floor
9ft ceiling,less than 5 yeaes
Approx 3100 Sq feet, separate Ent

**HomeLife GTA Realty Inc., Brokerage*1711 Mccowan Rd, Suit # 206 Toronto, ON M1S 3Y3**

This is not intended to solicit properties currently under contract*Independently Owned and Operated**Some Conditions may apply

# கொலெஸ்ரெறோல் நன்மைகளும் தீமைகளும்

இதயம் மலர்கிறது - 13



கந்தையா செந்தில்நாதன்
- Echo - Cardiogapher -

கொலெஸ்ரெறோல் என்ற பதம் பல மக்களாலும் அடிக்கடி பேசப்படுவதை அவதானித்திருப்பீர்கள். இது ஒரு வெண்ணிறமான கொழுப்புப் பதார்த்தமாகும். பித்தப்பையில் ஏற்படும் கற்களில் கொலெஸ்ரெறின் (Cholesterine) என்ற பதார்த்தம் 1800ன் முற்பகுதிகளில் கண்டறியப்பட்டது. இப்பெயர் பிற்காலத்தில் இரசாயனப் பகுப்பாய்வுகளின் பின்பு கொலெஸ்ரெறோல் என மாற்றப்பட்டது.

இப்பதார்த்தம் வெள்ளை நிறமானதும், நீரில் கரையும் தன்மை அற்றதாகவும், மெழுகு போன்ற திண்மத் தன்மை கொண்டதாக காணப்படுகின்றது. குருதியில் நீந்திய வண்ணம் எல்லாவிடமும் ஓடித்திரியும் இப்பொருள் தசைகளிலும் காணப்படும். உடலில் உள்ள பல அனுசேபத் தொழிற்பாடுகளுக்கும் உடற் கலங்களில் காணப்படும் கல மென்சவ்வுகளின் கட்டுமானத்திற்கும் கொலெஸ்ரெறோல் தேவைப்படுகிறது. சுகதேகியான ஒரு மனிதனின் உடலில் 140 தொட்டு 150 கிராம் அளவு கொலெஸ்ரெறோல் உண்டு. இதில் 120 தொட்டு 130 கிராம் வரையில் கல மென் சவ்வுகளில் காணப்படுகிறது. மத்திய நரம்புத் தொகுதி, சுற்றயல் நரம்புத்தொகுதிகளின் மென்சவ்வுகளிலும் இவை காணப்படுகின்றன. பாலியல் ஹோமோன்கள், அட்ரீனோ கோட்டிகொயிட்டு ஹோர்மோன், வைற்றமின் D, மற்றும் பித்தப்பைச் சுரப்புகள் என்பன தயாரிக்கப்படுவதிலும் இது பங்கு வகிக்கின்றது.

உடலில் பலவித தேவைகளில் பயன்படுத்தப்படும் கொலெஸ்ரெறோல் குருதியில் கரையாத காரணத்தால் அதைக் காவிச் செல்வதற்கு வேறோரு பதார்த்தம் தேவைப் படுகிறது. LDL என்று கூறப்படும் மென் அடர்த்திக் கொழுப்புப் புரதம் (Low Density Lipoproteins) ஈரலில் இருந்து வெளிப்படும் கொலெஸ்ரெறோலை தேவைப்படும் இடங்களுக்கு குருதியினூடாக எடுத்துச்செல்கின்றது. இப்படியாகப் பல தேவைகளிற்காகப் பல இடங்களுக்கு காவிச் செல்லப்பட்ட "கொலெஸ்ரெறோல்-LDL" என்ற இணைப்பதார்த்தம் பாவிக்கப்படும் இடங்களில், பாவனைக்குள்ளாகிய பின்பு மிகுதியாக உள்ளவை மீண்டும் ஈரலிற்குக் கொண்டுசெல்லப்படுதல் வேண்டும். பாவிக்கப்படாததும், எஞ்சியும் உள்ள கொலெஸ்ரெறோல் மீண்டும் ஈரலிற்கு எடுத்துச்செல்லப்பட்டு பிரித்தழிக்கப்பட்டு பித்தவமிலங்களாக மாற்றப்படும். பின்பு பித்தப்பையை அடைந்து இறுதியில் மலத்துடன் கழிக்கப்படுகிறது.

பாவனையில் எஞ்சியுள்ள கொலெஸ்ரெறோலை மீண்டும் ஈரலிற்கு எடுத்துச்செல்லும் தொழிலை HDL என்ற வன் அடர்த்திக் கொழுப்புப் புரதம் (High Denstty Lipoprotein) செய்கிறது. குருதியில் HDL அளவின் குறைபாடு, கொலெஸ்ரெறோலின் அளவை குருதியில் அதிகரிக்கவைக்கின்றது. ஏனெனில் HDL குறைவாக இருந்தால் மேலதிகமான கொலெஸ்ரெறோலை மீண்டும் ஈரலுக்கு எடுத்துச்சென்று பிரித்து அழிக்கமுடியாமற் போய்விடுகின்றது. அதனால்தான் HDLஐ நல்லதென்றும் LDLஐ கூடாததென்றும் கூறுகின்றார்கள். ஆனால் LDL, HDL இரண்டும் அளவாகக் குருதியில் இருந்தால் எமது உடல் மிகவும் ஆரோக்கியமாக இருக்கும். இரண்டு பதார்த்தங்களும் ஒரு விகிதாசாரதத்தில் அமைந்திருப்பது நல்லது.

> "மனப்பதட்டம், கோபம் போன்ற மன எழுச்சிகளும் குருதியில் சில ஹோமோன்களைச் சுரந்து விடுகிறன. அட்ரீனலின், கொட்டிசோல் போன்ற ஹோமோன்கள் குருதியில் வெல்ல அளவுகளைக் கூட்டிவிடுவதனால், தொடர்ச்சியான மன உளைச்சல் உடையவர்களும் இதனால் பாதிக்கப்படலாம்."

கொழுப்புப் பதார்த்தங்களால் தீமைகள் பல என்பதுதான் பலரின் கருத்து. ஆனால் அங்கே பல நன்மைகளும் உண்டு. அளவோடு உண்பது, சமபல உணவை கைக்கொள்வது என்ற ஆலோசனைகள் அறிவுபூர்வமாக மட்டும் அமைந்து விடாமல் அனுபவபூர்வமாகவும் அமைந்துவிட்டால் எங்கும் உங்களுக்கு நன்மைகள் தான்.

### நன்மைகள் என்ன?

வைற்றமின்களில் சில நீரில் கரைபவை, ஏனையவை கொழுப்பில் கரைபவை. வைற்றமின் A.D.E.K போன்றவை கொழுப்பில் கரையக்கூடியவை. எமது உணவில் கொழுப்பு இருந்தால்தான் அவை கரைந்து நமது உடலினால் உறிஞ்சப்படும்.

சூரிய ஒளி எமது தோலில் படும்பொழுது கொலெஸ்ரெறோல் என்ற பதார்த்தத்திலிருந்து வைற்றமின் D தயாரிக்கப்படுகிறது. சூரியக் குளிப்பு அளவோடு இருத்தல் அவசியம்.

பாலியல் உணர்ச்சியைத் தூண்டும் பாலியல் ஹோர்மோன்களின் உற்பத்திக்கு மிகவும் அவசியம் தேவைப்படுகிறது.

அட்ரீனோகோட்டிகொயிட்டுக் ஹோர்மோன் போன்ற பல ஹோர்மோன்களின் உற்பத்திக்கு இது தேவை.

நரம்புகளைச் சுற்றிக் கவச உறையாகப் படிந்து அதனூடாகச் செல்லும் நரம்பு கணத்தாக்கங்கள் உரிய முறையில் கடத்தப்படுவதற்கு உதவுகின்றது. கவச உறை சரியாக இல்லாவிட்டால் குறுக்குச் சுற்றோட்டம் (Short Circuit) ஏற்பட்டு செய்திகள் சரியாகப் பரிமாறப்படமாட்டாது.
கலச்சுவர்கள், கலமென்சவ்வுகள் என்பவற்றின் ஆக்கத்திற்கு மிகவும் தேவையானது.

### தீமைகள் என்ன?

மாரடைப்பு வியாதிக்கும் (Heart Attack) கொழுப்பு உணவிற்கும் தொடர்புகள் உண்டு.

பாரிசவாதத்திற்கும் (Stroke) கொழுப்பு உணவிற்கும் தொடர்புகள் உண்டு.

குருதிக்குழாய்களில் உட்பகுதியில் கொழுப்புகள் படிந்து அவற்றின் மேன்மேலும் கல்சியம் உப்புக்கள் படிவடைவதால் அவற்றின் சுவர்கள் கடினமாகின்றன. இக்கடினமான சுவர்கள் மீள்தகவுத்தன்மையை இழப்பதனால் இரத்த அமுக்க நோய் உள்ளவர்களுக்கு குருதி அமுக்கம் கூடும்பொழுது குழாய்கள் வெடிக்கலாம்.

குருதிக்குழாய்களில் திட்டுத்திட்டாகப்படியும் கொழுப்பு அப்பகுதிக்குரிய குருதி வினியோகத்தைக் குறைக்கின்றது. நாளடைவில் அப்பகுதிச் சுவர் நலிவடைந்து பலூன் வீங்குவது போல் புடைப்படைந்து காணப்படும். அனேகமான சமயங்களில் நேரகாலத்துடன் கண்டறியப்படாமல் வெடிப்பு ஏற்பட்டு குருதியிழப்பு நிகழ்ந்து மரணம் சம்பவிக்கலாம்.

### உணவின் பங்கு என்ன?

எமது உணவில் சராசரியாகத் தினமும் 300 மி.கிராம் அளவு கொலெஸ்ரெறோல் சேர்க்கப்படலாம். உணவில் எமக்குத் தேவைப்படும் கொலெஸ்ரெறோலின் அளவு குறைந்தாலும் அதை எமது ஈரல் தயாரித்து வினியோகிக்கின்றது. எமது அன்றாட உணவில் இருக்கும் கொலெஸ்ரெறோலின் அளவை அறிந்து வைத்திருப்பதன் மூலம் எமது கொழுப்புணவைக் கட்டுப்படுத்தி அதன் மூலம் பயன் பெறலாம். அனேக உணவுப் பதார்த்தங்களில் கொலெஸ்ரெறோல் பதார்த்தம் காணப்படுவதில்லை. ஆனால் அவ்வுணவுகளில் கொழுப்பமிலங்கள் காணப்படலாம். இவை இலகுவில் கொலெஸ்ரெறோல் பதார்த்தமாக மாற்றப்படக்கூடியவை. கொழுப்புகள் நிரம்பிய கொழுப்பமிலங்கள், பகுதி நிரம்பிய கொழுப்பமிலங்கள், மாற்ற உருவுடைய (Transfat) கொழுப்பமிலங்கள் என்று வகைப்படுத்தப் பட்டுள்ளன. இவற்றில் நிரம்பிய கொழுப்பமிலங்களும், மாற்ற உருவுடைய கொழுப்பமிலங்களும் இலகுவில் அடுத்தகட்டமாக உள்ள கொலெஸ்ரெறோல் பதார்த்தமாக மாறக்கூடியவை. இதன் காரணத்தால் இக் கொழுப்புகளைத் தவிர்ப்பது மிகவும் நல்லது. பகுதிநிரம்பிய கொழுப்பமிலங்களை உணவில் சேர்த்துக்கொள்வது நன்று.

சிலருக்கு கொலெஸ்ரெறோல் அதிகமாக உருவாகும் தன்மை பரம்பரையாக இருப்பதாகக் கருதப்படுகிறது. இவர்களது ஈரல் கொலெஸ்ரேறோலை அதிகமாக உற்பத்தி செய்து குருதிச் சுற்றோட்டத்தில் சேர்த்து விடுகின்றது. இதற்குரிய சரியான காரணம் இன்னமும் கண்டறியப்படவில்லை. இத்தகையவர்கள் வைத்திய ஆலோசனைப்படி மருந்து உட்கொள்வதன் மூலமோ, உடற்பயிற்சி மூலமோ, உணவைக் கட்டுப்படுத்துவதன் மூலமோ நோயைக்கட்டுப்படுத்தலாம். அதிகளவு கொழுப்பு, சீனி, மதுபானம், கொலெஸ்ரெறோல் உள்ள ஆகாரங்கள் என்பனவற்றைக் கட்டுபாடாகவோ அல்லது தவிர்த்தோ விடுவது நல்லது.

பசித்திரு, பொறுத்திரு, விழித்திரு என்ற மகாத்மா காந்தியின் கருத்துகள் நடைமுறையில் செயற்படுத்தலாம்.

வேறுசில கட்டுப்பாட்டில் இல்லாத நோய்களும் இதற்கு காரணமாகலாமா?

- நீரிழிவு வியாதி.
- அதிக உடற்பருமன்.
- தைரொயிட்டுச் சுரப்புக்குறைபாடு.
- ஈரல் அழற்சியும் அதன் தொழில்மந்தநிலையும்.
- சிறு நீரகங்களில் ஏற்படும் வியாதிகள்.
- எலும்பு மச்சை, குருதித்துணிக்கைகள் போன்றவற்றில் ஏற்படும் வியாதிகள்.

மேற்கூறிய நோய் உள்ளவர்கள் அவற்றைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது அவசியம்.

### கொலெஸ்ரெறோலின் சரியான அளவை எப்படி அறியலாம்?

விரதமிருக்காது எழுந்தமானமாக (Random) குருதியில் உள்ள கொழுப்பின் அளவுகளை எடுக்கலாம்.

14 மணிநேரம் விரதம் இருந்தபின்பு, குருதியில் உள்ள கொழுப்பின் அளவுகளை எடுக்கலாம்.

விரதமிருந்து எடுத்த கொழுப்பின் அளவு சாதாரண அளவுகளிலும் பார்க்க கூடுதலாக இருந்தால் மேலும் இரண்டு வாரங்கள் கட்டுப்பாடான உணவை உண்டபின்பு மீண்டும் 12 தொட்டு 14 மணிநேரம் விரதம் இருந்து திரும்பவும் கொழுப்பின் அளவுகளை அளக்கலாம். கொலெஸ்ரெறோல் அளவு கூடுதலாகவிருந்தால் வைத்திய ஆலோசனைப்படி நடக்கலாம்.

### எடுக்கப்படும் அளவுகள் எத்தகையவை?

- கொலெஸ்ரெறோல் மொத்தளவு (Total Cholesterol)

14ம் பக்கம் பார்க்க...

தமிழிலும் ஆங்கிலத்திலும்
முதலுதவி கற்பதற்கு
Dr. Kandiah Senthilathan
Registered Medical Officer (SLMC)
Acupuncturist (MAcF)
First Aid & CPR Instructor
(Certified in Canada)
பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்
ஆறு மாணவர்களுக்கு மேல் சேருமிடத்தில், உங்கள் இடத்திற்கு வந்து முதலுதவி கற்பிக்கப்படும்.
647-801-9252, 416-502-9252

# Buy & Sell Residential and Commercial Properties



**Raj. A. Rasaratnam**
Sales Representative
**416-726-8055**
argaccountax@rogers.com

**HomeLife/ GTA Realty Inc.**
Real Estate Brokerage*

1711 McCowan Rd., Suite #206,
Scarborough, ON. M1S 3Y3

Bus: (416) 321-6969
Fax: (416) 321-6963

*Independently own and operated

**$289,900**

Medowvale & Sheppard
3 br Townhouse With Large Front Porch, Open Concept Design, Direct Access To The Garage, Keyless Entry, Close To 401, Walmart, Home Depot, Staples, Rbc, Sobeys, School

**$369,800**

McCowan & Denison
3 + 2 br Detached, Large Backyard, Ceramic Floor Entrance Way, Upgraded Kitchen, 2 Bedroom Basement with Kitchen And A 3 Pc Bath.

**$389,000**

Kennedy & Denison
3 bdrm Detached, Walking Distance To Pacific Mall, School, Supermarket, Ttc, Gas Fireplace In Family Room, 9' Ceilings.

**$398,000**

Brimley & 14th Ave
4 br Semi, Full Oak staircase, Hardwood Floors, Granite Floor in Kitchen, Finished Basement with pot lights and High (8'8") ceilings

**$438,888**

McCowan & Steeles
4 br Link, Laminated Flrs, Crown Mouldings ThruOut, Front & Rear patio, Parquet flrs & Ceramics ThruOut main flr.

**$469,900**

Morningside & Sheppard
5+1 br Detached, Corner Lot Mattamy Home, $50,000+ upgrades,9' ceilings main flr & basement, Pot lights & hardwood flrs ThruOut.

Mortgage arrangement, Business incorporation and corporate tax preparation

**(416) 726-8055**



# எமக்கென்று ஒரு தனிக்குழல்

சொந்த இல்லத்திற்கு தேவையான அடமானத்தை சுலபமாகப் பெறுவதற்கு பலவருட அனுபவம் பெற்ற முகாமையாளர்களை நாடுங்கள்



**TWO PROFESSIONAL MORTGAGE SPECIALISTS UNDER ONE ROOF WITH RATES YOU CAN'T BEAT**

**MAILVAGANAM (MIKE) AHILAN**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-220-1184**

**VINCE SINNADURAI**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-917-9462**

**416.438.1688**

Fax: 416 438 1612

RBC Financial Group

1421 Kennedy Rd,
Scarborough, ON. M1P 2L6

# "வீடு" வினாவும் விடையும்

கலைப்படைப்புக்களின் நுகர்வோர் கௌரவிக்கப்பட வேண்டியவரே. அதாவது, நுகர்வோர் ஏற்றுக்கொள்ளாத எந்தப் படைப்புக்களும் பயனற்றவையே. தேவை கருதியதோ அன்றி உங்களின் தேவைகளை பூர்த்தி செய்தலோ எனுமிடத்து, இத் தாய்வீட்டின் வெற்றிப்படிகளுக்கு வாசகர் நீங்கள் தரும் ஆதரவு எப்போதும் கொளுகொம்பு. மாற்றங்கள் ஒன்றுதான் உலகில் மாற்றமில்லாதது என்கின்ற கொள்கையின் அடிப்படையில் அமைந்தது தற்போதைய அமெரிக்க அரசியல். விதி வசமோ அன்றி திணிக்கப்பட்டதோ, கால ஓட்டத்தின் மாற்றங்களோ, தமிழர் எமக்கு ஏற்பட்ட விபரிக்கமுடியாத இழப்புகளின் பின்னர் எத்தனையோ மாற்றம் பெற்ற விமர்சனங்களுக்கு உள்ளான திருப்பங்களை எதிர்நோக்கி நிற்கின்றோம். தூர தொலைவில் சாரதியை இழந்த நிலை. பயணித்தவர்கள் யாராவது வண்டியை நகர்த்தலாம் ஏனையோர் ஏற்றுக் கொள்வதா? இல்லையா? இதுபோன்ற பல கோணங்களில், ஆய்வுகளில் நாம் குதித்துள்ள காலம், இன்றைய எமது அரசியல். நாம் ஜனநாயக, சுயநிர்ணய ஆட்சிப்பீடத்தை விரும்பியவர்கள், எமது திருப்பங்களும் முடிவுகளும் அவ்வாறானதாகவே இருக்க வேண்டும். ஆகவே அடுத்தது என்ன? "இதனை இவன் நன்கு ஆற்றுமென கண்டு அதனை அவன் கண் விடல்". விளித்திருக்கும் இனத்திற்கு வெளிச்சத்தில் விளக்கெதற்கு? என்று கூறி இம்மாத சஞ்சிகைக்கென கிடைக்கப்பெற்றவற்றில் தெரிவுசெய்யப்பட்ட வினாக்களை ஆராய்வோம்.

### நான் வசித்துவருகின்ற வீட்டினை விற்று வேறு வீடு வாங்கும் எண்ணம் ஒன்று உண்டு. ஒரே சமயத்தில் இரண்டினையும் செய்வதா? அல்லது தற்போது இருக்கின்ற வீட்டினை விற்றபின்னர் புதிதாக வாங்குவதா? எது பலன் நிறைந்ததும் அனுகூலமானதுமான முறை?

கோமதி மோ, மார்க்கம்

உங்கள் கேள்விக்கான முடிவுகளை பல காரணிகள் தீர்மானிக்கின்றது. அதாவது பண வலிமை, இன்றைய சந்தை நிலவரம், உங்களின் தேவை மற்றும் தற்போதுள்ள வீட்டின் திருத்த வேலைகள் என்று கூறிக் கொண்டே போகலாம். இருப்பினும், இரண்டு வீடுகள் உங்கள் கைகளில் ஒரே தருணத்தில் இருக்கின்றபட்சத்தில் நீங்கள் கட்டாயமாக ஒரு வீட்டினை விற்பதற்கு தள்ளப்படுகின்றீகள். அதாவது குறைந்த லாபத்திலோ அன்றி குறைந்த சலுகைகளுடனோ விற்றால் போதும் என்கின்ற நிலைக்கு வருகிறீர்கள். மாறாக தற்போதைய வீட்டினை விற்றபின் வீடு வாங்கும் வேளைகளில் துரிதகதியில் செயற்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. சில சமயங்களில் விரும்பியோ விரும்பாமலோ உங்கள் தெரிவுகளை காலம் மேற்கொள்கின்றது. மற்றும் மேலே கூறியது போல் பொதுவாக ஒரு வீட்டினை விற்று பின்னர் வீடு வாங்கும் வேளைகளில் அவ் வீட்டிலுள்ள சொத்துக்களை (முதல்) புதிதாக பெற்றுக் கொள்ளும் வீட்டிற்கு முதலீடாக்கலாம். சந்தை நிலவரம் என்று குறிப்பிடும்போது சில வேளைகளில் (காலங்களில்) வீட்டிற்கு சில கேள்வி அதிகதித்தும் சில காலங்களில் குறைந்தும் காணப்படும். மேலே கூறிய தரவுகளின் அடிப்படையில், இரண்டு செயற்பாடுகளையும் ஒரே சமயத்தில் செய்வதன் மூலம் நன்மைகள் அதிகம்.

### இன்றைய காலங்களில் வீட்டுச் சந்தை நிலவரமானது மிகவும் சூடுபிடித்துள்ளதாக கூறுவது உண்மையான தகவலா? அவ்வாறாயின் அதற்கான காரணம் என்ன?

நடேஷ்.கு Scarborough

உங்கள் கூற்று மிகவும் சரியானதே. கேள்விகள் மிகவும் அதிகரித்துக் காணப்படுவதால், தேவைகளைப் பூர்த்தி செய்யுமளவிற்கு சந்தையிலிடப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை மிக குறைவாகவே காணப்படுகின்றது. ஆதலால் தற்போது சந்தைப்படுத்தும் வீடுகள் துரித கதியில் வாடிக்கையாளரை சென்றடைவது சாத்தியமாக்கப்பட்டுள்ளது. அனேக வீடுகள் சுமார் ஒரு வாரத்துக்குள்ளாகவே வாங்கப்பட்டுவிடுகின்றன. இக்காலம் வீடு விற்பவர்களுக்கும், வாங்குபவர்களுக்கும் உரிய ஓர் காலம். சரி அதற்கான காரணங்களை ஆராய்வோம்.

அமெரிக்கப் பொருளாதாரமானது கடந்த வருடங்களில் பல மாற்றங்களை பெற்றிருந்தது. அதனடிப்படையில் இயங்கும் கனடிய பொருளாதாரம், ஏதோவொரு மாயப்பீதியுடன் இதுவரைகாலமும் இயங்கிவந்தது. வீடுகளின் விலைகளில் பாரிய சரிவினை எதிர்பார்த்து காத்திருந்தனர், வீடு வாங்குபவர்கள். அதே வேளை வட்டிவிகிதம் குறைந்துகொண்டேயிருந்தது. இவைகளை கருத்தில் கொண்டு 'wait & see' என்று கூறக்கூடிய பொறுத்திருந்து பார்ப்போம் எனும் நிலை உருவாகியது. இதனால் சந்தையிலிடப்பட்ட வீடுகள் கூடிய காலம் நிலுவையில் காணப்பட்டது. இன்று குறைந்துகொண்டிருந்த வட்டிவிகிதம் சிறிதளவு வளர்ச்சி கண்டது. இயற்கையும் ஏதுவாக (கோடைக்காலம்), காத்திருந்தவர்கள் இதுதான் தருணம் என ஒரே சமயத்தில் தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்பட்டனர். விளைவு, இன்று சந்தையிடப்பட்டுள்ள வீடுகள் தேவைகளைப் பூர்த்திசெய்யுமளவுக்கு இல்லை. அதேவேளை, கொள்வனவாளர்கள் இதுபோன்ற அரிய சந்தர்ப்பத்தினை தவற விடவும் தயாரில்லை. காரணம், விலையும் குறைந்து வட்டி விகிதமும் குறைந்து காணப்படுவது அவர்களுக்கு ஓர் வரப்பிரசாதமே.

### வங்கிகளால் விற்கப்படும் வீடுகளை பெற்றுக்கொள்வது எவ்வாறு? அது ஓர் லாபகரமான முறையாகுமா?

பரன்.ப, Scarborough

வங்கிகளால் விற்கப்படும் வீடுகளுக்கு விற்பனையாளர்களாக வங்கியும், துணைபோபவர்களாக வீடு விற்பனை முகவர்களும் காணப்படுகின்றனர். ஆகவே, வழமைபோல உங்கள் நம்பிக்கைக்குரிய வீடு சார் முகவரை நாடுவதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறு பெற்றுக்கொள்ளும் வீடானது இலாபகரமானதாக அமையுமா என்பதனை சற்று ஆராய்வோம்.

ஒரு வீட்டினை அவ் வீட்டின் சொந்தக்காரரிடமிருந்து வங்கியானது பறிமுதல் செய்வதற்கு ஒரே காணரம், அவர்களது கடன் மீள்செலுத்துதலில் காணப்படும் தவறுகளே. அவ்வாறன சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட கால தவணையில் வங்கியானது அவ் வீட்டினைப் பெற்று பின்னர் சட்ட முறைகளுக்கு அமைவாக விற்பனை செய்கின்றது. அவ்வாறாயின், கடன் மீள் செலுத்த தவறியவர்கள் தாங்களாகவே அவ்வீட்டினை சந்தைப்படுத்தாமல் தவறியமைக்குரிய காரணங்களை ஆராய்வதே தகும். ஒன்று வீட்டினை சந்தைப்படுத்தும் அளவிற்கு தரமற்ற முறையில் பராமரிக்கப்பட்டதாக இருக்கலாம். தவறான செயற்பாடுகளுக்கு (சட்டத்திற்கு எதிரான) பாவிக்கப்பட்டதாக இருக்கலாம். குறைந்த சந்தர்ப்பங்களில் வீட்டு உரிமையாளர்களின் தனிப்பட்ட நிலை கருதியாக கூட இருக்கலாம். எது எவ்வாறோ, உரிமையாளர்கள் தவிர்த்து மற்றொருவர் விற்கும் வேளைகளில் நாம், வீட்டினை மட்டுமன்றி அதனுடன் சேர்த்து அதன் பின்விளைவுகளையும் பெற்றுக்கொள்கிறோம் என்பது உண்மைதான். விளைவுகளின் தரம் வேறுபடுமே தவிர 'As Is" என்று சொல்லக்கூடிய இருப்பதை வாங்குவது என்பது இவ்வகை வங்கி நடைமுறைக்கே பொருந்தும். ஆகவே வழமையான வீடுகளை விடவும், இவ்வகை வீடுகள் சற்று விலை குறைவாக காணப்படுவது ஆச்சரியப்படுவதற்கில்லை. இருப்பினும் விலைகளில் மட்டுமா நாங்கள் லாபம் பார்க்கின்றோம் என்பதைப் பொறுத்ததே உங்களுக்குரிய பதில்.

### புதிதாக நிர்மானிக்கப்படுகின்ற வீடுகளை (Builders home) வாங்கும் வேளைகளில் கவனத்தில் கொள்ள வேண்டியவை யாது?

கருணாகரன்.கே, Brampton



கருணா கோபாலபிள்ளை
- வீடு விற்பனை முகவர் -

எம்மில் பலருக்கு இது ஓர் தேவையான விடயம். 'யானைக்கும் அடிசறுக்கும்' என்பார்கள். இப்புதுவீடு விடயத்தில் சமயத்தில் பலர் தவறுகளை தெரிவு செய்து விடுகின்றார்கள். பின்வருமாறு படிப்படியான தரவுகளைப் பார்ப்போம்.

- நீங்கள் தெரிவுசெய்திருக்கும் இடத்திலுள்ள வேறுபட்ட வீட்டு நிர்மானிப்பு நிறுவனங்களின் தரங்களை இணையத்தளத்தின் உதவியுடனோ அல்லது நேரடியாக விஜயம் செய்வதன் மூலமோ அறிந்துகொள்ளுங்கள். அப்பகுதியில் ஏற்கனவே குடியேற்றப்பட்டிருப்பின் அவர்களின் சிலரை நேர்முக விசாரனை செய்வதன் மூலமும் அறிந்து கொள்ளலாம்.
- வீடுகளை படங்களில் தெரிவுசெய்யும்

14ம் பக்கம் பார்க்க...




www.inayam.net

- கலை விழாக்கள்
- எழுச்சி நிகழ்வுகள்
- ஊர்ச்சங்க ஒன்றுகூடல்கள்
- திருவிழாக்கள்
- கொண்டாட்டங்கள்
- நடன, நாடக, இசை விழாக்கள்
- குடும்ப நிகழ்வுகள்
- மரணச் சடங்கு நிகழ்வுகள்

எதுவானாலும்,

இணையம் .net மூலமாகத் தெரியப்படுத்துங்கள்.

உங்களுக்கு அனுகூலமான இடம், காலம், நேரங்களில் ஏனைய நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளனவா என்பதை முன்கூட்டியே அறிந்துகொண்டு உங்கள் நிகழ்வுகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.

முன்கூட்டியே inayam.net இல் பதிவு செய்துகொள்வதன் மூலம் ஏனைய நிகழ்வுகளோடு போட்டிகள் உருவாகுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் நிகழ்வுகள் திருப்திகரமாக நடந்தேறுவதற்கு பங்குபெறும் மக்களின் அனுகூலம் முக்கியமானது.

இதைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் தளமே inayam.net

முயற்சி செய்யுங்கள்!

முற்றிலும் இலவசம்

inayam
416-400-6406

digi


மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்...
வீடு வாங்கவும் விற்க்கவும்
குறைந்த வட்டி விகிதத்தில்
மோட்கேஜ் ஒழுங்கு செய்வதற்கும்
அழையுங்கள்
Ravi. Paramu
Broker
Direct: 416-262-4176
HOMELIFE
HIGHER STANDARDS
$325.000
McCowan / Denision
3 Bedrooms 2 Washroom
Finished Basement w/o
$349.000
Morningside / Staines
3 Bedrooms 3 Washroom
$349.000
Hwy 10 & Steeles
4+2 Bedrooms 4 Washroom
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210,
Toronto, ON, M1P 4S6
Bus: 416-298-3200


Are you looking to buy a house?
Are you ready to sell your home?
With years of experiance & dedication,
Call Nada Today
Selling Commission, as low as 1%
HOMELIFE
HIGHER STANDARDS
Platinum Award Winner
Ontario Emerald Club Member
Nada G. Nadarajah B.V.Sc
Cell: 416 616 8751
Bus: 416 293 5093
HomeLife Landmark
Realty Inc. Brokerage
$469,000
Major Mac & Woodbine
2-Storey Linked
4 Bedrooms & 3 Washrooms
Approx. 2000 Sq. Ft & Amazing Balcony
SOLD
Westney & Sullivan
2 Storey Detached
3 Bedrooms & 2 Washrooms
Finished Basement
SOLD
Salem & Rossland
2-Storey Detached
4 Bedrooms & 3 Washrooms
Approx. 3000 sq. ft
$239,000
Brimley & Finch
2 Storey CondoTownhouse
3+2 Bedrooms & 3 Washrooms
Finished Basement w/ Sep. Entrance
$305,000
Kennedy & 14th Ave
3-Storey Townhouse
3+1 Bedroom & 3 Washrooms
Partially Finished Basement
$349,900
Lawerence & Kingston
Detached Backsplit 4
4 Bedrooms & 3 Washrooms
Finished Basement !
$385,000
Dixie & Finch
2-Storey & Detached
3 Bedrooms & 3 Washrooms
Part. Finished Basement
$308,000
Audley & Taunton
2-Storey Detached
3 Bedrooms & 3 Washrooms
Very Quiet Neighbourhood

# மலர்களும் மருந்தாகும்

சிவாஜினி
பாலராஜன்



துன்பங்களிலும் சுமைகளிலும் வெந்து வெதும்பி மரத்துப் போன மனித மனங்களுக்கு பார்த்த மாத்திரத்தில் வலியினை நீக்கி உற்சாகம் வழங்கும் மருந்தாக அமைவது மலர்கள் தான் என்பது பொதுவான கருத்து. இவ்வாறான இம் மலர்கள் நாளாந்த வாழ்வில் பலராலும் வெவ்வேறுவிதமான தேவைகட்குப் பாவிக்கப்படுகின்றன. திருமண வைபவம், பூப்புனித நீராட்டு, பிறந்த நாள் போன்ற மகிழ்வான வைபவங்கள் மட்டுமல்லாது துயர்பகிர்விற்கும், நோய்வாய்ப்பட்டிருக்கும் ஒருவரைப் பார்க்கச் செல்லும் போதும் மலர்கள் எடுத்துச் செல்லப் படுகின்றன.

மலர்களில் பலவிதமான வர்ணங்கள் மட்டு மல்ல அவை வெவ்வேறு விதமான மணங்களைக் கொண்டவையாகவும் அதிலும் சில துர்நாற்றம் வீசுபவையாகவும் இருக்கின்றன. நிறங்களும் வகையும் வெவ்வேறு விதமான உணர்வுகளைப் பிரதிபலிப்பதாகச் சொல்லப்படுகின்றது. பொதுவாக சிவப்பு நிற மலர் கள் - அன்பு, ஆசை, பரிந்துணர்வு என்பவற்றையும் நீலம் – அமைதி, அடக்கம் என்பவற்றையும் வெளிர் சிவப்பு (Pink) - சந்தோசம், மென்மை என்பதனையும் கத்தரிப்பூ – உண்மை, மேன்மை, வெற்றி போன்றவற்றினையும் வெள்ளை – தூய்மை, மதிப்பு ஆகியனவற்றையும் மஞ்சள் – நட்பு, சந்தோசம் ஆகியவற்றையும் ஆரஞ்சு – ஆதிக்கம், ஆர்வம் போன்றவற்றையும் பச்சை – நற்சுகம், இளமை, போன்றவற்றையும் வெளிர் நாவல் – பெண்மை, மென்மை, கருணை போன்றவற்றையும் பிரதிபலிப்பதாகக் கொள்ளப்படுகின்றது. இதனடிப்படையிலேயே ஒருவருக்கு மலரினை பரிசாக வழங்கும் போது மலர் தெரிவு இடம் பெறுகின்றது.

பொதுவாக எங்கள் வழக்கத்தில் துயர்பகிர்விற்கு நாம் செல்லும் போது எதையும் எடுத்துச் செல்வதில்லை. ஆனால் மற்றைய இனத்தவர்கள் இவ்வாறான இடங்களுக்கு தங்கள் அனுதாபத்தையும் மரியாதையினையும் தெரியப்படுத்தி மற்றவர்களை ஆசுவாசப்படுத்தும் ஒரு முறையாக மலரினை எடுத்துச் செல்வதுண்டு. இவ்வாறு மரணத்திற்கு அல்லது கவலைக்கு மலரினை மலர்வளையங்களை எடுத்துச் செல்லும் போது மலர்கள் அவர்களது துன்பத்தினைத் துடைத்தெறிந்து விடும் என்பதல்ல கருத்து. இருப்பினும் அவற்றை வழங்கும் போது உங்கள் துன்பத்தில் நீங்கள் மட்டும் தனியாக அல்ல நாங்களும் பங்கு கொள்கின்றோம் என்பது போன்ற ஒரு உணர்வினை ஏற்படுத்தும் என நம்பப்படுகின்றது. இது மனோவியல் ரீதியான மருந்தாக அமைகின்றது.

மகிழ்வான காரியங்களுக்கு என்ன மலரினைக் கொண்டு செல்லலாம் என்பது பற்றிப் பெரிதாக எந்த விதமான விவாதங்களும் இல்லாத போதிலும் துயர்பகிர்விற்கு அல்லது துயரினை பிரதி பலிக்கும் இடங்களுக்கு எவ்வாறான மலர்கள் எடுத்துச் செல்லவேண்டும் என்று ஒரு விவாதம் பரவலாகக் காணப்படுகின்றது. சிலர் லில்லி இன மலர்கள் துக்கத்திற்கு உகந்தவை எனவும் சிலர் மஞ்சள் நிற ரோசா மலர்கள் தான் உகந்தவை எனக் கூறுகின்றனர். ஆனால் என்ன மலராயினும் பொதுவாக கடுமையான நிறங்களற்ற மெல்லிய நிற மலர்களே துயர் பகிர்விற்கு உகந்தவை எனக் கொள்ளப்படுகின்றன.

அன்பு காதல் போன்றவற்றையும் ஒருவர் மீதுள்ள அதீத அக்கறையினையும் வெளிப்படுத்த ரோசா மலர்களே சிறந்ததாக கொள்ளப்படுகின்றது. சூரியகாந்திப் பூக்கள் ஒருவர் மீதுள்ள மிகுந்த ஈடுபாட்டைக் காடும் அடையாளமாக வழங்கப்படுகின்றது. இவ்வாறு ஒவ்வொரு மலருக்கும் ஒரு அடையாளம் இருக்கின்றது. மலர்கள் உணர்வு பூர்வமாக மனிதனைச் சாந்தப்படுத்துவது மட்டுமல்ல பல மலர்கள் மருந்தாகவும் பயன்படுகின்றன.

பண்டைக் காலத்தில் சீன மக்கள் இயற்கை மூலிகைகளைக் கொண்டு தனிச் சிறப்பு வாய்ந்த சீனாவின் பாரம்பரிய மருந்துகளை உருவாக்கியுள்ளனர். மலர்களை உணவாகத் தயாரிப்பது கி.மு ஆறாம் ஏழம் நூற்றாண்டில் துவங்கியது. வடசீனாவில் சுமார் 100 வகை மலர்களைச் சாப்பிடலாம். தாவர நாடு என்று கூறப்படும் தென்மேற்கு சீனாவிலுள்ள யுவான்நான் மாநிலத்தில் சுமார 260 மலர்களைச் சாப்பிடலாம் எனக் கூறப்படுகின்றது.

மலர்கள் உணர்வுகளை வெளிப்படுத்த பரிமாறப்படுவது மாத்திரமல்ல மனோவியல், உடலியல் ரீதியான வியாதிகளுக்கும் மருந் தாக அமைவதாக ஆய்வுகள் கூறுகின்றன. தாயகத்தில் மக்கள் சிறு குழந்தைகளைக் குளிப்பாட்டும் போது சுடு நீரில் செவ்வரத்தம் பூ போட்டு வைத்துவிட்டு அந்த நீரில் பிள்ளைகளைக் குளிப்பாட்டுவது நாங்கள் அறிந்ததே.

சீன மக்கள் மலர்களை காயவைத்து உலர்த்தி அவற்றைக் கொண்டு தேநீர் தயாரித்து அருந்தும் வழக்கம் உள்ளவர்கள். Queen of the prairies (filipendula) எனப்படும் தாவரத்தின் பூவிலிருந்து எடுக்கும் சாறு குடற்புண்ணைக் குணமாக்கும் தன்மை உடையது. கோன் பிளவர் (Echinacea) எனப்படும் தாவரம் சாதாரணமாக இங்கு அனைவரது பூந்தோட்டத்திலும் காணப்படுவது மட்டுமல்ல பொது வாக வட அமெரிக்காவில் மிகவும் பெயர் பெற்றது. முதன் முதலில் பழங்குடி இந்தியர்களினால் பாவிக்கப்பட்டு பின்னர் தற்போது அனைவராலும் பாவிக்கப்பட்டு வருகின்றது. இத் தாவரத்தின் வேர்களை பாம்புகடி வைத்தியத்திற்குப் பாவித்த படியினால் இதற்கு Snake Root என்னும் பெயர் வழங்கப்படுகின்றது. இப்போது பலரும் இதனை குளிர் சுரத்திற்குப் பாவிக்கின்றனர். தடிமன் வரும் போல தொண்டை நொந்து கரகரப்பு இருக்கும் போது இந்த Echinacea குளிகையினை உட்கொண்டால் தடிமன் வராது தடுக்கும். Gentian மரத்திலிருந்து எடுக்கும் சாறு பசியெடுக்காதவர்களுக்குக் கொடுக்கப்பட்டால் பசியினைத் தூண்டும். கமொமில் எனப்படும் மலரிலிருந்து தேநீர் தயாரிக்கப்படுகின்றது. இத் தேயிலை நறுமணம் உடையது.

மனோவியல் ரீதியான குறைபாடுகளையும் உடலியல் ரீதியான குறைபாடுகளையும் நீக்குவதற்கு மலர்களிலிருந்து எடுக்கும் சாறுகள் பாவிக்கப்படுகின்றன. எத்தனையோ விதமான therapy முறைகள் இப்போது வைத்தியத் துறையில் அறிமுகப்படுத்தப் பட்டு பாவிக்கப் படுகின்றன. அவ்வாறான முறையில் மனோவியல் ரீதியான குறைபாடுகளை நீக்குவதற்கு செய்யப்படும் வைத்திய முறைகளில் Flower therapyம் ஒன்றாகும்.

மன அழுத்தம் உள்ளோருக்கு லைலாக் அவர்களின் மன அழுத்தத்தை குறைப்பதற்கு உதவுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. இதனால் வீட்டுத் தோட்டங்களில் படுக்கை அறைகளுக்கு அருகாக அல்லது நாளாந்தம் கூடிய அளவு நேரத்தைச் செலுத்தும் அறைகளுக்கு அருகாமையிலுள்ள யன்னல் கரைகளில் இவற்றை நடுவது மிகவும் சிறந்தது.

சிவப்பு ரோசாக்கள் அதிரினல் சுரப்பிகளைத் தூண்டுவதால் உடலுக்கு உற்சாகத்தினை வழங்குவதாயும் சூரியகாந்திப் பூக்கள் சுறு சுறுப்பையும் தன்னம்பிக்கையினையும் தூண்டுவதாயும் bluebells மலர்கள் மெலரோனின் என்னும் வேதிப் பொருளைச் சுரப்பதாயும் இவ் வேதிப் பொருள் மனித உடலில் நித்திரைக்குரிய உணர்வுகளை ஏற்படுத்துவதாயும் ஆய்வுகள் கூறுகின்றன. ரோசா மலர்களில் அதன் வாசனைக்குக் காரணமாக இருப்பது Phenyl Ethyl Amine எனப்படும் வேதிப் பொருளாகும். இந்த PEA கொண்டிருக்கும் அமினோ அமிலமானது beta-endorphins இனின் தொழிற்பாடுகளை சிறிது தாமதிக்கச் செய்கின்றது. இவை mood-altering substance எனச் சொல்லப்படுகின்றது. இவை தான் மனதினை மகிழ்வாக வைத்திருக்கவும் அன்பினைத் தூண்டுவதாகவும் கூறப்படுகின்றது. இதன் காரணமாகவே காதலின் சின்னமாக ரோசாமலர்கள் வழங்கப்படுகின்றன.

17ம் நூற்றாண்டளவில் செவ்வந்திப் பூவின் சாறு பிளேக் நோயினுக்கு மருந்தாக வழங்கப்பட்டதாக ஆய்வுகள் கூறுகின்றன. செவ்வந்திப் பூ, honeysuckle flowers, கலிபோர்னியா பொப்பி என்பவற்றின் மலர்களைக் காயவைத்து உட்கொண்டால் தடிமன் போன்ற நோய்களுக்கு நிவாரணம் கிடைக்கும் என கூறப்படுகின்றது. அத்துடன் இவை மிகவும் சிறந்த தடுப்பு நிவாரணிகளாகவும் (antiseptic) தொழிற்படும். கலிபோர்னியா பொப்பி பூவினைக் காயவைத்து உண்டால் நித்திரை வராத நோயுள்ளவர்களுக்கு நித்திரை வருவதற்கும் மேலும் நரம்புத் தொகுதி சமிபாட்டுத் தொகுதி நோயுள்ளவர்களுக்கு நிவாரணியாயும் மன அழுத்தத்தினால் அவதியுறுவோருக்கு அழுத்தம் குறையும் எனவும் கூறப்படுகின்றது.







18ம் நூற்றாண்டிலிருந்தே செவ்வரத்தம் பூ மருத்துவத்தில் பாவிக்கப்பட்டு வருகின்றது. இப்போதெல்லாம் சாதாரணமாக செவ்வரத்தம் பூ தேயிலை பாவிக்கப்பட்டு வருகின்றது. உடலிலுள்ள LDL எனப்படும் கெடுதலான கொலஸ்ரோலைக் குறைப்பதாயும் தலைமயிர் உதிர்வைத் தடை செய்வதாயும் காய்ச்சலினைக் குறைக்கக்கூடிய தன்மையுள்ளதாயும் வலி நிவாரணியாகவும், இரத்த ஓட்டத்தினைக் கட்டுப்படுத்தவும் கூடியது என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

கமோமில் தேயிலை வாய்ப்புண், குடற்புண், சமிபாட்டுக் கோளாறுகள், தோல் வியாதிகள் போன்றவற்றிற்கு மிகவும் உகந்தது. தாமரை மலர்கள் மூலவியாதி, வயிற்றுப் போக்கு, தோல் வியாதி, பங்கசுக்களினால் ஏற்படும் நோய்கள் போன்றவற்றிற்கு மருந்தாக உபயோகிக்கப்படுகின்றது. அதுமட்டுமல்ல இதயப் பலவீனமுள்ளவர்களுக்கு தாமரை மலர்கள் மிகவும் உகந்தனவாம். தாமரையின் வேர் காலரா, ஈரல் நோய்கள், நுரையீரல் நோய்களுக்கு மிகவும் சிறந்த நிவாரணியாகும்

1930களில் கிட்டத்தட்ட 28 வகையான மல்ர்ச்சாறுகள் டாக்டரும் நுண்ணுயிரியலாளருமான டாக்டர் பாச் (Dr. Bach) என்பவரினால் அறிமுகப்படுத்தப் பட்டது. மலர்களிலிருந்து தயாரிக்கப்படும் சாறுகள் (Flower essence) தற்போது பலராலும் பாவிக்கப்பட்டு வருவது மாத்திரமல்லாது வீட்டு வளர்ப்பு பிராணிகளுக்கும் கொடுக்கப்படுகின்றது. இச் சாறுகள் இரண்டு முறையில் தயாரிக்கப்படுகின்றன. மலரினை கொதிநீரில் அவித்து அதிலிருந்து அந்த சாற்றினை வடித்தெடுக்கலாம் அல்லது தொங்கல்கள் அகற்றப்பட்டு வடிகட்டப்பட்ட தூய purified நீரில் மலர்களைப் போட்டு நேரடி சூரிய ஒளியில் குறிப்பிட்ட சில காலத்திற்கு வைத்து அதனை வடிகட்டி எடுக்கலாம். இவ்வாறு எடுக்கப்பட்ட சாற்றினை பின்னர் பிராந்தியுடன் (brandy) கலக்கப்படும். இங்கு பிராந்தி ஒரு ஆகத் preservative தொழிற்படும்.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட இந்த மலர்ச் சாறுகள் வாய்மூலம் (ஒரு சில துளிகள் நாவின் கீழ் விடுவதன் மூலம்) உள்ளெடுக்கப்படும்.

நாய்களிலும் பூனைகளிலும் இம் மலர்ச்சாறுகள் பெருமளவில் மாற்றத்தை ஏற்படுத்துவதாக ஆய்வுகள் கூறுகின்றன. மற்றைய மிருகங்களைச் சகித்துக் கொள்ளும் தன்மை, கூடுதலான கிரகிப்பு, மனோநிலை மாற்றம், புது இடத்திற்கு அல்லது புது எசமானுக்கு தங்களை பக்குவப்படுத்தல் போன்ற குணங் களை இம் மலர்ச்சாறுகள் வழங்குகின்றன. இம் மலர்ச்சாறுகள் உண்மையில் மருந்துகள் அல்ல. ஹோமியோபதி வைத்தியம் போன்றது தான் இதன் உபயோகமும். ஆனால் இவை மனோரீதியாகவும் மனநிலையில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்துவதாயும் ஆய்வுகள் கூறுகின்றன. வாய் வழியாகத் தான் எடுக்க வேண்டும் என்றில்லை. சில சாறுகள் குளிக்கும் போது நீரிலிட்டு குளிப்பதற்கும் உண்டு. இவற்றினைப் பாவித்துக் குளிக்கும் போது புத்துணர்ச்சி கிடைக்கின்றது.

அழகுக்காக நாம் வளர்க்கும் மலர்கள் அழகை மட்டும் தராது மருத்துவத்திலும் புகுந்து நமக்கு நன்மை செய்கின்றன. மனதுக்கும் உடலுக்கும் நன்மை தரும் காரணத்தினால் தானோ என்னவோ பொதுவாக மருத்துவமனைகளைச் சுற்றியும் அதிகளவில் பூந்தோட்டம் அமைக்கப்பட்டிருக்கின்றது. பல வழிகளிலும் மலர்கள் எங்கள் வாழ்வில் முக்கியத்துவம் பெறுகின்றன.

sivagini.bala@thaiveedu.com

■ ■ ■

# ஆழத்து முத்துக்...

5ம் பக்கத் தொடர்ச்சி...

மாமியை பாடி அழைக்கப்போகிறார் என்ற பார்த்தேன். உணவு வகைகளில் இருக்கும் ஊட்டச்சத்து குறித்தும், அவை எவ்வாறு மருந்துபோலச் செயற்படும், எவற்றையெல்லாம் தவிர்க்கவேண்டும். என்றெல்லாம் அவுஸ்தி-ரேலியாவில் மற்ற இனத்தவர்க்கும் கருத்-தரங்கு நடத்துகிறார், என்பதுதான் அந்த விளம்பரம்.

1966ம் ஆண்டில் அம்பாறை ஹார்டி கல்லூரி விழாவொன்றில்தான் முதன் முதலாக சின்ன மாமியே பாடலைப் பாடியிருக்கிறார். அவரி-டம் கூடவே இருக்கும் அங்கதச்சுவையின் வெளிப்பாடாக, கள்ளுக்கடைப் பக்கம் போகாதே, சோளஞ் சோறு பொங்கட்டுமா, லண்டனிலே மாப்பிளையாம் பொண்ணு கேட்கிறாங்க, ஐயையோ ஊரே கெட்டுப் போச்சு போன்ற ஏராளமான துள்ளிசைப் பாடல்களையும் நித்தி பாடியிருக்கிறார். அவர் பாடல்களை பாடும்போது, வரிகளும் இசையும் மட்டுமல்ல, அவரது ஈடுபாடும் இணைந்து ஒலிக்கிறது.

நித்தியின் "கள்ளுக்கடைப் பக்கம் போகாதே" பாடல் எம்.ஜி.ஆரின் ஆட்சிக்காலத்தில் மது விலக்குப்பிரச்சாரத்துக்கு பயன்பட்டிருக்கிறது என்கிறது ஒரு பத்திரிகைக்குறிப்பு.

ஒருமுறை கல்முனையில் கலை நிகழ்ச்சி ஒன்றில் கலந்துவிட்டு திரும்பிக் கொண்டிருந்-தோம். ஒவ்வொருத்தருக்கும் அவரவர் யோசனை. ஆனால் எங்களுடன் வந்த நித்தியோ வெகு அக்கறையாக கலைஞர் கணேசபிள்ளையிடம் பாடம் கேட்டுக்கொண்-டிருந்தார். காது கொடுத்து கவனித்தேன். கணேசபிள்ளை ஒரு நாட்டார் பாடல் பாடு கிறார். "குடத்தனையிலை குடி இருக்கிறது" நித்தி கவனமாகக் கேட்டு எழுதுவதைப் பார்த்து எங்களுக்குள் சிரித்துக்கொண்டோம். அடுத்த மேடைநிகழ்ச்சியொன்றில் நித்தி துள்ளிசையுடன், தவில் சேர்ந்து கலக்க அட்டகாசமாக பாடினார் -

"நாம குடத்தனையிலை குடி இருக்கிறது
கொடிகாமத்திலை விடியப்புறம் பாலு விக்கிறது
வரணியாலே வந்து போறது"

நித்தி, வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்... மன்னியுங்கள். உங்கள் கருத்துப்படி, புல்லும் ஊட்டச்சத்துள்ள உணவாகலாம்.

■ ■ ■

# சித்தி அமரசிங்கம்

இலங்கையில் தமிழ்சினிமாத்துறை ஒரு தொழிற்துறையாக வளரும் சாத்தியக்கூறு இல்லாமல், அவ்வப்போது சில கலைஞர்-களும், விட்டகுறை, தொட்டகுறையாக கலை-யில் ஆர்வம் கொண்ட சில பிரமுகர்களும், தங்கள் ஆசைக்காக – கவனியுங்கள், ஆசைக்காகத்தான் - தமிழ்ப்படங்களை தயாரித்து கொண்டிருந்த காலம். இலங்கை தயாரிப்புக்களை திரையிடுவதற்கு தியேட்-டர்கள் கிடைப்பதே மகாகஷ்டம். அரிதாக திரைக்கு வரும் படங்களும் அனேகமாக வந்த சுவடு தெரியாமல் ஓடி மறைந்து விடும். இந்த நிலையில் ஒரே நேரத்தில் யாழ்ப்பாணத்தில் அருகருகே இரண்டு தியேட்டர்களில் இரண்டு இலங்கைத்தமிழ்ப்படங்கள் ஓடிக்கொண்டிருந்-தன என்பது உங்களுக்கு தெரியுமா? ஒன்று நான் நடித்த வாடைக்காற்று. மற்றது சித்தி அமரசிங்கம் நடித்த தென்றலும் புயலும். இது நடந்தது 1978ல்.

'தென்றலும் புயலும்'' படத்தை தயாரித்து, பிரதான பாத்திரத்தில் நடித்த வேதநாயகம் என்ற மருத்துவரும், நகைச்சுவைப் பாத்திர-மாக ஆரம்பித்து குணசித்திரபாத்திரமாக மாறிய சித்தி அமரசிங்கமும் திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்தவர்களாக இருந்ததினால், அந்த மண்ணின் அழகான காட்சிப்பதிவுகளை தங்கள் திரைப்படத்தில் இடம்பெற வைத்தி-ருந்தார்கள்.

சிலோன் ஸ்ருடியோவில் இரண்டு படங்களி-னதும் உள்ளரங்கக்காட்சிகள் படமாக்கப்பட்ட போது அவரைச் சந்தித்திருக்கிறேன். ஒரு வார்த்தை அன்பாகப் பேசினால் 'பட்'டென்று ஒட்டிக்கொண்டு நீண்டகால அறிந்தவரைப் போல மனம் விட்டுப்பேசும் சுபாவம். தன்னை



முன்னிலைப்படுத்துவதைவிட, தனது பிறந்த ஊரான திருகோணமலையினைச் சார்ந்த கலைஞர்களைப்பற்றி, எழுத்தாளர்களைப் பற்றி நிறையத் தகவல்களை சேகரித்து வைத்திருந்தார். ஒரு முறை, இலங்கை வானொலியில் 'கலைக்கோலம்' நிகழ்ச்சியில் பங்குபற்ற அவரை அழைத்தேன். ஒரு நீண்ட கட்டுரை எழுதிக்கொண்டு வந்தார். நேரக் கட்டுப்பாடு காரணமாக, அவரது முழுக் கட்டுரையையும் சேர்த்துக்கொள்ள முடிய வில்லை. ஆனால் அந்த கட்டுரையில் ஒரு இடத்திலாவது தன்னுடைய கலைத்துறை முயற்சிகளைப்பற்றி குறிப்பிடாமல் என்னை அசத்திவிட்டவர்.

எங்கள் மண்ணில் கலைத்துறையில் ஈடுபட்டு அதனால் வருமானம் பெற்ற தமிழ்க்கலைஞர்-கள் என்றால் மிக அரிது. சித்தி அமரசிங்கம் அதற்கு விதிவிலக்காக இருக்கமுடியாது. கலைஆர்வத்தினால் அவர் நாடகம்,திரைப் படம், வில்லுப்பாட்டு என்று செய்துகொண்டும், தன்னுடைய நூல்களையும், மற்றவர்களின் நூல்களையும் 'ஈழத்து இலக்கியச்சோலை' என்ற தனது பதிப்பகத்தின்மூலம் வெளியிட்டும் பணரீதியாக லாபமடைந்தவராக எனக்குத் தெரியவில்லை.

அந்நாளில் தலைநகரில் இருந்த ஊடகங்கள் கூட, வெளிப்பிரதேசக் கலைஞர்களை பெரி தாக தூக்கிவிட நினைக்க மாட்டார்கள். அந்த நேரத்தில் வெளிப்பிராந்திய கலைஞர்களையும், படைப்பாளிகளையும், நம்மவர்கள் என்ற ரீதியில் என்னால் முடிந்தளவு ஊக்குவிக்க ஏதோ முனைந்திருக்கிறேன். இந்த ஓட்டுதல் காரணமாக சித்தி அமரசிங்கம் தன் புத்தக் கட்டுக்களுடன், திருகோணமலையில் இருந்து கொழும்பில் என்வீட்டுக்கு வந்து போவார். தன் எதிர்காலத்திட்டமாக தனது மண்ணின் திறமைமிக்க பெருமக்களைப்பற்றி நூல் ஒன்று எழுதப்போவதாகச் சொல்லிக்கொண்-டிருந்தார்.

அவர் கலைஞர், எழுத்தாளர், பதிப்பாளர் என்ற அடைமொழிகளுக்கு மேலாக நல்ல மனிதராக, தனது ஊரை, அங்கு வாழும் மக்களை, குறிப்பாக கலைஞர்களை மதித்-துப்போற்றும் சமூக நோக்குடையவராக விளங்கினார் என்பது என் எண்ணம்.

2007ல் அவர் மறைந்த சேதி, புலம்பெயர் வாழ்வின் அவதிகளுக்கிடையே எனக்கு வெகு தாமதமாகவே கிடைத்தது.

மறக்கக்கூடிய மனிதரல்ல அவர்.

■ ■ ■

ஒவ்வொரு கிராமத்திலும் பல கலைஞர்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். அந்தந்தக் கிராமத்தின் வளர்ச்சிப் பணிகளிலும் முன்னேற்றத்திலும் இவர்களின் பங்கு அழப்பரியது. ஆனால் சந்தர்ப்பம் சூழ்நிலை அவர்களை உலக-றியத் தவறிவிட்டது. கலைஞர்கள் நாட்டின் விடியலுக்காய் உழைப்பவர்கள். எங்கள் கிராமத்தின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாய் வாழ்ந்தவர்கள். எம் ஈழத்துக் கலைஞர்களை நாம் கௌரவிப்போம், நினைவுகூர்வோம், உலகறியச் செய்வோம்.

உங்கள் கிராமத்தின் ஒவ்வொரு கலைஞர் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

■ ■ ■

# "வீடு" வினாவும்...

11ம் பக்கத் தொடர்ச்சி...

போது அதன் அளவுகள், வேறுபட்ட வெளி, உள் அமைப்புகள் மிக மிக முக்கியம். சில வேளைகளில் ஒரே பெயர் கொண்ட வீடுகளுக்கு மூன்று விதமான கட்டட அமைப்புக்கள் காணப்படும்.

- வீடு கட்டுவதற்கான கட்டட பொருட்களின் தரங்கள், மற்றும் அடிப்படை விளையில் உள்ளடக்கப்பட்டுள்ளவைகள் போன்றவற்-றை எழுத்துமூலம் பெற்றுக்கொள்ளுங்கள்.
- விலைகள் எப்போதுமே பேரம்பேசக்கூடி-யதாக காணப்படும். இருப்பினும் அறிவு றுத்தல்கள் நிலையான விலையில் இருப் பதாகவே வழங்கப்படும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஏற்கனவே பரிச்சயமுள்ள வீடு விற்பனை முகவர்களையும் உங்களு-டன் வைத்துக்கொள்ளுதல் நன்று.
- விலைகள் பேரம் பேசமுடியாவிடில், Upgrades அதாவது தரமான கட்டுமான பொருட்களையாவது பேரம் பேசி வாங்-குங்கள்.
- உங்களுக்கு வழங்கப்படும் விற்பது, வாங்குவதற்குரிய பத்திரங்களை நீங்களாக மீளாய்வு செய்வது மட்டுமன்றி நிட்சயம் வழக்கறிஞர் ஒருவரின் உதவியுடனும் நிறைவேற்றுங்கள்.
- Closing cost. வீட்டினை பெறும்போது ஏற்-படும் செலவுகள் பற்றிய அதிக அக்கறை அவசியம். சில புதிய கட்டுமான துறையினர் இவ்விடயத்தில் பாரிய மன உழைச்சலை இறுதியில் ஏற்படுத்திய சம்பவம் எம்மவர் பலருக்கு ஏற்பட்டுள்ளது.
- Decor centre. வீட்டின் உள்ளக தெரிவு-களுக்காக செல்லும் வேளைகளில் அனுபவமிக்கவர்களையும் அழைத்துச்செல்ல தவறாதீர்கள்.

## Mortgage pre approval என்றால் என்ன?

தர்மதாஸ்.க Ajax

வீடொன்றினை நீங்கள் வாங்குவதற்கு தீர்மானிக்கின்ற பட்சத்தில், நீங்கள் அதற்கு பண அடிப்படையில் தகுதியானவரா என்பதனை வங்கிகளின் உதவியுடன் உங்கள் வருமா-னத்தினையும் செலவீனங்களையும் கணக்கிட்டு தெரிந்து கொள்வதே இப் Pre-approval ஆகும்.

இதன் மூலம் நீங்கள் ஆக கூடியது எவ்வளவு கடன் தொகையினை பெற்றுக்கொள்ளலாம் என்பது தெளிவாகும். மேலும் தற்போதுள்ள வட்டி விகிதத்தினை சுமார் நான்கு மாதங்க ளுக்கு உங்களுக்கென பொருந்தி வைப்ப-தற்கும் இது உதவும். இவ் வட்டி விகிதமானது நீங்கள் Pre approval பெற்றுக்கொண்ட காலத்திற்கும் வீடு வாங்கும் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் அதிகுறைந்த வட்டி விகிதத்தினை பெற்றுக்கொள்வதற்கு உதவும். ஆகையால் எப்போதும் வீடு வாங்குவதற்கு தீர்மானிக்கின்ற காலத்திலேயே இவ்வகை Pre-approval இலினை பெற்று வைப்பது சிறந்தது.

நன்றி வாசகர்களே, இக்கேள்வி பதில் பக்கம் மூலம் நாம் மாதாந்தம் இணைந்து கொள்-வதில் ஏற்படும் நிறைவை, மீண்டும் மீண்டும் நீங்கள் தரும் ஆதரவுடன் முன்னெடுத்து செல்வதில் நிறைவடைவதுடன், உங்களின் தரமான கேள்விகள் சந்தேகங்களை மேலே குறிப்பிட்டுள்ள e-mailக்கு அனுப்பி வையுங்கள்.

கோடைக்கால குதூகலிப்புக்கள், குழந்தை களின் பள்ளி விடுமுறைகள் என்று அன்றாட வேலைப்பளுவிலும் இயங்கிக்கொண்டிருக்கும் பெற்றோர், குழந்தைகளின் பாதுகாப்பினை எப்போதும் கருத்தில் கொள்ளுங்கள். தொடர்ந்து வரும் இதழ்களில் இணைந்து கொள்வோம்

karunagopalapillai@thaiveedu.com

■ ■ ■

# கொலெஸ்ரெறோல்...

9ம் பக்கத் தொடர்ச்சி...

- மென் அடர்த்திக் கொழுப்புப்புரதம் (Low Density lipoprotein LDL-C)
- வன் அடர்த்தி கொழுப்புப்புரதம் (High Density Lipoprotein-HDL-C)
- முக்கிளிசரைட்டுக்கள் (Triglycerides)
- கொலெஸ்ரெறோல் - HDLC, விகிதாசாரம்

### அளவுகள்:

ஒவ்வொரு 100 மி.லிற்றர் குருதியிலும் உள்ள சாதாரண அளவுகள்.

- மென் அடர்த்திக் கொழுப்புப்புரதம் - 130 மி.கிராமிற்குக் குறைவாக இருத்தல் வேண்டும்.
- வன் அடர்த்திக் கொழுப்புப் புரதம் - 40 மி.கிற்குக் கூடுதலாக இருத்தல் வேண்டும்.
- முக்கிளிசரைட்டுக்கள் -150 மி.கிற்கு குறை-வாக இருத்தல் வேண்டும்.
- கொலெஸ்ரெறோல் - HDLC விகிதம் - 5 அல்லது குறைவாக இருத்தல் வேண்டும்.
- மொத்தக் கொலெஸ்ரெறோல் -125ற்கும் 200 மி.கிராமிற்கும் இடையில் இருத்தல் வேண்டும்.

குருதிப் பரிசோதனையின் பின்பு ஆய்வுகூட அறிக்கையை உங்களுக்கு வைத்தியர் கூறுவார். நீங்கள் அவரிடம் ஒரு பிரதியை கேட்டு வாங்கி உங்களது மருத்துவம் சம்பந்-தமான கோவையில் இட்டு வைக்கலாம். இப்படிச் செய்வதால் உங்கள் அளவுகள் பற்றிய அறிவு வளருவதுடன், மருந்துகளை ஒழுங்காகக் குடிக்கவேண்டும். அடுத்தமுறை செய்யும் குருதிப்பரிசோதனையின் பொழுது அளவுகள் எல்லாம் கட்டுப்பாட்டுற்குள் வருகின்றனவா என்ற ஆவல் ஏற்படும்.

### கவனிக்கவேண்டியவை:

ஒரு முட்டையில் சராசரியாக 220 கிராம் கொலெஸ்ரெறோல் உண்டு. குளிரில் உறைந்து போகும் தேங்காய் நெய், ஐதரசன் ஏற்றப்பட்ட மாஜரின் வகைகள் போன்றவை நிரம்பிய கொழுப்பமிலம், மாற்ற உருவுடைய (Transfer) கொழுப்பமிலம் என்பன உண்டு. கடையில் வாங்கும் உருளைக்கிழங்குப் பொரி-யல், கோழிப்பொரியில் என்பவற்றில் மாற்ற உருவுடைய கொழுப்பமிலங்கள் அதிகளவில் உண்டு. இவையெல்லாம் கொலெஸ்ரெறோ-லாக மாறக்கூடியவை. இக்காரணிகளால் இவ்வுணவுகளைக் கட்டுப்பாடாகப் பாவித்தல் நல்லது. அதி கொலெஸ்ரெறோல் நோய் உடையவர்கள் ஒலீவ் எண்ணெய் போன்ற பகுதிநிரம்பிய கொழுப்பமிலங்களைப் பாவிப்-பது நல்லது.

இந்நோயுள்ளவர்கள் வைத்திய ஆலோசனைப்-படியும், உணவு வல்லுனர்களின் (Dietician) ஆலோசனைப்படியும், நடந்து தமது நோயைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது நல்லது.

senthilnathan.kandiah@thaiveedu.com

■ ■ ■


For all your Real Estate needs...
First Prize
2009
Buy or sell any properties with us and WIN this new BMW car and More prizes**
Buy. Sell. Lease.
$399,900
Good Investment In Excellent Location Step To G.M. Cntr In Dntn Oshawa. Near Future Courthouse &Well Running Mexican Restaurant With Fine Dining.
Ravi Raveendran- Broker
Direct: 416-817-8479
$395,900
All Brick, Open Concept 4 Bedroom Detached Home, Professionally Finished 2 Bedroom Basement In-Law Suite With Walk-Out To Patio.
Jayanthi Sritharan-Broker
Direct: 416-918-5872
$610,000
Beautiful Arista Lavenham Model around 3200 sqft. $15k upgrades, open concept, corner lot
Seelan Siva Aiyadurai-Broker
Direct: 416-451-0271
$189,900
Very Convenient Location!!! Low Rise Condo. Steps To Ttc, Hwy 401, Woodside Square Shopping Mall
Wilton Gnanapragasam
Sales Representative
Direct: 416-554-4747
$419,900
Hardwood Floor On Main Floor In Living, Family, Dining. Freshly Painted, Lots Of Upgrades Hardwood Floor.
Wilton Gnanapragasam
Sales Representative
Direct: 416-554-4747
$320,000
Immaculate Affordable Spacious 3 Yrs New Mattamy Built Freehold Townhouse With Separate Entrance To Finished Basement With One Bedrm
Sasi Chelvaratnam
Sales Representative
Direct: 416-725-1125
$449,000
Beautiful house in Scarborough area. 4 Bedrooms with finished basement. Close to everything. Lots of Upgrades.
Justin William- Broker
Direct: 416-803-7344
$369,000
Open Concept Family Room And Dining Room, New Hardwood Floor Thru Main Floor. New Roof (2006) And New Windows (2006)
Ravi Raveendran- Broker
Direct: 416-817-8479
HOMELIFE
HomeLife GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd, Suite 206, Scarborough, On.
Office: 416.321.6969
This is not intend to solicit properties currently listed for sale
*Independently owned and operated
** conditions apply


Air-On
For Your Indoor Air Quality
HOME IMPROVEMENT CENTRE
Lowest price in Town
Tel:416-840-3093
*HEATING & COOLING
*GAS FURNACES
*AIR CONDITIONERS
*HUMIDIFIERS
*EXHAUST RANGE HOOD
*ELECTRICAL
*PLUMBING
*WINDOWS
*ROOFING
*PAINTING
*FLOORING
Get up to $2,000 Bonus & Rebates
plus 10 yrs parts & Labour warranty
No Payment For 6 Months*
Financing Available* *OAC
@ GTA Square
5215 Finch Ave unit 163, Middledield & Finch
Heating & cooling

I'm here to get your mortgage smarter and faster.
உங்களுக்கு அதிக கடன் பளு இருந்தால் அனைத்தையும் குறைந்த ஒரு மாதக்கட்டணத்தில் கொண்டுவருவதுடன் உங்களுக்கு அதிக பணத்தையும் சேமிக்க உதவுவேன்.

- **Residential**
- **Industrial**
- **Commercial**

**1st, 2nd, 3rd Mortgages**

வங்கி வட்டி வீதத்தை விட குறைந்தளவு வட்டி வீதம்

**NO FEE FOR RESIDENTIAL MORTGAGES**

- Rate discount up to 3%
- Give me a call for free consultation
- Mortgages without no down payment

நீங்கள் வங்குரோத்துக்கு போயிருந்தாலும் நிராகரிக்கப் பட மாட்டீர்கள். யாருமே நிராகரிக்கப் படமாட்டார்கள் அனைவரும் தகுதியானவர்கள். குறைந்த வட்டி வீதத்தில் ஈட்டுக்கடன் பெற்றுக்கொள்ளவும், கடன்கள் குறித்த இலவச ஆலோசனைகளுக்கும் அனைவரதும் நம்பிக்கைக்கு பாத்திரமான அகிலா செந்திலை அழையுங்கள்

**Our interest rates starts from 0%**

- First-time Buyers
- Renewal
- Refinancing
- Pre-Approval
- Self Employed
- Bankruptcies
- Poor Credit
- New Immigrants
- Debt. Consolidation
- Construction Loans

invis

**மாற்றமடைந்திருக்கும் இன்றைய மோட்கேஜ் தேவைகளுக்கான ஆலோசனைகளுக்கு அழையுங்கள்**

When it comes to finding the Right Mortgage Solution to meet your needs, Please call **ME** befor making any **Decision!!!**

**After Approval**

# Joy is yours
# Pride is ours





**அகிலா செந்தில்**
**Akila Senthil**, *AMP*
*Lic: M08002166*
*Senior Mortgage Consultant,*
*Team Leader, Platinum Award Winner*
*A Challenging Prosperity Long Term Experienced Team Leader*

**Cell: 416.895.4321**

104-5770 Hurontario St., Mississauga, ON L5R 3G5
Fax: 905-283-3339, Web: www.mortgageprincess.ca, E-mail: akilasenthil@invis.ca
Head Office: Invis Inc., 100-480 University Ave., Toronto, ON M5G 1V2

**பேரழிவினைக் கொண்டுவரும் நீரழிவு நோயினை இரண்டே இரண்டு மாதங்களில் முற்றும் முழுதாக கட்டுப்படுத்த முடியும்!**

**ஊளைச் சதை பெருகுவதை தடுக்கிறது! வாத வலியை நீக்குகிறது! உடலுக்கு புதுத்தென்பைக் கொடுக்கிறது!**







**டயபீனா** தினமும் அருந்தக்கூடிய மூலிகை ஆரோக்கிய பானம். இது உடலில் மிகுதியான குழுக்கோசினை குறைக்கக்கூடியதும், இரத்தத்திலுள்ள அதிகளவு குழுக்கோசினால் ஏற்படக்கூடிய நோய்களை ஒழுங்கு முறையாக தடுக்கவும் உதவுகிறது. விறைப்புத்தன்மை, பாதங்களில் சுளுக்கு, அலட்சியத் தன்மை மற்றும் மீண்டும் மீண்டும் வியாதிகளை படிப்படியாக நீக்கிவிடக் கூடியது. டயபீனா கண்டிப்பாக நீரிழிவு நோயினால் வருந்துபவர்கள் மட்டுமே பாவிக்கவேண்டியது.

**க்லூட்டியலா** பானமானது மிகுதியான உடல் கொழுப்பை குறைக்கக் கூடியதும், குறிப்பாக உடலின் இடுப்பு, தொடை, தோற்பட்டை, கைகள் போன்ற பகுதிகளில் ஏற்படக்கூடிய ஊளைச் சதை பெருகுவதை தடுக்கவும், கொழுப்பினால் விளையக் கூடிய கெடுதியினை கட்டுப்படுத்தவும், உடல் வலியை நீக்கவும், அத்துடன் வாதத்தினால் ஏற்படக்கூடிய வலியினை குறைக்கவும் உதவுகிறது. க்லூட்டியா உடலுக்கு புதுத்தெம்பைக் கொடுப்பதோடு நீண்ட சுகமான வாழ்விற்கும் வழிவகுக்கிறது.

Amazon Health Care
BBB ACCREDITED BUSINESS
SABONA

**Tel: 416 264 8787**
**www.amazonhealthcare.ca**
**2602, Eglinton Ave East. (Midland/Eglinton)**

# மின்சாரச் செலவை கட்டுப்படுத்துவது எப்படி?



வேலா சுப்ரமணியம்
- Certified Home Inspector -

### மின்சாரப் பாவனையும் அதற் கான செலவைக் குறைக்கச் சில ஆலோசனைகளும்:

**வீடும் விடியலும் - 41**

கடந்த இரு மாதங்களும் வீட்டுக்கு உள்ளேயும், வெளியேயும் பாவிக்கக்கூடிய மின்சார விளக்குகள் பற்றியும், அதனோடு தொடர்புடைய பல விடயங்கள் பற்றியும் பார்த்தோம்.

தொடர்ந்து வரும் அத்தியாயங்களில் வீட்டில் பாவிக்க கூடிய ஏனைய மின்சார உபகரணங்கள் பற்றியும் எவ்வாறு மின்சார பாவனையையும், அதற்கான செலவையும் குறைக்கலாம் என்பது பற்றிப் பார்ப்போம்.

### துணி உலர்த்தி (Cloth Dryer)

மின்சாரப் பாவனையில் மிகக் கணிசமான பகுதி துணிகளை உலர்த்தப் பயன்படுத்தப் படுகிறது. அதிலும் பாவிக்கப்படும் Cloth Dryer மிகப் பழையதாக இருந்தால் அதிக மின்சாரச் செலவை எதிர் கொள்ள வேண்டியிருக்கும். அண்மைக் காலங்களில் வாங்கிய "ENERGY STAR" உபகரணமாக இருந்தால் செலவு சற்றுக் குறைவாக இருக்கும். புதிதாக Cloth Dryer வாங்க வேண்டிய சூழல் ஏற்பட்டால் அல்லது புது வீடு வாங்கும் போது GAZல் இயங்கும் Cloth Dryerஐ வாங்குவது காலப் போக்கில் அதிக இலாபத்தைத் தர வல்லது என்பதை நினைவில் வைத்திருக்கவும். புதிதாக Energy Star Cloth Dryer வாங்குபவர்களுக்கு அரசாங்க மானியத் தொகை (http://oee.nrcan.gc.ca/residential/personal/new-appliances.cfm?attr=4) பெறக் கூடிய வாய்ப்பும் இருக்கிறது.

சுற்றம் சூழல் பொருத்தமாக அமைந்தால் துணிகளை வெளியில் உலர விடுவது மிக இலாபகரமானது. பொருத்தமான சூழல் அல்லது அயல் அமையாதவிடத்தும், மிகத் தூசு நிறைந்த சூழலாக இருக்கும் பட்சத்திலும் இது சாத்தியமற்றுப் போகலாம். நிலக்கீழ் அறையில் இடமிருந்தால் அங்கு உலர விடுவதும் சிந்திக்கத் தக்கதொரு மாற்று வழியாகும்.

### துணி துவைக்கும் இயந்திரங்கள்:

துணிகளைத் துவைக்கும் போது எல்லா நேரங்களிலும் அதிகளவு Hot Waterஐ உபயோகிப்பது தேவையற்றது. முறையான சவர்க்காரத் தூள்களையோ திரவத்தையோ குளிர் தண்ணீரில் துவைப்பது போதுமானது. சுடு நீரில் துவைப்பதால் துணியின் நிறங்கள் கால கதியில் மங்குவதைத் தவிர அதனால் ஏற்படும் பலாபலன் என்னவாக இருக்கும்? குளிர் நீரில் சவர்க்காரத்துடன் சில மணி நேரம் ஊற விட்டுத் தோய்த்தல் போதுமானது எனச் சில ஆய்வுகள் கூறுகின்றன.

பாரமான போர்வை போன்ற துணிகளுக்கு சுடுநீர் தேவையானதால் பொது இடங்களில் உள்ள COINS LAUNDRYகளைப் பாவிப்பது மின்சாரத்தைச் சேமிக்க மட்டுமல்ல, துணி துவைக்கும் இயந்திரத்தின் ஆயுட்காலத்தை கூட்டவும் உதவும்.

புதிய வீடு வாங்குபவர்களும் பழையனவற்றை பிரதியீடு செய்ய முனைபவர்களும் "ENERGY STAR" உபகரணத்தைப் பார்த்து வாங்குவது நல்லது. அத்துடன் சற்று விலை அதிகமானாலும் பக்க வளமாக இயங்கும் (Side Loading) துணி துவைக்கும் இயந்திரங்கள் சக்தி கொண்டவையாகவும் (Efficient) சிறந்த முறையில் இயங்குவதாகவும் சில நுகர்வோர் அறிக்கைகளில் இருந்து அறிய முடிகிறது. இவற்றுக்கும் அரசாங்க மானியத் தொகை பெறக் கூடிய வாய்ப்பு இருக்கிறது.

### மின்சாரத்தில் இயங்கும் வெப்ப மாக்கிகள்: (Electric Heating Systems)

உங்களது வீடு மின்சாரத்தில் இயங்கும் Baseboard Heatersஆக இருந்தால் அது துரதிஸ்டவசமானது. அதாவது உங்களது மொத்த மின்சாரத்திற்கான செலவில் 60% சதவிதத்திற்கும் அதிகமான பகுதி இதற்குரியதாகவே இருக்கும். சாதாரணமாக அண்மைக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் யாவும் Gasஇனால் இயங்கும் Furnaceஐ கொண்டவையாக காணப்படுகின்றன. இருப்பினும் சில பகுதிகளில் இன்னமும் மின்சாரத்தில் இயங்கும் வெப்பமாக்கிகள் இருக்கவே செய்கின்றன. எனவே வீடு வாங்கும் போது சற்று அவதானித்து, நிதானித்து வாங்குவது நல்லது.

ஏற்கனவே வாங்கிவிட்டால் Gasற்கு மாற்றுவது பற்றிக் கூட சிந்திக்கலாம். காலப்போக்கில் அது ஒரு இலாபம் தரும் முதலீடாக இருக்கும். ஏற்கனவே இருக்கும் Base Board Heaterஐப் பாவிக்கும் போது சில நடைமுறைகளைக் கையாள்வதன் மூலம் சேமிப்பை ஏற்படுத்தலாம். வெப்பம் 20°ஆக இருப்பது சாதாரணமாக வசிக்கும் பகுதிக்குப் போதுமானது. படுக்கை அறையில் 16°க்கு வைத்திருப்பது போதுமானது. அத்துடன் குளிருக்கு ஏற்ற ஆடைகளை வீட்டிற்குள்ளும் அணிவதை நாம் பழக்கத்தில் கொள்வது நல்லது. குளிர் காலத்தில் ஒரு தடவை இங்கிலாந்து போன்ற இடங்களுக்குப் போய் வந்தால் அந்தப் பழக்கம் தானே வந்து விடும்.

Base Board Heatersக்கு பொதுவாக ஒவ்வொரு அறைக்கும் தனித்தனி Control Switches இருக்கும். எனவே தேவையான பகுதியில் மட்டும் பாவித்து ஏனைய இடங்களை குளிராக வைத்திருக்கலாம். அதாவது ஏறத்தாழ 10–12°பாகையில் வைத்திருக்கலாம். அதை விடக் குறைந்த நிலையிக்குக் குளிர் செல்லுமானால் வீட்டில் வெடிப்பு போன்ற சேதங்கள், பழுதுகள் ஏற்படலாம்.

இத்தகைய மின்சாரத்தில் இயங்கும் வெப்பமாக்கிகளைப் பாவிப்பவர்கள் வீட்டின் வெப்பம் தப்பித்துக் கொள்ளாதவாறு பார்த்துக்கொள்வதில் அதிக கவனம் செலுத்துவது நல்லது. அதாவது Attic insulation 8.5"-11"அங்குலத்திற்குக் குறையாதவாறு இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதுடன் யன்னல்களுக்குரிய Caulking செய்வதிலும், கதவுகளுக்கு Weather Stripes போடுவதிலும் மிகக் கூடிய கவனம் செலுத்தல் நன்மை தரக்கூடியது.

அத்துடன் மாற்றீடாக இருக்கக்கூடிய இதர வெப்பமாக்கிகள் பற்றியும் சிந்திக்கலாம். Gas Tank உடன் பொருத்தப் பட்டிருக்கக்கூடியதும் கொண்டு செல்லக்கூடியதுமான (Portable Gas Heaters) பாவனைக்குகந்த பயனுள்ள பதிலீடாக அமையலாம். மேலும் காற்றாடி-





யுடன் பொருத்தப்பட்டுள்ள மின்சாரத்தில் இயங்கும் பல வகை Portable Heaters தற்போது பாவனைக்கு வந்துள்ளன.

எனவே அவற்றின் விலை பற்றியும் சிந்தித்து பாவிக்கப்போகின்ற காலத்தையும் மனதில் வைத்துக் கொண்டு ஆராய்ந்து பயனுள்ள முடிவுகளை எடுப்பது நன்மை தரவல்லது.

### Hot Water:

மின்சாரத்தில் இயங்கும் சுடுநீர் தொட்டி (Electric Hot Water Tank) உங்கள் வீட்டில் இருந்தால் அது மற்றுமொரு துர் அதிஸ்டம் எனக் கூற வேண்டியுள்ளது. ஏனெனில் இதுவும் மிக அதிகமான மின்சாரத்தை உறிஞ்சக் கூடியது. குளிர் நீரைச் சூடாக்க மட்டுமன்றி, சூடான நீர் குளிர்ந்து விடாதபடி வைத்திருப் பதற்காக இடைவிடாது இயங்க வேண்டிய நிலை இருக்கும் இது துரதிஸ்டவசமானது. பொதுவாக எல்லா இடங்களிலும் Gasல் இயங்கும் Hot Water Tankகள் தான் பாவனையில் உள்ளன. ஆனால் Gas வசதியில்லாத இடங்களிலும் Gas வசதி வர முதல் கட்டப் பட்ட பழைய வீடுகளிலும் Electric Hot Water Tankகள் தற்போதும் பாவனையில் உள்ளன.

எனவே வீடு வாங்கும்போது அதுபற்றியும் கவனம் செலுத்துவது நல்லது.

மாற்று வசதியில்லாதவிடத்து எமது பழக்க வழக்கத்தை மாற்றுவது தான் ஒரே வழியாக இருக்கும். மின்சாரக் கட்டணத்தின் விலை குறைந்த நேரத்தில் குளித்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடல் மிகப்பயனுடையதாக அமையலாம்.

குறிப்பாக Hot Water Tankஐச் சுற்றி Insulate பண்ணுதல், ஒரு பயனுள்ள செயலாக இருக்கும். அத்துடன் சுடுநீர் குழாய்களை Insulate பண்ணுவது பயன்தரவல்லது. சுடுநீர் குழாய்களை திறந்த பின் 30 செக்கனுக்கு மேல் சுடு நீர் வர தாமதம் ஆனால் குழாய்களை Insulate பண்ணுவதில் அதிக கவனம் செலுத்துவது நல்லது.

velasubramaniam@thaiveedu.com

■ ■ ■

Home Inspection
Vela Subramaniam
Certified Home Inspector
Optimal Home Inspection Services
Tel:416-786-0760
416-299-0700
E-Mail:vela.ohis@gmail.com
Web:www.ohis.ca



Want To Buy A Home In Your Budget?
399,900
Bovaird/Fernforest
212,900
Hwy10/Central Parkway
"Your Satisfaction Is My Success..."
*THIS WEEKS HOT DEAL*
509,900
14th Ave/9th Line
210,000
Finch/Middlefield
599,000
Woodbine/16th Ave
418,000
Highglen/Mccowan
224,900
Hwy 403/Hurontario
MANGA ARUNASALAM
Real Estate Broker
Commercial & Residential
HomeLife/Landmark Realty Inc. Brokerage
Independently Owned & Operated
5200 Finch Avenue East, Suite 206
Scarborough, ON M1S 4Z4
CELL: (416) 816 8775
TEL: (416) 293 5093
RES: (905) 944 9604
FAX: (416) 293 5237


Buy / Sell Properties
McCowan & Hwy 7
3 Bedrooms, 2 Washroom
$329,000
Bovaird & Mc Laughlin
3 Bedrooms, 2 Washroom
$289,900
Neilson & 401
3+1 Bedrooms, 2 Washroom
$249,500
Neilson & McLevin
3 Bedrooms, 3 Washroom
$259,900
Neilson & Finch
3 Bedrooms, 3 Washroom
$319,900
Vodden & Hwy 10
3 Bedrooms, 3 Washroom
$289,900
McCowan & Ramerville
3+1 Bedrooms, 3 Washroom
$362,000
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife Today Realty Ltd.
Brokerage*
Phone : 416-298-3200
Cell : 416-903-4663
31 Progress Ave. Suite 210, Toronto, ON M1P 4S6
*Independently Owned and Operated, REALTOR
Kirew Kanagasabai
Broker of Record
Kirewk@yahoo.com

## குமார் புனிதவேல் பக்கம்

# சிந்தியுங்கள்

சென்ற வருடம் June 22ம் திகதி தனது 71ஆவது வயதில் ஜாஜ் கார்லின் என்னும் நகைச்சுவை நடிகர் காலமானார். இவர் நகைச்சுவை நடிகராக இருப்பினும் தன் நகைச்சுவையில் மனிதத்திற்கு தேவையான நல்ல தத்துவக்கருத்துகளை கொடுத்துதவியுள்ளார். அவர் கடைசிக் காலத்தில் மனிதர்க்கு சொல்லிச் சென்ற நல்ல கருத்துக்களை தமிழ் வாசகர்களுக்கு அறியத்தருகிறேன்.

எமது காலத்தில் பொய்யாகத் தோன்றும் உண்மை என்னவென்றால் இன்று உயர்ந்த கட்டிடங்களும் குறுகிய மனமும் காணப்படுவதுதான். அகலமான பாதைகள், ஆனால் குறுகிய கருத்துகள் நிறைந்து உள்ளது. அதிகம் செலவு செய்து கொஞ்சம் வைத்துள்ளோம். அதிகம் வாங்குகிறோம், குறைவாக அனுபவிக்கிறோம். எங்களிடம் பெரிய வீடுகள் உள்ளன, ஆனால் சிறிய குடும்பங்கள்தான் வைத்துள்ளோம். கூடிய வசதிகள் செய்துள் ளோம், ஆனால் நேரம் போதாது. பல பட்டங்கள் பெற்றுவிட்டோம், ஆனால் சிந்திக்க மறந்துவிட்டோம். கூடிய அறிவு பெற்றுவிட்டோம், ஆனால் தீர்வுகள் தெரியாதுதவிக்கிறோம். கூடிய வல்லுனராகிவிட்டோம், ஆனால், வாழ்வில் கூடிய சிக்கல்களில் தவிக்கிறோம். கூடிய மருந்துகள் கண்டுபிடித்துவிட்டோம், ஆனால் குறைந்த ஆரோக்கியத்துடன் இருக்கிறோம்.

அதிகம் குடிக்கிறோம். அதிகம் புகைக்கிறோம். அதிகம் செலவுசெய்கிறோம். ஆனால் குறைய சிரிக்கிறோம். வேகமாக செலுத்துகிறோம். அதிகம் கோபப்படுகிறோம். விழித்து இரவில் இருக்கிறோம். களைப்புடன் விழித்தெழுகிறோம். குறைய வாசிக்கிறோம். அதிகம் தொலைக் காட்சி பார்க்கிறோம். ஆனால், அருமையாக கடவுளை தொழுகிறோம். எமது செல்வத்தை வளர்த்திருக்கின்றோம். ஆனால், பெறுமதியை குறைத்திருக்கிறோம். அதிகம் கதைக்கிறோம். கொஞ்சம் அன்பு செலுத்துகிறோம். ஆனால், அதிகம் வெறுக்கிறோம்.

எப்படி சம்பாதிப்பது என்று கற்றுவிட்டோம். ஆனால் வாழ மறந்துவிட்டோம். வாழ்நாளை கூட்டிவிட்டோம். வாழ மறந்துவிட்டோம். வானத்து நிலாவில் நடந்துவிட்டோம் பாதை



யின் மறுகரைக்கு நடந்து அயலவரை வாழ்த்த தவறிவிட்டோம். பிரபஞ்ச வெளியை வென்றுவிட்டோம், உள்ளத்து வெளியை கோட்டை விட்டோம். பெரிய சாதனைகள் செய்துவிட்டோம், ஆனால் சிறந்த செயலை செய்யத் தவறிவிட்டோம்.

காற்று மண்டலத்தை துப்பரவுசெய்துவிட்டோம். ஆனால் ஆன்மாவை குப்பையாக்கிவிட்டோம். அணுவைத் துளைத்துவிட்டோம். வெறுப்பைக் கடக்கவில்லை. அதிகம் எழுதுகிறோம், ஆனால் குறைவாய் கற்கிறோம். அதிகம் திட்டமிடுகிறோம், ஆனால் குறைய சாதிக் கிறோம். அவசரப்பட கற்றுக்கொண்டோம், ஆறிநிற்க மறந்துவிட்டோம். கணனியைக் கண்டுபிடித்து பல தகவல்களை சேர்த்து வைத்துக்கொண்டோம், ஆனால் தொடர்புகளை துண்டித்துக்கொண்டோம்.

வேகமாக உணவைப் பெற்றுக்கொள்கிறோம், செமியாமையால் அவஸ்தைப்படுகிறோம். பெரிய மனிதர்களும் குறுகிய ஒழுக்கமும், நெடியலாபமும் தாழ்ந்த உறவுகளுமாய் இருக்கிறோம். இந்நாளில் இரண்டு வருவாய் வீடுகளைக் காண்கிறோம், அங்கு விவாகரத்து மலிந்திருப்பதை பார்த்திருக்கிறோம். அழகான வீடுகள், அங்கு முறிந்த உறவுகள்.

இக்காலத்தில் விரைந்த பயணங்கள், எறியும் துணிகள், எறியப்பட்ட நற்குணங்கள், ஓர் இரவு உறவுகள், பருத்த உடல்களும், மகிழ்ச்சி, அமைதி ஆகியவற்றை தருவதற்கு குளிசைகளும் மலிந்துள்ளன.

இக்காலத்தில் காட்சியறை நிறைந்தும் பண்டகசாலை வெறுமையாகவும் இருக்கிறது. விஞ்ஞான வளர்ச்சியால் இச்செய்தியை உங்களுக்கு கொண்டுவர முடிகிறது. ஆனால் அதை சிந்தித்து உள்வாங்கவைக்க முடியாது. அச்செய்தியை பகிரவைக்க முடியாது. ஆனால்... ஞாபகம் வைத்திருங்கள். உங்கள் அன்புக்குரியவர்களுடன் சில நேரம் செலவிடுங்கள். ஏன் என்றால் அவர்கள் என்றும் இருக்கப்போவதில்லை. ஞாபகம் வைத்திருங்கள். உங்களை வியந்து நோக்குபவர்களுக்கு அன்பு வார்த்தைகளை கூறுங்கள். காரணம் அச்சிறுபிள்ளை வளர்ந்து உங்களை பிரிந்து சென்றுவிடும்.

ஞாபகம் வைத்திருங்கள் உங்கள் அருகில் இருப்பவரை கட்டித்தழுவுங்கள். காரணம் உங்கள் இதயத்திலிருந்து செலவில்லாமல் கொடுக்கக்கூடிய ஒன்று இது.

ஞாபகம் வைத்திருங்கள். 'உங்களை நேசிக்கிறேன்' என்று உங்கள் அன்புக்குரியவர்களுக்கு அதிலும் உள்ளத்தால் உணர்ந்து சொல்லுங்கள்.

உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து வரும் பொழுது ஒரு முத்தம்... ஒரு அணைப்பு எத்தனையோ வேதனைகளை குறைத்துவிடும். ஒருவர் கரத்தை இறுகத் தழுவுங்கள் காரணம், பின்னொரு நாள் அவர் இல்லாமல் போகக் கூடும்... உங்கள் எண்ணங்களை அன்பு செய்ய நேரத்தை ஒதுக்குங்கள். அன்பர்களுடன் பகிர்வதற்கு நேரத்தை ஒதுக்குங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக வாழ்க்கை, எத்தனை மூச்சு எடுத்தீர்கள் என்பதல்ல, உங்களின் மனதை கொள்ளை கொண்டு மூச்சை நிறுத்திய வேளைகளால் தான் கணிக்கப்படுகிறது.

இக்கருத்தை நீங்கள் எட்டு நண்பர்களுடன் பகிராவிட்டால் எனக்கு என்ன?

பின் குறிப்பாக உங்கள் சிந்தனைக்கு ஒரு கேள்வியை முன்வைக்கிறேன். நாம் ஏன் உன்னை நேசிக்கிறேன் என்று காதலன் காதலிக்கோ அல்லது காதலி காதலனுக்கோ சொல்லவில்லை. 'I Love you' என்று சொல்வார்கள் ஆனால் தமிழில் சொல்ல மாட்டார்கள். அதேபோல் பிள்ளை தாயிடம் அம்மா I love you என்று சொல்லுமே அல்லாமல் அம்மா நான் உங்களை நேசிக்கிறேன் என்று சொல்லாது. ஏன் இந்த தயக்கம். விடை தெரிந்தால் எனக்குச் சொல்லுங்கள்.

kumarpunithavel@thaiveedu.com

■ ■ ■



# கொண்டோ வாங்குவது எப்படி?

(Buying a condominium என்னும் நூலிலிருந்து பெறப்பட்டது.

கொண்டோ வாங்கும் ஒருவர், தன்னுடைய சொத்துக்கு உத்தரவாதம் உண்டா? என்று கேட்கலாம்:

அதற்குப் பதில் ஆம், டாரி அன் உத்தரவாதக் கூட்டுத்தாபனத்தால் நிர்வகிக்கப்படும் ஒன்ராறியோ புது வீட்டுத்திட்ட சட்டத்தின்படி புதிதாக கொண்டே வாங்குபவர்களுக்கு உத்தரவாதம் வழங்கப்படுகிறது. ஆனால், Tarion புதுப்பிக்கப்பட்ட குடியிருப்புகளுக்கோ ஏற்கனவே இருந்த அத்திவாரத்தின் மேல் கட்டப்பட்ட கொண்டோக்களுக்கோ உத்தரவாதம் அளிப்பதில்லை. Tarion இரண்டு விதமான பாதுகாப்பை அளிக்கின்றது. கொண்டோ வாங்குபவர் செலுத்திய கட்டுப்பணம் (முற்பணம்) $20,000 வரை கட்டிட அபிவிருத்தியாளர்கள், குறிப்பிட்ட தேதிக்குள் முடிக்காவிடின் பணம் செலுத்தியவர்களுக்கு திருப்பிக் கொடுக்க வேண்டும் என்பது ஒரு உத்தரவாதம். மேலும் குடியிருக்க வந்த ஒருவருடத்திற்குள் கட்டிடத்தில் ஏதாவது பாதிப்பு ஏற்பட்டாலும், குடியிருப்பிலுள்ள பொது கட்டிடப் பகுதிகளுக்கும் ஒரு வருடமும், இயந்திர அல்லது மின் சம்பந்தமான பிழைகளைத் திருத்த இரண்டு வருடங்களும், கட்டிடத்தின் பிரதான பகுதிகளுக்கு 7 வருடங்களும் உத்தரவாதம் அளிக்கின்றது.

கட்டிடத்தின் முக்கியமான பகுதிகளில் வரும் இணைப்புக்கள் தகுந்த மாற்று இணைப்புகளைப் பொருத்த உத்தரவாதம் அளிக்கின்றது.

மேலும் Tarion உத்தரவாத கூட்டுத்தாபனத்துடன் நீங்கள் 416-229-9200 இந்த தொலைபேசி எண்ணுடனோ அல்லது இவர்களின் www.tarion.com என்ற இணையத்தள முகவரியுடனோ தொடர்புகொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

### கொண்டோவை ஒருவர் வாங்கும் போது அவருக்கு ஏற்படும் செலவுகள் என்ன?

- Mortgage payments: அடைமானக் கொடுப்பனவு
- Property taxes: சொத்து வரி
- Monthly common expenses. including an amount for the reserve fund. (மாதாந்த பொதுச் செலவு – அவசர அத்தியாவசிய நிதி)
- Utilities and cable (மின், நீர், தொலைத் தொடர்பு)

அந்த கட்டிடத் தொகுதியை பராமரிக்கும் செலவையும் குடியிருப்பாளரே செலுத்த வேண்டும். இச் செலவு வருடா வருடம் அதிகரித்துக் கொண்டே செல்லும்.

### பொது செலவுகள் இப்படி தீர்மானிக்கப்படுகின்றன?

ஒவ்வொரு தொகுதியின் அளவிற்கு தக்கபடி இச்செலவு நிர்ணயிக்கப்படுகின்றது.

### கொண்டோ பதிவு செய்யப்பட்ட

**பாகம் - 4**

### பின் என்ன நடக்கும்?

உரிமையாளர்களின் சொத்துக்களைப் பாது காப்பதற்கு கொண்டோ சட்டம் 1998ல் கொண்டு



வரப்பட்டது. உரிமையாளர்கள் எல்லோரும் கூடி ஒரு சபையை ஏற்படுத்தி அதன் மூலம் நிர்வாகத்தை நடத்துவார்கள்.

### அவசர நிதி என்றால் என்ன?

ஒவ்வொரு கொண்டோ உரிமையாளர்களும் பராமரிப்புச் செலவுக்கு கொடுக்கும் பணத்தில் ஒரு பகுதியை reserve fund என்ற பெயரில் சேமித்து வைப்பார்கள். இந்தப் பணம் பெரிய பொது செலவுகளுக்கு உபயோகிக்கப்படுகிறது.

### சொத்துக்களை யார் பராமரிப்பது?

சொத்து நிர்வாக நிறுவனம் ஒன்று அதிகார சபையின் தலைமையில் அன்றாட அலுவல்களைக் கவனிக்கின்றது. சில கொண்டோக்கள் தாங்களே நிர்வாகத்தை நடத்துகின்றன. நிர்வாகசபை இயக்குனர்கள் உரிமையாளர்களால் நியமிக்கப்படுகிறார்கள். இவர்களுடைய பதவிக்காலம் மூன்று வருடங்கள்.

### கொண்டோ நிர்வாகத்தில் உரிமையாளரின் பங்கு என்ன?

கொண்டோ நிர்வாகசபைக் கூட்டத்தில் பங்கு பற்றுதல், தீர்மானங்களை நிறைவேற்றுதல். இவர்கள் 15% குடியிருப்பாளர்களுக்கு ஒரு பிரதிநிதி என்ற ரீதியில் தெரிவு செய்யப்படுவார்கள்.

### கொண்டமேனிய உரிமையாளர்களின் வாழ்க்கை முறை பாதிக்கப்படுமா?

வாடகை வீட்டில் வசிப்பது போலல்லாமல் சற்று வித்தியாசமானதாக இருக்கும். கொண்டோ சொந்தக்காரர்களின் உரிமை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

- கொண்டமேனிய சட்டங்களுக்கு இவர்கள் கீழ்படிந்து நடக்க வேண்டும்.
- தனது குடியிருப்பை சேதப்படுத்தவோ அலட்சியப்படுத்தவோ கூடாது.
- கொண்டோக்கள் வசிப்பதற்கு மட்டுமே உபயோகிக்கப்பட வேண்டும்.
- கொண்டோக்களின் காப்புறுதிகளின் விதி களுக்கு அமைய சகல செயல்பாடுகளும் இருக்க வேண்டும்.

### ஒருவர் தனது கொண்டோவை அழகுபடுத்தவோ தோற்றத்தை மாற்றி அமைக்கவோ முடியுமா?

- இல்லை, கொண்டோவின் வெளிப்புறத் தோற்றத்தில் எதுவித மாற்றமும் செய்ய முடியாது. உட்புறம் அந்த அந்த நகர சபையின் சட்டத்திற்கு அமைய மாற்றி அமைக்கப்படலாம்.
- பெரிய மாற்றங்கள் செய்யும் போது கொண்டோவின் நிர்வாக சபையின் அனுமதி பெற வேண்டும்.
- அதேபோல பொது உடமைகளில் மாற்றம் செய்வதாக இருந்தால் கொண்டோவின் நிர்வாக சபையில் அனுமதி பெறவேண்டும்.

**S.K. பாலேஸ்**
- வீடு விற்பனை முகவர் -



### கொண்டோ சொந்தக்காரர் தனது கொண்டோவை வாடகைக்கு விடலாமா?

ஆம் அப்படியான சந்தர்ப்பத்தில் கொண்டோ உரிமையாளர்களும் வாடகைக்கு வசிப்பவர்களும் கொண்டோ நிர்வாகசபையின் சட்டங்களை மதித்து நடக்க வேண்டும். மேலும் அவர்கள் சட்டத்திற்குப் புறம்பாக நடந்தால் அவர்களுக்கு எதிராக நிர்வாக சபை சட்ட நடவடிக்கை எடுக்கலாம்.

### கொண்டோக்களின் பராமரிப்புகளுக்கும் திருத்த வேலைகளுக்கும் யார் பொறுப்பு?

கொண்டோவின் உட்பகுதியில் காணப்படும் பராமரிப்பு திருத்த வேலைகள் கொண்டோ சொந்தக்காரர்களினாலும் வெளிப்புற வேலைகள் நிர்வாக சபையினாலும் செயல்படுத்தப் படுகிறது.

உட்புற வேலைகளையும் நிர்வாகசபையே உரிமையாளரின் சம்மதத்துடன் செய்யலாம்.

தொடரும்...

skbales@thaiveedu.com

■ ■ ■

**House for Sale**
Pharmacy & Lawrence
LIST $329,900
SOLD $336,000




**Century 21**
Affiliate Realty Inc.
S.K Bales
CRA, CAR, MVA, FRI, CRES.
Tel- 905-201-0929, Cell- 416-801-3219.

**Canadian Home Appraisals Inc.**
Residential & Commercial Appraisals
CHAI CANADIAN HOME APPRAISALS INC.
S.K.Bales
CRA, CAR, MVA, FRI, CRES
Managing Director
Tel: 905-201-0929
Fax: 905-201-8482
www:chainc.ca
email:.chai@chainc.ca

**MY PROFESSIONAL DESIGNATIONS:**
- CRA (Canadian Residential Appraiser) — Designation with Real Estate division of University of British Columbia and The Appraisal Institute of Canada
- Car: ( Certified Appraisal Reviewer) — Designation with Canadian National Association of Real Estate Appraisers.
- MVA( Market Value Appraiser-Residential — Designation with The Canadian Real Estate Association
- FRI (Fellow of the Real Estate Institute) — Designation with Real Estate Institute of Canada
- CRES ( Certified Real Estate Specialist) — Designation with Real Estate Institute of Canada
- RESIDENTIAL AND COMMERCIAL REAL ESTATE BROKER — Real Estate Broker licence with Real Estate Council of Ontario.

Century 21
Affiliate Realty Inc.



S.K.Bales
CRA, CAR, MVA, FRI, CRES
Real Estate Broker
Residential & Commercial
TEL: 416-290-1200
CELL: 416-801-3219
Commercial Member

# வாழ்க்கை சுவர்க்கமானது இனிய இல்லமொன்றில்...

## Elaguppllai (Mike) Srinathan B.Sc

**Sales Representative**

**Dir: 416-276-1225 Off: 905-470-9800**

**Email: esrinathan@trebnet.com**




**Markham/Painted Post**



**$219,900**
Semi detached 2 story, Bed rooms 3, Washrooms 2 Close To All Amenities, 401, Mall, Scarborough Town Centre, Finished Basement

**Medowvale/Sheppard**



**$289,000**
Town house 3 story, Bed rooms 3 , Washrooms 2 Very Demand Location Owner Spent $$$ Dollar For Upgrades

**Steeles / Markham Rd**



**$289,900**
Town house 2 Story Bed rooms2, Washrooms 1 Walk To Steeles! No Need To Pay Extra For Ttc. Great Markham / Steeles Location-

**Mccowan/Denision**



**$327,000**
TDetached 2 story, Bed rooms 3, Washrooms 2 Larger Enclosed Front Porch, Garage Side Door To Front Porch, Newer Roof 2007. Minutes To Ttc,

**Stouffville/9th Line**



**$3349, 900**
Detached 2 Story, Bedrooms 3, Washrooms 3, 2 Yrs New!, Direct Access To Garage;Oak Stairs;Gas Fireplace;Upgraded Tile

**Staines/Steeles**



**$354,900**
Detached 2 Story, Bedrooms 3 Wasroom2, All Brick Spacious 3 Bedroom House, Laminated Walkout Basement

**Mccowan/Denison**



**$369,800**
Link 2 Story, Bed rooms 3+2 Washrooms 3, Completly Renovated With Ceramic Floor Entrance Way-Basement Contains 2 Bed-

**Denison/Featherstone**



**383,900**
Link 2 Story, Bed rooms 4+2 Washrooms4, Renovated Basement With Separate Entrance,New Roof & New Furnac(2006)

**Markham Road/ 16th Ave**



**$389,000**
Detached 2 Story, Bed rooms 3, Washrooms 3 Only 3.5 Years New. Approx 1850 Sq Ft, 9Ft Large Eat-In Kitchen

**Passmore/Oasis**



**$395,500**
Detached 2 story , Bed rooms 3+1 Washrooms 3, Near School & Ttc. Freshly Painted, Attractive Front Porch

**Markham/Steeles**



**$399,900**
Link 2 Story, Bedrooms 4, Washrooms 3, Fully Fenced Yard*Walk To Ttc/Schools/Shops/Restaurant/Church/Comm. Ctr/Park

**Markham Rd/Highglen**



**$449,900**
Detached 2 Storys, Bed rooms 4+2, Washrooms 4 Profesionaly Finished Basement Appartment With Sep Enterance.Approx 2100 Sqft

**Mccowan & Elson**



**$454,900**
Detached 2 Story, Bedrooms 4, Washrooms4, Close To Schools, Shopping And All Emenities, Finished Basement With Kitchen &

**Williamson & Bur Oak**



**$459,900**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3 Brand New Madison Home! Approximately 2100 Sq. Ft. Close Parks, Schools,

**Morningside/Shep-**



**$469,900**
Detached 2 Story, Bedrooms 5+1, Washroom 5 Over $50,000 In Upgrades.9 Foot Cielings On Main Floor & Basement. Pot Lights & Hard-

**9th Line & 14th Avenue**



**$498,900**
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 4, 2830 Sq. Ft. Plan. Across From Legacy Public School. Walking Distance To Park

**14th Ave/9th Line**



**$512,000**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3; Combined Liv/Din Rms W/9Ft Ceilings And Oak Staircase * A Gas Fireplace

**Kennedy/Highglen**



**$799,000**
Detached 2 Story, Bedrooms 4+4 Washrooms 5 Situated On One Of The Best & Quiet Street In The Area Approx 4000 Sf

**Mccowan/ Eglinton**



**$164,900**
Condo Apt, Bed rooms 2+1,Was rooms2 Bright & Spacious Corner Unit In Extremely Well Maintained Luxury Building

**Bovaird/Mc Laughlin**



**$289,800**
Detached 2 Story Bed rooms 3, Washrooms 2, Affordable Detached All Brick Two Storey, Laminate Floors In Living/Dining Rooms

**Rossland/Salem**



**$299,900**
Detached 2 Story Bed rooms 3, Washrooms 3, Ideal For A Young Family. Features Large Family Room W/ Fireplace

**Sales of Businessl**



**$1,400,000**
Sale Of Business With Property Gas Stations. Self Serve Petro Canada With Convenience Store

**Sales of Business**



**$159,000 For Sale**
Sale Of Business Without Property Gas Stations. Self-Service Gas Bar And Convenience Recently Renovated

RE/MAX
**Realtron Realty Inc. Brokerage**
Independently Owned and Operated
7800 Woodbine Ave. Penthouse, Markham,ON. L3R 2N7

**'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'**

# கனடிய குடிவரவு திணைக்களத்தின் புதிய அறிவிப்பு

## இலங்கையில் பாதிப்படைந்த தமிழர்களை கனடாவிற்கு வரவழைக்க முடியுமா?

கடந்த June 3-ஆம் தேதி அன்று கனடிய குடிவரவு திணைக்களம் வெளியிட்ட அறிவித்தலின்படி, அண்மைக்காலத்தில் இலங்கை-

> **அண்மைக்காலத்தில் நடந்த வன்முறைகளின் போது பாதிக்கப்பட்ட இலங்கையில் வதியும் குடும்ப அங்கத்தவர்களை ஏற்கனவே பொறுப்பேற்றிருந்தால் அல்லது இனிமேல் பொறுப்பேற்க ஆயத்தங்கள் செய்தால், அவர்கள் துரிதமாக, கனடாவிற்கு வருவதற்கு visa வழங்குவதற்கான நடைமுறைகளை Canadian High Commission மேற்கொள்ளும்.**

யில் நடைபெற்ற வன்முறைகளினால் பாதிக்கப்பட்ட குடும்ப உறவினரை, கனடாவிற்கு துரிதமாக பொறுப்பேற்றல் (sponsor) மூலம் அழைத்து வர முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இச்செய்தியை பெரும்பாலான கனடிய தமிழ் உறவுகள் பிழையாக அல்லது சற்று மிகைப்படுத்தி விளக்கம் கொண்டுள்ளார்கள். ஏனென்றால் கடந்த சில வாரங்களாக கனடாவில் வாழும் தமிழர்கள் மட்டுமல்ல, உலககெங்கும் வாழும் தமிழர்களிடையே இவ்வதந்தி காட்டுத்தீயாக பரவியது.

"கனடாவிற்கு open-visa கொடுக்கிறார்களாம். வுவனியா, செட்டிகுளம் முகாம்களில் அடைபட்டு வதைபடும் தமிழர்களுக்கு கனடா அரசு மனம் இரங்கி இவ்வசதியை செய்திருக்கிறது." இதனால் பலர் தங்கள் உறவுகளை கனடாவிற்கு கூப்பிட பலரிடமும் தொடர்புகொண்டு எங்கே விண்ணப்ப படிவம் எடுப்பது, யாருடன் தொடர்பு கொள்வது என்று அங்கலாய்த்த வண்ணம் உள்ளனர்.

உண்மையிலே கனடிய குடிவரவு துறையில் உறவினர்களை பொறுப்பேற்றல் பற்றிய சட்ட விதிகளில் எந்த விதமான மாற்றமும் செய்யப்படவில்லை. இதுவரை காலமும் நடைமுறையிலுள்ள குடிவரவு விதிகளின்படி கனடாவிற்குள் நிரந்தர வதிவிட உரிமையுடன் கூடிய அனுமதியை வழங்குவதற்கு கனடாவிலுள்ள உறவினர்கள் யார் யாரை பொறுப்பேற்ற (sponsor) முடியுமோ அவர்களை மட்டும்தான் தற்பொழுதும் பொறுப்பேற்ற (sponsor) முடியும். அதாவது கனடாவிலுள்ள ஒருவர் தனது வாழ்க்கைத் துணைவர், 22 வயதிற்கு உட்பட்ட பிள்ளைகள், (22 வயதிற்கு மேற்பட்டிருந்தால், அவர்கள் வலது குறைந்தவர் களாக, அல்லது முழு-நேர உயர் கல்வியைத் தொடர்ந்தும் பயின்றுகொண்டிருப்பவர்களாக இருத்தல் வேண்டும்), பெற்றோர், பெற்றோரின் பெற்றோர், பெற்றோருடன் சேர்த்து அவர்களில் தங்கி இருப்பவர்கள் (dependents - அதாவது பொறுப்பேற்பவரின் 22 வயதிற்கு உட்பட்ட சகோதரங்கள், அல்லது 22 வயதிற்கு மேட்பட்டிருந்தால், அவர்கள் வலது குறைந் தவர்களாக அல்லது முழு-நேர உயர் கல்வியைத் தொடர்ந்தும் பயில்பவராக இருத்தல் வேண்டும்). அத்துடன் அனாதையான உறவினர்களையும் பொறுப்பேற்கலாம். பொறுப்பேற்பவர்கள் சில நிபந்தனைகளை திருப்தி செய்தால் மட்டுமே பொறுப்பேற்பதற்கான அனுமதியை கனடிய குடிவரவு திணைக்களமும் வெளிநாடுகளிலுள்ள கனடிய தூதராலயங்களும் வழங்கும். இதுவே தற்போது உள்ள குடும்ப பொறுப்பேற்றல் சம்பந்தமான குடிவரவு நடைமுறையாகும். இந்நிலை இலங்கையர்களுக்கோ, தமிழர்களுக்கோ தனித்துவமானது அல்ல. சகல நாட்டு மக்களுக்கும் பொதுவான விதியாகும்.

அப்படியாயின் ஸ்ரீ லங்கா Initiative என்ற June 3-ஆம் திகதிய கனடிய குடிவரவு திணைக்களத்தின் அறிக்கை புதிதாக சொல்வதென்ன? மிக எளிதான பதில் என்னவென்றால் அண்மைக்காலத்தில் நடந்த வன்முறைகளின் போது நேரடியாகவும், பாரதூரமாகவும் பாதிக்கப்பட்ட இலங்கையில் வதியும் குடும்ப அங்கத்தவர்களை கனடாவில் உள்ள ஒருவர் ஏற்கனவே பொறுப்பேற்றிருந்தால் அல்லது இனிமேல் பொறுப்பேற்க ஆயத்தங்கள் செய்தால், அந்த (இலங்கையில் உள்ள) குடும்பத்தவர் துரிதமாக, கனடாவிற்கு வருவதற்கு visa வழங்குவதற்கான நடைமுறைகளை இலங்கையிலுள்ள கனடிய உயர் ஆணையாளர் அலுவலகம் (Canadian High Commission) மேற்கொள்ளும்.

கனடிய உயர் ஆணையாளர் அலுவலகம் துரிதமாக நடவடிக்கை எடுப்பதற்குத் தேவையான குடும்ப பொறுப்பேற்பு சம்பந்தமான குடிவரவு விண்ணப்பங்களை நிறைவேற்றுவதாயின் இவ் அலுவலகத்திற்கு பொறுப்பேற்பவரோ, அல்லது குடிவரவிற்காக விண்ணப்பிப்பவரோ, தங்கள் குடும்ப அங்கத்தினர் அல்லது தாங்கள் நேரடியாகவும், பாரதூரமாகவும் வன்முறையின்போது பாதிப்படைந்துள்ளோம் என்பதை அறிவிக்க வேண்டும். அதாவது கனடிய குடிவரவுத் துறையினரோ, கொழும்பிலுள்ள கனடிய உயர் ஆணையாளர் அலுவலகமோ குடிவரவு விண்ணப்பதாரி பாதிக்கப்பட்டுள்ளார் என்பதை தாமாக அறிந்துகொள்ளமாட்டா. எனவே பாதிக்கப்பட்டவரோ, அல்லது கனடாவில் உள்ள பொறுப்பேற்பவரோதான் கட்டாயமாக தாங்களாகவே மேற்படி அலுவலகங்களுக்கு அறிவிக்க வேண்டும்.

இதற்கான நடைமுறைகளை கனடிய குடிவரவு துறையின் இணையத்தளம் www.cic.gc.caஇல், அல்லது கனடாவிலுள்ள குடிவரவு சம்பந்தமான சட்டத்தரணிகள் மற்றும், சட்ட ஆலோசகர்களிடம் விவரமாக பெற்றுக்கொள்ளலாம்.

ranjanfrancis@thaiveedu.com

■ ■ ■

N.K.S
Drapery & Blinds Fabric LTD



திறமையான சேவையால் பல விருதுகளை பெற்ற நிறுவனம்

உங்கள் வீட்டுக்குனுத் தேவையான சகலவித யன்னல் திரை வகைகளையும், கேட்டின் துணி வகைகளையும் மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள அழையுங்கள்.

கேதா நடராஜா
416.321.6420

Ketha Nadarajah
(President)
Tel: 416.321.6420, 905.944.0218
Fax: 416.321.2217
www.nksdrapery.ca

Drapery & Blinds Fabric Ltd., 210 Silver Star Blvd., Unit #825, Scarborough, ON M1V 5J9



NuTek COMPUTERS
www.nuTechComputer.com

☑ Virus Removal
☑ Internet Sharing
☑ Computer Tune Up
☑ Computer Repair

அனைத்து கணணி திருத்த வேலைகளும்
உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்

416.587.1619
techsupport@nutechcomputer.com

Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional

SALES - SERVICE - UPGRADES

# HOMELIFE FUTURE REALTY

7 Eastvale Dr #205
Markham, Ontario
L3S 4N8

Office: 905-201-9977
Fax: 905-201-9229

**9th Line/14th Ave**



**$579,900**

4 Bedrooms.
4 Washrooms.
Stainless Steel Appliances
Pot Lights Throughout.
Close to all Amenities.

**McCowan/Steeles**



**$185,000**

1+2 Bedrooms.
1 Washroom.
Close to all Amenities.
Recently Renovated.
A Must See Property.

**16th Ave/9th Line**



**$509,000**

4+2 Bedrooms.
4 Washrooms.
Finished Basement.
Luxuriously Upgraded.
Hardwood Floors.



## LOKAN SUNDARAM

*Broker*

*416-450-3984*
*lokan.homelife@gmail.com*

LOW INTEREST RATES!
OPPORTUNITY TO BARGAIN!
ACT NOW!!
BUY WITH LOKAN!

CALL ME FOR ALL YOUR, MORTGAGE AND RE-FINANCING NEEDS

# வீடு வாங்கவும், விற்கவும்.......

**Morningside/Sheppard**



**$319,000**

3 Bedrooms, 3 Washrooms
Well Kept Home.Very Spacious Layout With Eat In Kitchen & W/O To Large Back Yard

**Steeles / Martin Grove**



**$319,900**

3 Bedrooms, 3 Washrooms
Beautiful 3 Bed Room Family Home In 'Cul-De-Sac'**Many Upgrades**Pride Of Ownership

**Hillcrest/Confederation**



**$499,000**

3+3 Bedrooms, 3 Washrooms
Bright Spacious Bunglow On Huge Lot, Massive 3 Bedrooms Bsmt Apartment W/Sep Entrance

**Morningside/Warnsworth**



**$309,000**

4 Bedrooms, 3 Washrooms
High Demand West Hills Area. Freshly Painted,Renovated Kitchen, New Furnace (2007), New Ac (2007)

**Creditview/Eglinton**



**$499,000**

5+1 Bedrooms, 4 Washrooms
Wow! Big And Beautifull Perfect For The Growing Family And A True Entertainer's Delight. 3300 Square Feet

**Birchmount/Danforth**



**$309,900**

3+2 Bedrooms, 3 Washrooms
Beautiful And Well-Maintained Home. Move-In Condition

**Islington/Rexdale**



**$294,500**

3 Bedrooms, 2 Washrooms
Excellent Location, The House Need Several Tlc, Upgraded Kitchen And Windows

**Markham/Mclevin**



**$259,900**

3 Bedrooms, 2 Washrooms
Well Maintained House With New Kitchen, Backyard Facing School, Good Location. New Windows

சகல விதமான
படிவங்களும்
நிரப்பிக் கொடுக்கப்படும

*To Fill any Forms*
*(Sponsors, ODSP, Tax & etc...)*

இரஞ்சன் *or*
செல்வா
**416.816.1220**

RED CARPET®
Royal Realty Ltd., Brokerage
® INDEPENDENTLY OWNED AND OPERATED
Real Estate Services

*INDEPENDENTLY OWNED AND OPERATED



## RANJAN FRANCIS XAVIER

Sales Representative

*Cell: 416.816.1220*
*Office: 416.284.5555*

880 Ellesmere Road. Suite 204, Scarborough, ON.

# வளமான வாழ்விற்கு வதிவிடம் வாங்கிட......


நலம் நாடுவதும் அதுவே
உங்கள் மாற்றத்தின் மாற்றத்திற்கு என்னை அழையுங்கள்
$ 69,000
Neilson & Sewells
$ 75,000
Sheppard & Neilson
$97,000
Kennedy & Eglinton
$99,900
Neilson & Sewells
$104,900
Sheppard & Neilson
$109,900
Sheppard & Markham
$128,900
Eglinton & Markham
$139,500
Eglinton & Bellamy
$164,900
Mccowan & Eglinton
$136,900
Midland & Lawrence
$185,000
Markham & Sheppard
$194,300
Morningside & Sheppard
$244,900
Kingston Rd & Lawrence
$249,500
401/Neilson
$259,900
Brimley & Eglinton
$259,900
Warden & Lawrence
$269,900
Finchdene & Finch
$279,900
Morningside & Seppard
$289,000
Markham & Mclevin
$297,000
Brimley & Eglinton
$319,000
Brimley & Steeles
$369,800
Mccowan & Denision
$379,000
Mccowan & 14th Ave
$362,000
Mccowan & Ramerville
$375,000
Mccowan & Bur Oak
$389,900
Markham & Bur Oak
$393,000
Hwy 7 & 9th Line
$423,000
Mccowan & Steeles
RE/MAX
Call me for a change
RE/MAX
Kathir S Kathirgamanathan P. Eng.
Sale Representative
www. kathirsubramaniam.com
Email: kathirhomes@gmail.com
24 Hrs 416 856 6900
$429,000
9th Line & 407
$438,800
Mccowan & Steeles
$449,9000
Mccowan & Denison
Tel: 905 470-9800
Fax: 905 470-7770
www.realtronhomes.com
Realtron Realty Inc., Brokerage
Independently owned and operated
7800 woodbine Ave. PH
Markham ON L3R 2N7

# அழகிய பூஞ்செடிகள்

# காகிதப்பூ

## (கடதாசிப்பூ - Bougainvillea)

வீட்டுத் தோட்டம் - 17

செல்லையா சந்திரசேகரி



### அறிமுகம்:

போகெயின்வில்லா (Bougainvillea), குடும்பம் நிக்ரகினாசியே (Family Nyctaginaceae) குடும்பத்தைச் சார்ந்தது. இது அளப்பரிய பூக்களையுடைய தென் அமெரிக்காவைச் சார்ந்த பூர்வீகமாக இனமாகின்றது. ஆரம்பத்தில் 1760ம் ஆண்டளவில் (Brasil) பிராசில் எனும் இடத்தில் பிரான்ஸ் நாட்டுத் தாவரவியலாளர் Philibert Commerson என்பவர் இப் பற்றியேறும் செடியிற்கு “போகெயின்வில்லா” எனப்பெயரிட்டார். இப் பெயர் பிரத்தியேக சட்டத்தரணியும் கணிதமேதையும் புதியநிலப்பகுதிகளைக் கண்டுபிடிப்பவருமான இவரது நண்பரும் கப்பல் தலைவருமான லூயிஸ் (Lousis A.de Bougainville) என்பவரின் ஞாபகாத்தமாகச் சூட்டப்பட்டது.





கொத்துக்களாக அழகிய பூக்கள்

பூக்கள் அலங்கரிப்பதற்காகப் பயன்படுத்தப்படும். வெப்ப மண்டலங்களான பிலிப்பயின்ஸ், தாய்லாந்து, இந்தியா, இலங்கை, மலேசியா, மெக்சிக்கோ, ஐக்கிய அமெரிக்கா, தென் ஆபிரிக்கா போன்ற நாடுகளில் கூடுதலாக வளர்க்கப்படுகின்றன.

செடியின் வளர்ச்சிக்கு குறைந்தது ஐந்து மணித்தியாலங்கள் என்றாலும் சூரியவொளி தேவை. மாலை வெய்யில் மிகவும் அனுகூலமாயிருக்கும். இச் செடிகள், முட்களுள்ள வைரமான தண்டுகளையுடைய பற்றியேறும் இனமாகும். 1-12 மீற்றர் உயரமாக, வேறு தாவரங்களில் அல்லது எத்தகைய ஆதரவுகளையும் தேடித் தனது வளைந்த கொளுக்கிகள் மூலம் பற்றிப் பரவலாகக்காட்சி தரும் செடிகள். முட்களின் நுனியில் கறுத்த நிறமுள்ள ஒரு மெழுகுப் பதார்த்தம் காணப்படும். முட்கள் எப்பொழுதும் கடும் பச்சை நிறமாகவே இருக்கும். இலைகள் ஒன்றவிட்ட ஒன்றாக முட்டைவடிவானவை. மேற்குநாடுகளில் குறிப்பாக தென் கலிபோர்ணியாவில் நன்கு வளர்க்கப்படுகின்றன.

### வளர்க்கும் முறைகள்:

தண்ணீர் ஓட்டமுள்ள எத்தகைய மண்ணிலும் இச் செடியானது வளரக்கூடியது. பற்றியேறும் வர்க்கத்தை சேர்ந்ததாக இருப்பதால் கூடிய பரப்பை நிரப்பி அடர்த்தியான பூக்களை காட்சியாக துலங்க வைக்கின்றன. இதனை இலேசான முறையில் வெட்டுத்தடிகள் மூலம் உண்டாக்கமுடியும். நன்கு செழிப்பான செடியானது, காற்றுள்ள தண்ணீர் ஓடுகின்ற மணற்றறையில் நன்கு வேர்விட்டு வளரும். நீர்விட வேண்டுமென நினைத்து ஒவ்வொரு நாளும் நீர் பாய்ச்ச வேண்டாம். செடியின் ஆரோக்கியமான வளர்ச்சியைக்கவனித்து பராமரிக்கவும். எப்பொழுதும் செடிவளரும் இடத்தில் கூடிய சூரியவொளி இருக்குமாயின் அது இயற்கையாகவே வளர்ந்து பயன் தரும். எனது வெளிநாட்டுப் பிரயாணங்களில் அவதானித்த பூத்தோட்டங்கள் பலவாயிருந்தாலும் மலேசியா நாட்டில் என்னைக் கவர்ந்த கொத்துக்கள் வடிவில் காட்சிதந்த காகிதப்பூக்கள் இன்னும் எனது நினைவில் நின்று அகலவில்லை. மலேசியாவில் எல்லா வீடுகளிலும் காகிதப்பூச்செடிகள் காணப்படும். அலங்காரமாகச் செடிகளைக் கத்தரித்து பாதுகாப்பாக வைத்திருப்பார்கள். கத்தரித்தல் வருடத்தில் எந்த மாதத்திலும் செய்யலாம். கத்தரிக்கும்போது கூடுகலான பூக்கள் தோன்றலாம். கத்தரிக்கும்போது கத்தரிப்பதற்காக உபயோகிக்கப்படும் கத்தரிக்கோல்களை (by-pass pruners) பாவிக்கவும். இதனால் மிக இலேசாகத் தெளிவான வெட்டுக்களைப் பெறமுடியும்

### சாடிகளில் வளர்ப்பு:

இது சாடிகளிலும் நல்ல முறையில் வளர்க்கப்பட்டு, அதனால் அழகாகப் பூத்திருப்பதைக் காண்கின்றோம். வீட்டினுள் வைத்திருக்கும் சாடிகளின் செடிகள் நன்கு பூத்திருப்பதைக் காணமுடியாது. செடிகளுக்கு கூடுதலாக நீர் விட்டால் இலைகள் கொட்டுவதையும் வேர்கள் அழுகுவதையும் காணலாம். சாடிகள் அடிக்கடி மாற்றவேண்டும். ஒரு முகத்தலளவை தொடக்கம் ஐந்து முகத்தலளவை வரை சாடிகளை வைத்திருக்கலாம். சாடிகள் அடிப் புறத்தில் துளையுள்ளதாகவும் நீர் நன்கு வடியக்கூடியதாகவும் இருப்பதை கவனத்தில் கொள்ளவேண்டும். சாடிகள் மாற்றும்போது இருந்ததிலும் பார்க்க அடுத்த அளவான சாடிகளைத் தெரிவு செய்யவும்.

### பசளையின் முக்கியம்:

பொசுபரஸ் கூடிய பசளை சிறந்தது. இரும்பு, மகனீசியம் போன்ற சத்துக்கள் சேர்க்கப்பட வேண்டும். மெதுவாகச் சேரும் பசளை அனுகூலமாகவிருக்கும். சிறிது சிறிதாக பசளையைச் சேர்க்கவேணடும். கூடுதலாப் பசளை போடவேண்டாம். நிலம் காய்ந்திருக்கும்போது பசளை சேர்க்கவேண்டாம். சமமான பசளை, அதாவது நைதரசன், பொசுபரஸ், பொற்றாசியம் 20-20-20 கலவை சிறந்ததாகும்.

### நோய்களின் தாக்கம்:

நோய்களின் தாக்கம் குறைவாக இருக்கும். குளிர்காலங்களில் இலைகள் தாக்கப்படலாம். இலைகளில் புள்ளிகள் தோன்றும். ஏப்பிட்ஸ், மயிர்க்கொட்டிப் புளுக்கள், பேன்கள் போன்றவையும் இலைகளைத் தாக்கலாம். அவ்வேளைகளில் பூச்சிகொல்லி சவர்க்காரம் உபயோகிக்கவும். இயலுமான அளவு மயிர்க் கொட்டிப் புளுக்களை கையினால் இலேசாக நீக்கிவிடவும். இலைகள் பழுப்பாக இருந்தால் அவற்றை அகற்றி விடவும். செடிகளுக்கு போசாக்கு குறைவாகவிருந்தால் நோய்கள் ஏற்படும்.

### கொத்துக்களாக பூக்கள்:

உண்மையான பூக்கள், சிறிதானவை. ஒவ்வொரு கொத்தும், வெள்ளை நிறமான மூன்று பூக்களைக் கொண்டு இருக்கும். இப்பூக்கள் வேறுபட்ட செம்மஞ்சள், மஜன்தா, ஊதா, சிவப்பு, மஞ்சள் நிறங்களில் 3-6 செதில்களைக் கொண்டு மூடப்பட்டிருக்கும். அதிவெப்பமான பிரதேசங்களில் கூடுதலாக வருடந்தோறும் பூக்கள் காணப்படுவதால் இச்செடியினை எல்லோரும் விரும்பி வளர்க்கின்றனர். 4-6 கிழமைகள் இடைவேளைகளில் பூக்கள் தொடர்ச்சியாகப் பூத்தவண்ணம் இருக்கும். மிகக்குறைவான தண்ணீர், பூப்பதற்கு போதுமானது.

இதில் பல இனங்கள் காணப்படுவதால், இனங்கள் தெரிவுசெய்யப்பட்டு தாய்வான், ஈப்போ, மலேசியா, கலிபோர்ணியா, பிலிப்பையின்ஸ் போன்ற நாடுகளின் உத்தியோக பூர்வமான பூக்களாகப் பிரகடனப்படுத்தி இருக்கின்றார்கள். மேலைத்தேச குளிர்ப் பிரதேசங்களில், வெப்ப காலங்களில் வீடுகளின் வெளித்தளத்தில் அல்லது திறந்த விறாந்தை ஓடைகளில், தூங்குசாடிகளில் அலங்காரப் பூச்செடிகளாகவும், வீட்டினுள்ளே பலநிறச்சாடிகளில் பச்சை நிறத்திற்காகவும் வளர்ப்பார்கள்.

sekari.s@thaiveedu.com

■ ■ ■

Family Myrtaceae:

## கொய்யா மரம்

(Botanical Name : Psidium guajava Eng.Name: Gauva)



கொய்யா மரம் மெற்ரேசியேயைச்(Family Myrtaceae) குடும்பத்தைச் சேர்ந்தது. ஏறக்குறைய 100 இனங்கள். இவை புதர்ச்செடிகளாகவும், சிறிய மரங்களாகவும் காணப்படும். மெக்சிக்கோ நாட்டின் பூர்வீக இனமாகவிருந்தாலும் தற்போது எல்லா வெப்ப மண்டலங்களிலும், இடைவெப்பப் பிரதேசங்களிலும் பழங்களுக்காக வளர்க்கப்படுகின்றன. பழம் ருசியானது

வீடுகளிலிலும் தோட்டங்களிலும் பழத்தில் காணப்படும் உணவுச்சத்துக்காக வளர்க்கப் படுகிறது. பழம் உணவாகவும் மருந்தாகவும் பாவிக்கப்படும். நன்கு பழுத்த பழம் உடல் நலத்திற்கு பயனுள்ளது. ஜீரணம் ஒழுங்காயிருக்கும். என்புக்கு, மூளைக்கு நல்லது. பழங்களை மனிதர் மட்டுமல்லாமல் பறவைகள், வேறு முலையூட்டிகள் போன்றவையும் உணவாக உட்கொள்கின்றன. தடித்த கடும் பச்சைநிறமான இலைகள் கியூபா நாட்டில் நல்ல வாசனை கொடுப்பதாகக் கருதி இறைச்சிவகைகள் பதனிடும்போது பயன்படுத்துகின்றார்கள். இலைகள், குருத்துக்கள் சலரோக நோய்க்கு பரம்பரையான வைத்தியமாக பயன்படும். பழங்கள் அவித்து, இனிப்பு, ஜெல்லி, மார்மயிட், பானம் போன்றவை தயாரிப்பதற்கு உபயோகிப்பார்கள் விற்றமின் A, C நிரம்பயிருக்கிறது, இவை தோடம் பழத்திலும் பார்க்க நான்கு மடங்கு கூடுதலாகக் காணப்படும். இத்தோடு இரும்புச்சத்து, கல்சியம், புரதம் விற்றமின் B1, B2, B3 போன்றவையும் காணப்படும். வித்துக்களில் Omega 3, Omega 6 உண்டு.



# வீடு வாங்க விற்க...

**$349.000**



**Hwy 10 & Steeles**
4+2 Bedrooms 4 Washroom
Finished Basement W/O

**$499,900**



**LAND**
**St Clair/Pharmacy**

**Kuga Raveendrarajah**
Broker
Direct: **416-843-8585**

**Mathan Selvendarakumaran**
Sales Representative
Direct: **416-625-2870**



**$325.000**

**McCowan / Denision**
3 Bedrooms 2 Washroom
Finished Basement w/o

"சேமிப்பின் அடையாளம் அழகானதோர் வீடு"

**$289.900**



**Brimley & Danforth**
3+1 Bedrooms 2 Washroom
Hardwood Floor

வீடு வாங்க விற்க அல்லது அது சம்பந்தமான விபரங்களுக்கும் குறைந்த வட்டி விகிதத்தில் மோட்கேஜ் செய்யவும் நட்புடன் அழையுங்கள்

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife Today Realty Ltd.,** Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
**Bus: 416-298-3200**

*Independently Owned and Operated, Realtor

# ஆயுட் காப்புறுதி

**Universal Life • Whole Life • Term Life • Non Medical**

| **RESP** | **RRSP** | **CRITICAL ILLNESS** |
|---|---|---|
| + 20% Government Grant 15% Company Bonus | Loan Aproved Even SIN Number 9 | Upto 25 Illness |

digi



**VASANTH VINAYAGAMOORTHY**
Insurance Broker
**647-885-3012**
www.vvinsurance.ca

IA RBC

759 Warden Ave., Toronto, ON M1l 4B5
Office: 416-759-5453, Fax: 416-759-6220

# இராப் போசன விருந்து



அ.முத்துலிங்கம்
muththu@thaiveedu.com

இடம் சூடான். வருடம் 1989. மாதம் ஞாபகம் இல்லை, ஒரு சனிக்கிழமை இரவு, நேரம் 7.58.

நான் ஒரு சாப்பாட்டு மேசையின் முன்னே அமர்ந்திருந்தேன். எனக்கு முன்னால் ஒரு பெரிய பிளேட். பெரியது என்றால் எதிர்முனை என்னுடைய கையுக்கு எட்டாத தூரத்தில் இருந்தது. அவ்வளவு பெரிது. நான் அதற்கு மேல் இருக்கும் வஸ்துவை வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தேன். அந்த மேசையில் உணவை தாங்கிய மற்ற பாத்திரங்கள் கூட பிரம்மாண்டமானவையாகவே காணப்பட்டன. சமைத்த பாத்திரங்களிலேயே உணவை மேசைக்கு எடுத்து வந்து விட்டார்களோ என்றுகூட நினைக்கத் தோன்றியது. என் பிளேட்டில் பரிமாறியிருந்த உணவை நான் சாப்பிடவேண்டும். நான் சாப்பிடுவதைப் பார்ப்பதற்கு மூன்று சோடிக் கண்கள் ஆவலாகக் காத்திருந்தன.

இது எப்படி நேர்ந்தது என்று யோசித்தபோது என் மடமையை என்னாலே முற்றிலுமாக நம்ப முடியவில்லை. நான் சூடானுக்கு வேலை விசயமாக மாற்றல் எடுத்து வந்தபோது வழக்கம்போல எங்களுக்கு அங்கே ஒருவரையும் தெரியாது. இப்படியான சமயங்களில் முதலில் சிநேகிதம் பிடிப்பது என் மனைவிதான். சூடானில் கிடைத்த முதல் சிநேகிதி எலேனா. சுவிஸ் நாட்டுப் பெண். சூடானில் ஜிம் ஆசிரியையாக வேலை பார்த்தார். நூற்றுக் கணக்கான பெண்கள் அவரிடம் பயிற்சி பெற்றனர். நடந்து வருவதைப் பார்த்தவுடனேயே இவர் உடற்பயிற்சி நிபுணர் என்பது புரிந்துவிடும். முதுகு நேராக இருக்கும் தொடைகள் ஒன்றோடொன்று உராயும். அதற்கு முந்திய வருடம்தான் மார்ட்டினா ஹிங்கிஸ் என்ற சுவிஸ் நாட்டு டென்னிஸ் வீராங்கனை திடீரென்று கிளம்பி உலகப் புகழ் பெற்றுக் கொண்டிருந்தார். 209 வாரங்களுக்கு தொடர்ந்து டென்னிஸ் உலகத்தில் பெண்களுக்கான முதலாம் இடத்தை கைப்பற்றியவர். எடுத்த வீச்சு பார்ப்பதற்கு எலேனாவும் அந்த டென்னிஸ் வீராங்கனையைப் போலவே தோற்றமளித்தார். தோள்வரை வளர்ந்த செம்பட்டை முடி, சாம்பல் கண்கள், உருண்டு நீண்டு வழுவழுப்பாக இருக்கும் புஜங்கள். ஆனால் டென்னிஸ் பெண்ணின் வயது 18, எலேனாவுக்கோ வயது 30 மதிக்கக்கூடியதாக இருந்தது.

எலேனாவின் கணவர் ஒரு எஞ்சினியர், அடிக்கடி வெளிநாடுகளுக்கு பயணம் செய்பவர். எலேனா இரண்டு தடவை எங்கள் வீட்டுக்கு விருந்து சாப்பிட வந்திருக்கிறார். எங்களையும் அழைத்து எப்படியும் ஒரு விருந்து தரவேண்டும் என்று விரும்பினார். அதிலே ஒரு பிரச்சினை இருந்தது. என் மனைவி எதையும் சாப்பிடுவார். நான் அப்படியில்லை, மரக்கறிக்கு பழகிக்கொண்டவன். யாராவது நெற்றியிலே துப்பாக்கியை பிடித்து நீட்டினால் முட்டையும் சாப்பிடுவேன். நான் விருந்துக்கு போகும் இடங்களில் எல்லாம் விருந்து கொடுப்பவர்கள் எனக்காக பல சிரமங்கள் எடுக்க நேரிடும். ஆகவே யாராவது விருந்துக்கு அழைத்த போதெல்லாம் புதுப்புது விதமான கற்பனைகளை சோடித்து விருந்துகளில் இருந்து நான் தப்பிக்கொண்டு வந்தேன்.

எலேனா விசயம் சுலபமாக விட்டுப் போவதாயில்லை. அவர் விடாமுயற்சிக்காரி. என் மனைவி விருந்துக்கு போகத்தான் வேண்டும் என்றார். சரி என்றேன். அடுத்து வந்த ஒரு வாரமும் தினம் எலேனா என் மனைவியை தொலைபேசியில் அழைப்பார். எனக்கு என்ன காய்கறிகள் பிடிக்கும், என்ன என்ன பிடிக்காது போன்ற பல புள்ளிவிபரங்கள் சேகரிக்கப்பட்டன. அப்படித்தான் நான் முட்டை சாப்பிடுவேன் என்பதை கண்டுபிடித்தார். அடுத்து தொலைபேசியில் வந்த கேள்விதான் திகைப்பூட்டுவதாக இருந்தது. நான் பியர் குடிப்பேனா. பதில் ஆம் என்று போனது. எனக்கு குழப்பம் அதிகமானது. இரவு விருந்துக்கும் பியருக்கும் என்ன சம்பந்தம்.

விருந்துக்கு இரண்டு நாள் இருந்தபோது நான் ஏதோ எல்லாம் காரணம் காட்டி தப்ப முயன்றேன். மனைவி விடவில்லை. 'இது என்ன உங்களை தூக்கில் போட அழைக்கிறார்களா? விருந்துதானே' என்றார். எனக்கென்னவோ உடற்பயிற்சிப் பெண்ணின் சமையல் திறமைகளில் நம்பிக்கை ஏற்படவில்லை. விருந்து அன்று காலை தலையை இரண்டாக பிளக்கும் தலையிடி வந்துவிட்டது என்று மனைவியிடம் கூறினேன். அவர் 'நல்லது' என்று ஊக்கமூட்டும் ஒரேயொரு வார்த்தையை சொன்னார்.



அதன் பின்னர் அவருடைய சொண்டுகள் அளவுக்கதிகமான இறுக்கத்தில் ஒட்டிப்போய் கிடந்தன. சகுனம் சரியில்லை என்று விட்டுவிட்டேன்.

ஓர் ஆள் நிமிர்ந்து நிற்க முடியாத குடிசைகள் வரிசையாக இருந்த ஒரு வீதியில் எங்கள் கார் போய்க்கொண்டிருந்தது. திடீரென்று பெரிய வெள்ளைக் கட்டடம் ஒன்று தெரிந்தது. பழங்காலத்து ஆங்கில அதிகாரி ஒருவர் வாழ்ந்திருக்கக்கூடிய அந்த வீடுதான் எலேனாவுடையது. அது ஒம்டுர்மான் நகரத்தில் நைல்நதிக் காற்று வீசும் தூரத்தில் இருந்தது. கற்கள் பாவப்பட்ட ஒடுங்கிய பாதையில் நீண்ட தூரம் நடந்து வீட்டை அடைய வேண்டும். வழிநெடுக ஆப்பிரிக்க வயலட் பூக்கன்றுகள் நிறையப் பூக்களை வெவ்வேறு வண்ணங்களில் பூத்துக் குலுங்கி வரவேற்றன. எலேனாவின் கணவர் வேலை விசயமாக வெளியூருக்கு பயணம் சென்றிருந்தபடியால் விருந்தாளிகள் நானும் மனைவியும் மட்டுமே. எங்களை வாசல்வரை வந்து வரவேற்றார் எலேனா. அவருடைய உடலில் மிகவும் வசீகரமானது அவருடைய புஜங்கள்தான். அன்று அவர் அணிந்திருந்த மிருதுவான பட்டு ஆடை அவர் புஜங்களை மறைத்ததோடல்லாமல் நிலம் வரை புரண்டு அவர் பாதங்களையும் மறைத்து தரையில் இழுபட்டது. அவர் போய் ஒருசில வினாடிகள் கழித்து அவருடைய ஆடையின் கடைசி அந்தலை எங்களைக் கடந்தது.

முகமன் கூறுமுன்னரே பாதையில் நாங்கள் கண்ட ஆப்பிரிக்க வயலட்டைப் பற்றி பேச்சு தொடங்கியது. அவர் பூமரங்களின் பிரியை. விதம் விதமான மலர் செடிகள் அவர் வீட்டை உள்ளேயும் வெளியேயும் அலங்கரித்தன. அதிலே ஆப்பிரிக்க வயலட்டுகள் முன்னிடம் வகித்தன. உலகத்தில் காணப்படும் அத்தனை வர்ணங்களிலும் அவரிடம் பூச்செடிகள் இருந்தன என்றார். அத்தனையும் அவரைப் போல உற்சாகமாகக் காணப்பட்டன. இந்தப் பெண் உடற்பயிற்சி, சமையல், தோட்டக்கலை எல்லாவற்றிலும் வல்லவராயிருந்தார்.

அவருடைய வேலைக்காரன் பீட்டர் எலேனாவிலும் பார்க்க பிரபலமானவன். ஒம்டுர்மானில் வாழும் வெளிநாட்டுக்காரர்கள் எல்லோருக்கும் அவனை தெரிந்திருந்தது. அதன் காரணம் எனக்கு பின்னால் விளங்கும். அவன் கென்யா நாட்டைச் சேர்ந்தவன், பிழைப்புக்காக சூடான் வந்திருந்தான். சூடானில், வசதி படைத்தவர்கள் கடைகளுக்கு சென்று தங்களுக்கு பிரியமான ஆடைகளை அளவு பார்த்து வாங்கிக் கொள்வார்கள். வசதி இல்லாதவர்கள் ஒம்டுர்மான் சந்தையிலே போய் இறாத்தலுக்கு இவ்வளவு என்று பேரம் பேசி கால்சட்டை, சேர்ட் போன்ற வேறு யாரோ ஏற்கனவே அணிந்த உடுப்புகளை வாங்கிவந்து வீட்டிலே அளவு பார்த்து போடுவார்கள். பீட்டர் அப்படி வாங்கியதில் ஒரு பூப்போட்ட சேர்ட்டும், இடுப்பை இறுக்கி கண்ணை கூசவைக்கும் பளபளப்புக் கொண்ட நீலக் கால்சட்டையும் அணிந்து சிறப்பாகக் காட்சியளித்தான். வேறு யாரோ பொருத்திவிட்டதுபோல அசௌகரியமான விதத்தில் தலையை சாய்த்துக் கொண்டே வீட்டு வேலைகளை கவனித்தான். எத்தனையோ விருந்தாளிகளுக்கு பணிவிடை செய்து வெற்றி பெற்றிருந்த அவன் எலேனாவின் உபசாரம் குறையும் இடங்களில் புகுந்து அந்தக் குறைகளை நிவர்த்தி செய்தான்.

எலேனா உணவு பரிமாறுவதற்கு முன்பாக அந்த உணவைச் சமைப்பதற்கு தான் எடுத்துக்கொண்ட முயற்சிகளை வர்ணித்தார். அவர் தயாரித்த அபூர்வமான சுவிஸ் உணவில் பியர், முட்டை, தக்காளி, காளான் இன்ன பிற கூட்டுப்பொருள்கள் சேர்த்திருந்தன. முதல் பார்வைக்கு உணவின் இறுதி வடிவம் அப்பம் போலவும், சப்பாத்தி போலவும், பதம் தப்பிப் போன உளுத்தம் களிபோலவும் தென்பட்டது. முட்டைபோலவோ, பியர்போலவோ எந்தப் பக்கத்தில் இருந்து பார்த்தாலும் அது தெரியவில்லை.

இதன் பின்னணியை கொஞ்சம் விளக்க வேண்டும். சூடானில் அப்பொழுது சாதிக் அல் மாஹ்டியின் ஆட்சி நடந்துகொண்டிருந்தது. இவர் மதுவிலக்கை கொண்டு வந்திருந்த படியால் அங்கே மதுபானம் கிடைக்காது. மதுவகை விற்றாலோ, வாங்கினாலோ, குடித்தாலோ குற்றம் செய்தவரைப் பிடித்து சிறையில் அடைத்துவிடுவார்கள். எலேனா சமைப்பதாக திட்டம்போட்டிருந்த உணவுக்கு பியர் தேவை. எத்தனையோ உணவு வகை இருந்தாலும் சுவிஸ் நாட்டில் புகழ் பெற்றதும், அவருக்கு கைவந்ததுமான ஒரு பிரபலமான பதார்த்தத்தை தன் கைப்பட செய்து பரிமாறவேண்டும் என்றே விரும்பினார். பீட்டர் இப்படியான வேலைகளில் கெட்டிக்காரன். எப்படியோ கென்யாவில் இருந்து மதுபானம் கடத்தும் ஒரு கும்பலுடன் தொடர்புகொண்டு 20 மடங்கு விலை கொடுத்து ஒரேயெரு பியர் போத்தலை வாங்கி வந்திருந்தான். பீட்டர் வெளிநாட்டுக்காரர்களிடம் பிரபலமாயிருந்ததன் காரணம் எனக்கு அப்பொழுது புரிந்தது.

நான் எந்தப் பக்கம் இருந்து உணவை ஆரம்பிப்பது என்று நெடுநேரம் யோசித்த பிறகு கரண்டியினால் ஒரு துண்டை எடுத்து வாயினுள் வைத்தேன். அதைப்போல ஒரு கைச்சல் உணவை நான் நினைவு தெரிந்த நாளிலிருந்து சுவைத்தது கிடையாது. பியரின் கைப்பும் முட்டையின் வெடுக்கும் சேர்ந்து மோசமான ஒரு சுவையை உண்டாக்கியிருந்தது. சிறுவயதில் மூக்கைப்பிடித்து அம்மா ஆமணக்கு எண்ணெய் பருக்கியது ஞாபகத்துக்கு வந்தது. அதுகூட கொஞ்சம் இனிப்பாக இருந்ததாக நினைவு. உணவை உண்ணும் கஷ்டத்திலும் பார்க்க முகத்திலே புன்னகையை தவழவிட்டுக்கொண்டு மேசையிலே காலத்தை கடத்துவது கடினமாகப் பட்டது.

என் மனைவியை கடைக்கண்ணால் பார்த்தேன். அவருக்கு உணவில் எந்தவிதமான பிரச்சினையும் இருந்ததாகத் தெரியவில்லை. எந்தச் சந்தர்ப்பத்திலும் எப்படிப்பட்ட உணவைக் கொடுத்தாலும் அதை அவரால் ருசித்து சாப்பிட முடியும். வாய் நிறைய உணவை வைத்தபடி என்னைப் பார்த்தார். அதனிலும் கூடிய சிரிப்பை உணவுடன் சேர்த்து உள்ளே விழுங்கினார். என்னுடைய அவஸ்தை சிரிப்பை வரவழைத்தது மட்டுமல்லாமல் அவருடைய உச்சியையும் குளிர வைத்திருக்கவேண்டும். உணவு எப்படி இருக்கிறது என்று எலேனா என்னைக் கேட்டார். தன்னை இவ்வளவு கஷ்டப்படுத்தி அந்த உணவை அவர் தயாரித்திருந்தார். அந்த நல்ல பெண்ணின் உள்ளத்தை கல்நெஞ்சுக்காரன்கூட புண்படுத்தமாட்டான். என் நண்பர் ஒருவரிடம் நான் கற்ற பாடம் நினைவுக்கு வந்தது. அவர் ஒரு தந்திரம் செய்வார். கூடாது என்று சொல்ல

32ம் பக்கம் பார்க்க...

GP TELECOM

இரமணன் திரு

(முன்னாள் பெல் கனடா, ரோஜேர்ஸ் ஊழியர்)

For Your Business We

- Install, Repair, Sell
- Meridian Phone Systems & System Phones
- Structured Voice & Data Cabling
- Install, Repair Home Phone Wiring
- TV Cable (RGB)
- Network Cable

உங்கள் அழகிய வீட்டில் பழுதுகள் ஏதும் ஏற்பட்டாமல்
சுவர்களுக்கு உள்ளால் வயர் எடுத்து கொடுக்கப்படும்




416.203.0344

# வன்னி மக்களின்...

4ம் பக்கத் தொடர்ச்சி...

வரக்கூடிய சாத்தியமும் உள்ளது. இதுவே வன்னி மக்களின் வாழ்க்கையின் அடுத்த கட்டம் தொடங்குவதற்கான ஆரம்பமாக அமைந்திருக்கும்.

## தண்ணீர்த் தாகத்திலிருப்பவர்களுக்கு உடனடித் தேவை தண்ணீரேயன்றி தங்கமல்ல

இலங்கைத் தமிழர்களின் மொத்த எண்ணிக்கையில் வன்னி மக்களின் மொத்த எண்ணிக்கை 10 சதவீதமானவர்களே. இன்றைய சூழலில் அவர்களை மையமாக வைத்து தமிழர் பிரச்சினையைத் தள்ளிப்போட அரசாங்கம் முயற்சி செய்யும் சாத்தியங்கள் அதிகம் உள்ளன. அகதி முகாம், மீளக் குடியேற்றம் என்று அடுத்த ஐந்து ஆண்டுகளை ஆட்சிசெய்வதற்கு எல்லோரும் தயாராக இருக்கிறார்கள். அகதிகள் முகாம்களில் உள்ளவர்களின் அன்றாட வாழ்க்கையினைச் சீர்செய்யும்படி கோருவதும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி அரசை வற்புறுத்துவதும் ஒரு இழுபறிப் போராட்டமாகவே நடைபெறப்போகிறது. அதன் மத்தியில் பல்வேறு தேர்தல்களுக்குத் தமிழ் மக்கள் முகங்கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

## இதுவரையில் குடாநாட்டிலும் கிழக்கு மாகாணத்திலும் நடாத்தப்பட்ட தேர்தல்கள் சுதந்திரமாக வாக்களிக்கும் பின்னணியில் நடாத்தப்பட்டனவா?

பல்வேறு குழுவினரின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்பவே தமிழ்மக்கள் தங்களது வாக்குகளை இதுவரை பதிவுசெய்து வந்திருக்கிறார்கள். மூடிய வாழ்விடச் சிறைச்சாலைகளில் சுதந்திரமாக வாழ்வதாக எண்ணிக்கொள்ளும் எந்த மனிதனுக்கும் இலங்கையின் ஜனநாயகம் வியப்புக்குரியதாகவே இருந்திருக்கிறது.

தமிழர்களுக்கு சுதந்திரம், வன்னி மக்களுக்கு மீள்வாழ்வு என்ற இரண்டினையும் தனிமைப் படுத்தப் பார்க்க நினைக்கும் முயற்சிகளில் ஜனநாயகவாதிகள் இரண்டாகப் பிளவுபட்டுவிடுகிறார்கள்.

அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்ட மலையகத் தமிழ்த் தலைவர்களும் இஸ்லாமிய தலைவர்களும் சாதித்த ஒரே செயற்பாட்டினையே இன்றைய தமிழ் அரசியல்வாதிகளும் பின்பற்ற வேண்டுமென்ற கோரிக்கையினை விடுபவர்களும் அதற்குப் பின்னணியில் இருப்பவர்களும் ஒரு புறமும் - தமிழர்களின் சுயநிர்ணய உரிமையினை அங்கீகரிக்கக் கோருபவர்கள் மறுபுறமுமாக இருந்து ஆரம்பகாலச் சுதந்திர இலங்கையின் அரசியல் அத்திவாரத்தினை இன்னமும் பிரதிபலிப்பவர்களாகவே இருக்கின்றனர்.

## மீண்டும் நாம் ஐம்பதுகளை நோக்கிச் சென்றுவிட்டோமா?

அப்படியானால் மீண்டும் சமஷ்டிக் கோஷங்களும், ஒற்றையாட்சிக் கோஷங்களும் போட்டிபோட்டு ஓயுமே தவிர, ஒரு தீர்வுமே கிடைக்கப்போவதில்லை என்பதில் இனியும் அடுத்த அரை நூற்றாண்டினை அரசியலாக்குவதற்கு பல்வேறு கட்சிகளும் தொடங்கி விட்டன என்ற பின்னணியில் இலங்கை அரசியலில் இனப்பிரச்சினை தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் முன்வைக்கப்படுகின்றன.

ஆளப்படுபவர்களுக்குச் சிங்களம் தேவை என்ற நிலை. சிங்களத் திணிப்பு. தமிழர்களிடையே பெரும்பான்மை அரசுபற்றிய கசப்புணர்வினைத் தோற்றுவித்திருந்த, ஐம்பதுகளிலிருந்து ஆளுபவர்களுக்கு தமிழ் கட்டாயம் என்ற கருத்தினைத் திணிக்க முயற்சிக்கும் நிலை, முற்றாக வேறுபட்ட செயற்பாடு என்பதனையும் வரண்ட பிரதேசக் குடியேற்றத் திட்டங்களில் வாழும் மக்களே அதன் தாக்கத்தினை விரைவில் அனுபவிக்கப் போகிறார்கள் என்பதும், அதிலிருந்து வன்னி அகதிகளின் அடுத்த கட்டம் ஆரம்பமாகும் என்பதும், கருத்தியலான செயற்பாடாகத் தோன்றாது நடைமுறைச் சாத்தியம் கொண்டதாகவே அமைந்துள்ளது.

வன்னி மக்களின் வாழ்வியல் உரிமைகள் மறுக்கப்பட்டு, சிந்தனை மழுங்கடிக்கப்பட்டு, மூளைச் சலவை செய்யப்பட்ட ஜனநாயக வாக்களிப்பு இயந்திரங்களாக வன்னி மக்கள் மாற்றப்படுகின்ற செயற்பாடு மாற்றப்படவேண்டுமாயின் வன்னியின் வாழ்வியலில் சுதந்திரமும் தனித்துவமும் கொண்ட செயற்பாட்டுக்கு உத்தரவாதம் கிடைக்க வேண்டும். யாழ்ப்பாணம், கிழக்கு மாகாணம் ஆகியவற்றினுள் காணப்படுவது போன்ற தடை, முகாம்களுக்குள் வாழும் சுதந்திரத் தமிழர்களின் போலிச் சுதந்திரம் என்னவென்பது அவர்களால் உணரப்படும் வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும்.

வன்னி மக்களின் அடுத்த கட்டம், சுதந்திர நடமாட்டத்தின் மூலம்தான் ஆரம்பமாகும் என்றால் அதற்காக, அரச இராணுவத்தின் அடக்குமுறையில் வாழத்தக்க சூழலைத் தோற்றுவிக்க நினைக்கும் அரசியல்வாதிகளின் ஆவலைப் பூர்த்திசெய்யும் வாய்ப்புக்களை வழங்குவதற்கு எந்த நாடும் துணை போகக்கூடாது.

## வன்னி மக்களைத் தக்க நேரத்தில் கைவிட்டு விலகிய ஐ.நா. மீண்டும் ஒரு முறை தன்னைச் சுதாரித்துக்கொண்டு இலங்கையில் ஆதிக்கம் செலுத்தக்கூடிய நாள் எப்பொழுது வரும்?

வன்னி மக்களின் வளங்கள் சுரண்டப்பட்டு அவர்களை, விடுதலை என்ற பெயரில் மீண்டும் கடனாளிகளாக்கும் முயற்சியில் இடைத் தரகர்களும் பண முதலைகளும் செயற்படும் நிலைமைகள் தோற்றம் பெற்று விட்டன. இலங்கையில் இரண்டாம் உலக யுத்தத்தை நினைவுகூரும் வதை முகாம்களை ஐ.நா.அடையாளம் காணுவதைப்போல கொத்தடிமை முறை பல்வேறு வடிவங்களில் தோற்றம் பெறுவதற்கும், பெரும்பான்மைக் காலனித்துவம் வர்த்தக முதலாழித்தவத்தின் அடிப்படையிலான சுரண்டுதல்கள் என்பனவற்றுக்கும் வன்னி மக்கள் முகங்கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

## இருண்டபோர் தொடங்கி இரண்டாவது ஆண்டில் வன்னியில் என்னதான் நடக்கிறது என்பதனை அறியும் ஆவலை இன்னமும் ஊடகங்கள் பூர்த்திசெய்யவில்லை

ஆங்காங்கே வெளிவரும் தகவல்களிலிருந்து போசாக்கின்மை, மன உளைச்சல், பாதுகாப்பின்மை, ஆதரவின்மை போன்றவை வன்னி மக்களின் எதிர்கால வாழ்வியலைப் பாதிக்கும் என்பதும் அவற்றிற்கு உடனடி நிவாரணத்தைத் தேடவேண்டும் என்பதும் முகாம்களில் வாழும் மக்களின் அடுத்த கட்டத் தேவையில் தவிர்க்கமுடியாதன.

kanapathipillai.a@thaiveedu.com

■ ■ ■

இணைய இலக்கிய இதழ்

www.kodaai.com




Consult Ranjan
Project Management & Construction Services
Consulting | Engineering | Management
KNOWLEDGE THAT GETS RESULTS
Zoning Changes • Building Permits • Plan Review • Public Relations • Team Leadership • Expert Testimony • Municipal Planning • Project Management • Development Planning • Specifications Review • Contract Administration • Construction Technology • Industrial Reuse Strategies
Tel.: 416.627.5664
E-mail: ranjan@consultranjan.com
www.consultranjan.com


Thinking of Buying or Selling Real Estate
அனுபவம்! அறிவு! திறமை! பொறுமை!
21 வருடங்களாக இத்துறையில் முன்னணியில்.........
RED CARPET
Royal Realty Ltd., Brokerage
Real Estate Service
Web: redcarpetcanada.com
Multi Award Winner
Karu Kandiah FRI, CRES,
Real Estate Broker / President
Dir: 416.284.5698 Bus: 416.284.5555 (24 Hrs.)
Midland / Danforth
$270,000
2+1 Bedrooms, 2 Washrooms Renovator's Dream, All Brick Bungalow, Located Quiet End Street.Harwood Floor Underneath Carpet
Stains/Morningside
$399,000
4 Bedrooms, 3 Washrooms Freshly Painted Spacious Good Size Family Home.Close To Schools Park & Shopping Centre
Neilson/Mclevin
$166,900
2 Bedrooms, 2 Washrooms Fully Renovated Corner Unit. Thousands Spent On Renovations **Brand New Kitchen**Brand New Washrooms
$570,000
4 Bedrooms, 3 Washrooms Beautiful 1 1/2 Yrs New Home On A Sought After Location Approx. 2500 Sq.Ft
Mississauga
$377,700
3+1 Bedrooms, 3 Washrooms A Beautiful Home,Well Kept.Suitable For A Large Family Or With In-Laws Close To Everything Shopping
Milton
Photo Not Available
$399,900
4+1 Bedrooms, 4 Washrooms Absolutely Gorgeous, Bright And Spotless. 42Ft Frontage. Appx 2000 Sq Ft. 4 Lager Spacious Bedrm
Islington/Rexdale
$294,500
3 Bedrooms, 2 Washrooms Exellent Location, The House Need Several Tlc, Upgraded Kitchen And Windows,
Hillcrest/Confederation
3+3 Bedrooms, 3 Washrooms Bright Spacious Bunglow On Huge Lot, Massive 3 Bedrooms Bsmt Apartment W/Sep Entrance
9th Line/Hooverpark
$444,900
4 Bedrooms, 3 Washrooms Gorgeous, Unique & Popular Mattamy Built [Town Gate]Home On Premium Lot
Birchmount/Ellesmere
$325,000
3 Bedrooms, 3 Washrooms 'Tridel' Luxury Townhouse,Unit Approx.1800 Sq.Ft Step To Ttc,Shopping
Warden/Finch
Photo Not Available
$237,000
3+1 Bedrooms, 2 Washrooms End Unit Townhouse In Prestige Area. Spacious Living/Dining Room. Kitchen W/Eat In Area.
Vaughan
$479,000
4 Bedrooms, 3 Washrooms Nice And Cozy Four Bedroom Family Home In A Great Area Of Dufferin Hills. Parquet Floor Throughout
Hwy 427/Rexdale
$247,500
2 Bedrooms, 2 Washrooms Luxury Tridal Condo With Stunning View, Overlooking Woodbine Casino And Race Track. Exellent Design
Ellesmere / Scarborough Golf
Photo Not Available
$387,000
3+1 Bedrooms, 3 Washrooms Wow! Absolutely Stunning! 3 Bdrm Home With Fireplace,Fin Bsmt,Large Lot, New Roof Shingles(04)
Bellamy/Lawrence
$345,000
3+3 Bedrooms, 3 Washrooms Bright And Spacious!! Buyer Will Not Be Disappointed! Located In A Highly Demanding Area
Brampton
$1,595 For Lease
4 Bedrooms, 3 Washrooms Beautiful Pond View From The Breakfast Area And The Deck W/Out Basement.
Mississauga
$1,450 For Rent
2+1 Bedrooms, 2 Washrooms Clean, Brightened,Spacious, Beautiful East (City) View, 2+1 Den, 2 Washroom, Close To All Amenities
Mccowan/Steeles
$ 600 For Rent
1 Bedroom, 1 Washroom Finished Basemen with Sep Entrance call for more info.
Markham/Bur Oak
$1,650 For Rent
3 Bedrooms, 3 Washrooms 1830 Sq Ft Detached Home. 9' Ceilings And Hardwood Floor. Oak Stairs, Ceramic Foyer
Hwy 10/Hillcrest
$1,450 For Lease
2+1 Bedrooms, 2 Washrooms Renters Choice !! Laminate Floors !! Clean, Brightened, Spacious, Beautiful East (City) View
இலவசமாக வீடு ஒன்றை அதிர்ஸ்டலாபச்சீட்டில் வென்றெடுக்க அழையுங்கள்...
கரு கந்தையா@416.284.9999
Win a House
More info: www.redcarpetcanada.com

# ‘ஒரு நாடுகடந்த நாட்டின் உதயம்’



மாமூலன்
maamulan@thaiveedu.com

பல திடீர் தொடர் சடுதியான மாற்றங்களில் தமிழர் சமூகம் உலகம் முழுவதும் ஆழ்ந்து கிடக்கிறது. தற்போது இருக்கும் நிலை புயல் அடித்துக் கலங்கிய நிலை. இது தெளியவே நாட்கள், மாதங்கள் ஆகும் என்ற நிலையில் புதிதாக நுழைந்திருக்கிறது நாடுகடந்த தமிழருக்கான அரசு என்பது!

இந்தக் கருத்தாக்கம் மற்றும் அதற்கான நடைமுறை எளிதான ஒன்றல்ல. புகலிட அரசு (Exile State) என்பதும் நாடுகடந்த நாடு-அரசு (Transnational State) என்பதும் ஒன்றல்ல என்பதை முதலில் குறிப்பிட வேண்டும். தற்போது தமிழர் ஊடகங்களில் இவையிரண்டும் கலந்து மாறியே கதைக்கப்படுகின்றன.

## புகலிட அரசு:

புகலிட அரசு என்பது, ஒரு நாட்டில் அரசாக அமைந்திருக்கவேண்டிய அமைப்பு, அங்கு உரிய சூழல் இன்மையால் தப்பி வெளியேறி அதை வேறு நாட்டிலிருந்து நடத்துவது ஆகும். இதில் நாடு மட்டும் இருப்பதில்லை. ஆனால் ஓர் அரசு ஏறக்குறைய முழுமையாக மற்றொரு புகலிடத்தில் இடைக்காலமாகத் தங்கியிருக்கின்றது. உரிய சூழல் வருகையில் அந்த புகலிட அரசு அப்படியே போய் குறிப்பிட்ட நாட்டில் அரசை அமைத்துக் கொள்ள முடியும். இப்படியில்லாமல் அரசாக இருந்தவர்கள், நாட்டில் எதிர்ப்பு வலுக்கையில் விட்டு விட்டு ஓடி, வேறு நாட்டில் தஞ்சம் புகுந்து இருந்துகொண்டு உரிய காலம் வரும் என்று காத்திருப்பது இவ்வகையில் சேர்க்கப்படலாம்.

எடுத்துக்காட்டாக திபெத் (தலாய் லாமா), முன்னாள் பாலஸ்தீனம் (யாசீர் அரபாத்), அல்ஜீரியா, ஈரான், அவ்வப்போது தோன்றும் அல்லது மறையும் ஆப்பிரிக்க கண்ட குட்டி நாடுகளின் அரசுகள் என இப்பட்டியல் நீளும். அதைப்பற்றி இங்குவிரிவாக்கத் தேவையில்லை. (அட மறந்துவிட்டது… இந்திய அமைதிப் படையின் துணையுடன் மகாண முதல்வராக இருந்த வரதராசப்பெருமாள் கடைசியாக ஓடிப்போகையில் அறிவித்துவிட்டுச் சென்ற ஈழம் நினைவில் இருந்தால்… அதுவும் புகலிட அரசு தான். இந்தியாவும் ‘வரதராசப் பெருமாளின் ஈழத்தை’ அங்கீகரித்திருப்பதால்தான் இன்னும் அவரைக் காப்பாற்றி வைத்திருக்கிறது போலும்?!)

## நாடுகடந்த நாடு: பொது அறிமுகம்:

பல நாடுகளில் பரந்து இருப்பவர்கள் - மக்கள் தங்கள் லட்சிய அரசு ஒன்றை பேரளவிற்கு உருவாக்கி அதை ஓர் அரசியல் பரப்புரையாக நடத்துவது நாடுகடந்த அரசு என்ற தற்போதைய கருத்தாக்கமாகும். நேரடியாக அவர்கள் எதிர்பார்க்கும் ஓர் நிலப்பரப்பின் எல்லைக்குள் அரசு அமையும் சூழல் வருமானால் இத்தகைய நடைமுறையில் பங்கெடுப்பவர்கள் ஆட்சியில் பங்கேற்கும் வகையில் பெரும்பாலும் இருப்பதில்லை. அது வேறு அமைப்பாக இருக்கும், இருக்கலாம். இந்த




நாட்டின் ‘நாடு’ என்ற தன்மை மிகக்குறைவாக இருக்கும்.

நாடுகடந்த நாடு என்ற இந்த அமைப்பு மக்களிடையேயான உறவை பலப்படுத்தும் தன்மையை அதிகம் கொண்டது. அதே வேளை ஓர் எல்லைக்குள் அகப்பட்டு நின்று செயற்படும் ‘நாடு’ என்ற தன்மையைக் குறைவாகக் கொண்டதுமாகும்.

புலம்பெயர்ந்திருக்கும் எந்தவொரு இன மக்களும் தங்களுக்குள் ஓர் இணைப்பை ஏற்படுத் முனைவார்களானால் அது ஓர் நாடு கடந்த அமைப்பின் தன்மையைக் கொண்டிருக்கும். அந்த அமைப்பு ஓர் நாட்டை (இருக்கும் அல்லது இல்லாத நாட்டை) மையப்படுத்தி அமையுமாயிருந்தால் அது நாடுகடந்த ஓர் அரசை சுட்டி நிற்கும் தோற்றத்தைத் தரும். இங்கு மக்கள்தான் நாடாக உணரப்படுவார்களே தவிர ஓர் எல்லைப்பகுதி நிலவியல் பகுதி அல்ல.

## நாடுகடந்த நாடு பிண்ணணி:

அமெரிக்காவும், முன்னாள் சோவியத்ரசியாவும், அவற்றின் துணை நாடுகளும் மறைமுகமாக ஆளையாள் குழி பறித்து வந்ததையே சுருக்கமாக குளிர் யுத்தம் என்று சொல்வார்கள். இந்தக் குளிர் யுத்தம் முடிந்த பின்னான உலக அமைப்பில் பல புதிய அரசியல் நுட்பங்கள் கைக்கொள்ளப்படத் தொடங்கின. அதில் ஒன்றுதான் புதிய ராசதந்திரம் எனப்படும் உத்தி. அதன்படி சில, பல நாடுகள் தங்கள் நாட்டுக்குள் மட்டும் நின்றுவிடாது ஒன்று சேர்ந்து தங்கள் ஒரு நாட்டின் எல்லைகளுக்கு வெளியேயும் அரசியல் ஒன்றிணைப்பில் செயற்படுவதே நாடுகடந்த அரசுகளின் முன்மாதிரி எனலாம்.

குளிர் யுத்தத்தின்பின்பாக இரு பேரரசுகளும் இறுக்கம் தளர்கையில் பல நாடுகள் உலகம் என்ற அளவில் பாரத்தன. வணிக அமைப்புக்கள் உலகளாவிய அளவில் வியாபித்தன. நிறுவனங்கள், நாடுகள், அமைப்புக்கள் முதலீட்டாளர்கள், பண்பாட்டு அமைப்புக்கள்,



கலைநிறுவனங்கள், உலகத் தொண்டு நிறுவனங்கள் போன்ற பலவற்றின் கூட்டுவிளைவில் உலகமயமாதல் தோன்றியது.

ஐரோப்பிய ஒன்றியம் எனப்படுவது நாடுகடந்த நாட்டைப்போன்ற ஒரு வகை வடிவம் தான். ஒரு நாட்டின் எல்லைக்குள் அடங்கி விடாமல் பல நாடுகளில் பரந்து செயற்படும் தன்மை. சிறிய உதாரணத்தினால் சொல்லலாம்.

ஊரில் யானை மார்க் சோடா இருந்தது. அது இருக்கும்போது மெதுவாக வந்து சேர்ந்த பன்நாட்டு நிறுவனமான கொக்காகோலா இதற்கு நல்ல உதாரணம். கொகாகோலா போன்ற வணிக நிறுவனங்கள் எவ்வாறு வணிகம் தொடர்பான அனைத்தையும் எல்லைகள் கடந்து பல நாடுகளிலும் செய்யமுடிகிறதோ அதேபோன்றது.

யானை மார்க் சோடா ஊரில் மட்டும் இருந்த போது ஒரு நாட்டு அரசு போன்றது. தற்போது தமிழர் இருக்கும் நாடுகளில் எல்லாம் பரவி இருக்கும் யானை மார்க் சோடா, சிறிய அளவிலான ஓர் நாடுகடந்த நிறுவனத்துக்கு எடுத்துக்காட்டு.

ஆனால் பன்நாட்டு நிறுவனம் ஒன்றுக்கும் ஒரு நாடுகடந்த அரசுக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டுதான்! ஆனால் உண்மையில் பன்நாட்டு நிறுவனங்கள்தான் நாடுகடந்த நாடுகளை உருவாக்கும் காரணிகளாக உள்ளன. அவை வணிகக் கட்டமைப்புக்கள். நாடுகடந்த நாடுகள் அரசியல் கட்டமைப்புக்கள். அவ்வளவுதான்.

நாடுகடந்த குழுக்கள், நாடுகடந்த தேசம், நாடுகடந்த மக்கள் என்ற கருத்துக்கள் அனைத்தும் இன்றைய உலகமயமாதல் என்ற சொல்லின் உள் பொருளைக் கொண்டவை. இன்னொரு வகையில் சொன்னால், அது பின்நவீனத்துவம் என்ற போக்கைச் சேர்ந்த ஓர் சொல்லாடல்!

ஒரு எல்லைக்குட்பட்ட தேசிய அரசு-நாடு என்பது (வரலாற்றுரீதியாக உற்பத்தியின் வழி முறைகளுக்கும் சமூக வகுப்புக்களுக்கும்) அந்தந்தத் தேச எல்லைகளுக்குள்ளான ஊடாட்டம் மற்றும் கட்டுப்பாடுகளுக்கும் பொறுப்பாக இருந்து இயங்கி வந்தது. இந்நிலையை தற்போதுள்ள உலகமயமாகிய நிலை உள்நுழைந்து மாற்றியமைத்து அல்லது ஊடாட்டம் செய்துவருகிறன்றது. அதாவது தற்போதைய தேசிய அரசுகள் முன்பு 20 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்ததைப்போல பண்பில் இல்லை.

ஆகவேதான் தற்போது தேசிய அரசு என்பது ‘நாடு’ என்ற ஒரு பருமையான வடிவத்துக்குள் அடங்காது அல்லது வடிவமாகப் பார்க்கப்படாத நிலை உருவாகின்றது.

அதற்குப் பதிலாக இன்றைய ‘தேசிய அரசு’’ என்பது அதிகளவில் மக்களிடையேயான உறவின் அடிப்படையாக, நாட்டின் எல்லையைத் தாண்டிய பல நிறுவனங்களின் ஊடாட்ட வகையாக வரலாற்றினூடாக மாறி வந்த வேறு வகைப்பட்ட நிறுவனங்களின் மறு வடிவமாக பார்க்கப்படும் நிலை தோன்றியிருக்கிறது. இந்த ‘தேசிய’’ அரசுகளைப் பற்றிய மறுபார்வையே, மறு வரையறையே மற்றொரு வகையில் ‘தேசங்கடந்த’ அரசாக அல்லது நாடுகடந்த நாடாக அமைகிறது.

பொருளாதார அடிப்படையில் முன்பு உருவாகிய ‘‘தேசிய’’ அடிப்படையிலான ‘‘நாடுகள்’’ ஒரு எல்லையை – நாட்டை வகுத்துக்

32ம் பக்கம் பார்க்க…

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.
விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.
E-mail:thaiveedu@gmail.com
Fax: 416-849-0594, Tel: 416-646-3422



# ஒரு நாடுகடந்த...

31ம் பக்கத் தொடர்ச்சி...

கொண்டன. அந்த எல்லைக்கு பிரமாணிக்கமாயிருந்த அரசுகள் அதற்குள் இருந்த பிற இனங்களின் குரலைக் கண்டுகொள்ளாமல், கேட்காமல் ஈழத்தில் நடந்ததைப்போல நசுக்கவும் செய்தன. இன்நிலையில் தேசத்திற்குள் மற்ற தேசியங்கள் செயலிழந்து, மதிப்பற்று, சிதைக்கப்பட்டு இருக்கும் நிலை உருவாகிறது.

அதாவது மக்களைக் கொண்ட நாடு—தேசம் வெறும் எல்லையை மட்டும் கருத்தில்கொண்ட நாடாக மாறிவிடுகிறது.

இலங்கையைப் பொறுத்தவரை பொருளாதார நலன் மட்டுமல்லாது பேரினச் சிங்கள இன வாத நலன்கள் மட்டும் நாட்டை வரையறை செய்தன.

அதனால்தான் உண்மையில் நாடு என்பது இன்று வெறும் புராணத்தில் வரும் கதையா கவே உண்மையில் இருக்கிறது.

உலகமயமாதல் என்பது இனங்களின் அடிப் படையில் எழுந்த நாடுகளின் ஒன்றிணைக்கப்பட்ட அமைப்பு என்றால், நாடுகடந்த நாடு என்பது இருக்கும் நாடுகளிடையே ஊடுபாவி அமைந்திருக்கும் ஓர் இனங்களின் ‘கருத்தாக்க நாடு’ என்று கொள்ளலாம்.

## நாடுகடந்த நாடு என்ற கோட்பாடு:

இந்தச் சொல் உருவாக்கப்பட்டதும் உலகிற்கு அறிமுகப்படுத்தபட்டதும் வில்லியம் ரொபின் (William I Robinson) என்ற கலிபோர்னியா பல்கலைக்கழத்தைச் சேர்ந்த சமூகவியல் பேராசிரியரால்தான். 2004 எழுதப்பெற்ற A Theory of Global Capitalism: Production, Class, and State in a Transnational World என்ற நூலில்தான். அதில்தான் அவர் உலகமயமாதல் என்ற நிலையானது முதலாளித்துவத்தின் வரலாற்றில் ஒரு படிநிலை என்று சுட்டிக் காட்டினார்.

உலக நாடுகளின் தேச எல்லைகளைத்தாண்டிப் பரவும் நிறுவனங்களும் வணிகங்களும் ஏற்படுத்தும் இயல்பான முதலீடுகள் சிக்கலின்றி, தடையின்றிச் செய்யப்படுவதை அவர் தனது லத்தீன் அமெரிக்க நாடுகளைப் பற்றி படிப்பில் கண்டறிந்தார். அங்கு முதலிட்ட யப்பானின் பொருள்முதலீடு மிகவும் வாய்ப்பாகவும் இயல்பாகவும் நடைமுறைக்கு வந்ததைக் கண்டார்.

அதைப்போலத்தான், அதனால்தான் இந்த நாடுகடந்த பொருளாதாரத் தாவல், பரவல் போலவே தேசங்களின்-நாடுகளின் நிலையும் அதற்கு மறுதலையாக உருவாவதைக் கண்டார்.

வெளியிலிருந்து வரும் பொருமுதலீடுகள் வந்சேர அந்தந்த நாடுகள் தங்கள் தேசியத்தின்-நாட்டின் இறுக்கத்தன்மைகளைத் தளர்த்தி நெகிழ்வுத் தன்மையைக் கடைப்பிடிக்கவேண்டிய தேவையுள்ளதைச் சுட்டிக் காட்டினார். அதனால் ‘பலவீனமான” தேசிய-நாடுகள் அல்லது அரசுகள் உருமாறியிருந்தன.

அதாவது நாடுகளில் எல்லையைக் கடந்த நிலையில் ‘நின்றுவிளையாடும்’ உலகளாவிய பொருள் முதலீடுகள் தங்கள் அரசியல் கூட்டாளியாக ‘நாடுகடந்த நாடுகளை’ உருவாக்கிக் கொண்டன. அல்லது நாடு கடந்த நாடுகள் உருவாகும் நிலையை மறைமுகமாக ஏற்படுத்தின.

உலகமயமாதலைப் பேசியவர்கள் யாரும் இந்தப்புள்ளியைத் தொட்டுச் செல்லவில்லை. பேராசிரியர் வில்லியமுடைய ஒரு கட்டுரையின் தலைப்பைப் பாருங்கள்... ‘சமூகக் கோட்பாடும் உலகமயமாதலும்: ஒரு நாடு கடந்த நாட்டின் உதயம்’ (Social theory and Globalization: The rise of a transnational state.) அதனால்தான் இந்த தலைப்பின் பாதியை என் கட்டுரைக்கு தலைப்பாக வைத்திருக்கிறேன்.

குறிப்பாக நாடுகடந்த உலகப் பொருளாதார உருவாக்கத்தின் விளைவாக இந்த உலக மயமாதல் என்ற பெரும் சொல்லிற்குள் முதலாளித்துவத்தின் வரலாற்று நிலை வந்து நிற்பதைச் பேராசிரியர் வில்லியம் சுட்டினார்.

புதிய முலாளித்துவ வர்க்கம் ஒன்று உருவாகுவதையும் அதன்விளைவாக நாடுகடந்த நாடு என்ற கருத்து நிலையும் செயல்நிலையும் தோன்றுவதாகவும் அவர் இந்த நூலில் சொல்லியிருக்கிறார்.

இந்த வரலாற்று நிலைதான் தேசங்கடந்த —நாடுகடந்த அரசுகளுக்கும் அமைப்புக்களுக்குமான தற்போதைய நிலையை உருவாக்கி வைத்திருக்கின்றன. தற்போது உலகம் முழுதும் பல நாடுகடந்த அமைப்புக்கள், குழுக்கள் உள்ளன.

ஆனால் பேராசியரியர் போல் கமாக் (Paul Cammack) என்னும் மான்செஸ்ரர் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர் வில்லியம் ரொபின்சனையும் அவருடைய ‘நாடுகடந்த நாடு’ என்பதும் நடைமுறையில் சாதியமில்லை என்றும் விமரிசிக்கிறார். அதனைப் பிறகொரு வேளையில் பார்க்கலாம்.

## நிறைவுரை:

தற்போது இந்த சிறிய கட்டுரையை இத்துடன் நிறைவு செய்வோம். ‘நாடுகடந்த நாடு’ என்பது அறிமுகம் மற்றும் கோட்பாடு என்றளவில் மிகச் சுருக்கமாக இங்கே முன் வைக்கப்பட்டது. இனிவரும் ஆக்கங்களில் ‘நாடுகடந்த நாடு’ என்பதன் நடைமுறை என்ன என்பதையும், அதன் நடைமுறைச் சாதியங்களையும் சிக்கல்களையும் பார்க்கலாம். அதன் பிற்பாடு நாடு கடந்த நாடு என்ற அளவில் தமிழர் தரப்பு முன்வைக்கும் இப்போதைய வடிவத்துக்குள் எவை உள்ள டக்கப்படலாம், உள்ளடக்கப்படவேண்டும் என்பதனையும் பின்னர் பார்க்கலாம்.

தற்போது போராசிரியப் பெருந்தகைகள் மதியுரை வழங்க நடைபெறும் தயாரிப்பு வேளைகளில் பின்நவீனத்துவம் போன்ற நிலைகளைச் சொற்களை விரும்பாதவர்கள் கூட இந்த ‘நாடு நடந்த நாடு’ என்பதனை உரிய பக்குவத்துடன அணுகுவார்கள் என்றும் அதன் வழி எதையேனும் பயனுள்ளவற்றை முன்வைப்பார்கள் என்றும் எதிர்பார்ப்போம்.

mamoolan@thaiveedu.com

■ ■ ■

# இராப் போசன விரு...

27ம் பக்கத் தொடர்ச்சி...

மாட்டார் ஆனால் நல்லது என்றும் பொய் பேசார். Extraordinary என்று பகர்வார். நானும் அப்படியே சொன்னேன். என் மனைவி உதடுகளை மடித்து வைத்துக்கொண்டு மனதுக்குள் பெருத்த சத்தத்துடன் சிரிப்பது எனக்கு மட்டும் கேட்டது.

வயிற்றினுள் மெள்ள மெள்ள நான் செலுத்திய உணவு திரும்பி வெளியே வர விருப்பம் காட்டியது. நல்ல சிந்தனைகளை யோசித்துக்கொண்டு, உத்தமமான வாசனைகளை கற்பனை செய்தேன். கைச்சலை மறக்க பக்கத்திலே இருந்த தக்காளி கெச்சப்பை கொட்டி வாயினுள் திணித்து அதைத் துரத்த கோக் பானத்தையும் அருந்தினேன். நான் முன்னெப்பொழுதும் அனுபவித்திராத முக்கோணச் சுவை தொண்டையில் உருவாகியது. அதுவும் உதவி செய்யவில்லை. அப்படியும் குமட்டல் எழுந்து அபாயகரமான கட்டம் நெருங்கிக்கொண்டு வந்தது. நான் நிலைமையை சமாளிக்க எடுத்த அத்தனை முயற்சிகளும் என்னை மேலும் மேலும் சரியில்லாமல் ஆக்கிக்கொண்டு போயின. இந்த விபத்திலிருந்து எப்படித் தப்பலாம் என்று மனம் பதைத்தது. எனது மனைவியோ வயிறு கொள்ளும்வரை சாப்பிட்டுவிட்டு மேசையின் அந்தப் பக்கம் கையை நீட்டி ஏதோ நெருப்பிலே வறுத்தெடுத்த ஒரு பதார்த்தத்தை எடுத்து தன் கோப்பையை நிரப்பினார்.

Stay cool and save a comfortable amount of money with American Standard Air Conditioning's line of Allegiance® air conditioners. Our air conditioners range in efficiency from 13 to 18+ SEER - among the highest efficiency ratings in the industry.

Our Allegiance® family offers a wide range of comfort choices, plus exclusive state-of-the-art technology the quietly, meticulously and efficiently conditions your air. Get ready for a level of comfort you and your family may never have experienced before.

American Standard HEATING & AIR CONDITIONING
Authorized Dealers

Heating & Air-conditioning Contractors.
Raman Appliances Inc.
www.raheatingcooling.com

**Raman Appliances**

# Raman Chelliah



3021 Markham Rd. Unit 51, Scarborough ON. M1X 1L8
**Tel: 416.332.1989**
**Cel: 647.893.4414**
Fax: 416.332.4967
E-mail: info@raheatingcooling.com

# இலகுவாக மோட்கேஜ்

கடினமான இலக்குகளையும் நாம் இலகுவாக்குவோம்

## Mortgages

- First Time Buyers
- Refinaning
- Renewal
- Self Employed
- Pre-Aproval
- Bankruptcies
- Bad Credit
- Debt Consultant
- Non-verifiable Income
- New immigrant



### We Will

- Simplify the entire process of mortgage financing
- Save you money and time
- Get you the most competitive rates
- Offer you the widest selection of mortgage options including variable rate, fixed rate, capped variable rate, step, secured lines etc. for all situations including self-employed, no down payment ….
- Counsel you on credit and mortgage qualifications
- Provide maximum flexibility in financing choices
- Assist you every step of the way

**Best Rates**

We can get you a mortgage in most situations regardless of your circumstances. Where traditional financial institutions have given the answer "No", We routinely says "**Yes**" and gets you a product that suits your needs at an extremely competitive rate.

invis

**Siva Ratnasingam**

*Lic: M08002133*
Mortgage Consultant
***2005,2006,2007,2008 Diamond Award Winner***

**416.430.0111 ext:1**

Head Office: Invis Inc., 100-480 University Ave., Toronto, ON M5G 1V2








**Middlefield and Finch**

5 Years New, Largest 3 Bedroom All Brick End Unit in The Complex, Avon Model with 1728 Sq.ft. plus Unspoiled Basement, Close to all Amenities plus 24 Hour TTC, Separate Shower Room in the Master Bedroom, R/I For Central Vac, 5 Appliances, CAC

Price $ 319,000




**Staines Road and Finch**

5 Years New 5 Bedrooms Detach Home, Pie Size Lot, Hardwood Floor in Main Floor, 2 car Garage, Separate entrance to Basement, 4 Appliances

Price $ 379,000

## விற்பனைக்கு...

விற்பனைக்கான உங்களது வீட்டினை இங்கே காட்சிப்படுத்தி அதற்கான அதி கூடிய விலையினை பெற்றுக் கொள்ளுங்கள்.




**Ninth Line & 16th Ave**

Excellent 3 Bedroom Mattamy Built Semi In Cornell Village, Premium Lot, Brick Built, 9' Ceiling, Oak Stairs, Double Detached Garage & Extra Double Parking, Sprinkler System, Interlocking Patio & Walkway, Main Floor Laundry, Finished Basement with Wet Bar, Newer Paint, Easy Access to Hwy 407, Cornell Public School, Park & Hospital; Extras: Fridge, Flat Top Stove, B/I Dishwasher, Washer, Dryer, All Electrical Light Fixtures, Central Air Conditioning, Central Vacuum and all accessories, Humidifier, All Window Coverings (Except Main Floor). Lot Size: 22' x 148' feet, Taxes: $3,181.13 (2008)

Price $ 369,000




**Brimley and Denison**

Lowest in the Market! Fabulous and Bright 3-Bdrm Home in a Great Neighbourhood. Close to School, TTC, Pacific Mall, Shopping and all other Amenities. Excellent Move-In Condition. No Sidewalk - 4 cars can be parked in the Driveway. Motivated Vendor! 4 Appliances, CAC

Price $ 289,000




**McCowan and Sheppard**

Approx. 1600 Sq. Ft. Spacious Suite, Well Managed Condo With Many Facilities. Close to 401, TTC, School 24 Hour Security. Split Bedrooms. Separate Shower Stall and Tub Ensuite for Master Bedroom. 5 Appliances, CAC

Price $ 189,000

COLDWELL BANKER
*Exceptional Real Estate Services, Brokerage*
*3107 Sheppard Ave East*
*Toronto, ON. M1T 3J7*
*Office: 416-497-9794*

தொடர்புகளுக்கு

**V. Logan,** Broker
*Direct Line:*
**416-410-1620 (24hrs)**
vlogan599@yahoo.com



# நிறுதிட்டம்

## கலாபன் கதை 2



தேவகாந்தன்

இரண்டு ஆண்டுகளாகியிருந்தன அந்த முதல் கப்பலிலிருந்து கலாபன் திரும்பிவருவதற்கு. ஊரே அவனை வியந்து பார்த்துக்கொண்டிருந்தது. அவன் வாங்கிவந்திருந்த 'சான்யோ திறீ இன் வண்' செற்றைப் பார்க்க இளமட்டமெல்லாம் வீட்டைச் சுற்றி அலைந்தது. அவனது நீண்ட தலைமுடியும், டெனிம் ட்ரவுசரில் அவனது கம்பீரமான கப்பல் நடையும், அவ்வப்போது கிரேக்க ஆங்கில சொற்கள் கலந்த உரையாடலும் பலரை வசீகரித்தேவிட்டிருந்தன. இரண்டு கிழமைகளாக வீடு ஒரு சொர்க்கத்தில்போல் திளைத்துக்கொண்டிருந்தது.

மூன்றாவது கிழமை அவனது மனைவி மனோவின் தங்கை ரூபிணி இரண்டு நாட்கள் வந்து வீட்டிலே தங்கிவிட்டுப் போனாள்.

இரண்டு வருடக் காத்திருப்பு ஒட்டுமொத்தமும் ஏமாற்றமாகிவிட்டதைப்போல ஆகிப்போனாள் மனோ. அவன் கப்பலிலிருந்து கொண்டுவந்த வீடு ஏதோ விமானநிலையத்தில் இருப்பதாகவும், அதை எடுத்துக்கொண்டுவர கலாபன் தான் தாமதிப்பதுபோலவும் அந்தரப்பட்டுக் கொண்டு திரிந்தவளின் முகம் பின்னால் கறுத்துச் சிதைந்தே போனது. கலாபன்கூட மாறித்தான் போனான். குழந்தையைத் தவிர வேறெவரிடமிருந்தும் ஒரு சிரிப்பொலி எழவில்லை அந்த வீட்டிலே. ரூபிணி காரணமாயிருக்கலாம் என்பதுதான் பேச்சாயிருந்தது அக்கம்பக்கத்தில். அதை ஊர்ஜிதப்படுத்தியது பக்கத்துவீட்டு புஷ்பத்தின் சாட்சியம்.

புஷ்பம் அருகிலிருக்கவே ஒருமுறை ரூபிணி கேட்டிருக்கிறாள் கலாபனிடம், 'இந்த சான்யோ செற்றை ஏன் வாங்கிக்கொண்டு வந்தீங்கள், கலாபன்?' என்று. 'சான்யோவில் சத்தம் நல்லாய் வரும்' என்றிருக்கிறான் கலாபன். 'மற்றதுகளிலை வராதோ?' 'வரும். ஆனா இதைப்போல வராது. கேட்டிட்டுத்தானே ஆசைப்பட்டு வாங்கினனான்.' 'நல்ல சத்தம் தான். இதை அவசரத்துக்கு விக்கக்கூட ஏலாது. நாஷனல் பனசோனிக் இல்லாட்டி சோனி வாங்கியிருக்கலாம். ஆத்திரம் அந்தரத்துக்கு உதவும்' என்று விட்டுவிட்டாள் ரூபிணி.

இன்னொரு முறை, 'அத்திவாரம் எப்ப வெட்டப் போறியள், கலாபன்? அக்கா சொல்லிக் கொண்டிருந்துது நீங்கள் வந்தவுடனை வீட்டுவேலை துவங்கிறதாய்' என்றிருக்கிறாள். கலாபன் அதற்கு ஏதோ சொல்லிச் சமாளித்து விட்டு அங்கால போய்விட்டான். இன்னும் எதையெதை தமக்கையிடம் 'ஓதி' வைத்து விட்டுப் போனாளோ ரூபிணி, கலாபனின் முகம் அடுத்தடுத்த நாட்களில் களையிழந்துவிட்டது.

'சுதுமலையிலை எனக்குத் தெரிஞ்ச ஒரு பெடியன் கப்பலுக்குப் போய் ஒரு வருசம் நிண்டிட்டு வந்து வீடே கட்டிச்சுது, அந்த வீட்டை கப்பல் வீடெண்டுதான் இப்பவும் அங்கை ஆக்கள் சொல்லுகினம், ரண்டு வருசம் கப்பலிலை நிண்டிட்டு வந்த உங்களாலை ஏன் முடியாமப் போச்சு எண்டு மதி கேக்கிறாள். ஜீவன் ஏறின கப்பல் போன வருஷம் கடலிலை தாண்டுபோச்சு. தேப்பனும் தாயும் தலை தலையாய் அடிச்சு அழுதுகொண்டு திரிஞ்சுதுகள். இவள் ஏன் அதை நினைக்கிறாளில்லை. ஜீவன் செத்துப்போனான், நீயேன் உயிரோடை வந்தாயெண்டும் இவள் கேப்பாளோ?' எண்டு ஒரு போதையேறிய தருணத்தில் தெரிந்தவர்கள் யாருக்கோ சொல்லிப் பிரலாபித்திருக்கிறான் கலாபன். பிறகு அவர்களுக்கே தான் இனிமேல் கப்பலுக்குப் போகப்போவதில்லையென்றும், விசுவமடுவிலேயுள்ள தம்பியாரின் காணியிலே போய்நின்று மிளகாய் செய்யப்போவதாகவும் வேறு சொல்லியிருக் கிறான்.

பிரத்தியட்சத்தில் ஒன்று, மறைமுகத்தில் ஒன்றாய் மனோவுக்கு இரண்டு இழப்புக்கள் நிச்சயமாகியிருக்கின்றன. இல்லாவிட்டால் அவள் அத்தனைக்குச் சாம்பிப்போய்த் திரியவும் முடிந்திராது. மாதம் மாதம் பணத்தை அனுப்பிக்கொண்டிருக்கும்படியும், தான் வீட்டு வேலையைத் தொடங்குவதாகவும் மனோ எழுதத்தான் செய்தாள். ஆனால் அதையும் செய்யாமல், வெறுங்கையோடும் வந்துசேர

> “ நேற்று மரணம் நிகழாத மண்ணில்லை நான்
>
> இன்று வாழ்வது.
>
> நேற்று மரணம் நிகழாத வீடில்லை என்னதாய்
>
> இன்று இருப்பது.
>
> ஆனாலும் நாம் வாழ மட்டும் செய்யவில்லை,
>
> நாளையைப்பற்றிக் கனவுகூட காண்கிறோம்.
>
> கப்பல்போலவே மனிதவாழ்வும்.
>
> அது சரியும் தான், ஆனாலும் கவிழ்ந்துபோகாது,
>
> ஏதோ ஒரு புள்ளியில் வாழ்வின் மீட்டெடுப்பு
>
> நிச்சயமானது ”

வேண்டிய நிலை எப்படியோ கலாபனுக்கு நேர்ந்திருக்கிறது. பணம் அவளின் பிரத்தியட்சமான இழப்பு. இரண்டு நீண்ட வருஷங்களின் கஷ்டங்களும், தனிமையும், தாபங்களும் எந்த முகாந்திரத்தில் சாந்திப்படுத்தக் கூடியன? என்றாலும் அவற்றை அவளால் தாங்கியிருக்க முடியும். ஆனால் கப்பலில் செல்வோரின் 'விளையாட்டுக்க'ளைப்பற்றி தங்கை ரூபிணி சொன்னவற்றையும் அவளால் தாங்கிக்கொண்டு இருந்திருக்க முடியுமா? அவளது அந்த இரண்டு வார இரவுகளும் முன்புபோல் காதலோடு இருக்கவில்லையே! அவன் வாத்ஸாயனக் கலையை பக்கம்பக்கமாய் அவளில் புரிந்து கொண்டிருந்தான். அந்தளவு காமாந்தகமும் தகும், அது காதலோடு இருந்திருந்தால். இல்லாதபோதில் அவளின் மறைமுகமான இழப்பை அது ஆணித்தரமாகச் சுட்டிக்காட்டிக்கொண்டுதானே இருக்கச்செய்யும்! வெளிவெளியாகச் சொல்லாவிட்டாலும், இதில் உள்ளேயாவது மனோ குமுறாமல் இருந்திருக்க முடியுமா? முகம் கறுக்காமல் திரிந்திருப்பதுதான் எவ்வாறு?

எப்படியோ இரண்டு மாதங்கள் கழிந்தன. திடீரென்று ஒரு ஞாயிறு மாலை ஏழு மணி ரயிலெடுத்து கொழும்புக்குப் போய்விட்டான் கலாபன். மறுநாள் வெறும் கையும் வெறும் கழுத்துமாய் மனோ இருப்பதைப் பார்த்து புஷ்பம் நடந்திருக்கக் கூடியவற்றை எண்ணி ஆச்சரியப்பட்டிருக்கக் கூடும். மதி இயல்பிலாகி இயங்கிக் கொண்டிருந்தாள். காலகாலமாகவும் இப்படித்தானே நடந்துகொண்டிருக்கிறது.

கலாபன் கப்பலால் வந்திருந்தபோது நான் திருகோணமலையிலே அரசாங்க வேலையில் சேர்ந்து அரச அச்சுக்கூடத்தில் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். ஒரு விடுமுறையில் ஊர் வந்தபோதுதான் கலாபன் வந்திருந்ததே தெரிந்தது எனக்கு. நான்கூட வேலைப் பிராக்கில் அவனை மறந்துதானே இருந்துவிட்டேன் பலகாலமாயும் என எண்ணி என்னில் ஏற்பட்டிருந்த வேதனையையும் சிறுகோபத்தையும் நான் அடக்கிக்கொண்டேன்.

மறுபடி நான் வேலைக்குத் திரும்பி இரண்டு மூன்று மாதங்களில் லண்டன் கப்பல் கொம்பனியின் முகவரியிட்ட கலாபனின் கடிதம் வந்தது எனக்கு. அது கட்டில் சேர்க்கப்பட்ட இடம் அமெரிக்கா என்பது அதன் அஞ்சல் தலையில் தெரிந்தது.

கடல்கொண்ட மல்லை என்கிறபோது, மாமல்லபுரத்தின் இழப்பின் வலிதுதான் பெரும்பாலும் தெரியும். கடலின் பிரமாண்டம் தெரியவராது. சமுத்திரம் நிலங்களை விழுங்கும் பிரமாண்டம் கொண்டது. மலைகளைத் தாழ்த்தி சமநிலங்களாகவும், சமநிலங்களை உயர்த்தி மலைகளாக்கவும் அதனால் முடிந்திருக்கிறது. அது கப்பல்களைக் கவிழ்க்கிறது, திமிங்கிலங்கள் சுறாக்களின் வாழிடமாய் நாவாய்ப் போக்குவரத்துக்களையே சீர்குலைக்கிறது என்றெல்லாம் கேள்வியிலுண்டு. ஆனாலும் இவைகூட கடலினை அறியப் போதுமானவையில்லை. சிறந்த கடல் சார்ந்த சினிமாக்களாலும்தான் இந்த அனுபவத்தைப் பூரணமாக ஏற்படுத்திவிட முடியாது.

கடலென்ற சொல்லே அதன் அம்சத்தைப் புரியவைக்கிறமாதிரியான சொல்லாக இல்லை. மாக்கடல் என்பதுகூட போதுமானதில்லை. ஓரளவேனும் செறிவான சொல் உண்டெனில் அது சமுத்திரம் என்பதுதான். இந்துமாக்கடல் அதன் விசாலத்தைக் காட்டக்கூடியதுதான். ஆனால் இந்துசமுத்திரம் என்பதே அதன் விசாலம், ஆழம், பயங்கரம், இரகசியங்களின் கொள்கலனாகக் கூடியது.

நிலமொன்றும் நீர் மூன்றுமான விகிதாரத்தில் இந்த உலகம் இயைந்ததாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். நிலம் ஐந்தாகக் கண்டப்படுத் தப்பட்டுள்ளது. அதுபோல் நீர் ஐந்து சமுத்திரங்களென. இவற்றில் இந்துசமுத்திரமே பெரிது. ஆனாலும் பசுபிக்கும், அத்திலாந்திக்கும் மூர்க்கத்திலும், பயங்கரத்திலும் சற்றும் குறைந்தவையல்ல இதற்கு. இவற்றின் தன்மைகள் வேறுவேறாக இருக்கும். ஆனாலும் உக்கிரங்கள் சமமானவை. இந்தவகையில் வட, தென் சமுத்திரங்களும் இவற்றிலிருந்து பெரிதாக வேறுபட்டவையல்ல. வடசமுத்திரம் மலைநிகர்த்த அலைகள் கொள்ளும், மறுபடி பள்ளத்தாக்காய் உட்சுருங்கும் தன்மைகளைக் கொண்டிருக்காவிட்டாலும் பயங்கரத்தில் எவற்றினுக்கும் குறைந்ததில்லை. ஒரு கப்பலை அப்படியே சப்பித் தின்னக்கூடியது அது. ஆயிரத்து தொளாயிரத்து ஐம்பதில் ஒருமுறை ஒரு கப்பலை அப்படியே உறையவைத்து நொருக்கி தின்றுதீர்த்துவிட்டது வடசமுத்திரம். அது கப்பலை நொருக்கித் தின்ன ஆரம்பித்ததும் கப்பலிலிருந்த கப்ரின், மற்றும் கடலோடிகள் தம் உயிரபய நிலையை அறிவிப்புச் செய்துவிட்டு பனிப்பாளத்தில் இறங்கி உதவி வரும்வரை தங்க தோதான இடம் தேடி நடக்கத் தொடங்கிவிட்டார்களாம். சஞ்சிகையொன்றில் படத்தோடு செய்தி வந்திருந்தது.

சமுத்திரத்தின் உக்கிரத்தை அதன் மத்தியிலில்லாமல் அறியவே முடியாது என்றிருந்தான் கலாபன். கடலம்மா என்று அதனை அழைப்பது அதனைச் சாந்திப்படுத்தும் மீனவர்களின் உபாயம் மட்டுமே என வாதித்திருந்தான்.

கலாபன் ஏறி வேலைசெய்துகொண்டிருந்த கப்பல் சிங்கப்பூர் சென்று சாமான்கள் ஏற்றியபின் திரும்ப மலாக்கா கடல் வழியாக மலேஷியாவின் கிள்ளான் துறைமுகம் சென்றது. அங்கே டெக் கார்க்கோ என்ற மேற்தளத்தில் வைக்கக்கூடிய சாமான்களை ஏற்றியது. பெருமரங்களில் அறுத்தெடுத்த தூண்போன்ற மரங்களாகவும், தடித்த பலகைகளாகவும் அவை இருந்தன. அவை பெரிய கம்பிக் கயிறுகளால் நகரமுடியாது இறுக்கிப் பிணைக்கப்பட்ட பின் கப்பல் அமெரிக்காநோக்கிப் புறப்பட்டது. தென்சீனக் கடலுள் கப்பல் பிரவேசித்தபோதே காலநிலை நன்றாக இருக்க வில்லை.

54ம் பக்கம் பார்க்க...

சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...

Uthayan Alex Sivasambu B.Sc. (Hons), M.B.A

Broker

Ottawa: 613.276.SALE (7253)

Toronto: 416.659.SELL (7355)

alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasambureality.com

COLDWELL BANKER





# வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

## NEW LIFE FRESH START

- கடன் 80% குறைய நடவடிக்கை
  **Reduce your debts upto 80%**
- கடனுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
  **Stop all interest on your debts**
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புக்கள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்
  **Stop collection calls, legal action & garnishments**
- உங்கள் சொத்துக்கள் பாதுகாக்கப்படும்
  **Protect all your assets**
- மாதாந்த ரீதியில் எலங்லாக்கடனையும் தீர்க்க வசதி செய்தல்
  **Make one monthly payment to all of your creditors**
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
  **Give you solutions with out bankruptcy**

digi Media

வங்குரோத்துக்கு சட்டங்களில் மாற்றங்கள் வரவிருக்கின்றன. மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
**New Changes are coming from Bankruptcy Act. Call me for Details.**

**Suren Sornalingam**
Certified Insolvency Counsellor

Tel: **416.264.1272**
Fax: 416.332.0914
web: www.creditrecoverycanada.com



crc

**CREDIT RECOVERY CANADA**

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON
M1P 4X4

## காதல் வாழ்க்கை - 7

# சீதா கல்யாணம்



வி. கந்தவனம்

மிதிலையர் கோமான் சனகர் மகாசூரர். எல்லா வித்தைகளையும் நன்றாகக் கற்றவர். பெரிய ஞானி. யாக பூமியில் கலப்பைக் கொழுமுகத்தில் சீதையை மகளாகப் பெற்று, பிள்ளையில்லாக் குறைபோக்கிய தவச்செல்வர். தசரதச் சக்கரவர்த்தியின் பெருமதிப்பைப் பெற்றவர். பெயர் பெற்ற அந்த மன்னருக்கு ஒரு பெரிய மனக்கவலை. அவரது மகளுக்கு இன்னமும் நல்ல வரன் கிடைக்கவில்லை. பல மன்னர் அவளை மணம் புரிவதற்கு முன்வந்தனர். ஆயினும் அவர்களில் எவருமே தெய்வீகப் பெண்ணான சீதாப்பிராட்டிக்கு ஏற்றவராக இருக்கவில்லை.

அதனால் மகளுக்கு சுயம்வரம் மூலம் தகுந்த வரனைத் தெரிவுசெய்யத் திட்டமிட்டார். சுயம்வர நிபந்தனை இதுதான்: 'எனக்கு வருணதேவர் பரிசாகத் தந்த உருத்திர வில்லை எந்த அரச குமாரன் வளைத்து நாண் ஏற்றுகின்றானோ அவனுக்கு சீதை மனைவியாவாள்'. சுயம்வர நாளைப் பல அரச குமாரர்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர்.

விசுவாமித்திரர் சனகரின் வேள்வியின் பொருட்டு இராம, இலக்குமணர் சகிதம் மிதிலைக்கு வந்துகொண்டிருந்தார். அவர் மூலம் இராமனது வில்லாற்றலை அறிந்த சனகர் இராமன் உருத்திர வில்லை வளைத்து நாண் ஏற்றினால் துயர் தீரும் என்றார். விசுவாமித்திரர் யாவும் அறிந்த முனிவரல்லவா? அவர் மிதிலைக்கு வந்ததற்கு இராமன் சனகரது வில்லை வளைக்க வேண்டும் என்பதும் ஒரு காரணம்.

ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்றன. அறுபதினாயிரம் யானையை ஒத்த மேனியரும் மலையெனத் திரண்ட தோளினரும் குன்றை ஒத்த வரி சிலையை அவைக்குக் கொண்டு வந்தனர். வில்லினைக் கண்ட வேந்தர் விதிர் விதிர்ப்பெய்தினர். வில்லின் வரலாற்றையும் பெருமையையும் சபைக்கு எடுத்துரைத்த சதானந்த முனிவர்,

> அன்றுமுதல் இன்றளவும் ஆரும் இந்தச்
> சிலையருகு
> சென்றுமிலர் போய் ஒளித்த தேர்வேந்தர்
> திரிந்துமிலர்
> என்றுமினி மனமும் இவை என்றிருந்தோம்
> இவன் ஏற்றின்
> நன்றுமலர்க் குழற் சீதை நலம்பழுதாகா (து)...
> (கார்முகப்படலம்)

என்று முடித்தார்.

விசுவாமித்திரர் முகக்குறிப்பால் அனுமதி வழங்க அண்ணல் இராமன் எழுந்தான், மங்கையர் மயங்க, நல்லோர் வாழ்த்த, உம்பர் உவப்ப, சிங்கம், விடை மேரு, யானை இவையெல்லாம் நாணும்படியாக நடந்தான். எல்லோரும் ஆவலோடு இமை கொட்டாது பார்த்துக் கொண்டிருந்தனர்.

> தடுத்தது இமையாமல் இருந்தவர் தாளில்



> மடுத்ததும் நான்நுதி வைத்ததும் நோக்கா
> கடுப்பினில் யாரும் அறிந்திலர் கையால்
> எடுத்தது கண்டனர் இட்டது கேட்டார்!
> (கார்முகப்படலம்)

இமைகொட்டாது இருந்துமென்ன? இராமன் வில் வளைத்து நாண் ஏற்றிய கடுப்பு- வேகம் இருக்கிறதே, அது மிக மிக.... அந்தக் கணப்பொழுதில் சபையோர் எதையும் சரியாகப் பார்க்கவில்லை. எடுத்ததைக் கண்டனர்... அவ்வளவுதான். பின்னர் வில்லொடிந்த ஓசையை மட்டுமே கேட்க முடிந்தது. இராமன் நாணை மட்டும் ஏற்றவில்லை. வில்லையும் அன்றே ஒடித்துவிட்டான். விண்ணவர் பூமழை சொரிந்தனர். மேகம் வான் மழை பொழிந்தது. மிதிலை மக்களின் உவகை கரைபுரண்டது. 'புயல் இவன் மேனி' என்பார்! 'மானிடன் அல்ல என்பார்! காதல் வயப்பட்டிருந்த சீதாப்பிராட்டியின் உள்ளம் உருகிக் கரைந்தது.

களிபேருவகை அடைந்த சனகர் தசரத மன்னருக்குச் செய்தி அனுப்பினார். ஓலையைப் படித்த தசரதர் தோள்கள் மலையென வளர்ந்தன. அயோத்தி எழுச்சி பெற்றது. தசரத மன்னர் பரிவாரங்களுடனும் பெருஞ் செல்வங்களுடனும் மிதிலைக்கு வந்துவிட்டார்.

சனகர் எல்லோரையும் முறைப்படி வரவேற்றுத் திருமணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். திருமண மண்டபம் பொன்மலைபோன்று காட்சி அளித்தது. தம்பியர் சகிதம் கருணையே உருவமான இராமன் மண்டபத்துள் வந்தான். சீதையும் 'அலை கடல் பிறந்து பின்னை அவனியில் தோன்றி, மீள மலையிடை உதிக்கின்றாள்போல்' மண மண்டபத்தை அடைந்தாள். மணத் தவிசில் இராமனும் சீதையும் 'ஒன்றிய போகமும் யோகமும்' போல் இருந்தனர். வசிட்டர் திருமணச் சடங்கை நடத்தினார்.

சனகர் 'பூமகளும் பொருளும் என நீ என் மகளொடு பொருந்தி' வாழ்கெனச் சீதையின் மெல்லிதழ்போன்ற கைகளை இராமனின் தடக்கையில் வைத்தார். வாழ்த்தொலிகள் தொடர்ந்தன. மணமக்கள் தீ வலம் வந்து, அம்மி மிதித்து அருந்ததி காணும் காட்சியுடன் திருமணச் சடங்கு நிறைவேறியது.

வால்மீகி இராமாயணத்தில் சனகர் தமது தவமகளை இராமனிடம் ஒப்படைக்கையில்,

> இயம்ஸிதா மம ஸுதா ஸஹ தர்மசரீ தவ
> ப்ரதீச்ச சைனாம் பத்ரம்தே பாணிமா -
> க்ருண்ணீஷ்வ பாணிநா
> பதிவ்ரதா மஹா பாகா சாயா இவானுகதா ஸத
> (இராமாயணம் - ராஜாஜி)

என்று கூறியதாக வருகின்றது. 'மகனே, இதோ என் மகள் சீதை. நீ செல்லும் தரும நெறியில் உன்னுடன் துணையாகச் செல்வாள். கையைப் பிடித்துப் பெற்றுக் கொள்வாய். கற்பைக் காத்து மிக பாக்கியவதியாக உன் நிழலைப் போல் உன்னைப் பற்றி நிற்பாள். ஒருபோதும் விட்டுப் பிரியமாட்டாள். மங்கலம் ஆகுக' என்பது இதன் பொருள்.

இத்திருவார்த்தைகள் வடநாட்டுத் திருமண வைபவங்களில் மணமகளைத் தாரைவார்த்துக் கொடுக்கையில் மந்திரமாக இன்றும் ஓதப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

kandavanam.v@thaiveedu.com

■ ■ ■

VIN
KITCHEN & BATH
Design & Install



Custom & Refacing kitchens
Bath Vanities & Bars
Countertops

15 years experience
100% satisfaction guaranteed

For
free estimates and design

Call: Jey Kumar
647 388 3225
vinkitchen@gmail.com

இல்லறத்திற்கு அழகு அன்பான மனைவி & குழந்தைகள்
இல்லத்திற்கு அழகு அழகிய சமையலறை & குளியலறை

# புகுந்த வீட்டிற்கு வருக, வருக!



குரு அரவிந்தன்

பிறந்த வீடு என்பது ஒருவர் பிறந்து வளர்ந்த வீடாகும். ஒரு ஆணோ அல்லது பெண்ணோ பிறந்த வீட்டிலிருந்து திருமணமாகி புதிய வாழ்க்கையை ஆரம்பிக்கச் செல்லும் புதிய வீட்டைப் புகுந்த வீடு என்பார்கள். இப்படிச் சென்றவர்கள், புகுந்த வீட்டில் உள்ள புதிய உறவுகளையும் புதிய வாழ்க்கையையும் தேவை கருதி ஏற்றுக் கொள்வார்கள். அதே போலத்தான் பிறந்த மண்ணைவிட்டு வெளி யேறிப் புதிய மண்ணுக்குத் தங்கள் எதிர்கால நலன் கருதிக் குடியேறும் போது, அப்படி அவர்கள் சென்று குடியேறிய மண்ணைப் புகுந்த மண் என்பார்கள்.

ஈழத் தமிழர்களில், பலருக்கு இப்படியான புதிய வாழ்வைத் தேடிப் புதிய மண்ணுக்குச் சென்ற பல அனுபவங்கள் இருக்கின்றன. தாயக மண்ணில் ஏற்பட்ட உள்நாட்டுப் போர்ச் சூழல் காரணமாகப் பல தமிழர்கள் தங்கள் பிறந்த மண்ணைவிட்டு வெளியேறி பல்வேறு நாடுகளுக்கும் சென்று குடியேறினார்கள். அப்படிச் சென்று குடியேறும்போது, அந்தந்த நாடுகளும் ஏதோ ஒரு மனிதாபிமான காரணத்திற்காக அவர்களை அங்கே அனுமத்து ஏற்றுக் கொள்ள வேண்டும். பல வருடங்களுக்கு முன் இப்படியான சில தமிழர்கள் தங்கள் படிப்பு, உத்தியோகம், பதவி காரணமாகச் சொந்த நலன் கருதி தனிப்பட்ட முறையில் வெளிநாடுகளுக்குச் சென்று குடியேறியவர்களும் உண்டு. வேறு சிலர் நெருங்கிய உறவினர்களால் அழைக்கப்பட்டு வெளிநாடுகளுக்குச் சென்றவர்களும் உண்டு. இதைத் தவிர, சொந்த மண்ணில் நிம்மதியாக வழமுடியாத காரணத்தால் அகதிநிலை கேட்டு சென்றவர்களும் உண்டு. இப்படியான இக்கட்டான சூழ்நிலையில் வாழ்ந்தவர்களே வெளி நாடுகளில் அதிக அளவில் புகலிடம் தேடியவர்களாகும். அகதி நிலை கோரி வந்தவர்களை ஏற்கனவே படிப்பு, வசதி காரணமாக இங்கே வந்து குடியேறியவர்களில் சிலர் தங்கள் மானம் போவதாகச் சொல்லி அவர்களை ஒரு காலத்தில் ஏளனமாகப் பார்த்ததும் உண்டு. ஆனால் இன்று அப்படி அகதிநிலை கோரி வந்தவர்களும் சரி, அவர்களின் அடுத்த தலை முறையினரும் சரி, பல்வேறு துறைகளிலும் முன்னேறிப் புகுந்த மண்ணில் தமிழ் சமுதாயத்திற்குப் பேரும் புகழும் பெற்றுத் தந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

புகலிடம் தேடி வருபவர்களுக்கு அடைக்கலம் கொடுக்கும் நாடுகளில் கனடாவும் முன்னிலை வகிக்கிறது. அகதி அல்லது ஏதிலி என்று சொல்லப்படுகின்ற நிலையில் இருப்பவர்கள் எப்படி கனடா போன்ற ஒரு பல்கலாச்சார நாட்டைத் தங்கள் புகுந்த வீடாக எடுத்துக் கொள்ள முடியும், அதற்கு என்ன தகுதிகள் இருக்க வேண்டும் என்பதை இப்போது பார்ப்போம்.

நீங்கள் ஒரு அகதி என்ற நிலையில் இருந்தால் கனடா நாட்டின் ஏதாவது ஒரு எல்லையிலோ, அல்லது விமான நிலையத்திலோ, அல்லது நாட்டுக்குள்ளோ வந்ததும் அகதி நிலை கோரி வந்திருப்பதாகப் பிரகடனப் படுத்தலாம். அப்படிக் கனடாவிற்கோ அல்லது கனடிய எல்லைக்கோ வருவதற்கு ஏற்ற வசதிகள் முதலில் உங்களுக்கு இருக்க வேண்டும். விரும்பினால் ஒரு சட்டத்தரணியின் உதவியுடனோ, அல்லது ஒரு சமுதாய நலன் விரும்பும் சட்ட அமைப்புக்கள் மூலமோ ஆலோசனை பெற்று, நீங்கள் அகதி நிலை கோரலாம். அப்படி ஒருவர் அகதி நிலையைப் பெறவேண்டுமேயானால் அவர் கனடிய அகதி நிலைச் சட்டதிட்டங்களுக்கு ஏற்ற தகுதிகளைக் கொண்டவராக இருக்க வேண்டும். குறிப்பாக ஒரு இனம், மதம், தேசியம், அல்லது ஒரு குறிப்பிட்ட குழுவைச் சேர்ந்தவராக, அல்லது மாறுபட்ட அரசியல் கருத்துக் கொண்டவராக இருந்ததால் தனது நாட்டு அரசாங்கத்தோடு முரண்பாடு கொண்டவராக இருக்க வேண்டும். அத்துடன் தனது சொந்த நாட்டிற்குத் திரும்பிச் சென்று பாதுகாப்பாக வாழமுடியாதவராக இருக்க வேண்டும். அவரது நாட்டு அரசாங்கம் அவரைப் பாதுகாக்கவோ, அல்லது அவர் அந்த நாட்டில் பாதுகாப்பாக இருப்பதற்கு உதவி செய்ய முடியாததாகவோ இருக்க வேண்டும். அந்த நாட்டுச் சட்டம் பொதுமக்களைப் பாதிக்கக் கூடிய சட்டமாக இல்லாமல் அகதி நிலை கோருபவரை மட்டும் பாதிப்பதாகவும், சர்வ தேச தரத்திற்கு முரண்பட்டதாகவும் இருக்க வேண்டும். அதை நிரூபிப்பதற்கு உங்கள் நாட்டில் நடக்கும் தவறான, சட்டத்திற்கு முரனான சம்பவங்களுக்கு ஆதாரமாக மனித உரிமை அமைப்புகளின் அறிக்கைகளையோ, அல்லது செய்தித் தாள்களில் வரும் செய்தி களையோ ஆதாரமாகக் காட்டவேண்டும்.

கனடிய எல்லையிலோ அல்லது விமான நிலையத்திலோ நீங்கள் அகதி நிலை கோருவதனால் கனடிய எல்லை அதிகாரிகளிடமும், உள்ளே வந்தபின் அகதி நிலை கோருவதானால் கனடிய குடியுரிமை குடிவரவு திணைக்களத்தினரிடமும் (5343 Dundas Street West. Phone 1-888-242-2100) முறையிடவேண்டும். உங்கள் முறைப்பாட்டை ஆங்கிலத்திலோ அல்லது பிரெஞ்சு மொழியிலோ நீங்கள் செய்யலாம். உங்களுக்கு மொழி புரியா விட்டால் அதற்கு ஏற்ற உதவியை மொழி பெயர்ப்பாளர்கள் செய்து தருவார்கள்.



கனடாவில் தங்குவதற்கான சட்டபூர்வமான ஆவணங்களோ, ஆதாரங்களோ உங்களிடம் இல்லை என்றால் உங்களைத் திருப்பி கனடா நாட்டைவிட்டு வெளியே அனுப்புவதற்கான உத்தரவு பிறப்பிக்கப்படும். அதற்கு முன்பாக நீங்கள் சட்ட ஆலோசனை பெற்று இந்த நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும்.

அமெரிக்க எல்லையில் நீங்கள் அகதி நிலை கோரினால் அதற்குரிய ஆதாரங்கள் இருக்குமானால் அவர்கள் கனடாவில் வைத்து விசாரிக்கப்படுவார்கள். அதற்கும் சில விதி விலக்குகள் இருக்கின்றன. உங்கள் நெருங்கிய குடும்ப அங்கத்தவரான கணவன் மனைவியோ அல்லது அது போன்ற உறவுள்ள சட்ரீதியான பங்காளிகளோ, உங்கள் பெற்றோரோ, உங்கள் பிள்ளைகளோ, பேரப் பிள்ளைகளோ, அல்லது பாட்டன் பாட்டியோ, அல்லது சகோதர சகோதரியோ, மாமா, மாமி மருமக்கள், பெறாமக்கள் போன்றவர்களோ கனடாவில் இருந்தால் அவர்கள் கனடிய குடியுரிமை கொண்டவர்களாகவோ, நிரந்தர வதிவுரிமை கொண்டவர்களாகவோ, அல்லது கனடாவால் பாதுகாக்கப்பட்டவர்களாகவோ, அகதி நிலை கோரி அதன் முடிவு தெரிவதற்காகக் காத்திருக்கும் 18 வயதிற்கு மேற்பட்டவர்களாகவோ, கனடாவில் இருந்தால் அதற்கான விதிவிலக்குகள் உண்டு.

அகதி நிலை கோரிக்கை விசாரணைக்கு எடுக்கப்பட்டால், உங்களைப் பற்றிய தகவல்களை நீங்கள் கொடுக்க வேண்டிவரும். குறிப்பாக உங்கள் பிறந்த திகதி, எந்த நாட்டைச் சேர்ந்தவர், திருமணமானவரா, உங்கள் குடும்பத்தில் எத்தனை குடும்ப அங்கத்தவர்கள், எப்படி, எந்தப் பாதையால் நீங்கள் கனடாவிற்கு வந்தீர்கள், ஏதாவது குற்றங்களில் ஏற்கனவே சம்பந்தப் பட்டிருக்கிறீர்களா, நீங்களோ அல்லது உங்கள் குடும்ப அங்கத்தவர்களோ வேறு எந்த நாட்டிலாவது அகதிநிலை கோரியிருக்கிறீர்களா? உங்கள் நாட்டுக்குத் திரும்பிச் செல்வதற்குப் பயப்படுகிறீர்களா, அப்படியாயின் யாருக்குப் பயப்படுகின்றீர்கள், ஏன் பயப்படுகிறீர்கள் போன்ற தகவல்களை விசாரனைகள் நடைபெறும் போது உங்களிடம் எதிர்பார்ப்பார்கள். நம்பக்கூடிய சரியான தகவல் கொடுத்தால், அதைத் தொடர்ந்து மூன்று நாட்களுக்குள் நீங்கள் அகதி நிலை பெறுவதற்குத் தகுதி உடையவரா இல்லையா என்பதைத் தெரிவிப்பார்கள். உங்களுடைய விண்ணப்பம் ஏற்கப்பட்டால், நிரந்தர வதிவுரிமைக்காக நீங்கள் விண்ணப்பிக்கலாம். உங்களுடைய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் அடுத்த நடவடிக்கையை நீங்கள் எடுக்கலாம். உதாரணமாக மனிதாபிமான அடிப்படையில் (Humanitarian and Compassionate) நீதி மன்றத்திற்கு உங்கள் நிலையை எடுத்துச் சொல்லி விண்ணப்பித்துப் பார்க்கலாம்.

நீங்கள் அகதி நிலை கோருவதற்குத் தகுதி அற்றவர் என்பதைக் கணிப்பதற்கும் சில விதி முறைகள் இருக்கின்றன. கனடாவில் ஏதாவது குற்றம் செய்து குறைந்தது இரண்டு வருடங்களாவது சிறைத் தண்டனை அனுபவித்திருந்தால், அல்லது பாரதூரமான குற்றங்கள் ஏதாவதில் கனடாவுக்கு வெளியே நீங்கள் சம்பந்தப் பட்டிருந்தால், உங்களால் கனடிய குடிமக்கள் பாதிக்கப் படலாம் என்று அபிப்பிராயப்பட்டால், உங்கள் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.

இலங்கையில் உள்ள மனித அவல நிலையைக் கருத்தில் கொண்டு மனிதாபிமான முறையில் கனடிய அரசாங்கம் சில நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க இருக்கின்றது. குறிப்பாக இலங்கைக்கான குடிவரவு நடைமுறைகளைத் துரிதப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இலங்கையில் உள்ள உங்கள் குடும்ப உறுப்பினர்கள் சமீப காலங்களில் ஏற்பட்ட நிலவரங்களால் பாதிக்கப்பட்டிருந்தால், கனடிய குடிவரவுத் திணைக்களம் எதிர்பார்க்கும் குறிப்பிட்ட தகுதிகள் அவர்களுக்கு இருந்தால் அவர்கள் உடனடியாக விண்ணப்பிக்கலாம் என்று கனடிய குடிவரவு திணைக்களத்தினர் அறிவித்திருப்பதாகத் தெரியவருகின்றது. பாதிக்கப்பட்ட குடும்ப அங்கத்தினருக்கு அனுசரணை வழங்கும் ஒருவர் கனடிய குடிவரவு குடியுரிமைத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டால் அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும். தாமதம் செய்யாமல் பாதிக்கப்பட்ட உங்கள் இனத்தவர்களுக்கு இந்த வகையில் நீங்கள் உதவி புரியமுடியும். உங்கள் உதவியுடன் பல்கலாச்சார நாடான கனடாவிற்கு வர இருக்கும் புதிய மருமக்களை வருக வருக என்று இச்சந்தர்ப்பத்தில் நாங்களும் வரவேற்கக் காத்திருக்கிறோம்.

இது பற்றிய விபரங்களை பின்வரும் தொலை பேசி இலக்கங்களை தொடர்பு கொள்வதன் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

தொலைபேசி இலக்கங்கள்:

**Legal Aid –**
**Tall free outside Toronto -1-800-668-8258**
**In Toronto - 416-979-1446**
**Toll free TTY - 1-886-641-8867**
**In Toronto TTY - 416-598-8867**

**CIC – Citizenship and Immigration Canada**
**CBSA – Canadian Border Services Agency**
**IRB – Immigration and Refugee Board**
**PRRA – Pre-Removal Risk Assessment**

kuruaravindan@thaiveedu.com

**TYPE SETTING**

**தமிழிலும் ஆங்கிலத்திலும் தட்டெழுத்து செய்து கொடுக்கப்படும்.**

**தொடர்புகொள்ளவும்.**

**416 551 3972**

# கௌரவ ஊர்வலம்

- குமார் புனிதவேல் -

எங்கேயும் கேள்விப்படாத ஊர்வலம் என்று ஒதுக்கிவிடவேண்டாம். பல சர்ச்சைக்கும், கேலிக்கும் தள்ளப்பட்டுள்ள Pride Parade (ரொறன்ரோவில் யூன் 28ம் திகதி இடம் பெற்றது) பற்றி சில தகவல்களைத் தருகிறேன். இரசித்து சுவைப்பீர்கள் என்று எண்ணுகிறேன்.

உலகில் பல வகையான ஆமைகள் உண்டு. சில குளத்தில் வசிக்கும், சிலகிணற்றில் வசிக்கும். ஏன், கடலில் சமுத்திரத்தில் கூட வசிக்கும். தமிழில் ஒரு வாசகம் உண்டு. “ஆமை புகுந்த வீடும், அமீனா புகுந்த வீடும் உருப்படாது” என்று. இதில் குறிப்பிடப்படும் ஆமை பொறாமை. அமீன் என்பது வழக்காடு-மன்ற அறிக்கை கொண்டுவருபவர். இவர்கள் வந்தால் கட்டாயம் வீடு சீர்குலைந்துபோகும். இந்த பொறாமையைவிட கொடிய ஒரு ஆமை உண்டு. அதுதான் அறியாமை. எனவேதான் இந்த கௌரவ ஊர்வலமும் அது சம்பந்த-மான தகவல்களையும் தரலாம் என்று எண்ணுகிறேன்.

முன்னைய காலங்களில் கொடிய நோய்கள் பரவாமல் இருப்பதற்காக அவர்களை ஒதுக்கி வாழவைத்தார்கள். இதற்கு தொழுநோய் நல்ல உதாரணம். ஆனால் அது தவறு என்பது இப்போது புரிகிறது. காரணம் தவிர்க்க முடியாமல் ஒரு நோய் வந்தால் அவர் வாழ் நாள் முழுவதும் அவஸ்தைப்பட வைப்பது தவறல்லவா?

சரி, இனி கௌரவ ஊர்வலத்திற்கு வருவோம். உயிரினங்களுக்கு இருக்கும் மிக வலுவான உந்துசக்தி பாலியல் கவர்ச்சிதான். இந்த கவர்ச்சிதான் அந்த இனத்தின் தொடர்ச்சி-யை உறுதிப்படுத்துகிறது. இயல்பு நிலை பாலினக் கவர்ச்சி இல்லாதிருப்பது ஒரு குறை என்று சொல்லலாம். ஆனால், மூன்று வேறு பரிமாணங்களை எடுக்கிறது. ஒன்று தன்னினக் கவர்ச்சி (Homosexuality) இரண்டாவது எதிர் இனக் கவர்ச்சி (Bisexual). இறுதியாக மூன்றாவது சர்வ இனக் கவர்ச்சி (Hereto sexual). இதில் மிகப்பெரிய பங்கு எதிர் இனக் கவர்ச்சி அல்லது மற்ற இனக் கவர்ச்சி. மற்ற இனத்தில் கவர்ச்சி இருந்தால்தான் அந்த இனம் தொடர்ந்து வளரும். எனவே, இவர்கள் மற்றவர்களை இயற்கைக்குப் புறம்பானவர்-கள் என ஒதுக்கிவைக்க முற்பட்டார்கள். 18ஆம் நூற்றாண்டுகளில் இவர்கள் மேற்கு நாடுகளில் மரண தண்டனையால் தண்டிக்-கப்பட்டார்கள். ஆனால், 1977இல் WHO இதனை ஒரு நோயாக ஆவணப்படுத்தியது. ஆனாலும் 1990ஆம் ஆண்டில் இது அப் பட்டியலிலிருந்து விலக்கப்பட்டது. எனவே, அடிப்படையில் இது படைப்பில் ஒரு வேறு-பாடு என்றுதான் கூறவேண்டும். உதாரண-மாக பிறக்கும்போதே குருடாக, நொண்டி யாக, ஊமையாக பிறப்பதில்லையா? அது போல இவர்கள் பாலினக் கவர்ச்சி பெரும் பான்மையினரிலும் மாறுபட்டதாக இருந்தது. இதனால் சமூகம் இவர்களை ஒதுக்கிவைத்தது. இத்தகைய பாரதூரமான சமூகத் தாக்குத-லால் இவர்களுக்கு பல மனநோய்கள் ஏற்படக் காரணமாகியது.

இதைவிட இயற்கைக்கு மாறாக பாலியல் தொடர்பு வைப்பதன்மூலம் பலருக்கு வேறு நோய்கள் தொற்றத் தொடங்கின. இதில் முக்கியமாக எய்ட்ஸ் நோயைக் குறிப்பிடலாம். இதனால் இவர்கள் மேலும் ஒதுக்கப்பட்டவர் களானார்கள். இந்நிலையில்தான் ‘70களில் சில பிரபல்யமான நடிகர்கள், நடிகைகள் முன்வந்து தமது இனக் கவர்ச்சியை உலகுக்குச் சொன்னார்கள். இதற்கு நல்ல உதாரணம் Rock Hudson. இவருக்கு Willson என்பவருக்கும் இடையில் இருந்த தன்னினத் தொடர்பு வெளிவந்த போது உலகமே மலைத்தது. இவரும் எய்ட்ஸ் நோயினால் மரணித்தது குறிப்பிடத்தக்கது.

இன்னுமொரு பிரபல்யமானவரை இங்கு குறிப்பிடலாம். அவர்தான் சிறந்த சிந்தனை-யாளரும் எழுத்தாளருமான Oscar wide. இவர் 1854இல் அயர்லாந்தில் பிறந்து 1900இல் இறந்தார். இவரது எழுத்து நல்ல சிந்தனையும் கருத்தாழமான நகைச்சுவையும் நையாண்டி பண்ணுவதாயும் இருந்தது. இவரது பாலியல் நடத்தைக்காக சிறைசென்று பின் பிறந்த நாட்டைவிட்டு வெளியேறினார். இவர் மரணத்-




திற்கு பாலியல் உறவால் ஏற்பட்ட நோய் எனவும் கூறுவர்.

எனினும் Rock Hudson போன்றவர்கள் முன் வந்து தமது பாலியல் உறவுகளை பரகசி-யமாக்கியதால் மற்றவரும் துணிந்து முன்-வந்து சொன்னார்கள். இதன் விளைவுதான் தன்னினச் சேர்க்கையாளரும் சர்வ இனச் சேர்க்கையாளரும் பகிரங்கமாக தமக்கு கௌரவம் தரவேண்டினார்கள். இவர்களில் பலர் செல்வந்தர்களாக இருந்தமையால் தமக்கு பரிந்துரை செய்ய (lobby) வல்லவரை ஏற்படுத்தி pride procession எனும் கௌரவ ஊர்வலத்தை 70களில் ஏற்படுத்தினார்கள். தமது இயக்கத்திற்கு வானவில் நிறங்கள் உடைய கொடிகளைப் பாவித்தார்கள். ஆரம்ப காலங்களில் இவ்வூர்வலங்களில் பலர் ஆபாசமான கோலங்களில் பவனிவந்தார்கள்.

ஆனால், இப்போது அதற்கான தேவை அருகிவருவதால் ஆபாசம் குறைந்து ஒரு மகிழ்ச்சியான பலரும் கண்டுகளிக்கக்கூடிய ஊர்வலமாக உருவெடுத்துள்ளது.

பல அரசியல் தலைவர்கள், வியாபார, நிதி அமைப்புகள், வங்கிகள் எல்லாம் இவ்வூர்-வலத்தில் பங்கெடுப்பதை காணக்கூடியதாக உள்ளது. இங்கு ஒரு பெரும் குறையுண்டு. அதையும் கூறிவைக்கலாம் என்று நினைக்-கிறேன். ரொறன்ரோவில் நகரசுத்தித் தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்துள்ள இத்தருணத்தில் தமது பரிந்துரையாளர்களின் செல்வாக்கால் இந்த ஊர்வலம் சிறப்பாக நடந்தது. ஆனால்... கனடா தின ஊர்வலங்-கள், கேளிக்கைகளை ரொறன்ரோ நகரசபை தவிர்த்துள்ளது மிக வேதனை தரும் விடய-மாகும். பரிந்துரை அமைப்புகளின் ஆக்கிர-மிப்புச் சக்தியை இது பிரதிபலிக்கிறது. இது நாட்டுக்கு ஆரோக்கியமானதல்ல எனக்கூறி முடிக்கிறேன்.

kumarpunithavel@thaiveedu.com

■ ■ ■


வீட்டுக்கடன் காப்புறுதி திட்டம்

Mortgage Life Insurance

**வங்கிக் கடன் காப்புறுதி**

01. வங்கியே உடமைக்காரர்.
02. வங்கியின் அதிகாரத்தில் இருக்கிறது.
03. கடன் தவணைகள் தவறினால் காப்புறுதி செயலிழந்து விடும்.
04. வங்கியே பாத்தியக்காரர்.
05. உங்கள் காப்பு தொகை குறைந்துகொண்டே வரும்.
06. காப்புறுதிக்கு திரும்பவும் விண்ணப்பிக்கவேண்டும்.
07. காப்புறுதி தொகை, கடன் தொகையை தாண்டக்கூடாது.
08. கடனை முற்றிலும் தீர்க்கவேண்டும்.
09. நீட்டவோ மாற்றவோ முடியாது.
10. திட்டமில்லாத வைப்புகளுக்கு சலுகை இல்லை.
11. காப்புறுதி எடுத்தவர் இறந்த பிற்பாடே வங்கி அதன் தராதரங்களை முற்றாக ஆராயும்.
12. வங்கி காப்புறுதி மிகவும் கூடிய செலவு.
13. வங்கி காப்புறுதியை எப்பவும் லண்டன் லைஃப் காப்புறுதிக்கு மாற்றலாம்.
14. முடிவு உங்களுடையது, வங்கியுடையது அல்ல.

**லண்டன் லைஃப் காப்புறுதி**

01. காப்புறுதி எடுத்தவரே உடமைக்காரர்.
02. காப்புறுதி எடுத்தவரே அதிகாரம் கொண்டவர்.
03. கடன் தவணைகள் தவறினாலும் காப்புறுதி செயலிழக்காது.
04. உங்கள் பாத்தியக்காரராக யாரையும் நீங்கள் நியமிக்கலாம்.
05. உங்கள் காப்பு தொகை நிரந்திரமானது, காப்புறுதி தவணையும் ஒரே அளவானது.
06. கடன் உதவியவரை மாற்றினாலும் காப்புறுதி தொடரும்.
07. காப்புறுதி தொகையை உங்கள் தேவைப்படியும், வசதிப்படியும் தீர்மானிக்கலாம்
08. உங்கள் உரிமைக்காரர் பணத்தை தக்கவைத்துக்கொண்டு அதன் வருமானத்தில் தவணைகளைக் கட்டலாம்.
09. உங்கள் காப்புறுதியை மிண்டும் புதுப்பிக்கலாம் மாற்றலாம்.
10. திட்டமில்லாத வைப்புகளுக்கு சலுகை உண்டு.
11. காப்புறுதிகளின் தராதரம் விண்ணப்ப சமயத்தில், தீர்மானிக்கப்படும்.
12. எங்களுடையது போட்டிகளை எதிர்த்து நிற்கும் வல்லமை கொண்டது.
13. மேற்சொன்ன காரணங்களினால் இதுவே சிறந்தது.

Freedom 55 Financial
A division of London Life Insurance Company



பாலா பாலசுந்தரம் B. Eng
சிறந்த விற்பனையாளருக்கான விருது பெற்றவர்
Office: 416-291-0451 Ext.227
Cell: 416-518-9489
300-2075 Kennedy Rd, Toronto. ON M1T 3V3

E-mail: bala.balasundaram@freedom55financial.com | Now Representing Manulife, Sunlife & Greatwest Life.

# மணத்தக்காளி...

42ம் பக்கத் தொடர்ச்சி...

நித்திரையை உண்டாக்கும். மணத்தக்காளிக் கீரை இதயத்தை பலமாக்கும். கல்லீரல் மண்ணீரல் மற்றும் உடலில் ஏற்படக்கூடிய எந்தவிதமான வீக்கத்தையும் குறைக்கும். மூலநோய் தீரும். நீண்ட காலம் நோய்வாய்ப்பட்டு இருந்து குணமானவர்கள் அல்லது இயல்பாகவே உடல் பலவீனப்பட்டவர்கள் உடலைத் தேற்றுவதற்கு அதிக அளவு ஊட்டச் சத்து நிறைந்த இந்தக் கீரையைப் பயன்படுத்தலாம். இந்தக் கீரையை வெவ்வேறு விதமாகச் சாப்பிட்டு வந்தால் எந்த மாதிரியான நோயையும் போக்கலாம் என்பது நாட்டு வைத்தியர்களின் கருத்து.

இந்தக் காலத்தில் 'துரித உணவு' சாப்பிடும் பழக்கம் நம்மிடையே துரிதமாகப் பெருகிக் கொண்டு வருகிறது. தரம் குறைந்த துரித உணவை உண்ணும் பழக்கமே குடல் புண் வருவதற்கு முக்கிய காரணம் என்பது பொதுவான கருத்து. பெப்டிக் அல்சர் எனப்படும் குடல் புண்ணை ஆற்றிக் குடல் புழுவை அகற்றிக் குடலைப் பலப்படுத்துவதற்கு மணத்தக்காளி முன்னணியில் நிற்கிறது. வாயில் புண், வயிற்றில் புண், குடலில் புண் மற்றும் ஏனைய உள்ளுறுப்புகளில் புண் இருந்தாலும் அவற்றைக் குணப்படுத்த மணத்தக்காளியில் அதிக அளவில் காணப்படும் பீ – கொம்ப்ளக்ஸ் உதவுகிறது என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள். அல்சரை அடித்துத் துரத்தித் தூரத்தில் நிறுத்தும் ஆற்றல் உள்ள அற்புத மூலிகை மணத்தக்காளி.

மணத்தக்காளிச் செடியை வீட்டுத் தோட்டங்களிலும் வளர்க்கலாம். மணத்தக்காளிக் கீரை கிடைக்காத போது அதன் காய்களையோ பழங்களையோ பயன்படுத்தலாம். இவையும் கிடைக்காத நேரத்தில் வற்றலைப் பயன்படுத்தலாம். வற்றலை நாங்களே வீட்டில் தயார் செய்து கொள்ளலாம். மணத்தக்காளியின் முற்றிய காய்களை இளம் வெயிலில் ஒரு நாள் முழுவதும் காயவைத்து, காய்ந்த பின்னர் தேவையான உப்பையும் சேர்த்து புளித்த தயிரில் மூன்று நாட்களுக்கு ஊற வைத்து, தயிர் வற்றிக் காய்கள் நன்கு ஊறிய பின்னர் மீண்டும் வெயிலில் நன்றாகக் காய வைத்துக் கண்ணாடிப் பாத்திரங்களில் போட்டுப் பத்திரப்படுத்தலாம். வற்றலில் குழம்பு வைக்கலாம். பொரித்து உண்ணலாம். பொரித்துப் பொடி செய்து உணவுடன் சேர்த்துச் சாப்பிடலாம். மணத்தக்காளி வற்றலை நல்லெண்ணையில் பொரித்துத் தயிர்ச் சாதத்துடன் சாப்பிட்டுவர சளித் தொல்லை நீங்கும், அல்சர் குணமாகும்.





நாக்கில் சுவையுணர்வு அற்ற தன்மையை நீக்கி வாந்தியுணர்வைக் குறைக்கும் குணம் மணத்தக்காளி வற்றலுக்கு உண்டு. எனவே கர்ப்பமான பெண்கள் மிகவும் குறைந்த அளவில் இந்த வற்றலைப் பயன்படுத்தலாம்.

மணத்தக்காளி பெண்களுக்கு ஒரு வரப்பிரசாதமான செடி என்று மருத்துவ நூல்களில் காணப்படுகின்றது. பெண்களின் மார்பை வளரச் செய்வதோடு கர்ப்பப்பையின் குறைபாட்டையும் நீக்கும். மணத்தக்காளியின் கீரை, காய், பழம், வற்றல் ஆகிய யாவும் உணவில் சேர்க்கப்படுகின்றன. குழம்பு வைக்கலாம். பருப்புடன் சேர்த்துக் கறி சமைக்கலாம். சாம்பாருக்குள் போடலாம்.

ஒரு காலத்தில் எங்களுக்குப் பக்கத்து வீட்டில் மயில்வாகனம் என்று ஒருவர் தனது குடும்பத்துடன் இருந்தார். அவரைச் சும்மா மயில்வாகனம் என்றால் பலருக்குத் தெரியாது. 'மப்பர்' மயில்வாகனம் என்றால்தான் தெரியும் என்று நினைக்கிறேன். தினசரி அவர் வேலை முடிந்து இரவு ஒன்பது பத்து மணிக்குப் பிறகு நல்ல 'மப்பில்' வீட்டுக்கு வருவார்.

அவர் ஒரு நாள் சாமத்தில் வந்து எங்களுடைய வீட்டுக் கதவைத் தட்டி, "நீங்கள் ஆர்? இஞ்சை என்ன நடக்குது? வாசலில் நின்ற பெரிய மரம் எங்கே?" என்று கத்தினார்.

"இல்லை அண்ணை, அந்தப் பெரிய மரம் உங்கடை வீட்டு வாசலில் இப்பவும் நிற்குது. இது எங்கடை வீடு. நீங்கள் வீடு மாறி வந்திட்டியள்" என்று சொன்னேன். அவர் என்னை நம்பவில்லை. சரியான கோபத்தோடு திரும்பிப் போனார்.

அதிக அளவில் மது அருந்துவதால் உடலின் உள்ளுறுப்புகளுக்கு ஏற்படக் கூடிய பாரிய பாதிப்புகளைத் தீர்க்கக் கூடிய மிகவும் சிறந்த மாமருந்து மணத்தக்காளி. மணத்தக்காளியின் மகத்துவம் பற்றி 'மப்பர்' மயில் வாகனத்துக்குச் சொல்ல வேண்டும் என்று நீண்ட நாட்களாக அவரைச் சந்திக்க முயன்று வருகிறேன். ஆனால் அந்த மனுஷனை எப்போது சந்தித்தாலும் ஒரு 'கொழுவல்'பார்வையுடன்தான் என்னை முறைத்துப் பார்க்கிறார். அதனால் மணத்தக்காளிக் கீரையைப் பற்றி அவரிடம் இன்னமும் சொல்லவில்லை.

தொடரும் ...!

uthayanan@thaiveedu.com

Arajen Dress Making



சாறி, பிளவுஸ், சட்டை, சுடிதார், ஸ்கேட் மற்றும் உடை வகைகள் உங்கள் மனதுக்குப் பிடித்த வண்ணத்தில் தைத்துக்கொடுக்கப்படும்

திருத்தவேலைகள்
சிறிய திருத்த வேலைகளைச் செய்து கொள்ள அழையுங்கள்

பயிற்சி வகுப்புக்கள்
2நாள் பயிற்சி வகுப்பில் சாறி, பிளவுஸ் தைக்கலாம்

அரஜன் அழகு நிலையம்
2605-A Eglinton Ave. E.,Scarborough, ON M1K 2S2
(இரா சுப்பர் மார்க்கட் மேல் மாடியில்)
Tel: 416.509.7978
Web: www.arajenbeauty.ca, E-mail: sasi@arajenbeauty.ca

www.arajenbeauty.ca

ARAJEN CAKE HOUSE
Wilton Cake decorating classes




Wilton Cake decorating classes
Basic/Advance courses
Gun paste flowers
Candy Making
Cookie blossoms
Ginger bread houses
And More...

Wedding Cake
Engagement Cake
Birthday Cake
Rich Cake
Cheese Cake
Marble Cake
Eggless Cake and More...

by a Wilton Certified instructor

கேக் அலங்காரப் பொருட்கள் அனைத்தையும் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
உங்கள் அனைத்து கேக் தேவைகளுக்கும் அழையுங்கள்
Sasi Naren
Diploma in Cake Making
Twenty years experience in cake making
Tel: 416-509-7978
2605-A Eglinton Ave. E.,Scarborough, ON M1K 2S2, (இரா சுப்பர் மார்க்கட் மேல் மாடியில்)

# 85 வயதுவரை ஆயுட்காப்புறுதி...

எண்பது வயதைத் தாண்டி விட்டோம் இனி நமக்கு Insurance எடுக்கமுடியாமல் போய்விட்டதே என எண்ணி ஏங்குபவர்கள்அந்த மனக்கவலையை விடுங்கள். வைத்திய பரிசோதனை அற்ற காப்புறுதி 85 வயதுவரைக்கும் எடுக்கலாம்.

## அதுவும் மிகக் குறைந்த விலையில்.



**Life**
Universal Life
Whole Life
Term Life

**RRSP**
Loan Aproved
Even SIN Number 9

**RESP**
+
20% Government Grant
15% Company Bonus

**Critical Illness**
Upto 25
Illness

digi Media



Insurance Broker

## Guna Selliah

**416.371.7776**

Assumption Life

IA

RBC

759 Warden Ave., Toronto, Ontario, M1L 4B5, Tel: 416.759.5453 ext: 401
Fax: 416.759.6220, E-mail: guna@lilandinsurance.com

# நிறுதிட்டம்...

47ம் பக்கத் தொடர்ச்சி...

ஒரு திடப்பொருள் அதனால் வெளியேற்றப்படும் கனவளவு நீரின் நிறைக்குச் சமமானது என எண்பித்திருக்கிறது விஞ்ஞானம். அந்த அளவையின்படி ஒரு கப்பல் சாமான்கள் எதுவுமின்றி கடலில் அதன் அதிகூடிய உயரத்தில் நின்றுகொண்டிருக்கும். சாமான்கள் ஏற்றி விட்டால் அதன் ஆகக்கூடிய பாதுகாப்பான ஆழத்தில் போய்விட்டிருக்கும். மேற்தள சாமான்கள் கப்பல் ஏற்றக்கூடிய, இன்னொரு விதமாகச் சொன்னால் அந்த பாதுகாப்பான அளவைத் தாண்டிவிடாத, அளவுக்கே ஏற்றப்படவேண்டும். சீரான காலநிலைக் காலங்களில் அந்த அளவைத் தாண்டிய பாரங்கள் ஏற்றப் பட்டு கப்பல்கள் செல்லிடத்தை ஆபத்தேது மின்றி அடைந்த சம்பவங்களும் நடந்திருக்கின்றன.

சாமான்கள் ஏற்றப்பட்ட பின் சிகரெட் புகைக்க மேற்தளத்துக்கு வந்தபோது கலாபன் கீழே பார்த்திருக்கிறான். கப்பலின் வெளிப்பக்கத்தில் தெளிவாக அளவுக் கோடுகள் இடப்பட்டிருந்த பாதுகாப்புச் சிவப்புக் கோட்டு எல்லை மறைந்தே இருந்தமை அவனுள் திடுக்காட்டத்தை ஏற்படுத்தியது. என்றாலும் கலாபன் பெரிதாக அதைத் தொடர்ந்தும் யோசனையிலெடுத்து கவலைப்பட்டுக் கொள்ளவில்லை. கப்பலில் முப்பத்தேழு பேர் கூடவிருக்கிறார்கள் என்பது எவருக்கும் அச்சத்தைத் தணிவிக்கிற அம்சம்தான்.

தென்சீனக் கடலைத் தாண்டியதும் கடல் சமுத்திரமாகிவிட்டது. பசுபிக்காய் வெளித்துக் கிடந்தது. தன் குமுறலை அது வெளிப்படுத்திய முறையானது, கப்பலைப் பந்தாடியமாதிரி இருந்தது. சாமான்களோடு சேர்த்து ஏறக் குறைய முப்பத்துமூவாயிரம் தொன் நிறையிருந்த கப்பலை அது பூப்பந்துபோல எறிந்து விளையாடியது. கப்பல் குமுறும் கடலின் வீச்சையெதிர்த்து ஐம்பதடி நகர்ந்ததெனில், ஓர் அலைவந்து அதனைத் தூக்கி முப்பதடிகள் பின்னால் வைத்துவிடும். கப்பல் இயந்திரம் மூசிமூசி வேலைசெய்தது. இவையெல்லாம் அச்சத் துளிகளைத் தெளிக்க ஆரம்பித்திருந்தது. மூன்றாம் நாளில் மாலை மெல்ல மறைந்து, கறுப்புக்கானதாய் எழுதப்பட்ட அந்தக் கரியஇரவு வந்தது. பசுபிக் சமுத்திரம் பயங்கர வடிவமெடுத்திருந்தது அந்த இரவில். கப்பலையே விழுங்கி ஏப்பமிட்டுவிட அப்படியொரு விறுமாண்டித்தனத்தில் சுழன்றடித்தது. கப்பலில் எங்கெங்கோ என்னென்னவோ பொருட்கள் விழுந்து உருண்டன. சில சிதறின. கலாபனால் தூங்கவே முடியவில்லை. சரியும் கப்பலில் ஒரு பக்கமாக ஏறும் நீர் மறுபக்கம் சரியும்வரை மேற்தளத்தில் உருண்டோடி விளையாடியமை சளசளவெனக் கேட்டது. மறுபடி அது மறுபக்கம் சாய்ந்து வழியும்வரை அந்த மரண இருப்பின் ஒலி கேட்டுக்கொண்டே இருந்தது.

கலாபன் தேவைகள் துரத்த கப்பல் வேலைக்கு வந்தவன். ஆசை ஒரு காரணமாயிற்று பின்னால். ஆனால் அதற்காக அவன் செத்துவிட முடியாது. செத்துவிடுவதை லேசாக நினைத்து விடவும் முடியாது. கப்பல் அந்தமாதிரி நிலைகெட்டு ஆடிய பொழுதுகளெல்லாம், மரணத்தின் கூத்தாய் இருந்துகொண்டிருந்தது. அது எப்போது நிற்கும்? எப்போது தூக்கம் கொள்வது? எப்போது அந்த இறுகிய பொழுதுகள் கரைந்து மனச்சுமையற்ற நிம்மதி மூச்சு விடுவது? பசுபிக் சமுத்திரத்துள்ளிருந்து மரணம் தன்னை உற்றுப் பார்த்துக்கொண்டிருப்பதாய் எண்ணியெண்ணி கலாபன் கலங்கியிருந்த நாள்கள் அவை.

பசுபிக் சமுத்திரத்தினுள் பிரவேசித்த ஐந்தாம் நாள் ஓரளவு சமுத்திரத்தின் ஆர்ப்பரிப்பு அடங்கியது. மறுநாள் அந்த தை மாதக் காலையில் நெடுநாட்களின் பின்னான சூரியன் காணப்பட்டது. காற்று மெல்ல ஆடியபடி இருந்தது.

ஆனாலும் இன்னும் ஏதோ அசௌகரிகம் இருந்துகொண்டேயிருக்கிறதே, ஏன்?

வெளியே வந்து பார்த்தபோதுதான் தெரிந்தது காரணம். கப்பல் ஏறக்குறைய இருபது பாகை சரிந்து போய்க்கொண்டிருந்தது. கப்பல் மேற்தளத்தில் ஏற்றிக் கட்டப்பட்டிருந்த போர்ட் பக்க மரங்கள் கட்டறுத்து வந்து ஒருபக்கமாய்ச் சிதறி ஒதுங்கியிருந்தன. மேலே வீல் கவுஸிலிருந்து கப்ரினும் பார்த்தான். அது பயப்படவேண்டிய அளவுக்கில்லையென்று சொன்னதோடு கலாபன் உட்பட எல்லோருமே நிம்மதியடைந்தார்கள்.

ஆனால் பிரச்சினை போகப்போகத்தான் வலுத்தது. கப்பல் சிறிதுசிறிதாக ஸ்ராபோர்ட் பக்கமாய் மேலும் சரிய ஆரம்பித்து விட்டது. கப்பல் பசுபிக் சமுத்திரத்தில் இன்னும் பாதித் தூரத்தைத் தாண்டவில்லை. ஹவாய்த் தீவுகள் கண்ணிலும் காணப்படவில்லை. ஓரளவு காலநிலையின் சீர்ப்பாடு இருந்தாலும், அதுவொன்றும் மன நிம்மதியைத் தரக்கூடிய அளவுக்காயில்லை. இரண்டு மூன்று நாட்களில் கப்பல் முப்பது பாகை சரிந்து போனது. கடலின் சாதாரண அலையே கப்பலுக்குள் ஏறி இறங்கவாரம்பித்துவிட்டது. சரிந்த பக்கத்தின் வட்டக் கண்ணாடி ஜன்னல் நீருள் தாழ்ந்தே இருந்தது. சில கபின்களுக்குள் இறுக்கிய ஜன்னல்களூடேயும் கடல்நீர் கசிந்தது.

ஒரு கப்பல் அவ்வாறான சமயங்களில் தன்னை நிறுதிட்டப் படுத்தப்படுவதற்கான உபாயங்களை இயல்பிலேயே கொண்டிருக்கும். உயர்ந்த பக்கத்தின் கீழேயுள்ள நீர்த் தாங்கிகளில் கடல்நீரை நிறைப்பதன்மூலம் அதைச் செய்ய முடியும். அவ்வாறு அமைக்கப்பட்டவற்றை பாலஸ்ற் ராங்க் என்பார்கள். அவை இன்னொரு வகையாகவும் தொழிற்படும். அந்த ராங்குகளில் நிறைக்கப்படும் நீர் கப்பலொன்று காற்றின் பலத்தால் சரிக்கப்படும்போது, அப்படியே கவிழ்ந்து கடலுக்குள் அமிழ்ந்து விடாமல், விழுந்தஒருவரை கையைப் பிடித்துத் தூக்கிவிடுவதுபோல் நிமிர்த்தி விட்டுவிடும். அந்த முறையின் மூலம்கூட கப்பலை நிமிர்ந்து செல்லவைக்க முடியவில்லை.



எண்ணெய்ப் பசை அதிகமான இடமாதலால் கீழே இயந்திரப் பகுதியில் வேலைசெய்த கலாபனுக்கு இன்னும் சிரமமாக இருந்தது. வேறுபேர் அடி பெரிதாக இல்லையென்றாலும் கீழே விழுந்தெழுந்தார்கள்.

மேலே சுக்கான் அறையில் வேலைசெய்த சாந்தன் கப்பல் சரியாக முப்பத்தைந்து பாகை சரிந்துவிட்டதாகச் ஒருநாள் சொன்னான். அப்போதுதான் ஒரு மதிய சாப்பாட்டு நேரத்தில் மெஸ்ஸில் வைத்து ஸ்பானியன் ஒருவன் சொன்னான், அப்படியான நேரத்தில் மேற்தள சாமான்களை கடலில் எறிந்துவிடுவதுதான் வழக்கமென்று. கப்ரின் ஏன் அவ்வாறு செய்யவில்லை? கப்பலினதும் சாமான்களினதும் காப்புறுதிப் பணத்தை மோசடிசெய்ய இப்படி ஓர் ஏற்பாடோ? எல்லோர் மனத்திலும் ஒரு பயம் உறைய ஆரம்பித்தது.

மறுநாளிலிருந்து அதுவே எவரினதும் பேச்சாகிப் போனது. கடலோடிகள் அவ்வாறு பேசுவது கப்ரின் காதுகளிலும் விழுந்திருக்கிறது. அல்லாமல் அவனாகவுமே இனி அதுதான் வழியென்று நினைத்துமிருக்கலாம். ஆனாலும் எழுந்தபாட்டுக்கு தன் முடிவுப்படியே அம்மாதிரிக் காலநிலையுள்ள காலங்களில் அவனால் நடந்துவிட முடியாது. கப்ரின் தலைமையகத்துக்கு உடனே வானொலிச் செய்தி அனுப்பினான் நிலைமையை விளக்கி. அவனை எதுவித நடவடிக்கையும் எடுக்கவேண்டாமெனச் சொன்ன தலைமையகம், உடனடியாக கப்பலைக் கட்டிய கம்பெனியுடன் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கியது.

சில மணிநேரங்களின் பின் தலைமையகத்தின் முடிவையறியக் காத்திருந்த கப்பல் கப்ரினுக்கு பதில் வந்தது. அந்தக் கப்பல் நாற்பத்தைந்து பாகைகள் சரிந்தும் பயணக்கூடிய ஸ்திதி கொண்டது என்றும், மேற்தள சாமான்களை கடலுள் வீசவேண்டியதில்லையென்றும் வந்த பதிலைத் தெரிந்தபோதுதான் கலாபன் நிம்மதி மூச்சுவிட்டான்.

எந்தவொரு பொருளுமே தன்னைத் தக்கவைக்க ஒரு புள்ளியில் நிலைகொள்ளும் ஆற்றல் கொண்டதாகவே இருக்கும். கப்பல் ஒரு மனிதன்போல. அதற்கும் முதுகுத் தண்டு உண்டு. விலா எலும்புகள் உள. மனிதனது நிலைப்பின் தளம் எது? பாதங்கள் என்று சொல்லலாமா? ஆம், பாதங்கள்தான். அதன் மீது நிற்பது நடப்பது மட்டுமில்லை, அக்கம் பக்கம் சரியவும் செய்கிறான். அதுபோலத்தான் கப்பலும். அது நீரில் பயணப்படக் கட்டப்பட்டது. சொல்லப்போனால் கடலின் தன்மை தெரிந்து அதன் விசித்திரங்களுக்குத் தாக்குப் பிடிக்கும் நிலைமை அதற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மனிதர்களின் வாழ்க்கை ஏறக்குறைய இது போலத்தான். எதுவும் சாய்ந்துவிடலாம், ஆனாலும் கவிழ்ந்துவிடாது. மனித மனத்தின் அழுகையை, அவலத்தைத் தாங்கி நிலை பேறடைய உலகில் ஏதோ ஒன்று இருக்கவே செய்யும். அதற்கான தேடல்தான் அவசியம்.

நேற்று மரணம் நிகழாத மண்ணில்லை நான் இன்று வாழ்வது. நேற்று மரணம் நிகழாத வீடில்லை என்னதாய் இன்று இருப்பது. ஆனாலும் நாம் வாழ மட்டும் செய்யவில்லை, நாளையைப்பற்றிக் கனவுகூட காண்கிறோம், கப்பல்போலவே மனிதவாழ்வும். அது சரியும் தான் ஆனாலும் கவிழ்ந்துபோகாது, ஏதோ ஒரு புள்ளியில் வாழ்வின் மீட்டெடுப்பு நிச்சயமானது மச்சான்! என்று முடிந்திருந்தது கடிதம்.

கலாபனின் கடிதம் ஏற்படுத்திய மகிழ்ச்சியை விட, அது ஏற்படுத்திய ஆச்சரியம்தான் அதிகம் என்னில். கலாபன் இப்படியெல்லாம் கூட எழுதுவானா என்பதை எனக்கு நம்பவே சிரமமாக இருந்தது. அவனும் என்போல எஸ்.எஸ்.சி. தான் படித்தான். என்ன எழுத்து! தன் அனுபவத்தை எவ்வளவு அற்புதமாகக் கடிதமாக்கியிருக்கிறான்! அந்த மொழியும் நடையும் அவ்வப்போது கவிதையெழுதும் எனக்கே சாத்தியமா என்று மனம் திகைத்தது. எல்லாவற்றுக்கும் அவன் தண்ணி அடித்து விட்டு எழுதியிருப்பான் என்று என்னுள் ஒரு சமாதானத்தை ஏற்படுத்திக் கொண்டேன். மனக் கருத்தொன்று விண்டுகொண்டு எழுத்துருவம் கேட்டு என்னை நச்சரிக்கும் நாளில் நானும் அவ்வாறே செய்துபார்க்கலாம் என்று அடிமனத்துள் ஒரு முகையெழுந்து திண்ணப்பட்டது. அப்படியான நாள் ஒரு சனிக்கிழமையாக இருந்தது. வழக்கத்தைவிட சற்று கள்ளைக் கூடுதலாகக் குடித்துவிட்டு எழுத வந்து உட்கார்ந்தேன். சிறிதுநேரத்தில் சத்திதான் வந்தது.

devakanthan@thaiveedu.com

■ ■ ■

National Driving Institute

Male & Female Experience Instructors
will Teach For G1, G2 Road Test

Early Appointment For G1, G2 Road Test

Please Call:

Mrs. Saththi 416-816-1500 / 905-653-3878

கூர் - 2009

விரைவில் வெளிவரவிருக்கும் கனடா தமிழ் கலை, இலக்கியத் தொகுப்புக்கான ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.
கவிதை, சிறுகதை, கட்டுரை எதுவாயினும் ஜூன் 30ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக
எமது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மின்னஞ்சல்:
koorcircle@gmail.com

மேலதிக தொடர்புகளுக்கு: தேவகாந்தன் 416-458-9426, டானியல்ஜீவா 416-500-9016, கௌசல்லா 416-299-6392
கூர் கலை, இலக்கிய வட்டம், 102 Hntingdale Blvd., Scarborough, ON M1W 1T1

51 51 51 51 அகவை 51 51 51 51 அகவை 51 51 51 51

# இரு இடங்களில்

## துரித பணமாற்றுச் சேவையில் முன்னோடிகள்

# பொன்விழா கண்ட ஸ்தாபனம்

## இதில் 18 வருடங்கள் கனடாவில்

## கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா?



தமிழ் மக்கள் இதயங்களில்
பணமாற்றுச் சேவையில்
இடம் பிடித்தவர்கள்

# மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்

**3228 EGLINTON AVE.EAST, SUITE #3**
**SCARBOROUGH, ON. M1J 2H6**
தொலைபேசி எண்: **416-267-8221**

**3351 MARKHAM ROAD, SUITE #109**
**(Markham & Steeles)**
**SCARBOROUGH, ON. M1X 0A6**
தொலைபேசி எண்: **416-321-8221**

51 51 51 51 அகவை 51 51 51 51 அகவை 51 51 51 51

# பதின்ம முன் வயதினரின் வளர்ச்சிப் படிநிலைகள்

# “பூப்பெய்துதல்”

சிவவதனி
பிரபாகரன்



பருவ முன் வயதினர் என்கின்றபோது 9 முதல் 12 வயதினரை உள்ளடக்குகின்றோம் முன்னைய தொடர்களினூடாகப் பார்த்தோம். இப்பருவமுன் வயதினர் குறித்த விடயங்களில் சில இதரவயதுப் பிள்ளைகள் குறித்த பிள்ளை வளர்ப்பு விடயங்களிலிருந்து வேறுபட்டவையாக இருப்பதனைப் பெற்றோர் கவனத்தில் கட்டாயமாக எடுக்க வேண்டும்.

குறிப்பாக இப்பருவ வயதினருள் பலர் பூப்பெய்தத் தயாராகும் பருவத்தினர் அல்லது பூப்பெய்தும் பருவத்தினராக இருப்பர். இப் பருவத்தினருள் 9 வயதினரை பூப்பெய்தும் பருவத்தினராக சேர்த்துக்கொள்ள முடியாது என்றிருந்த காலம் மாறி இன்று 9 வயதிலேயும் அதற்கு முன்பாகவும் கூட பூப்பெய்தும் சிறுவர்களையும் காணக்கூடியதாக உள்ளது. கடந்த சந்ததியினர்களோடு ஒப்பிடுகையில் இன்றைய சந்ததியினரிடையே பூப்பெய்ததுல் மிக இளம் வயதிலேயே இடம்பெறுவதைக் காணலாம். பூப்பெய்தும் பருவத்தை தொடுபவர்களாகவோ அல்லது அதற்காக ஆயத்தமானவர்களாகவோ இப்பருவத்து சிறார்கள் இருப்பர் என்பது உறுதியானதொன்றாகும். ஆதலால் இதுபற்றிய விடயங்களை இப்பருவத்தினர்களும் அவர்களின் பெற்றோர்களும் அறிந்திருப்பது அவசியமானதொன்றாகும்.

இவ்பருவத்தினரின் பூப்பெய்தும் காலம் மாறுபடுவது இயற்கையானதொன்று. எனவே அதில் முன்னர், பின்னர் நடைபெறுவது குறித்து அடுத்த ஒத்த வயதுப் பிள்ளைகளுடன் ஒப்பிட்டு நோக்கி பார்த்துக் கவலையுறக் கூடாது. குறிப்பாக இந்த வேறுபாடுகள் இப்பருவத்தினரின் உளவியலைப் பாதிக்கா வண்ணம் பெற்றோர் பொறுப்புணர்வோடும் பக்குவ சிந்தினையோடும் நடந்து கொள்வது அவசியமாகும்.

பூப்பெய்துதல் என்பது பாரிய பருவமாற்றச் செயல்பாடு ஆகும். இது வெறுமனே உடலியல் மாற்றத்தினை மட்டும் அடிப்படையாகக் கொண்ட ஒன்றல்ல. உளவியல் மாற்றங்களையும் உள்ளடக்கிய ஒரு பெரும் மாற்ற மாகும். இப்பருவ மாற்றமானது இப்பருவத்தினருள் விபரீத சிந்தனைகளை இலகுவில் விதைக்கின்றமையினால் பலதரப்பட்ட சவால்களையும் சமாளிப்புக்களையும் கையாளுகின்ற தேவை இப்பருவத்தினரின் பெற்றோர்களுக்கு அவர்களது பிள்ளைவளர்ப்பில் உருவாகுகின்றது.

இப்பருவத்தினர் சக நண்பர்களின் உந்துதலிற்கு இலகுவில் ஆளாவதனால் இப் பருவத்தினர் தீய பழக்கங்களிற்கு இலகுவில் அடிமையாகும் அபாயம் இவர்களுக்கு வெகுவாக உள்ளது.

குழந்தையின் பாதியாகவும் முழு மனிதனின் பாதியாகவும் உள்ள பருவத்தினர் தாம் என்பதை இச்சிறார்கள் உணர்வதில்லை. மாறாக தம்மை முழுமையான பெரியோராகவே எண்ணிப்பார்க்கத் தொடங்குவர். இயற்கையின் மாற்றங்களைப் புரிந்து தவறு செய்யும் சிறாரினர் தவறான பாதையில் செல்ல விடாமல் தடுத்து நிறுத்தி நல்வழி

## பாகம் - 4

காட்டும் பெரும் கடப்பாடு பெரியோர் கையிலும், குறிப்பாக பெற்றோர் கையிலுள்ளது. அதற்காக இப்பருவத்தினரைக் கண்டால் அஞ்சி ஓட வேண்டியதில்லை. பெரும் சுமை என எண்ணி வருந்தவும் தேவையில்லை. மாறாக பெற்றோர்கள் தம் பிள்ளைகளை இரசித்து பாராட்டி மகிழ வேண்டும்.

திடீரென இவர்களுள் இப்பருவத்துக்கே உரித்தான புதுமையான பளிச்சென்ற, அழகு பளிச்சிடுவதைக் காணலாம். அதனை இரசிப்பதோடு அவர்களின் ஆளுமை ஆற்றல்களையும் பெற்றோர் இரசித்து மகிழவேண்டும். இப்பருவத்தினரின் துரிதமான புத்திசாலித்தனமான அறிவாற்றல்களை இரசித்துப் பாராட்டும்போது அது அவர்களுக்கு ஊக்குவிப்பளிக்கும் ஊட்டமாத்திரையாக இருக்கும்.

ஆம் எல்லாவற்றிற்கும் மேலாக உங்களை இன்னமும் அன்பு பூண்டுள்ள உங்கள் குழந்தைகள் அவர்கள். அவர்களுக்கு இவ் வேளையில் பெற்றோராகிய உங்களின் தேவை அதிகமாகவுள்ளது. அவர்களின் பேச்சில் ஒரு வகையான எரிச்சலுணர்வு கோபவுணர்வு அவ்வப்போது சுடு சொற்களாக வெளிப்பட்டாலும் அடிமனதில் அளவற்ற பாசத்தை உங்கள் மீது வைத்திருப்பதோடு உங்கள் அன்புக்கும் அரவணைப்புக்குமான எதிர்பார்ப்பும் அவர்களுள் நிறைந்திருக்கும் என்பது தான் உண்மை நிலை. அதை நாம் புரிந்து கொள்ள முயலாது போகையிலும் அல்லது அவர்களை உதாசீனம் செய்யும் வேளையிலும் அவர்களுக்கு தம்மை கட்டுப்படுத்த முடியாத அளவு அதீத கோபம் வெளிப்படுகின்றது.

எதற்கெடுத்தாலும் ஏதேனும் குறைகண்டு கோபம் கொள்ளும் குணம் இவ்வயதுப் பிள்ளைகளுள் பொதுவாகக் காணப்படுவதனைக் காணலாம். இது ஆரம்பம் மட்டுமே. அடுத்துவரும் பதின்ம வயதுப் பருவத்தில் இந்த முன்கோபங்கள் பிடிவாதங்கள் இன்னமும் அதிகரிக்கின்றன. இவற்றைக் கட்டுப் படுத்தும் கலைகளை சிறுவர்களுக்கு பயிற்றுவிப்பது அவசியமாகும். சிறுவர்களை ஆன்மீகம் தியானம் யோகாசனம் என இப்பருவ காலத்தில் பயில வைப்பது நன்று. அத்தோடு பெற்றோர் பிள்ளைகள் ஆரோக்கியமான உறவுமுறையை வளர்த்து அன்பு காட்டி நேரத்தை ஒதுக்கி மனம் விட்டுப் பேசிப் பழகுவதும் அவசியமானதொன்றாகும்.

சில சமயங்களில் சிறியவர்களாகவும் சில சமயங்களில் பெரியவர்கள் போலும் தம்மை எண்ணிக்கொண்டு அடிக்கடி மனநிலை மாறிக்கொண்டிருக்கும் இப்பருவத்தினர் மிக வேகமாக மனோநிலைகளை மாற்றியவண்ணம் இருப்பர். இவை யாவும் பூப்பெய்தும் பருவநிலைக் கோளாறுகளே.

இவ்வயதுச் சிறுமிகள் சிலர் தமது உடற் தோற்றத்தில் ஏற்படும் மாற்றங்களை எண்ணி தமக்குள் கூச்சப்படுவர். தாம் மற்றவர்களில் இருந்து மாறுபட்டிருக்கின்றோமோ என்ற தாழ்வுணர்ச்சியும் சிலருள் உருவாகக் கூடும். இத்தகைய சந்தேகங்களை அவர்கள் தம்மோடு மனம்விட்டு தோழமையுடன் பழகும் பெற்றோரிடம் வெளிப்படையாகக் கேட்பர். அவ்வேளையில் பெற்றோர் மனம் விட்டு பேசி அவர்களின் ஐயங்களைப் போக்க வேண்டியது அவசியமாகும்.

சில குழந்தைகளில் பூப்பெய்துமுன்பாகவே பூப்பெய்தியோரில் நடைபெறும் உடல் மாற்றங்கள் வெளிப்பட ஆரம்பிக்கும். இவர்களுள் எழும் குழப்ப உணர்வை போக்குவது பெற்றோரது கடமையாகும். தம் வயதொத்த பருவ நண்பர்களிடமிருந்து பெறும் பருவ மாற்றங்கள் குறித்த சில தவறான தகவல்கள் சில சமயங்களில் அவர்களை பயமுறுத்தக் கூடும். அல்லது தாழ்நிலைச் சிக்கல்களைத் தோற்றுவிக்கக் கூடும். எனவே இதுகுறித்த தமது மனதிலெழும் சந்தேகங்களை சிறுவர்கள் தம் பெற்றோரிடம் தயங்காமல் கேட்டுத் தெளிவுபடுத்தும் வகையில் குடும்பத்தில் பெற்றோர் பிள்ளைகள் உறவுமுறை இருப்பது அவசியமாகும்.

பருவமெய்தும் இச்செயற்பாடு பெண் குழந்தைகளில் ஆகக் குறைந்த வயதான ஒன்பது வயதில் ஏற்படும். ஆண்களில் பொதுவாக இதைவிட இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு பின்னர் ஏற்படும்.

வடஅமெரிக்காவில் சராசரி பெண்களில் பூப்பெய்தும் வயதாக 12.4 வயதினை கூறுகின்றனர். University of Torontoவினால் வெளியிடப்படும் பத்திரிகையான Health Newsஇல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகக் குறைந்த வயதாக 9 வயதும் ஆகக் கூடிய வயதாக 16 வயதுமென பெண்கள் பொதுவில் பூப்பெய்துகின்றனர் என குறிப்பிடப்படுகின்றது.

அநேகமான சிறார்கள் பாடசாலையில் சுகாதார விஞ்ஞான வகுப்பில் பருவமெய்துவது பற்றிக் கற்றுக் கொள்வர். எனினும் நடைமுறையில் அவர்களது மனதிலும் உடலிலும் சடுதியாக ஏற்படும் மாற்றங்களை எதிர் கொள்ள முடியாமல் சிலர் நிலைகுலைந்து போவதுமுண்டு. இதனால் பெற்றோர் சில சமயங்களில் இவர்களின் விபரீத உணர்வு வெளிப்பாட்டால் சாவல்களை எதிர் கொள்ள நேரிடுவர். இவ் வேளையிலும் அவர்களை அமைதிப்படுத்தி இயற்கையின் மாற்றங்களின் வெளிப்பாடுகளே அவர்களின் உணர்வு மாற்றங்கள் என்பதனை புரிய வைக்க முனைவது அவசியமாகும்.

பருவமாற்றங்களில் முகத்தில் ஏற்படும் பருக்களின் தொல்லை பெருந்தொல்லையாக இருக்கும். சருமப் பராமரிப்பும், சுத்தமாக இருத்தலும் இவ்வயதுச் சிறாருக்கு அவசிய மாகும்.

பலதரப்பட்ட குழப்ப உணர்வுகளுடன் தடுமாறும் தம் குழந்தைகளை தெளிவுபடுத்தி இப்பருவத்தினரின் உளவியல் உடல்ரீதியான இயற்கையின் மாற்றங்களை புரிய வைப்பது பெற்றோரின் கடமையாகும். சிலவேளைகளில் பெற்றோர் தெளிவோடு விளக்கமளிக்கத் தயாராக இருந்தாலும் பிள்ளைகள் தம் உடலில் ஏற்படும் அந்தரங்க மாற்றங்கள் குறித்து பெற்றோருடன் பகிர்ந்து கொள்ளத் தயாரில்லாமல் இருப்பர். அவர்களின் கூச்ச உணர்வு அவர்களை வெளிப்படையாக பேச விடாதிருக்க வைக்கலாம். அதனைப் போக்கிட பெற்றோர் முன்வர வேண்டும்.

பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையினர் என்பதனை முதலில் பெற்றோர் புரிந்து கொள்ளவேண்டும். அவரவர்களுக்கு ஏற்றாற் போல் அவர்களுடனான அணுகு முறையை வைத்திருப்பதற்கு பெற்றோர் அறிந்திருக்க வேண்டும்.

பருவமெய்து முன்பே பருவ மாற்றங்கள் குறித்த விழிப்புணர்வை பிள்ளைகளுக்கு பெற்றோர் ஏற்படுத்தியிருப்பது அவசியம். மாறாக பருவமெய்திய பின்னர் அவற்றை புரிய வைக்க பெற்றோர் நினைத்தால் அது சில சமயங்களில் அதிர்ச்சியையும் உளவியல் சிக்கல்களையும் ஏற்படுத்தக் கூடும்.

குறிப்பாக சில சிறுமிகளுக்கு 9-10 வயதில் மார்பகங்கள் வளர்ச்சி காணக்கையில், 18 வயதாகியும் பூப்பெய்தாதிருந்தால், ஆண் குழந்தைகள் 14-16 வயதாகியும் பருவமெய்யாதிருந்தால் சிலவகையான உளவியல் தாக்கங்கள் ஏற்படுவதனை தவிர்க்க முடியாது. இவ்வேளையில் பெற்றோரின் விளக்கங்கள் மட்டுமே அவர்களுக்கு ஆறுதலளிக்க முடியும்.

பருவமாற்றங்களினால் ஏற்படும் பாலியல் உணர்வுகள் ஆசைகளிலிருந்து இவ்வயதினர் தப்ப முடியாது. ஓமோன் மாற்றங்கள் உடல் மாற்றங்களினால் ஏற்படும் மாற்றங்களே. இத்தகைய தூண்டல்களுக்கு காரணமாகும். இந்த ஓமோன் மாற்றங்கள் பற்றிய அறிவை பெற்றோர் தாம் முதலில் பெற்று பின் தம் பிள்ளைகளை அறிவுறுத்தி வழிநடத்த வேண்டும். சிந்தனைகளை அறிவுவழி நெறிப்படுத்தி வழிநடத்த சிறார்களைப் பயிற்றுவிக்கும் பெரும் பொறுப்பும் பெற்றோர்களுடையதேயாகும்.

இந்த பதின்மமுன் வயதுப்பருவத்தினரின் பருவமாற்றமானது பெற்றோரை ஒருவகையில் மகிழ வைத்தாலும் சில சமயங்களில் மன அழுத்தத்தையும் பெற்றோருக்கு ஏற்படுத்தக் கூடும். எது எவ்வாறாயினும் குழந்தையைப் பொறுத்த வரையில் இது மனிதவளர்ச்சியின் பூரணத்துவத்தின் முழுமை பெறும் செயற்பாடு ஆதலால் பெற்றோரை மகிழ்விக்கும் என்பது மட்டும் உண்மை. ஏனெனில் எந்த பருவத்தைத் தொட்டாலும் பெற்றோரின் கண்களில் தம் பிள்ளைகள் என்றுமே அன்புக்குரிய குழந்தைகள் அல்லவா?

பெற்றோரின் பாசம் என்ற அரணானது பிள்ளைகளுக்கு அவர்களின் பருவமாற்றத்திற்கேற்றாற் போல் அரவணைப்பு அரண்களை மாற்றியமைத்து வழிகாட்டியாகத் திகழ வேண்டும்.

பெற்றோர்கள் தம்மை அறிவுறுத்துவதனூடாக தம் பிள்ளைகளின் பருவமாற்றங்களினால் ஏற்படும் சவால்களை வெற்றிகரமாக தாமும் சமாளிப்பதோடு தம் பிள்ளைகளையும் மலையென வரும் எதிர்கொள்வுகளை கடுகெனக் கருதி எதிர் கொள்ளும் மன வலிமை கொண்டோராக வளர ஊக்குவிக்க முடியும்.

sivavathani.p@thaiveedu.com

■ ■ ■

மீண்டும் உங்களிடையே தவழ்ந்து பரவசப்படுத்த ஆகஸ்ட் மாதம் முதல் வருகிறது

“தமிழர் பூங்கா”

உங்கள் சிறந்த ஆக்கங்கள் வரவேற்கப்படுகிறது!

திரு. மரு. வள்ளிக்கண்ணன்

பிரதம ஆசிரியர்

416 . 623 . 4989 canadatp@gmail.com www.tamilerpoonga.com

# CTR தகவல் பலகை

## ROOMS / BASEMENT RENT

**NEILSON & MCLEIVEN**
1 Room for rent in a house
Kala: 416-754-8947

**MARKHAM & ELLESMERE**
2 B/R Basements
Rajan: 416-906-5803

**MCCOWAN & SHEPPARD**
Condo - 3B/R (Cable/parking) walking distance to school and ttc and plaza and parks.
Ruban: 905-424-7468

**NEILSON & SHEPPARD**
2 B/R Basement
Mrs. Ranji: 416-724-7594, 416-706-7594

**14TH & MARKHAM**
2B/R Basement
647-308-6073

**S.GOLF & LAWRENCE**
1 Room for rent
647-284-8494

**JANE & FINCH**
Condo - 2B/R - 2W/R
Kanthan: 416-514-1661

**BRAMPTON**
house for sale
Single home 2480 Sq feet
Subankan: 647-207-5465

**MARKHAM & LAWRENCE**
3 Rooms in a house
Ramachandran: 647-219-4558

**MARKHAM & 14TH**
2B/R Basement
Theva: 905-472-2534

**RICHMOND HILL**
Basement 2/ R for rent
Raja: 905-773-8274, 416-505-8274

**NEILSON & MCLEIVEN**
2B/R Basement
Jeny: 416-431-4778, 416-716-4145

**Middlefield & Steels**
1 bedroom basement with separate entrance for rent from Aug 1 2009. walking distance to school and ttc and plaza and parks. parking available.
416-878-5144

## HOUSE FOR SALE

**CONDO FOR SALE**
2 bedroom
Vijay: 416-452-5567, 416-439-6974

**MORNINGSIDE & FINCH**
3B/R house, 2000 sq
Sathya: 416-284-9116, 416-875-8454

## AUTO FOR SALE

**92 TOYOTA**
Sri: 647-802-1599

**94 NISSAN ALTIMA**
Thavamani: 416-878-4453

**90 HONDA ACCORD**
Engine/ New Parts
Ragupathy: 416-786-9293

**2007 TOYOTA CAMRY**
51 Km – 4 Doors
Siva: 416-230-2991

**2000 TOYOTA CAMRY**
Mani: 416-737-1989

**2000 TOYOTA CAMRY**
Mani: 416-737-1989

**1993 TOYOTA CAMRY**
V6 - Fully loaded
Suresh: 416-850-1565

**2006 TOYOTA COROLLA**
Gold, 67km
Nesan: 416-274-5594

**92 HONDA ACCORD**
2B/R Rooms near York University
Kumar: 416-546-1475, 416-627-1956

**1992 HONDA ACCORD**
4 doors new tires
Sri: 416-823-3552

**99 NISSAN SENTRA**
208km
Ram: 416-271-9129

## OTHERS

**COMPUTER REPAIR**
Suthan: 647-802-1599

CTR
கனடியத் தமிழ் வானொலி
416 264 8798

**SUMMER CLASS**
Home work help – computer class for kids
Mayooran: 416-335-1477 – 647-869-1475

**HOSPITAL BED NEW**
Parames: 647-345-6672

**BIRDS FOR SALE:**
Bobby: 647-409-4145

**FOOTBALL CLASS**
Ages from 4 year-16 years
Anton: 416-873-2148 – 416-638-1954

**STITCHING AND MAKE UP CLASS**
Pushpa: 647-278-8445

**HOUSE STUFFS/ SAREES/ ETC FROM INDIA**
Sekar: 416-823-3552

உங்கள்
அறிவித்தல்களும்
"தாய்வீட்டில்"
இடம்பெற வேண்டுமா
416 400 6406




# பூந்தோட்டமும் பூக்களின் வகைகளும்

அலன் சிவசம்பு
- வீடு விற்பனைப் பிரதிநிதி -



பூந்தோட்டங்களுக்குச் சரியான அமைப்பை ஏற்படுத்தி அதற்கேற்ற மரங்களையும், நிறங்களையும் சேர்ப்பது பூந்தோட்டத்தை மிகவும் அழகுபடுத்தும். கீழே சில பூக்களின் வகைகளையும் அதன் தேவைகளையும் அறிவோம்.

**'Fragrant abelia'**

இந்தப் பூ ஒரு செடிவகையைச் சேர்ந்தது. இது Koreaல் இருந்து வரவழைக்கப்பட்டது. Canadaவில் அதிகம் காணமுடியாத ஒரு செடி. இது கோடைக்காலத்தில் நல்ல நறுமணம் உள்ள பூவைக் கொடுக்கும். அத்துடன் Pink நிறமுடைய பூக்களையும் கொடுக்கக்கூடியது. இலையுதிர் காலத்தில் இலைகள் Orange நிறத்தில் இருந்து சிவப்பு நிறத்திற்கு மாறும். இந்தவகைச் செடி கூடிய சூரிய வெளிச்சத்திலும், பகுதியாக மறைக்கப்பட்ட வெளிச்சத்திலும் நன்றாக வளரக் கூடியது.

**'Smooth Hydrangea'**

இது ஒரு Annabelle hydrangea வகையைச் சேர்ந்தது. ஆனால் Smooth Hydrangea Annabelle வகையை விட நான்கு மடங்கு பூக்களைப் பூக்கக்கூடியது. அத்துடன் இம் மரம் தடித்த தண்டைக் கொண்டுள்ளதால் வளையாமல் நிமிர்ந்து நிற்கக்கூடியது. இப் பூவும் மேலே கூறப்பட்டதுபோன்று நல்ல சூரிய வெளிச்சத்திலும், பகுதியாக மறைக்கப்பட்ட வெளிச்சத்திலும் நன்றாக முளைக்கக்கூடியது. இம்மரத்தில் உள்ள சிறப்பான விடயம் என்னவென்றால், வண்ணாத்திப் பூச்சிகள் இம்மரத்தை அடிக்கடி நாடும்.

**'Bangle dyer's green wood'**

நீங்கள் ஒரு Rock garden அமைக்க விரும்பும் போது இந்த மரத்தைத் தெரிவுசெய்யலாம். அத்துடன் நிலத்தை அழகுபடுத்தும் வகையையும் சேர்ந்தது. இது வசந்தகாலத்தில் பளிச்சிட்ட மஞ்சள் நிறத்துடன் பூக்கக்கூடியது. இது தீபகற்ப நாடுகள் (Balkans) மேற்கு ஆசிய நாடுகளில் இருந்து வரவழைக்கப்பட்டது. இந்த மரம் காய்ந்த இடத்தில் நன்றாக வளர்வதோடு நல்ல சூரிய வெப்பத்தையும் தாங்கக்கூடியது.

**'Little Henry Sweet spire'**

இந்த பூமரம் சிறுகுளம், குட்டைகளில் நன்றாக வளரக்கூடியது. ஆகவே Pond அமைப்பவர்கள் இந்தப் பூவைத் தெரிவு செய்வார்கள். இது நல்ல சாதாரண வெள்ளை நிறப்பூவைக் கொடுக்கும். கூடுதலாக ஈரப்பதனுள்ள இடத்தில் நன்றாக வளர்வது மட்டுமல்லாது சூரிய வெளிச்சம் உள்ள இடமோ அல்லது இல்லாத இடத்திலோ நன்றாக வளரக்கூடியது. இதனது இலை Orange நிறத்தில் இருந்து நல்ல சிவப்பு நிறத்திற்கு இலையுதிர் காலத்தில் மாறும்.

**'Bloomerang Purple lilac'**

இது பருவகாலத்தில் நல்ல நறுமணத்துடன் lavender Blue பூக்களையும், கோடைக்காலத்திலும், இலையுதிர் காலத்திலும் தொடர்ந்து பூக்கக்கூடியது. அத்துடன் இறந்துபோன பூத்தலைகளை வெட்டிவிடுவதன் மூலம் மேலும் கூடிய பூக்களைப் பூக்கக்கூடியது. இது Foundation plantingற்குக் கூடுதலாகப் பாவிக்கப்படும்.



Smooth Hydrangea



Bangle dyer's green wood



Little Henry Sweet spire



Bloomerang Purple lilac



Blue Satin Rose of sharon



My Monet Weigela

**'Blue Satin Rose of sharon'**

உங்கள் தோட்டத்திற்கு உங்கள் பிரதேசத்தின் உணர்வை வரவழைப்பதானால் இந்தப் பூ மரத்தை நடலாம். இந்தப் பூ ஒரு தனியாக ஒரு பெரிய பூவைக் கூடுதலாக கோடைக் காலத்தில் பூக்கக்கூடியது. இது நல்ல சூரிய வெளிச்சத்தில் கூடிய பலனைக் கொடுக்கும்.

**'My Monet Weigela'**

கோடைக்காலத்தில் நல்ல Pink நிறமுடைய பூக்களைக் பூக்கக்கூடியது. வளர்ச்சி வேகமாக இருக்க மாட்டாது. ஆனால், மற்றைய Weigela களை விட இலையுதிர் காலத்தில் நன்றாக முளைக்கும். இதனது இலைகள் பச்சை நிறத்தையும் அதனது கரைகள் வெள்ளை நிறத்தையும் கொண்டதாக இருக்கும்.

அடுத்ததாக பெரணி என்ற தாவர வகையைப் பார்ப்போம். இது ஒரு நிழலாகவோ அல்லது ஒரு ஒதுங்கும் இடமாகவோ பாவிப்பதற்கு ஒரு உகந்த தாவரமாகும். அத்துடன் குறைந்த பராமரிப்புடன் நன்றாக வளரக் கூடியது. இது Woodland, water அல்லது Rock gardens போன்ற இடத்திற்கு மிகவும் பொருத்தமானதாகும். இது நன்றாக வளர்வதற்கு இயற்கையுடன் கூடிய பொருட்களை மண்ணினுள் தாட்பதால் அதாவது இலைகள் போன்றவற்றைத் தாட்பதால் நன்றாக வளர்வதற்கு வாய்ப்புண்டு. அத்துடன் மரத்தை நடும் போது நன்றாக அகலமாக (நிலத்தை) வெட்டுவதன் மூலம் வேர்கள் பரந்து வளர்வதற்கு வாய்ப்பு உண்டு. சிறிய மரத்துண்டுகளை மரத்தைச் சுற்றிப் போடுவதன் மூலம் மண்ணைக் காயாமல் வைத்திருக்க உதவியாக இருக்கும். அத்தோடு Weeds முளைக்காமலும் தடுப்பதற்கு உதவியாக இருக்கும்.

மேலே குறிப்பிட்ட சில பூமரங்களைப் போன்று பல மரங்களை உங்களது தேவைக்கேற்ப தெரிவு செய்வதன் மூலம் எமது பூந்தோட்டத்தை அழகு செய்யலாம். உஷ்ணப் பிரதேசங்களில் முழுக்காலங்களிலும் பூக்களைக் காணக்கூடியதாக இருக்கும். குளிர்கூடிய நாடுகளில், குளிர்காலத்திலும் நல்ல நிறத்துடன் இருக்கக்கூடிய மரங்களும் உள்ளன. அவற்றையும் கோடைக்கால மரங்களுடன் நடுவதன் மூலம் குளிர்காலத்திலும் சில நிறங்களை நாம் எமது தோட்டத்தில் காணக்கூடியதாக இருக்கும். ஆகவே நாம் தொடர்ந்து எமது தோட்டத்தை அழகாக வைத்திருப்பதற்குச் சரியான மரங்களைத் தெரிவு செய்வது மட்டுமல்லாது சரியான முறையில் தொடர்ந்து பராமரிக்கவும் வேண்டும்.

alen.sivasambu@thaiveedu.com

■ ■ ■

ஒரே நாளில்

**Saree Blouse**

உங்கள் சகலவிதமான சாறி புளவுஸ் (Saree Blouse)

தைப்பதற்கும் அழையுங்கள்.

416 264 6400

INPROBUS REALTY CORPORATION
Specialty Investment, Property and Business Brokers

**Convenience store in Mississauga for sale-**
8 years in business. $140,000 plus inventory. Sales on lottery plus ATM-$10-11k/month.

**Carole's Café Kitchen. Franchises now available for sale in Toronto, North York and Oakville.**
Offering the famous Carole's cheesecake and unique fresh and healthy homemade foods in an urban

**Art & framing business for sale in Oakville-**
Net Operating Income over $80,000/yr. 20 yrs. in business. Sale price $180,000 (includes inventory of Approx. $50,000).

**Pharmacy, Variety store and Doctor's office space with Property for sale in London, ON.**
Both Buisnesses, vacant furnished Doctor's office and property. Price $800,000 plus inventory. café atmosphere.

**Please call**
**Alan Sivasambu**
**647-504- 2536**


இயற்கை மூலிகையின் உதவியுடன் உங்கள் கேசத்தை பராமரியுங்கள்!
The ERVAMATIN™ HAIR LOTION
உங்கள் முடியுதிர்வை தடுக்கவும் மீண்டும் தலைமயிர் வளரவும் மிக உன்னதமாக தொழில் புரிகிறது எவமாட்டின் மூலிகை ஔடதம்! உலகெங்கும் பல்லாயிரக்கணக்கானவரின் பாராட்டுதலைப் பெற்ற மூலிகைத் தயாரிப்பு. இப்போது எவமாட்டின் சாம்பூவும் கிடைக்கிறது.
Ervamatin POWER
Dreamron HENNA
Treated Natural Henna
இயற்கை மூலிகையிலான தலை முடி மை
இயற்கை மூலிகையான மருதாண்டி கொண்டு செய்யப்படும் இவ் மை உங்கள் தலை முடியையும் நன்கு பராமரிக்கிறது.
The Ervamatin Hair Lotion
Provides effective and fast therapy for hair loss
And its treatment ensures excellent therapeutic results.
Recommended as a treatment for
Hair loss, hair regeneration, dandruff, alopecia,
Thin hair, baldness, fragile and dry hair.
Amazon Health Care
BBB
SABONA & Gift
Tel: 416 264 8787
www.amazonhealthcare.ca
2602, Eglinton Ave East. (Midland/Eglinton)


S.P. IMPORTERS
Furniture
SP
அனைத்து தளபாடங்களும் மிக மிக மலிவு விலையில்
NO PAYMENT INTEREST for 1 YEAR
416-266-3077
கொள்வனவு விலையில்
மலிவு விற்பனை
Sealy Posturepedic
Special Sealy Mattress on SALE
ஒரே பிளாசாவில் 4 தனிப்பெரும் ஸ்தாபனங்கள்...
2861 Lawrence Ave. East, Scarborough, ON M1P 2S8
(Brimley & Lawrence சந்திப்பில்)


Let Serandib Travel Make Your Dream Vacations Come True.
your dream vacation awaits you . . .
HOT VACATION PACKAGE DEALS
Cuba
$595* +taxes $210 Holguin - 7 Days Club Amigo Guardalavaca Flight + Hotel + Transfers Meal plan: ALL INCLUSIVE
$635* +taxes $210 Cayo Coco - 7 Days Club Cojimar Flight + Hotel + Transfers Meal plan: ALL INCLUSIVE
$645* +taxes $210 Santa Lucia - 7 Days Gran Club Santa Lucia Flight + Hotel + Transfers Meal plan: ALL INCLUSIVE
$785* +taxes $210 Varadero - 7 Days Aguas Azules Flight + Hotel + Transfers Meal plan: ALL INCLUSIVE
$805* +taxes $210 Havana - 7 Days Melia Habana Flight + Hotel + Transfers Meal plan: EUROPEAN PLAN
Dominican Republic
$875* +taxes $309 Punta Cana - 7 Days IFA Villas Bavaro Beach Flight + Hotel + Transfers Meal plan: ALL INCLUSIVE
$905* +taxes $309 Santo Domingo - 7 Days Hotetur Dominican Bay Flight + Hotel + Transfers Meal plan: ALL INCLUSIVE
Jamaica
$695* +taxes $268 Falmouth - 7 Days SuperClubs Starfish Trelawny Flight + Hotel + Transfers Meal plan: ALL INCLUSIVE
$945* +taxes $309 Montego Bay - 7 Days Sunset Beach Rsrt Flight + Hotel + Transfers Meal plan: ALL INCLUSIVE
SUPER SUMMER SEAT SALES TO INDIAN DESTINATIONS
JET AIRWAYS $1162.00 +taxes * Toronto - Brussels - Chennai Travel up to Sept 3th
ETIHAD AIRWAYS $1190.00 +taxes * Toronto - Abu Dahbi - Chennai Travel up to July 30th
Emirates $1690.00 +taxes * Toronto - Dubai - Chennai Travel up to Aug 23th
ALL INDIA FARE starting from $1162.00 + taxes* Toronto - Brussels - Indian Destinations • Cochin • Goa • Trichy • Trivandrum • Bangalore • Mumbai • Delhi • Hyderabad
* Above hotel packages are subject to availability of rooms. Certain conditions and restrictions apply. Single passenger supplements extra.
* Above fares are Seat Sale Fares. Taxes range from $47 - $411. Certain conditions and restrictions apply. Prices are subject to availability of seats.
Your Satisfaction is Our Success.
Serandib travel.com
Toll Free: 1.888.207.0902
Toronto: 416.750.0009
2075 Lawrence Ave East Suite 202
Mississauga: 905.564.7564 Montreal: 514.448.1389
Calgary: 403.770.9647 Vancouver: 604.625.0495
PATA ACTA

# மகரிசியின் மனவளக் கலை



திரு மகேசன்

இந்த வாரம் எதைப்பற்றி ஆரம்பிக்கலாம் என்று யோசித்த போது அடித்தது தொலைபேசி மணி. அடிக்கத்தொடங்கிய மணி இரவு வரை அடித்தபடி அதே செய்தியையே சொல்லிக் கொண்டிருந்தது.

நண்பர்கள் மாறி நண்பர்களாக அதே செய்தியையே சொல்லிக் கொண்டிருந்தார்கள். தொலைக்காட்சியை தட்டினால் அது வேறு இதே செய்தியைத்தான் அலறவிட்டுக் கொண்டிருந்தது. எல்லாம் 'இசைச் சக்கரவர்த்தி'' என்று புகழப்பட்ட மைக்கல் ஜாக்சனின் இறப்புப்பற்றிய செய்திதான் மைக்கல் ஜாக்சனின் இறப்புக்கும் மனவளக்கலைக்கும் என்ன சம்பந்தம் என்று கூக்குரலிடவேண்டாம்.

50 வயதில் உலகை ஆட்டிப்படைத்த இசை மேதை இறக்கின்றான் என்றால், அவனின் வாழ்க்கையின் வழித்தடங்கள் நிச்சயம் பிழையானவையாகத்தான் இருக்கவேண்டும். 7 வயதில் தனது குரலால் மக்களை வசீகரிக்கத் தொடங்கிய இவர் தன் பெற்றோரின் வற்புறுத்தலால், தனது சிறு பராயத்தின் போது மற்றைய குழந்தைகள் தமது நேரத்தை பள்ளிக்கூடம் விட்டு வந்த பிற்பாடு மைதானங்களில் விளையாடிக் கொண்டிருந்த நேரத்தில், இசைப்பாடல்களை பிரதி செய்யும் ஸ்ருடியோக்களிலேயே கழித்தார். பெற்றோரின் பயமுறுத்தல்களுக்கு அஞ்சி, வீதியோரம் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களை பார்த்தபடியே, தான் ஸ்ருடியோக்களுக்கு போய் வந்ததாக குமுறிக் குமுறி அழுத படி சில வருடங்களின் முன் தொலைக் காட்சிக்கு பேட்டி கொடுத்தார். சிறுவனாய் இருக்கும் போது மனநிலையை மாற்றிவிட பெற்றோர்கள் புகுத்திய முரட்டு மனப்பான்மை மைக்கல் ஜாக்சனின் வாழ்க்கையை மிகவும் பாதித்தது. மனத்தை வளப்படுத்த வேண்டிய அவரது பெற்றேர்கள் அவரது பணத்துக்கு ஆசைப்பட்டு அவரது மனவளத்தையே கெடுத்துக் கொண்டார்கள். நன்றாக வளப்படுத்தத் தெரியாததால் சரியான பாதையில் போக முடியாத மைக்கல் ஜாக்சன் தனக்கென ஒரு சாம்ராஜ்யத்தை கட்டியெழுப்பிய போதும் தாங்க முடியாத மன அழுத்தத்தை கட்டுப் படுத்த முடியாமல் போதைப்பொருட்களுக்கு அடிமையாகி 50 வயதில் வாழ்வை முடித்துக் கொண்டார்.

பணம் கொட்டியது. கொட்டிய பணத்தால் நிலை தடுமாறினார். கூட்டங் கூடியது. பாது காப்பு கெடுபிடிகள் கூடின. மனத்தை நிலை நிறுத்தி, தனது வருமானத்தை சரியான வழியில் கைகாட்ட முடியவில்லை. வந்த பணம் கண்டு திமிர் தலைக்கேறி நிதானம் இழந்தார். மனக்கட்டுப்பாடு இழந்தார். பெண், போதைமருந்து என்று பாதை மாறியது. ஆனால், பணம் நிற்கவில்லை. மீண்டும் பணம் வந்தது ஜுலை மாதம் 13ம் திகதி இலண்டனில் மிகப் பெரிய இசைக்கச்சேரி. வந்த பணத்தை கண்டு மலைத்தார். 6 மணிநேர இடைவிடாத பயிற்சி. மருந்து வகைகள் வேறு உடல் நோய்க்கு, திடீரென்று இதய ஓட்டம் நின்று கொண்டது.

எமக்குக் கிடைத்த அரிய பொக்கிஷம் மன வளக்கலை மைக்கல் ஜாக்சனுக்கு நிச்சயமாக தெரிந்திருக்கும். 10 நிமிடமாவது கண்ணை மூடி நாள்தோறும் தியானம் செய்திருப்பாரேயானால் இந்த வயதில் கண்ணை மூடி இருக்கமாட்டார். இவரை விட யாரையும் இனி நாம் உங்களுக்கு உதாரணம் காட்ட முடியாது.

என்னதான் நல்லது நடக்கட்டும். எவ்வளவு தான் பணம் கொட்டட்டும். நிதானம் இழந்து விடாதீர்கள் என்பதைத்தான் உங்களுக்கு சொல்ல வருகின்றேன். ஒரு செக்கனில் நீங்கள் எடுக்கும் முடிவுகள் உங்கள் முடிவை தலைகீழாகப் புரட்டிப் போட்டு வாழ்வையே முடித்துவிடும். ஆழ்நிலைத் தியானம் மூலம் கண்களை மூடி ஒரு நிமிடம் ஆழமாக மூச்சை உள்ளெடுத்து வெளியே விட்ட பின்பு முடிவை தீர்மானியுங்கள். பணம் வரும்போது தவறாக சந்தோசப்படாதீர்கள். பணம் போனபின்பு மனம் உடைந்தால் மூலையில் உட்கார்ந்துவிடாதீர்கள். எங்கேயோ ஒரு இலகிய பொறி தட்டுப்படும். அந்தப் பொறியை வைத்து வெளிச்சத்தை உருவாக்குங்கள். மைக்கல் ஜாக்சனைப் போல் பணம் வந்த போது தலை கால் புரியாத வாழ்க்கை வாழ்ந்து பணம் போனபின்பு போதையில் மூழ்கி உங்களை நீங்களே அழித்துக் கொள்ளாதீர்கள். ஆசையை ஒழிக்க முடியாது. ஒழிக்கவும் கூடாது. ஆசையை ஒழுங்குபடுத்தினால் வாழ்வு வளம்பெறும்.

இன்பங்களை இறையருள் தந்திருக்கின்றது. அவற்றை எல்லாம் அனுபவிப்பதற்கு அமைதி தான் வேண்டும். சிக்கல்களைக் கண்டு மிரள்வது கூடாது. கவலைப்படுவதாலும் ஆவது ஒன்றுமில்லை. கவலையினால் எல்லா வகையிலும் இன்னல் தான். இதை முதலில் தெரிந்து கொள்கின்றோம்.

> " எல்லா இன்னல்களுக்கும் முடிவு
> இயற்கையிலே தான் உண்டு.
> ஒவ்வொரு இன்னலையும் வெற்றி கொள்வது
> தெளிந்து தேர்ந்த அறிவாகும்.
> அத்தகைய அறிவு எல்லோரிடமும் இருக்கிறது.
> அதைத் தூண்டி,
> அதையே வலுவுள்ள ஆயுதமாகக் கொண்டு,
> கவலைகளை ஒழித்து
> வாழ்வில் மகிழ்ச்சியை பெறுவோம். "

இப்போது கவலையாக உருக்கொண்டிருக்கின்ற இந்தச் சிக்கல் ஏன் வந்தது?, யார் காரணம்?, இந்தச் சிக்கலின் தன்மை என்ன? இந்தச் சிக்கலினால் நமக்கு என்ன கஷ்டம் வர இருக்கிறது என்பதை ஆராய வேண்டும். கவலைகளை நான்கு வகையாகப் பிரித்து விட வேண்டும்.

- அனுபவித்தே தீர்த்தாக வேண்டியவை
- தள்ளிப்போட வேண்டியவை
- அலட்சியப்படுத்திவிட வேண்டியவை
- உடனடியாக தீர்க்க வேண்டியவை

அனுபவித்தே தீர்க்க வேண்டிய கவலைகளை யாரும் ஒன்றுமே செய்ய முடியாது. அவற்றை அனுபவித்துத்தான் ஆகவேண்டும். அவற்றை தள்ளிப்போடவும் முடியாது. அலட்சியம் செய்துவிடவும் முடியாது. தீர்வு காணவும் முடியாது என்ற நிலைமை இருக்கும்.

குடும்பத்தில் ஒரு பிள்ளை இளம்பிள்ளை வாதம் (Polio) வந்து எவ்வளவோ வைத்தியம் பார்த்தும் ஒரு கையும் காலும் இயங்காமல் இருக்கலாம். இந்த சிக்கலை எப்படி அவிழ்ப்பது. கவலைப்படுவதனால் ஆகக்கூடியது என்ன? தைரியமாக அமைதியான மனத்தோடு கஷ்டங்களை முகம்கொடுத்தே ஆகவேண்டும். அதனால் வரும் துன்பங்களையும் இடர்களையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இதைத் தவிர வேறு வழியே இல்லை.

இளம் வயது குடும்ப உறவுகளின் மரணம், புயல், வெள்ளம், யுத்தம் போன்ற கொடூரமான முடிவுகளை பணிந்து ஏற்றுக்கொள்ளவும். விளைவான துன்பங்களை சகிப்புத்தன்மையோடும் ஏற்றுக்கொள்ளப் பக்குவப்படுத்திக் கொள்ளத்தான் வேண்டும். நம்மிடமுள்ள மன விரிவு, மன உறுதியும் இதற்குத் துணை நிற்கும்.

சில வகைக் கவலைகள் தீர்க்கப்பட வேண்டியவையே. ஆயினும் அவற்றை இன்று இப்போது உடனடியாகத் தீர்க்க முடியாத கால நேரம் வரும்போது அவற்றை எளிதாகத் தீர்க்கலாம். இல்லை இப்போதே தீர்த்தாக வேண்டும் என்று ஆரம்பித்தால் பின்னால் ஏற்பட இருக்கும் நன்மைகள் கெட்டுப் போகும். அதுமட்டுமன்றி வேறு பல துன்பங்களுக்கு அது பிறப்பிடமாகும்.

ஒரு குடும்பத்தில் ஒரு பெண்ணிருப்பாள், வயதாகிக் கொண்டிருக்கும், திருமணப் பருவம் கடந்து கொண்டு இருக்கும், தாயார் ஓயாமல் தந்தையை இடித்துக்கொண்டே இருப்பார், தந்தை என்ன செய்வார், அவர் ஒருவரால் சாத்தியமாகக்கூடிய செயலா அது?, மகனுக்கு இன்னும் வேலை கிடைக்கவில்லை. அதற்கு என்ன செய்வது?. இவையெல்லாம் சமுதாயம், அரசாங்கம் தீர்க்க வேண்டிய பிரச்சினைகள். நாம் முயற்சிகள் எடுக்க வேண்டியது கடமை தான். தீர்வை அரசாங்கம்தான் கொடுக்க வேண்டும். இடையில் வருந்திப் பயனில்லை. பொறுமையாக காத்திருக்க வேண்டும். இல்லாதவரை மனக்கவலைதான் மிஞ்சும்.

சில வகைத் துன்பங்கள் இருக்கின்றன. அவற்றைபற்றி கவலையே கொள்ளக்கூடாது. அலட்சியம் செய்துவிட வேண்டும். சிக்கலான ஒரு நிலை இல்லாததுபோலவே இருக்கப் பழக வேண்டும். இதற்கு ஒரு உதாரணம் எல்லோர் வீட்டிலும் உள்ளது தான். அறுபதோ அல்ல எழுபதோ வயதுள்ள முதியவர்கள் வீட்டில் இருப்பார்கள். எடுத்ததற்கெல்லாம் ஏதாவது சொல்லிக்கொண்டே இருப்பார்கள். ஒவ்வொருவர் மீதும் ஏதாவது குறை சொல்லிக் கொண்டே இருப்பார்கள். 'இதை ஏன் இப்படிச் செய்தாய்', 'அதை ஏன் இங்கே வைத்தாய்' 'அந்தக் காரியம் ஏன் இன்னமும் முடியவில்லை' என்று சர்வணமும் முணுமுணுப்புத்தான்.

அவர்களின் அனுபவம் எங்கள் வயதாகவிருக்கும். பலவிடையங்களைத் தள்ளிப் போட்டதால் அவர்கள் பெற்ற இழப்புகள், நஷ்டங்கள், அவர்கள் தலைமுறையான எங்களுக்கு நேரக்கூடாது என்பதில் அவர்களுக்குரிய அக்கறையின் வெளிப்பாடே அந்த முணுமுணுப்புக்கள். இன்றைய உலக ஓட்டம் அவர்களுக்குப் புதியது. இவ் இயந்திர உலகில் தினம்தினம் நாம் முகம்கொடுக்கும் இன்னல்களை இவர்களுக்கு இலகுவில் புரியவைக்கவும் முடியாது. அவர்களின் முணுமுணுப்புக்களுக்கு இடையே வாழ்க்கையை ஓட்டவேண்டியதுதான்.

அதிகமாகச் சாப்பிட்டதனால் அஜீரணம் வந்தது. இந்தச் சிக்கலை உடனடியாக தீர்க்க வேண்டும் இல்லாவிட்டால் சிக்கல் பெரும் துன்பமாக மாறும். இதேபோல் வாழ்க்கைச் சிக்கல்களும் இருக்கின்றன. ஒருவருக்கு $25,000 கடன் இருக்கின்றது. வட்டியோ தலைக்குமேல் போகின்றது. வருமானத்திற்கும் செலவுக்கும் சரியாக இருப்பதால் வட்டி கொடுக்க முடியவில்லை. இந்தச் சிக்கலை எப்படி தீர்ப்பது? அவருக்கு $75,000 பெறுமதியான சொத்து இருக்கின்றது. அதில் ஒரு பகுதியை விற்று கடனை அடைக்கலாமே. அதை விட்டுவிட்டு 'ஆ அது பரம்பரைச் சொத்து' என்று வரட்டுக் கௌரவம் பார்த்தால் சிக்கல் சிக்கலாகவே தான் இருக்கும். அதனால் வந்த நட்டம் நட்டமாகவே இருக்கும். பின் யாரை நொந்து என்ன பயன்?.

சிக்கல்களை நிதானமாகத் தீர்மானிக்க வேண்டும். உடனடியாக தீர்க்க வேண்டிய சிக்கலை தள்ளிப்போடக்கூடாது. தள்ளிப்போட வேண்டிய சிக்கலை ஒரேயடியாக அலட்சியம் செய்துவிடக்கூடாது. அலட்சியம் செய்து விடவேண்டிய சிக்கலை ஓடித்திரிந்து அல்லல்படக்கூடாது. சிக்கலை நாம் தவறாக பிரித்துவிட்டால் அது புது சிக்கலுக்கு வழி வகுக்கும்.

சில சிக்கலை விரைவாகத் தீர்க்க வேண்டி உணர்ச்சிவசப்பட்டு செயலாற்றினால் பெரும்பாலும் அச்சிக்கல் பெருகிவிடும். எப்போதும் நாம் நம் செயலால் எந்தச் சிக்கலையும் முடிவுக்கு கொண்டுவருவதில்லை. எங்கு ஒரு சிக்கலை முடிந்ததாக எண்ணுகின்றானோ அங்கேயே அதன் வேரிலே மற்றொன்று முளைவிடும்.

எல்லாச் சிக்கல்களுக்கும் முடிவு இயற்கையிலே தான் உண்டு. ஒவ்வொரு சிக்கலையும் வெற்றி கொள்வது தெளிந்து தேர்ந்த அறிவாகும். அத்தகைய அறிவு எல்லோரிடமும் இருக்கிறது. அதைத் தூண்டி அதையே வலுவுள்ள ஆயுதமாகக் கொண்டு கவலைகளை ஒழித்து வாழ்வில் மகிழ்ச்சியை பெறுவோம்.

இப்படிப்பட்ட சிக்கல்களை இடியாப்பச் சிக்களாக்கி இந்தச் சிக்கல்களுக்கு விடிவு காணமுடியாமல் சிக்கல்களை பெரிதாக்கி அரசுக்கு வரிகட்டமுடியாமல் சட்டச் சிக்கல் களுக்குள் சிக்கி, மதம் மாறிப் பிரச்சினையை தீர்க்கலாம் என்று மதமும் மாறி மனம் போன போக்கில் வாழ்ந்து வாழவேண்டிய வயதில் மைக்கல் ஜாக்சன் மறைந்தார்.

சிக்கல்கள் சிம்பிளானவை. மனம் விசாலமானது. மனத்தை அடக்கி புலனை நிலை நிறுத்தி நிதானமாக நடந்து பிரச்சினைகளை சிக்கல்களை எதிர்கொண்டு வாழும் வயதில் வளமாக வாழ்வோம். வளம்பெறுவோம்.

mahesan.thiru@thaiveedu.com

■ ■ ■

## மனவளக் கலைப் பயிற்சி

Classes are conducted every Saturday of the week at 4 - 6 pm.

**The SKY Yoga Canada**

80 Nashdene Road, Unit 130

Scarborough, Ontario M1V 5E4

(Located at Markham & Nashdene intersection)

# குழந்தைப் பாதுகாப்பும் பெற்றோரும்



மஞ்சுளா ராஜலிங்கம்

சமீபத்தில் கடத்தப்பட்டு, காணாமல்போய் பின்னர் கொலை செய்யப்பட்டதாக நம்பப்பட்ட Tori என்ற எட்டுவயதுப் பெண்பிள்ளையை நாம் மறந்திருக்க வாய்ப்பில்லை. கடத்தியவர்கள் பிள்ளையின் பெற்றோரை நன்கு அறிந்தவர்கள் என்பது ஒரு அதிர்ச்சி. அவர்களும் குழந்தை தொலைந்து போனபோது, பொதுமக்களுடன் சேர்ந்து குழந்தையைத் தேடும் பணியில் இணைந்து கொண்டார்கள் என்பது கூடுதல் அதிர்ச்சி.

குழந்தையைக் காணவில்லை, அல்லது சிறுபிள்ளை ஒன்று கடத்தப்பட்டது என்ற செய்தியைத் தொலைக்காட்சிகளிலோ, அன்றி செய்திகளிலோ அறிந்தாலே, பெற்றோர்களுக்கு சங்கடங்கள் எழத்தான் செய்கின்றன, அது நம் குழந்தையாக இருக்காத பட்சத்திலும். அதே சமயம், பெரும்பாலான குழந்தைகள் தம் இளம்பிராயத்தைப் பாதுகாப்பாகக் கடந்து அடுத்த கட்ட உலகிற்குச் செல்கின்றார்கள் என்பதையும் மறுப்பதற்கில்லை.

வட மெரிக்காவில் சராசரியாக வருடமொன்றிற்கு ஒரு மில்லியன் சிறுகுழந்தைகள் வரை, தொலைந்துபோவதும், கடத்தப் படுவதும் வருத்தத்திற்குரிய ஒரு செயலாகும். வருடந் தோறும், படிக்கும் பள்ளிக்கு அருகாமையிலேயே குழந்தைகள் கடத்தப் படுகின்றார்கள் என்ற கருத்துப் பரவலாக நம்பப் படுகின்றது. ஆனால் பெற்றோர் என்ற பொறுப்பில் இருந்து, நம் குழந்தைகளுக்குச் சிறுபிராயத்திலேயே, இப்படி ஒரு அந்நியரால் கடத்தப்படும்போது, நடந்து கொள்ளும் முறைகளும், இம்மாதிரியான நபர்களின் நடவடிக்கைகளைக் குறிப் புணர்ந்து, அதிலிருந்துச் சாமர்த்தியமாகத் தப்புவது பற்றியும் சொல்லிக் கொடுத்தால், குழந்தைகளின் மனப்பயம் அவர்களைவிட்டு விலகுவதுடன், உடல், மனரீதியாக அவர்கள் தங்களைக் காக்கும் வித்தைகளை அறிந்து அதிலிருந்துச் சுலபமாக விடுபடும் வழிகளையும் அறிந்து கொள்ள ஏதுவாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

பயம் தைரியத்தைச் செயலிழக்கச் செய்துவிடும். ஆனால் சாமர்த்தியமும், நிதானமாகச் சிந்திக்கும் பக்குவமும் இருந்தாலே, வெற்றி நம் குழந்தைகளைக் கரையேற்றிவிடும். ''நீங்களும், எதிர்பாராத ஒரு சமயத்தில் கடத்தப் படலாம்'' என்ற போதனையில் ஆரம்பித்து, அதற்கான யுத்திகளைக் கையாளும் முறைகளையும், இந்த மாதிரியான சந்தர்ப்பங்களிலிருந்து தம்மைத் தாமே தற்காத்துக் கொள்ளும் குறிப்புக்களையும் குழந்தைகள் மனத்தில் பெற்றோர் புகுத்தியேயாக வேண்டும். பின்னாளில் வேதனைகள் வேண்டாமே.

தொலைக்காட்சிப் படங்களில் காட்டப்படுவது போல், பிள்ளைகள் கடத்தப்படும் முறைகள் முழுமையாக உண்மையல்ல, அது உண்மையான கடத்தலின் காரணங்களிலிருந்து வேடிக்கையாக சித்தரிக்கப்பட்டிருக்கும். சந்தர்ப்பங்களும், சூழ்நிலைகளும் சினிமாக் கற்பனையிலிருந்து மிகவும் வேறுபட்டிருக்கும்.

அதிகமாக ஒரு பிள்ளை கடத்தப் பட்டிருக்கின்றது என்று முறையிடப்படும் போது அப் பிள்ளை, பெற்றோர்களின் கருத்தொற்றுமை இன்மையால் வீட்டைவிட்டு வெளியேறியிருக்கும், அல்லது தம் பிள்ளை அந்தச் சமயத்தில் யார் வீட்டில் நேரத்தைச் செலவிடுகின்றது என்பதைத் தீர விசாரித்து அறியாமல் பெற்றோர் கொடுக்கும் புகார்களாகும்.

## கடத்தப்படும் பிள்ளைகள்

கடத்தப்படும் டீன் ஏஜ் பிள்ளைகள் பெரும்பாலும், குடும்ப உறுப்பினர் ஒருவரால் அல்லது தெரிந்தவர் ஒருவரால் கடத்தப்பட வாய்ப்புக்கள் அதிகம். குழந்தைகளானால், அதில் இருபத்தைந்து சதவிகிதமானோர், அந்நியர் ஒருவராலேயே கடத்தப் படுகின்றனர்.

கடத்தல்காரர்களுக்கு குட்டிக் குழந்தைகளைக் கடத்துவது மிகவும் சுலபமாக இருக்கின்றது. குழந்தைகள் அவர்கள் கைக்கு அடக்கமானவர்களாக இருப்பதோடு, அவர்களால் பெருங் குரலெடுத்துக் கத்தவோ, அடிக்கவோ, எதிர்த்துப் பேசவோ முடியாதவர்கள் என்பதும் ஒரு காரணம்.



கடத்தப்படும் பெண் குழந்தைகளில் 80 சத விகிதமானோர் பாலியல் பலாத்காரத்திற்கும், உடல் வதைகளுக்கும் உள்ளாகின்றனர். இதில் கடத்தப்படும் குழந்தைகள், மனநிலை பாதிக்கப்பட்ட மற்றும் ஆத்திரம் கொண்ட இந்தக் கடத்தல்காரர்களினால் சமயங்களில் கொலை செய்யப்படுவதும் உண்டு.

பள்ளிக்கூட வளாகத்தினுள் குழந்தைகள் கடத்தப் படுவது அரிதானது

தினமும் 2100 குழந்தைகள் தொலைந்து போவதாக பதிவுகள் காவல் இலாகாக்களில் பதிவு செய்யப்பட்டாலும், அதில் பல குழந்தைகள் உடனடியாகவே கண்டுபிடிக்கப்படுகின்றனர்.

## பெற்றோர் கவனத்தில் கொள்ள வேண்டியவை

- பிள்ளைகளை ஆறு மாதங்களுக்கொரு முறை புகைப்படம் எடுத்து வைத்துக் கொள்ளல் நல்லது.
- குழந்தைகளின் மருத்துவ, மற்றும் பல் வைத்தியச் சேவைகள் பற்றிய குறிப்புக்களை வைத்திருங்கள்
- கணணியில் குழந்தைகள் விசிட் செய்யும் தளங்களைக் கவனமாக ஆராயுங்கள். "chat" போன்ற இடங்களில் குழந்தைகள் உரையாடும் முறைகளைக் கவனியுங்கள். ஒருபோதும், இம்மாதிரித் தளங்களில் உங்கள் அல்லது உங்கள் குழந்தைகள் பற்றிய குறிப்பை, உங்கள் குழந்தைகள் முகம் தெரியாத அந்நியர் ஒருவருக்குக் கொடுக்காமல் இருக்க வேண்டிய அவசியத்தைக் கூறுங்கள். படங்கள் போன்றவற்றை உங்கள் குழந்தைகள் பொதுத் தளங்களில் upload செய்யாமல் பார்த்துக் கொள்ளுங்கள். அத்துடன் இம்மாதிரி இணையதளங்களில் சந்திக்கும் நபர்களுடன் தொடர்பு கொண்டு வீட்டுக்கு வரச்சொல்லல், அல்லது வெளியே சென்று அவர்களைச் சந்தித்தல் போன்றவற்றைச் செய்யவே கூடாது என்பதையும் பிள்ளைகளிடத்தில் எச்சரித்து வையுங்கள். வலயத்தில் தொடர்பு கொள்ளும் ஒருவர் தம் படம் என்று ஒன்றை அனுப்பி வைத்தாலும், அது அவராகவே இருக்காது என்பதும் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்று. இவையெல்லாம் சிறுபிள்ளைகள் மனதைக் கவர செய்யும் பலகீன நடவடிக்கைகளாகும் என்பதைத் தெரியப்படுத்துங்கள்.
- உங்கள் பிள்ளைகள் போகும் இடங்கள் பற்றிய ஒரு வரைமுறையை வைத்திருங்கள். முக்கியமாக, சினிமாக் கொட்டகை, malls, பார்க்குகள், பொதுக் கழிப்பறைகள் மற்றும் fund raising என்று பிள்ளைகள் வீட்டுக்கு வீடு செல்லும் தெருக்களைக் குறித்துக் கொள்ளுங்கள். அத்துடன் trick or treating, பள்ளி மற்றும் பொதுவிழாக்கள் போன்றவற்றிக்குப் பிள்ளைகளைத் தனியே அனுப்பாமல் நீங்கள் கூடவே செல்லல் நலம். இங்கே பல, முகம் தெரியாத நபர்களைச் சந்திக்கக் கூடிய வாய்ப்புக்கள் பிள்ளைகளுக்கு அதிகம்.
- மிகச்சிறிய குழந்தைகளாக இருந்தால், அவர்களை உங்கள் இடுப்பில் ஒரு நாடாவைக்(Harness இதற்கென்றே பிரத்தியேகமாகக் கடைகளில் கிடைக்கும், பிள்ளையை நம்முடனேயே வைத்துக் கொள்ளும் சாமர்த்தியம்) கட்டி அவர்களின் உடைகளில் பொருத்திவிட்டால், சின்னக் குழந் தைகள் ஒரு இடத்திற்குமேல் உங்களைப் பிரிந்து போகமாட்டார்கள். குழந்தைகள் தூரப்போனால் சத்தம் போட்டு காட்டக் கூடிய சிறு monitors போன்றவைகளும் கடைகளில் கிடைக்கும்.
- பெற்றோர்கள் நீங்கள் உங்கள் மத்தியில் மற்றும் மற்ற பிள்ளைகளின் பெற்றோர் மத்தியில் தொலைபேசி இலக்கங்களைப் பரிமாறிக் கொண்டால், அவசர நேரத்தில் அவர்கள், உதவியும், மேலதிகத் தகவல் களும் கிடைக்கும்.
- ஓரளவு பெரிய பிள்ளைகளானால், அவர்கள் போகுமிடங்களைப் பற்றி உங்களுக்கு ஒரு குறிப்பு எழுதியோ, அல்லது தொலை பேசியில் அறிவிப்பாக விடுத்தோ செல்ல வேண்டும் என்பதை அவர்களிடம் சொல்லி வையுங்கள்.
- சந்தேகத்துக்கிடமாக யாராவது நடந்தாலோ, நடமாடினாலோ, வாகன அனுமதி இலக்கம் மற்றும் சந்தேகப்பட்ட நபர்களின் அங்க அடையாளங்களை ஓரளவுக்குக் கவனித்து வைத்துக் கொள்ளல் நல்ல பலனைக் கொடுக்கும்.
- பிள்ளைகளைக் காரிலோ அல்லது குழந்தைத் தள்ளுவண்டியிலோ ஒரு விநாடி கூட தனியே விட்டுச் சென்று விடாதீர்கள்
- பிள்ளைப் பராமரிப்பு விளம்பரம் செய்யும் தாதிக்களைக் கவனமாக, அவர்கள் விபரம், தனிப்பட்டக் குறிப்புக்கள் தெரிந்து வேலைக்கு அமர்த்திக் கொள்ளுங்கள். யாரையாவது தினமும் பிள்ளைகளைப் பள்ளியிலிருந்து கூட்டிவரும்படி பணியில் நீங்கள் ஒருவரை அமர்த்தியிருந்தால், அதுபற்றி பள்ளியிலும், பள்ளியிலுள்ள பிள்ளைப் பராமரிப்பு நிலையத்திலும் உள்ளவர்களிடமும், மற்றும் உங்கள் குழந்தைகளிடமும் இதுபற்றி முன்னமே பேசி, ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்
- சிறு பிள்ளைகளைப் பெயர் பதித்த உடைகளுடன், புத்தகங்களுடன், விளையாட்டுப் பொருட்களுடன் வெளியே அனுப்புவதைத் தவிருங்கள். காரணம், தம் பெயர் சொல்லி அழைக்கும் வளர்ந்த ஒருவரை சிறுகுழந் தைகள் அறவே நம்பிவிடும், அது முன்பின்

67ம் பக்கம் பார்க்க...

A9NEWSRADIO

EELAM SUPER TALENTS 2009

வணக்கம் நேயர்களே

ஈழத் தமிழர்களின் கலைப்படைப்புகளுக்குக் களம் அமைத்துக் கொடுப்பதனூடாக நம்மவர்களிடையே நமது கலைவடிவங்களுக்கான தேடலுக்கும் தேர்விற்குமான அருட்டலை நிகழ்த்தி நம் மண்ணுக்கேயுரிய தனித்துவத்துடனும் அடையாளத்துடனும் எம்மக்கள் மத்தியிலிருந்து கலைமுயற்சிகள் வளர்த்தெடுக்கப்படவேண்டும் என்ற எண்ணக்கருவை மூலதனமாகக் கொண்டு ஏ9நியூஸ் வானொலி இயங்கிவருகிறது.

மிக விரைவில் சிறந்த இசையமைப்பாளர், சிறந்த பாடகர்கள், சிறந்த பாடலாசிரியர் தேர்வோடு 14 சிறந்த பாடல்களின் இசையணித்தேர்வு நிகழ்ச்சி!

தொடர்புகளுக்கு: 905 604 1259 - 647 281 9084 - info@a9news.com WWW.A9NEWS.COM

# கடன்தொல்லை?




- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

**நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி**

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

# SRI

## CREDIT SOLUTION CENTRE

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ்
இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com



digi

# A1 TOP QUALITY FLORIST



உங்களின் மங்களகரமான வைபவங்களுக்கு
தேவையான பொருட்களுக்கும் நாடுங்கள்

பிள்ளை 416-269-5522

2871 Lawrence Ave. East, Scarborough. Ontario M1P 2S8

# A1 TOP QUALITY FLORIST

## Funeral Services




Floral Arrangement for Funeral Needs

பிள்ளை 416-269-5522

2871 Lawrence Ave. East, Scarborough. Ontario M1P 2S8

# பொருளாதாரப் பனியுகம்



ராகுலன்
balar@thaiveedu.com

இப்போது ஒவ்வொருவரது வாயிலும் பொரு ளாதார பின்னடைவின் கடுமையைக் கடந்து விட்டோம் என்ற வார்த்தைகள் உலவி வரு-வதைப் பார்க்கக்கூடியதாக இருக்கிறது. நிதித்துறை கார் உற்பத்தி, சுரங்கத் தொழில் வீடு விற்பனை போன்ற துறைகளில் ஈடுபட்-டிருப்போர் புதிய வளர்ச்சிக்காலத்தை ஆவலுடன் எதிர்பார்த்து இருக்கின்றனர்.

ஆனால், கடந்த பனியுகத்தில் கனடாவின் மேற்பரப்பை பனிமூடி பனியுகத்தின் முடிவில் பின்வாங்கிய போது கனடாவில் நிலப்பரப்பில் பாரிய மாற்றங்களைச் செய்துவிட்டது. பெரிய பள்ளத்தாக்குகளையும் பாரிய ஏரிகளையும் உருவாக்கி பெருமளவில் உயிரினங்களை அழித்து ஒழித்துவிட்டது. இந்தப் பொருளாதாரப் பின்னடைவும் இந்தப் பனியுகம் போன்றதே.

2009இன் பொருளாதாரப் பின்னடைவு பின் வாங்கிக்கொண்டிருந்த போதிலும் இதனுடைய விளைவுகள் இன்னும் பல வருடங்களுக்கு இருக்கும். நிதித்துறை, உற்பத்தித் துறைக-ளில் ஏற்பட்ட தாக்கம் பல ஆண்டுகளுக்கு பொருளாதாரப் பின்னணிகள் இன்னும் இருப்-பது போலவே இருக்கும். அவர்களின் நிதி நிலைமை இறுக்கமாகவும், புதிய ஊழியர்களை வேலைக்கு அமர்த்துவது கடினமாகவும் இருக்கும். உற்பத்தித் துறையில் இருப்போ-ருக்கும் அடிப்படைப் பொருட்களை வாங்கு-வது இலகுவாகவும், தமது உற்பத்திகளை வெளிநாடுகளில் விற்பது கடினமாகவும் இருப்-பது இதற்குக் காரணம், கனடிய நாணயத்தின் உயர் பெறுமதியாகும். அத்துடன் அரசாங்-கத்தின் ஊக்குவிப்பு பணத்தின் வருகை குறைந்தவுடன் நாடெங்கிலும் கட்டுமானப் பணிகள் வேகம் குறைவாதலால் அங்கு ஒரு மெத்தனம் ஏற்படும்.

அத்துடன் எரிபொருளின் விலை உயர்வதுடன் அரசாங்கங்கள் தற்போது உயர்வடைந்த துண்டு விழும் தொகையைச் சரிபடுத்த வரி களை உயர்த்த வேண்டும்.

ஆகவே பொருளாதாரம் வளர்ச்சி காணத் தொடங்கும் போது உங்களது வர்த்தகம் தானாக வளர்ச்சி காணும் என்று நினைத்தீர்-களானால் அதை மறந்து விடுங்கள். உங்க ளது முன்னேற்றத்தை உங்களது கைகளில் எடுத்து கொண்டால் தான் உங்களது வர்த்-தகம் முன்னேறும்.

> “பொருளாதாரம் வளர்ச்சிகாணத் தொடங்கும்போது
> உங்களது வர்த்தகம்
> தானாக வளர்ச்சிகாணும் என்று
> நினைத்தீர்களானால் அதை மறந்து விடுங்கள்.
> உங்களது முன்னேற்றத்தை
> உங்களது கைகளில் எடுத்து கொண்டால்தான்
> உங்களது வர்த்தகம் முன்னேறும்”

நீங்கள் உங்கள் வாடிக்கையாளர்களுக்கு எப்படிப் பெறுமதியைக் கூட்டலாம் என்பதை மீளாய்வு செய்ய வேண்டும். உங்களின் சந்தை இலக்கில் உங்கள் முக்கியத்துவத்தை அதி கரிக்க வேண்டும். உங்களின் வாடிக்கை-யாளர்கள் வாங்குவதைப் பிற்போட்டார்க-ளானால், பொருளாதாரப் பின்னடைவு முடிந்-ததாக கனடிய மத்திய வங்கி அறிவித்தவுடன் உங்கள் வாடிக்கையாளர்கள் தமது பணப்பை-யைத் திறப்பார்கள் என எதிர்பார்க்க முடியாது. ஆகவே நீங்கள் உங்களிடம் வாங்குவது பற்றி இன்னும் உங்கள் வாடிக்கையாளர்களை நம்பச்செய்ய வேண்டும். இதற்கு பொருட்க-ளின் பெறுமதியை கூட்டுவதுடன் உங்கள் சந்தைப் படுத்தும் திறமைகளையும் அதிக-ரிக்க வேண்டும். உங்களில் வாடிக்கையா-ளருடன் இறுக்கமான உறவுகளை வளர்க்க வேண்டும்.

நீங்கள் உங்களின் வாடிக்கையாளர்கள் ஒன்றும் இல்லாதவர்கள் என்று நினைத்தால் எப்படி நீங்கள் உங்கள் சந்தைப்படுத்துதலைச் செய்ய முடியும். ஆனால், நீங்கள் உங்கள் வாடிக்கையாளர்களை உலகிலேயே செல்வம் நிறைந்தவர்கள் என்று நினைத்தால் தான் நீங்கள் உங்கள் சந்தைப்படுத்தும் நடவடிக் கைகளை சரிவரச் செய்ய முடியும்.

இந்த பொருளாதார பின்னடைவுகள் பல புதிய எண்ணங்களை வர்த்தக முயற்சியாக்க முடியும். கடந்த பொருளாதாரப் பின்னடைவின் போது உருவாக்கப்பட்டது தான் Dollar Rama. 12 வருடம் கழிந்து 2004இல் 1 Billion Dollarக்கு ஒரு அமெரிக்க முதலீட்டாளரால் வாங்கப்பட்டது.

பகுதி நேர வேலை பார்க்கும் நுகர்வோருக்கு என்ன பொருட்களை விற்பது, அவர்களின் பணத்திற்கு வாங்கும் பெறுமதியை அதிக-ரித்தல் என்பன முக்கியமானது. இவர்களுக்கு தற்போது உங்கள் சேவைகள் உதவி செய்ய வேண்டியது முக்கியமாகும்.

புதிய எண்ணக்கருக்கள் மரங்களில் இருந்து விழுவதில்லை. உங்களின் புதிய வாடிக்கை-யாளர்களைக் கவரும் புதிய எண்ணங்கள் உங்கள் வர்த்தகத்தின் பணத்தைச் சேமிக்கும் வழிவகைகள் என்பன பொருளாதாரப் பின்ன-டைவில் இருந்து உங்களை மீட்கும்.

எல்லா வர்த்தகர்களுக்கும் பிரச்சினை ஒன்று-தான். உங்கள் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை நீங்கள் பெற்றால் உங்கக்கு வெற்றி. உங்களின் அடையாளம் காணப்பட்ட சந்தையில் உங்களின் எண்ணக்கருக்களில் உருவான புதிய பொருட்களை உருவாக்கி சிறந்த தொழில்நுட்பத்திற்கும் உங்கள் பணத்-திற்குமான பெறுமதியை உருவாக்க முடியும். சூழலியல் சம்பவங்களை பொருட்களுக்கு கேள்வி அதிகரித்து வருவதாக காணக்கூடி-யதாக இருக்கிறது.

இனிவரும் காலங்களில், கூடக்கூட பெண்க-ளை செலவீனங்கள் பற்றிய முடிவுகளை எடுக்கும்போது அவர்களை கவரக்கூடிய பொருட்களுக்கு நல்ல சந்தை இருக்கலாம்.

உலகிலே எங்கு பிரச்சினை இருக்கிறது அங்கு, ஒரு சந்தர்ப்பம் இருக்கிறது. எமது தாய்நாட்டில் 30 வருட யுத்தம் ஒரு முடிவுக்கு வந்த நிலையில் அங்கு எப்படிப்பட்ட முதலீடு களுக்கு சந்தர்ப்பம் இருக்கிறது என்று பார்ப்-பது ஒரு சிறந்த முதலீட்டாளரின் விவேகம். அது எமது கடப்பாடும்கூட.

This block sentences can be boxed

ragulan@thaiveedu.com

■ ■ ■


## Driving School

ஒட்டனர் பயிற்சியில் நட்பான அணுகுமுறை,
நவீனத்துவமான பயிற்சி முறையுடன் நம்பிகையான வெற்றி
G1, G2 தேர்வுப் பயிற்சிகள்,
போக்குவரத்து வசதிகள், தெளிவான விளக்க வகுப்புகள்,
வீதித் தேர்வுக்கான வாகன ஒழுங்குகள்,
வசதிக்கேற்ற தேர்வு நாட்கள்.

நீண்டகால அனுபவத்தின்
தனித்துவமான பயிற்சி

General Driving School
Ministry of Transportation Approved Instructor

பேரின்பநாதன் வேந்தன்
416-731-2829



EXPERT
BUILDING INSPECTIONS LTD

"Dedicated to Expert, Honest & Independent Inspections"

Tel: 905 940 0811 Fax 905 940 6108
Toll Free 1 866 373 3315

- Commercial Building Inspections
- Environmental Assessments
- Air Quality Investigations
- Problem Analysis & Solutions
- New Home Warranty Inspections
- Resale Home Inspections
- Complete Home Audit
- Thermal Imaging

www.expertinspector.com

- Tough and Thorough Inspections by **University of Toronto** educated Building Science Experts Specializing in Defect Recognition
- Our Inspectors are Registered Home Inspectors under the Province of Ontario 1994 Home Inspectors Act-Bill 158 and full members of **ASHI** and **CAHPI**-Ontario
- Exceed Nationally Recognized Standards
- Important Maintenance Advice & Follow Up Support For First Time Buyers
- On-Site Narrative Reports
- Seven Days a Week

ASHI MEMBER
CAHPI Ontario

# துயர் பகிர்வோம்



## திருமதி. சுப்பிரமணியம் சுந்தரம்மா

நெடுந்தீவு மேற்கு 2ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மல்லாவியை வதிவிடமாகவும், தற்போது சென்னையில் வசித்துவந்த சுப்பிரமணியம் சுந்தரம்மா அவர்கள் 30.06.2009 அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற திரு.திருமதி ஐயம்பிள்ளை தம்பதியினரின் அன்புமகளும், காலஞ்சென்ற திரு.திருமதி செல்லப்பா தம்பதியினரின் மருமகளும், சுப்பிரமணியம் அவர்களின் அன்புமனைவியும், காலஞ்சென்ற சிவகாமிப் பிள்ளை, அபிராமிப்பிள்ளை, பத்தினிப்பிள்ளை, வ.ஐ.தாமோ-தரம்பிள்ளை, வ.ஐ.சண்முகம்பிள்ளை, வ.ஐ.அம்பலவாணர், வ.ஐ.நல்லதம்பி, மற்றும் மனோன்மணி ஆகியோரின் அன்புச்சகோதரியும், புண்ணியசிங்கம், வேலாயுதம்பிள்ளை, குணநாயகி, தனலட்சுமி, காலஞ்சென்ற செல்வநாயகி, இராசலிங்கம், கேதீஸ்வரன், விஜயகுமாரி, ஜெயக்குமாரி, காலஞ்சென்ற ஜெயக்குமார், சத்தியலட்சுமி, காலஞ்சென்ற சத்தியதாஸ், கலைச்செல்வி, சசிகலா, நிர்மலா, பவானி ஆகியோரின் அன்புத்தாயாரும், மலர், அற்புதராணி, செல்வராஜா, தனபாலசிங்கம், காலஞ்சென்ற யோகநாதன், பாலரஞ்சனி, தங்கராணி, புவனேந்திரலிங்கம், குணரட்ணம், அருள்தாஸ், செல்வகுமார், யோகலிங்கம், தர்மரட்ணம் ஆகியோரின் அன்புமாமியாரும் ஆவார்.

| | | |
|---|---|---|
| இராசலிங்கம்(சிவம், மோகன்) | கனடா | 1 514 495 7944 |
| வேலாயுதபிள்ளை(கருணா) | ஜேர்மனி | 49 911 323 7894, 49 911 374 7372 |
| செல்வராஜா | இந்தியா | 91 996 2328467 |
| யோகலிங்கம்(கீதா) | லண்டன் | 44 208 279 4693 |



## திரு. கந்தையா பசுபதி

நெடுந்தீவில் பிறந்தவரும், புளியங்கூடலில், யாழ்ப்பாணத்தில் வாழ்ந்துவந்தவருமான கந்தையா பசுபதி அவர்கள் யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கந்தையா கனகம் தம்பதிகளின் அன்புப்புதல்வரும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் பார்வதி தம்பதிகளின் மருமகனும், கனகம்மா-வின் ஆருயிர்க்கணவரும், அரசரெத்தினம், சறோஜாதேவி, வசந்தகுமார், யோகாதேவி, விமலாதேவி, இந்திராதேவி (சுவிஷ்), ஜெயகுமார்(ஜேர்மன்),ரவீந்திரகுமார்(ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகுதந்தையும், தவமலர், இலங்கநாதன், றோகினி, சண்முகலிங்கம், புவனேந்திரன், குமார்(சுவிஷ்), புஷ்பலதா(ஜேர்மன்), ஜெசுதா(ஜேர்மன்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற அருணாசலம், காலஞ்சென்ற நாகேஷ், மாணிக்கம், வள்ளியம்மை, கணபதிப்பிள்ளை, பார்வதி(சுவிஷ்), சின்னத்தங்கம், நாகரெத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்

அன்னாரின் இறுதி மரியாதை யூலை மாதம் 2ம் திகதி நடைபெற்றது.

| | | |
|---|---|---|
| சித்திரா | இலங்கை | 94 778 501 395 |
| சறோஜா | இலங்கை | 94 779 337 092 |
| இந்திரா | சுவிஸ் | 41 344 450 193 |
| குமார் | ஜேர்மனி | 49 7766 293 0108 |
| அஷோக் | ஜேர்மனி | 49 201 612 0359 |
| ரவி | ஜேர்மனி | 49 201 846 2661 |
| சுதன் | லண்டன் | 44 752 999 3145 |



## திருமதி. சின்னத்துரை சிவக்கொழுந்து

அனலைதீவு 2ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், கனடாவில் வசித்துவந்தவருமான திருமதி.சின்னத்துரை சிவக்கொழுந்து அவர்கள் June மாதம் 12ம் திகதி கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் உடையார் - தெய்வானை தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் சின்னத்துரையின் மனைவியும், காலஞ் சென்ற சௌந்தரம்பாள், இரத்தினம்(இலங்கை), உமாபதி (கனடா) ஆகியோரின் சகோதரியும், மனோகரன், காலஞ்சென்ற மகேந்திரன், கருணாநிதி (கனடா), பாஸ்கரன்(Real Estate – கனடா), காலஞ்சென்ற ஆனந்தி, வானிலா(கனடா) ஆகியோரின் தாயாரும், மனோரஞ்சிதம், மலர்ரஞ்சிதம், தயாநிதி, ஜெயன் ஆகியோரின் மாமியாரும், சாம்பசிவம், சிவராஜா ,கனேசன், மனோன்மணி, காலஞ் சென்றவர்களான புவனேஸ்வரி, சின்னம்மா, செல்லம்மா மற்றும் பரமநாதன், சிவஞானம், இராசலிங்கம் காலஞ் சென்றவர்களான பொன்னம்பலம், செல்லத்துரை மற்றும் ராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும். காலஞ்சென்ற சொர்ணம்மா, குகலட்சுமி, இராசம்மா, ஞானசுந்தரம், காலஞ்சென்றவர்களான தருமலிங்கம், கனகசபை, சின்னராசா மற்றும் ஞானாம்பாள், சரோஜினி, அமுதா ஆகியோரின் சகலியும், சுரேந்தர், சஜீந்தர், கஜன், தனுசா, சனுஜன். ரசிகா, பிரவீன், லக்ஷன், அனுஷன், விநோத், ஜனுத், அபிநயா ஆகியோரின் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி மரியாதை யூன் மாதம் 14ம் திகதி றொறன்ரோவில் நடைபெற்றது.

416-880-8585, 416-674-9120



## திரு. கைலாயபிள்ளை மோகனகாந்தன்

நுணாவில் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், 132 வில்சன் வீதி, திருவையாறு, கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்டவர்களான திரு.கைலாயபிள்ளை மோகனகாந்தன் அவர்கள் இராணுவத்தினரின் எறிகணைவீச்சுக்கு இலக்காகி முள்ளியவளையில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கைலாயபிள்ளை – தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், நடராஜா – நவமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், பகீரதியின் அன்புக் கணவரும் மோகனப்பிரியாவின் பாசமிகு தந்தையும் ஸ்ரீகாந்தன்(கனடா), ஜெயகாந்தன் (இலங்கை) உதயகாந்தன்(இலங்கை) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், யோகலட்சுமி, பாக்கியலட்சுமி, காலஞ்சென்ற தனபாலசிங்கம், மற்றும் கந்தசாமி, பாஸ்கரன், காலஞ்சென்றவர்களான பகீரதன், பிரதீபன், மற்றும் பத்மஸ்ரீ(ஷோபா), உமா, கருணராஜா, பிரேமினி ஆகியோரின் மைத்துனரும், அஸ்வரன், அஜித், அபிநயன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், குபேரன், கிருசிகா, கீர்த்திகா ஆகியோரின் ஆசைமாமாவும், புருசோத்தமன், திருவரங்கன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

416 843 9440,

905 430 1568,

416 904 7910



## திரு. சின்னத்தம்பி கைலாயபிள்ளை, திருமதி. கைலாயபிள்ளை தெய்வானைப்பிள்ளை

நுணாவில் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், 132 வில்சன் வீதி, திருவையாறு, கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்டவர்களான திரு.சின்னத்தம்பி கைலாயபிள்ளை, திருமதி கைலாயபிள்ளை தெய்வானைப்பிள்ளை, திரு.கைலாயபிள்ளை மோகனகாந்தன் ஆகியோர் இராணுவத்தினரின் எறிகணைவீச்சுக்கு இலக்காகி முள்ளியவளையில் அகால மரணமானார்கள்.

அவர்கள் திரு,திருமதி சின்னத்தம்பி தம்பதிகளின் அன்பு மகனும், மருமகளும், திரு, திருமதி விநாசித்தம்பி தம்பதிகளின் அன்பு மகளும், மருமகனும், ஸ்ரீகாந்தன் (கனடா), ஜெயகாந்தன் (இலங்கை) காலஞ்சென்ற மோகனகாந்தன், மற்றும் கலைச்செல்வி(கனடா), உதய-காந்தன் (கனடா) ஆகியோரின் அன்புப் பெற்றோரும், பத்மஸ்ரீ(ஷோபா), உமா, பகீரதி, கருணராஜா, பிரேமினி ஆகியோரின் அன்பு மாமனாரும் மாமியாரும், அஸ்வரன், அஜித், அபிநயன், மோகனப்பிரியா, குபேரன், கிருஷிகா, கீர்த்திகா, புருசோத்தமன், திருவரங்கன் ஆகியோரின் பேரனும் பேத்தியும், பரிமளம், சரஸ்வதி, காலஞ்சென்ற-வர்களான பூரணம், குமரேசு, தம்பையா ஆகியோரின் மைத்துனரும் சகோதரியும், காலஞ்சென்றவர்களான அருளையா, நவரத்தினம், சிவக்கொழுந்து, அம்பல-வாணர் மற்றும் பாலன் ஆகியோரின் மைத்துனரும் சகலியும் ஆவார்கள்.

416 843 9440, 905 430 1568, 416 904 7910



## திரு.ஆர்.ஆர்.அப்பாத்துரை

நயினாதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மற்றும் கனடாவில் வசித்துவந்தவருமாகிய இராமலிங்கம் இராமுப்பிள்ளை அப்பாத்துரை (இளைப்-பாறிய ஆசிரியர்) அவர்கள் 25.06.2009 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமுப்பிள்ளை பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கணபதிப்-பிள்ளை இளையநாச்சி தம்பதியினரின் அன்பு மருமகனும், இராசம்மாவின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, தங்கரெத்தினம், பூபாலசிங்கம், விஜயரட்ணம், கனேசன், பூமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ் சென்றவர்களான கமலாம்பிகை, கந்தசாமி, கனகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுந்தரேசன்(லண்டன்), வாகீசன்(லண்டன்), தியாகேசன்(அவுஸ்திரேலியா), அனுசுயா, கஸ்தூரி, அழகேசன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், யோகேஸ்வரி, அனுஷா, கோணேஸ்வரி, பாலேஸ்வரன், அருட்செல்வன், அபர்ணா ஆகியோரின் அன்பு மாமனாரும், சங்கரி, சௌமியா, சஞ்சுதா, உமை, கனன், சுபானு, கௌசிகன், அபிராமி, அஸ்வினி, வர்ஷினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதி மரியாதை யூன் மாதம் 29ம் திகதி றொறன்ரோவில் நடைபெற்றது.

416 754 3672, 416 522 6791, 416 432 9759

# குழந்தைப் பாதுகாப்...

62ம் பக்கத் தொடர்ச்சி...

அறிமுகம் இல்லாத ஒருவராக இருந்தால் கூட.

- பிள்ளைகள் கிட்டத்தட்ட மூன்று வயதை நெருங்கும்போதே, கடத்தலின் அபாயங்களைப் பற்றிக் குழந்தைகளிடம் மனம் விட்டுப் பேசுவது நல்லது. அதற்காக, கடத்தினால் கடைசியில் பிள்ளைகளுக்கு என்ன நடக்கும் என்ற சம்பவங்களைப் பற்றிச் சொல்லி அவர்களுக்குக் கிலியை ஊட்டிவிடாதீர்கள். பொதுப்படையாக இவை பற்றி அடிக்கடி பேசிப் பார்க்க வேண்டும்.
- காவல்துறையினர், பிள்ளைகளின் நண்பர்கள் என்பதைத் திட்டமாக குழந்தைகளின் மனதில் பதிய வையுங்கள்.
- பள்ளிக்கு எந்தப் பாதையில் போய் எந்தப் பாதையில் வருவது என்பதைப் பிள்ளைக்குச் சொல்லிக் கொடுங்கள். பாதை பாதுகாப்பானது என்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள். சிறு ஒற்றையடிப் பாதைகளையும், சந்தேகப்படக்கூடிய பாதைகளையும் தவிருங்கள். ஆபத்து என்று வந்துவிட்டால், ஒதுங்கக் கூடிய பாதுகாப்பான வீடுகளையும், மனிதர்களையும் குழந்தைகளுக்கு அடையாளம் காட்டுங்கள். யாராவது தெரிந்தவர்கள் lift தருகிறேன் என்று சொன்னாலும், உங்கள் அனுமதியின்றி அவர்கள் காரில் ஏறிச் செல்வது தவறு என்ற எண்ணத்தைப் பிள்ளையின் மனதில் ஆழமாகப் பதியச் செய்யுங்கள்.
- உங்கள் அனுமதியின்றி, பள்ளிக்கு முன், அல்லது பள்ளிக்குப் பின் பிள்ளைகள் ஏதும் செய்ய விளைந்தால், அதற்கு இடம் கொடுக்காதீர்கள். அப்படி ஏதும் அலுவல்கள் வந்துவிட்டாலும், முதலில் பிள்ளை உங்களை அழைத்து உங்கள் அனுமதி பெற்றபின்பே போகலாம் என்பதைத் திடமாக அவர்களிடம் சொல்லி வையுங்கள். நம்பிக்கையான வளர்ந்த ஒருவர், அல்லது நல்ல, தெரிந்த, பிள்ளையின் நண்பர்கள் தவிர தனியாக அவர்களை ஒரு இடமும் இம்மாதிரிச் சமயங்களில் போக அனுமதி தரவேண்டாம்.
- உங்கள் பிள்ளைகளிடம், முன்னாளில் இம்மாதிரியான கடத்தல் சம்பவங்களைக் காரணம் காட்டி, அவர்களுக்கு இப்படி நடந்தால், அவர்கள் என்ன செய்வார்கள் என்பதைக் கேளுங்கள். விளக்கங்களைக் குழந்தைகளுடன் சேர்த்துப் பயிற்சி செய்து பார்த்துக் கொள்ளுங்கள். எவ்வளவுக்கெவ்வளவு பிள்ளைகளுக்கு பாதுகாப்பு உணர்வை மனதில் வளர்க்கின்றீர்களோ, அவ்வளவுக்கவ்வளவு அவர்கள் இம்மாதிரிச் சம்பவங்கள் நிகழும் தறுவாயில், தம்மைத் தற்பாதுகாக்கப் பழகிக் கொள்வார்கள். www.missingkids.com, www.mcgruff.org மற்றும் FBI போன்ற இணையதங்களுக்குச் சென்று நீங்களும், குழந்தைகளுமாக மேலும் தகவல்களைச் சேகரித்துக் கொண்டால், பின்னாளில் உதவியாக இருக்கும்
- பிள்ளைக் கடத்தல்காரர்கள் பெரும்பாலும் இனிப்புக்கள், பணம், விளையாட்டுப் பொருட்கள் போன்றவற்றைக் காட்டியே குழந்தைகளைத் தம்மிடம் மயங்கச் செய்து, கடத்திப் போய்விடுவார்கள். ஆகவே தெரியாத மனிதர்களிடம் எந்தப் பொருட்களையும் பெற்றோரின் அனுமதியின்றி வாங்கக்கூடாது என்ற உறுதி குழந்தை மனதில் இருக்க வேண்டும்.
- ஒரு கார் பக்கத்தில் வரும்போது, அதில் வருபவர் பிள்ளைக்கு அறிமுகமானவர் இல்லையென்றால், அந்த இடத்திலிருந்து சடுதியில் விலகிச் செல்லக் கூடிய துணிவு பிள்ளையிடம் இருக்க வேண்டும்.
- தெரிந்தவர் யார், தெரியாதவர் யார் என்ற வித்தியாசங்களைப் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுத்தல் வேண்டும்.
- தெரியாதவர்களிடம் உதவி கேட்கப்போகக் கூடாது என்பதை பிள்ளைகளிடம் எடுத்துச் சொல்ல வேண்டும். அதேவேளை, முகம் தெரியாத ஒருவர் உதவிகேட்டு வந்தால், அவருக்கு உதவி செய்கிறேன் என்று அவருடன் கிளம்பி விடுவதையும் தவிர்த்தல் வேண்டும்.
- பிறத்தியார் யாரும் பிள்ளைகள் உடம்பின் எப்பாகத்திலும் தொட அனுமதிக்கக் கூடாது என்பதைச் சொல்லி வையுங்கள். மீறி யாரும் குழந்தைகளின் அந்தரங்க உறுப்புக்களில் தொட்டால் உடனே சம்பந்தப் பட்ட, நம்பிக்கையானவர்களிடம் அதுபற்றி சொல்லி, வேண்டிய உதவிகளைப் பெறவேண்டும் என்று வலியுறுத்துங்கள்.
- தெரியாதவரோ அல்லது வீட்டு உறுப்பினரோ குழந்தையின் முன்னே முறைதவறி, தம் அந்தரங்க உறுப்புக்களைக் காட்டி அவர்களின் கவனத்தைத் திசைதிருப்ப முயன்றால், உடனே பிள்ளைகள் அதை பள்ளிகளில், பெற்றோரிடம் அல்லது போலீஸ் அதிகாரிகளிடம் உடனே தெரிவிக்க வேண்டும்.
- பிள்ளைகள் தமது பெயர், விலாசம், தொலைபேசி இலக்கங்கள் போன்றவற்றைத் தெரிந்து வைத்திருப்பது நல்லது. சமயத்தில் அவசர உதவிக்கு யாரைக் கூப்பிட வேண்டும் என்ற விபரங்களையும் குழந்தைகள் மனதில் பதியவைக்க வேண்டும். 911 இலக்கம் மற்றும் அவசரத் தொலைபேசி இலக்கங்களைப் பாவிக்கும் முறையையும் அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

வீட்டிலேயே சடுதியில் குழந்தைகளைக் காணவில்லையா? உடனே closets, பழைய refrigerators, ஆடைக்குவியல்கள், கட்டிலுக்குக் கீழே, போர்வைகளுக்குக் கீழே என்று தேடுங்கள். குரல்கொடுத்துக் கூப்பிட்டுப் பாருங்கள். உள்ளே, வெளியே எங்கேயும் காணவில்லையா? உடனே சார்ந்த நிலையங்களுக்குத் (குறிப்பாக 911 அல்லது உள்ளூர்ப் போலீஸ் நிலையங்கள்) தகவல் கொடுங்கள்.

உங்கள் குழந்தை தொலைந்துவிட்டது என்பதைத் தெரிவிக்கும்போது, பிள்ளையின் நிறம், வயது, உயரம், மற்றும் மூக்குக்கண்ணாடி, பற்களில் அணியும் braces போன்ற பிரத்தியேகக் குறிப்புக்கள் பற்றியும் ஞாபகப்படுத்த மறந்துவிடாதீர்கள். காணாமல் போனதென்று நீங்கள் கருதும் நேரம் குழந்தை அணிந்திருந்த ஆடைகள் பற்றியும், தெரிந்தளவுக்குத் தகவலைக் கொடுத்தால், உதவியாக இருக்கும். இன்னுமோர் முக்கிய விடயம், சமீபத்தில் எடுத்த பிள்ளையின் புகைப்படம் இருந்தால், அதையும் கட்டாயம் காவல்துறையினரிடம் கொடுக்க வேண்டும்.

மேற்கூறிய தகவல்களை உடனடியாக missing child file systemஇல் பதித்து வைக்கச் சொல்லுதல் நல்லது. இந்தத் தகவல்களை National Center for Missing & Exploited Children (1-800-843-5678) என்ற அமைப்புக்கும் அழைத்துச் சொல்ல வேண்டியது ஒரு முக்கிய விடயமாகும்.

தற்போது amber alert என்ற ஒரு நடைமுறை பாவனையில் உள்ளது. இதன்மூலம் பெருந் தெருக்கள் வழியாகச் செல்லும்போது, கண்ணில் காணும் மின்னியக்கத் தகவற் பலகை மூலம், ஒரு குழந்தை காணாமற் போனதைப் பற்றி தகவல்கள் காட்டப்பட்டுக் கொண்டேயிருக்கும். மக்களின் கவனத்தை இதன்மூலம் ஈர்த்து, அதன்மூலம் கூட தொலைந்துபோன குழந்தைகளைக் கண்டு பிடிக்க இது ஒரு நல்ல தகவற்பாலமாகப் பயன்படுகிறது.

manjula.rajalingam@thaiveedu.com

■ ■ ■


Arajen Beauty Centre



• Make Up
• Hair Style & Hair Care
- Dying & Highlighting
• Bridal Make Up & Arangetram
• Skin Care (All Kind of Facial)
- Threading & Waxing
• Skin Treatment
• Nail Art
• Dress Making (Saree & Blouse)
• Permanent Hair Removal
• Pedicure, Manicure
• Mehindi
• Bouquet, Sadainagam
• Cryotherapy
• Micro Dermabrasion



Beauty Classes
அழகியல் கலையை கற்க விரும்புகிறீர்களா? எங்களது கலை வகுப்புகளில் இணைந்து கொள்ளுங்கள்

Certificate Courses & Seminars

அரஜன் அழகு நிலையம்

2605-A Eglinton Ave. E.,Scarborough, ON M1K 2S2
(இரா சுப்பர் மார்க்கட் மேல் மாடியில்)

இப்போது ஆண்களுக்கான சேவைகளும்

Tel: 416.509.7978
Web: www.arajenbeauty.ca, E-mail: sasi@arajenbeauty.ca

# ஆயுட்காப்புறுதி

**For all your Insurance needs...**
**Call: 416•522•3314**
**Sockalingam Prabaharan**
Life Insurance Broker

- வயோதிபர்களுக்கான காப்புறுதி
- ஆயுட் காப்புறுதி *(Life Insurance)*
- கொடிய நோய்களுக்கான காப்புறுதி
- குழந்தைகளுக்கான

உயர் கல்வி சேமிப்புத் திட்டம் RESP
*20% - 40%* அரச மானியத்துடன்
*15%* அதிக போனஸ்

- **Disability Insurance**
- **Non Medical Insurance**
- **RRSP & Investments**



$100,000. காப்புறுதிக்கு
**$11.97**
மாதாந்தக் கட்டணம்

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES

LILAND INSURANCE INC.
759 Warden Ave. Toronto, ON M1L 4B5

# Law Office
## T. JEGATHEESAN
(Barrister, Solicitor and Notary Public (on)



உங்கள் சட்டப் பிரச்சினை எதுவாகிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும்
ஆலோசனைகளுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

## தி. ஜெகதீசன்
(Barrister, Solicitor and Notary Public (on)

Off: **416 • 266 • 6154**
Res: 416 • 449 • 0358
Fax: 416 • 266 • 4677

2620 Eglinton Ave., East # 201
Scarborough. ON
M1K 2S3

IT'S A GOOD TIME TO SELL YOUR HOME
OR
THE INVESTMENT PROPERTY YOU ARE HOLDING ON FOR YEARS

CALL SUBA AYNKHARAN TO PROTECT YOUR HARD EARNED ASSETS IN THIS DECLINING REAL ESTATE MARKET!!!





SUBA AYNKHARAN
Sales Representative

REALTOR MLS

VEEDU REALTY INC. BROKERAGE

Direct: 416-560-1686
saynkharan@trebnet.com

8-1345 Morningside Ave, Toronto, ON M1B 5K3
Tel: 416-759-6000 | Fax: 416-759-6005

# சுயநலம்

- பொன் குலேந்திரன் -

> சுயநலம் ஒரு தொற்று வியாதி என்றும் கூறலாம். சுயநலவாதிகளோடு உறவு கொள்பவர்கள் தம்மை அறியாமலே அக்குணம் தம்மை பீடிக்க விட்டுவிடுவார்கள். சுயநலம் விழிப்புணர்வு வளர தடையாக இருக்கிறது. தமக்கு வேண்டப்பட்ட நேரம் உதவி நாடி பிறரை அணுகுவதும் பின்னர் அவர்களை புறக்கணிப்பதும் சுயநலத்தின் இன்னொரு முகம். உனக்காக மட்டும் வாழ நினைக்காமல் சமூகத்திற்காக வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். அது மனிதத்தை சீரோங்க வைக்கிறது.

உதவிகளை ஒருவரிடம் பெற்றுவிட்டு பின்னர் சமயம் வரும்போது முதுகில் குத்துவது சிலரின் சுபாவம். சுயநலம் ஒரு தனிபட்ட மனிதனில் மட்டும் காணப்படும் குணமல்ல. அரசியல் கட்சிகள், ஒரு நாட்டினை ஆளும் அரசின் போக்கு, ஒரு தொழில் ஸ்தாபனம், ஏன் குடும்பத்தில் மனைவி, குழந்தைகள், பெற்றோர்கள், சகோதரங்கள், இனத்தவர்கள் போன்றோரிடமும் இக்குணம் காணப்படுகிறது. சுயநலக் குணம் வளரும் சூழ்நிலையைப் பொறுத்தது. போட்டி என்று வந்தவுடன் தோல்வியை சந்திக்கத் திறனில்லாததால் சுயநலப் போக்கினை கடைப்பிடித்து வெற்றி பெற நினைப்பார்கள். தனது நலத்தை மட்டும் கருத்தில் கொண்டு செயல்படுபவர்கள் மற்றவர்களைப்பற்றி சிந்திப்பது குறைவு. தமக்கென்ற ஒரு வட்டத்துக்குள் வாழ்பவர்கள். அதனால், அவர்கள் அறிவு விரிவடைவதில்லை. காரணம் தம் அறிவை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளத் தயங்குவார்கள்.

## சூழ்நிலை சுயநலத்துக்கு வித்திடுகிறது

பேராசை, அந்தஸ்தை உயர்த்த வேண்டும், குறுக்கு வழியில் முன்னேற வேண்டும் போன்ற போக்குள்ளவர்கள் பெரும்பாலும் சுயநலப்போக்குள்ளவர்கள். ஒரு குடும்பத்தில் பெற்றோர்கள் சுயநலப் போக்குள்ளவர்களாக மற்றவர்களைப்பற்றி சிந்தியாது வாழ்ந்தால் அவர்களைப் பார்த்து பிள்ளைகளும் அப் போக்கினை பின்பற்றத் தொடங்கிவிடுவார்கள். தம் உறவினர்கள் தம்மைவிட அந்தஸ்தில் ஒருபடி உயர்ந்தவர்கள் என அறிந்தால் அவர்களைவிட அந்தஸ்தில் உயரவேண்டும் என்ற எண்ணம் சுயநலப்போக்கிற்கு வித்திடுகிறது. காரணம் தமது திட்டங்களையும் தமது நிதி நிலமைபற்றியும் பிறர் அறியக் கூடாது என்ற எண்ணம் தோன்றுகிறது. சுயநலப் போக்கினால் தம்மைத்தாமே பாதுகாத்துக் கொள்கிறோம் என்ற உணர்வு. ஆனால் உண்மையில் அப்போக்கினால் தங்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளை பலருடன் கலந்து ஆலோசித்து, அவர்கள் அனுபவங்களை அறிந்து தங்கள் பிரச்சனைகளை தீர்க்கும் சந்தர்ப்பத்தை இழக்கிறார்கள். உதாரணத்துக்கு வேலையில் இருந்து நிற்பாட்டப்பட்ட ஒருவர் தனது பிரச்சினையை தன் நண்பர்களோடு பகிராமல் இருப்பதினால் தான்செய்த வேலை போன்று ஒரு வேலை நண்பர் ஒருவர் வேலை செய்யும் ஸதாபனத்தில் இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளும் சந்தர்ப்பத்தை இழக்கிறார். போட்டியும் பொறாமையும் சுயநலத்திற்கு உரமாகின்றன. தோல்வியை ஏற்றுக் கொள்ளும் சக்தி அற்றவர்கள் சுய நலப்போக்கினை கடைப்பிடிப்பார்கள்.

## குழந்தைகளும் சுயநலமும்

சில குழந்தைகளுக்கு தம் பொருளை வேறு ஒருவர் எடுத்தால் கோபம் பத்திக்கொண்டு வரும். அதுவும் தனிப்பிள்ளையாய் இருக்கும் போது செல்லம் கொடுத்து வளர்க்கப்பட்டால் எல்லாம் எனக்கே என்ற எண்ணம் தானாகவே வளருகிறது. பல சகோதரங்களுடன் பிறந்த குழந்தைகளிடம் இக்குணம் வளரும் சந்தர்ப்பம் குறைவு. சிறுவயதிலேயை குழந்தை மற்றைய குழந்தைகளுடன் கூட பகிர்ந்து விளையாடும் பழக்கத்தை பெற்றோர்கள் நடைமுறைக்கு கொண்டு வரவேண்டும். படிப்பில் போட்டி என்று வந்தவுடன் சுயநலம் சில மாணவர்களிடம் தொத்திக் கொள்கிறது. அதுவும் பரீட்சை நெருங்கும் போது தமது அறிவை மற்றைய மாணவர்களுடன் பகிர்ந்து கொள்ளத் தயங்குவார்கள். குழந்தைகள் தமது சுயநலப்போக்கினால் தமக்கு ஒரு பாதுகாப்பினை தேடிக்கொள்வதாக நினைத்தாலும் சிலசமயம் அப்போக்கு அவர்களுக்கு பாதகமாக அமைந்து விடுகிறது.

## குடும்பத்தில் சுயநலம்

குடும்பத்தில் கணவன் மனைவிக்கிடையே சுயநலம் வளர்ந்தால் மகிழ்ச்சியான குடும்ப வாழ்வு அற்றுப்போகும். அவர்களிடையே சந்தேகம், பொறாமை என்பன வளரத் தொடங்கிவிடும். இது முடிவில் விவாகரத்தில் போய் முடியும். சுயநலம் குடும்பத்தில் தோன்றுவதற்கு முக்கிய காரணம் ஒருவரை ஒருவர் நன்கு அறிந்து பழகாததே. சில சமயம் அழகுக்காக ஒரு பெண்ணைக் காதலித்து திருமணம் செய்த ஒருவன், அவளின் அழகை தான் மட்டுமே இரசிக்க வேண்டும். அவளின் உடல் தனது சொத்தென நினைப்பதுண்டு. இதனால் வேறு ஆடவர்கள் மனைவியின் அழகைப் பற்றி விமர்சித்தால் கணவனுக்கு கோபம் வருவதுண்டு. இது மனைவியின் நடத்தை மேல் சநதேகத்தை உருவாக்குகிறது. இது போன்றே மனைவியும் அழகுக்கும் அந்தஸ்துக்குமாக ஒரு ஆடவனை காதலித்து திருமணம் செய்திருந்தால் அவள் மனதில் அவன் வேரூன்றி விடுகிறான். வேறு பெண்களுடன் அவன் பேசுவது அவளுக்கு அவன் மேல் சநதேகத்தை உருவாக்குகிறது. இந்த நம்பிக்கையில்லாத போக்கு சுயநலத்தின் பிரதிபலிப்பேயாகும். மிகக் கூடிய காதல் அல்லது ஆசை நிமித்தம் சுயநலம் தோன்றுகிறது. பற்றற்ற வாழ்வு வாழ்வது அவ்வளவு இலகுவல்ல. இதற்கு அனுபவமும் முதிர்ச்சியும் அவசியம்.

## அரசாட்சியில் சுயநலம்

தமிழ்நாட்டில் காமராஜர், அறிஞர் அண்ணா, கக்கன் போன்ற தலைவர்கள் வாழ்ந்த எளிமையான வாழ்க்கை திரும்பவும் அரசியல் தலைவர்களிடையே திரும்பி வருமா என்பது சந்தேகம். தற்போது பணத்துக்கும், பதவிக்கும், குடும்ப வளர்ச்சிக்கும், போகத்திற்காகவும் வாழும் அரசியல்வாதிகளுக்கும் முன்னைய அரசியல்வாதிகள் வாழ்ந்த சுயநலமற்ற வாழ்க்கைக்கும் இடைவெளி வெகுதூரம். சர்வாதிகாரிகளும், அரசியல் மூலம் உயர் பதவியும் அதிகாரமும் பெற்றவர்கள் தமது நிலையை பாதுகாத்துக் கொள்ள சுயநலப் போக்கினை கடைப்பிடிக்கின்றனர். சதாம் ஹுசெயின், இடி அமின், ஹிட்லர், தலீபான் ஆட்சியாளர்கள் போன்றோர் இதற்கு உதாரணம். அநியாயம், நீதி, தர்மம். இரக்கம் ஆகியவற்றிற்கு அவர்கள் மனதில் இடமில்லை. சுயநலப் போக்கினாலேயே உரிமை மீறல்கள் இடம் பெறுகின்றன. சிறிலங்காவில் சமாதானம் வேண்டாம் போர் வேண்டும் என்று கூக்குரலிட்ட அரசியல் கட்சிகளும் இராணுவ அங்கத்தினரும் நாட்டின் பொருளாதாரத்தில் அக்கறையில்லாதவர்கள். போரின் மூலம் தாம் எவ்வளவுக்கு பணத்தை ஆயுத ஊழல்கள் மூலம் பெறலாம் எனபதே அவர்கள் நோக்கமாகும்.

பல்லின மக்கள் வாழும் மக்களிடையே இனக் கலவரங்களைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கும் ஊடகங்களும், அரசியல்வாதிகளும் சுயநலத்தின் உருவங்களே. இச்சுயநலக் குணமுள்ளவர்களின் ஒவ்வொரு செயலின் விளைவும் தமக்கு சாதகமாகவே இருக்க விரும்புவர். அகங்காரம் அவர்களை ஆட்கொள்ளும். எது சரி எது பிழை என்பதை அலசி ஆராய்ந்து தீர்மானங்கள் எடுக்கமாட்டார்கள். சுயநலப்போக்கு உள்ள மனம் ஏற்கனவே தீர்மானத்தை எடுத்துவிடும். அதனால் பிறருடன் கலந்துரையாடி அவர்கள் கருத்துக்களை ஏற்க மாட்டார்கள். இதனால் அவர்களுக்குள்ளே ஒரு பயம் தோன்றும். தீர்மானங்கள் தீடிரென எடுக்கப்படும். தம் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள தமக்கென பாதுகாப்புப் படையினை உருவாக்கிக் கொள்வர். மக்களிடையே ஒரு போலித் தோற்றத்தை உருவாக்குவர். இத்தகைய சுயநலவாதிகளுக்கு ஆமாம்சாமி போடுவோர் கூட சுயநலவாதிகளாகவே இருப்பார்கள். காரணம் அவருடன் ஒத்துப்பாடி தாம் பெறவேண்டியதைப் பெற்றுக்கொள்வதே அவர்கள் நோக்கம். இங்கு சுயநலம் ஒரு தொற்று வியாதியாகி விடுகிறது. ஊழல், அதிகார துஷ்பிரயோகம், ஒழுக்கமின்மை போன்றவை சுயநலப் போக்கின் விளைவே. அரசியலில் சுயநலம் கொலைகளிலும், பழிவாங்கும் வன்முறைகளிலும் போய்முடிகிறது. தமக்குள் உள்ள சுயநலப்போக்கை தமக்குள் மாத்திரம் வைத்துக் கொள்ளாமல் மக்களிடையேயும் பரவச் செய்கிறார்கள். அரசன் எவ்வழியோ, மக்களும் அவ்வழியே ஆகிறது.

## கல்வியில் சுயநலம்.

முற்காலத்தில் குரு சிஷ்ய உறவில் சுயநலமிருந்தது. குருவானவர் தனக்குத் தெரிந்த கலை முழுவதையும் தன் மாணவனுக்குச் சொல்லிக் கொடுப்பது கிடையாது. காரணம் குருவுக்கு மிஞ்சிய சிஷ்யனாகிவிடுவானோ என்ற பயம். தற்காலத்தில் பல்கலைக் கழகங்களில் பாடத்திட்டத்துக்கு அமைய கல்வி போதிக்கப்படுகிறது. பல இன மாணவர்கள் பயிலும் இடத்தில் சுயநலம் காரணமாக இன, சாதி வேறுபாட்டை கல்வி போதிப்பதிலும், மாணவர்களுடன் பழகுவதிலும் சில இடங்களில் காணக் கூடியதாயிருக்கிறது.

## தொழில் ஸ்தாபனத்தில் சுயநலம்

தொழில் செய்யும் ஸ்தாபனம் ஒன்றில் சில உயர்பதவியில் இருப்பவர்களிடையே சுயநலப் போக்கு வர அவர்கள் வகிக்கும் பதவியே காரணமாகிறது. தமது பதவிக்கு தமக்கு கீழ் இருப்பவர்களால் பங்கம் வரக்கூடாது என்ற நோக்கத்தால் தாம் செய்யும் ஒவ்வொரு செயலிலும் தீர்மானங்களிலும் சுயநலத்தை கடைப்பிடிப்பார். தமக்கு கீழ் வேலை செய்யும் ஒருவர் தம்மை விட அதிகம் படித்தவராகவும் திறமைசாலியாகவும் இருந்தால், எங்கே அவர் தமது பதவிக்கு போட்டியாக வந்துவிடுவாரோ என்ற காரணத்தால் அவரின் திறமையை மற்றவர்கள் அறியாது செய்து விடுவார். சில சமயம் அவரின் கண்டுபிடிப்புகளை, செயற்பாடுகளை தனக்கு சாதகமாக பயன்படுத்தி பெயர் எடுத்துக் கொள்வார்.

சில ஸ்தாபனங்கள் உருவாக்கும் பொருட்கள் அல்லது வழங்கும் சேவைகூட ஸ்தாபனத்தின் சுயநலத்திற்கானவையே. மைக்டொனல்ஸ் போன்ற பிரபல்யமான ஸ்தாபனம் தயாரிக்கும் உணவுகள் தேக ஆரோக்கியத்திற்கு உகந்ததல்ல. இது போன்று கொக்கோ கோலா பானமும் தேக ஆரோக்கியத்திற்கு நல்லதல்ல. ஆனால் அவற்றைத் தயாரிக்கும் ஸ்தாபனங்கள் மக்களின் தேக ஆரோக்கியத்தைப்பற்றி கவலைப்படுவது கிடையாது. வருமானமே அவர்களின் முக்கிய நோக்கு. இதுவும் ஒருவகை சுயநலப் போக்கேயாம்.

## அமெரிக்கா சுயநலப் போக்குள்ள நாடா?

ஒவ்வொரு நாட்டின் கொள்கையும் ஒரு தனிமனிதனின் தனிப்பட்ட கொள்கை போன்றது. பல இன மக்கள் வாழும் அமெரிக்கா போன்ற நாட்டில் இனத்துவேஷம், மதத் துவேஷம், நிறத் துவேஷம் போன்றவை அரசின் சுயநலப் போக்கின் பிரதிபலிப்பே. ஒரு காலத்தில் நீக்கிரோ அடிமைகளை ஆபிரிக்காவிலிருந்து தம் நாட்டுக்கு கப்பலில் கொண்டு வந்து அவர்களின் கடும் உழைப்பில் பணக்காரராகிய வெள்ளையின அமெரிக்கர்கள் பலர். அமெரிக்க சரித்திரத்தை புரட்டிப் பார்த்தால் அச்செயல்கள் அந்நாட்டினை வெட்கி தலை குனிய வைக்கிறது. இன்றும் அது முற்றாக நீங்கி விடவில்லை. அரசியல்வாதிகள் பிற நாடுகளுடன் போர் தொடுத்து, ஐ.நா சபைக்கு எடுத்துச் சொன்ன பொய்யும் புரட்டும், ஏதோ ஜனநாயகத்தை பாதுகாக்க சாவாதிகாரியை இல்லாமல் செய்யப் போகிறோம் என்ற அறை கூவல் எல்லாம் தமக்கு அதனால் ஏற்படும் அரசியல் லாபமும், தாம் முதலீடு செய்த ஸ்தாபனத்திற்கு வருமானமும் பெறுவதுமான அவர்களின் சுயநல நோக்கமாகும். இதில் அகங்காரம், அதிகாரம், பலம் ஆகியவற்றை நிலைநாட்ட அரசு இது போன்ற சுயநலம் கலந்த கொள்கைகளை கடைப்பிடிக்கின்றன. எல்லா நாடுகளும் தனது எண்ணத்துக்கேற்ப நடக்கவேண்டும், தனது பலத்தைப் பாவித்து போர் தொடுத்தால் பலம் குறைந்த நாட்டின் மக்கள் சீரழிவுக்கு ஆளாகுவார்கள் என்று சிந்திக்கும் நிலை கிடையாது. எங்கு கனி வளம் அதிகமாக உள்ளதோ, எது கேந்திர ஸ்தானமாக அமைந்துள்ளதோ அங்கு அவர்களின் சுயநலப் பார்வை செல்கிறது.

அமெரிக்காவின் ஜனத்தொகை உலக நாடுகளின் ஜனத்தொகையின் 14 விகிதமே. ஆனால் பெரும் உலக ஜனத்தொகையை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதே அதன் சுயநல நோக்கமாகும்.

சுயநலம் ஒரு தொற்று வியாதி என்றும் கூறலாம். சுயநலவாதிகளோடு உறவு கொள்பவர்கள் தம்மை அறியாமலே அக்குணம் தம்மை பீடிக்க விட்டுவிடுவார்கள். சுயநலம் விழிப்புணர்வு வளர தடையாக இருக்கிறது. தமக்கு வேண்டப்பட்ட நேரம் உதவி நாடி பிறரை அணுகுவதும் பின்னர் அவர்களை புறக்கணிப்பதும் சுயநலத்தின் இன்னொரு முகம். உனக்காக மட்டும் வாழ நினைக்காமல் சமூகத்திற்காக வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். அது மனிதத்தை சீரோங்க வைக்கிறது.

pon.kulendiran@thaiveedu.com

■ ■ ■

# கடந்த மாதத்தில்...



I.M.H.O வின் 'நலம் காப்போம்' நிகழ்வில் (யூன் 21 - 09)



உலக அகதிகள் தின நிகழ்வில் (யூன் 20, 09)




I.M.H.O வின் 'நலம் காப்போம்' நிகழ்வில்
(யூன் 20 - 09)



சிவகுமாரின் நினைவாக மாணவர் எழுச்சிநாள் நிகழ்வில்
(யூன் 07.09)



உலக அகதிகள் தின நிகழ்வில்
(யூன் 20, 09)



ஒன்ராரியோ முதுதமிழர் மன்றத்தின் பொதுக்கூட்ட நிகழ்வில்
(23வது நிர்வாகசபை தெரிவுசெய்யப்பட்டது - யூன் 07, 2009)



சிவகுமாரின் நினைவாக மாணவர் எழுச்சிநாள் நிகழ்வில்
(யூன் 07.09)



ஒட்டாவாவில் நடைபெற்ற 'தமிழீழமே தாகம்'
நிகழ்வில் (யூன் 03 - 09)



எழுத்தாளர் 'நிலக்கிளி' பாலமனோகரனின்
நூல் வெளியீட்டு நிகழ்வில் (யூன் 06 - 09)



'கவிஞர்' ராஜமாத்தாண்டனின் நினைவஞ்சலிக் கூட்ட
நிகழ்வில்

உங்கள் நிகழ்வுகளை பார்ப்பதற்கும் பதிவதற்கும் www.inayam.net

# தன்னுறுதியுடன் செயலாற்றுதல்

## - Assertiveness -



ஜீவா திசைராஜா

### ‘இல்லை’ அல்லது ‘முடியாது’ என்ற சொல்லை எவ்வாறு நாசுக்காக கூறுவது.

### தன்னுறுதியுடன் செயலாற்றுதல் (Assertiveness)

மனிதன் ஒரு சமூக மிருகம் (Man is a social animal). அவன் தனித்திருக்க முடியாது. அவனுக்கு பலரின் உதவி தேவை. அதே போல் அவனும் பிறருக்கு உதவி செய்ய வேண்டியவனாகின்றான். எனினும் அவன் விரும்பிய போதிலும் கூட எல்லா நேரத்திலும் எல்லாருக்கும் உதவி செய்ய முடியாத நிலையும் காணப்படுகின்றது. சில சமயம் ‘இல்லை’ அல்லது ‘முடியாது’ என்ற வார்த்தையைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயமான சூழ்நிலை ஏற்படத்தான் செய்கின்றது.

‘இல்லை’ அல்லது ‘முடியாது’ என்ற வார்த்தையை வேலைத் தளங்களில் பயன்படுத்தும் போது மேலதிகாரி, மற்றும் சகபாடிகள் முகத்தைச் சுழிக்கும் நிலை காணப்படுகின்றது. சிலசமயம் வேலையை இழக்க வேண்டிய நிலைக்கும் கூட கொண்டு சென்று விடுகின்றது. தம்மை விட வயதில் கூடியவர்கள் அல்லது நெருங்கிய நண்பர்கள் அல்லது உறவினர்கள் உதவி கேட்கும்போது ‘இல்லை’ என்ற வார்த்தையைக் கூற முடியாது மன அழுத்தத்திற்கு உட்படுகின்றனர். மற்றவர்களின் வேலைகளை எல்லாம் முடித்து விட்டு அந்த நாளின் இறுதியில் தனது வேலையைச் செய்யும்போது இது அதிக வேலைப் பளுவை ஏற்படுத்துவதோடு, அவரது உடல் மற்றும் மன ஆரோக்கியத்தையும் பாதிக்கின்றது. தாம் செய்ய விரும்பாத ஒன்றை மற்றவர்களுக்காக கசப்பை விழுங்கிக் கொண்டு செய்வதும் ஆரோக்கியத்திற்கு நல்லதல்ல.

இவ்வாறு சிலசமயம் ‘இல்லை’ என்னும் சொல்லை பயன்படுத்துவது அத்தியாவசியமாக இருந்தபோதிலும் அச்சொல்லை பயன்படுத்துவதால் எதிர் விளைவுகள் ஏற்படுவதையும் எமது அனுபவத்தில் காண்கின்றோம். தன்னுறுதியுடன் செயலாற்றும் தன்மையற்ற மக்கள் (Passive) தமக்கு எந்த வேலையை மற்றவர்கள் இட்டாலும் எதுவும் மறுத்துச் சொல்ல மாட்டார்கள். அல்லது அவர்களால் செய்ய முடியாத விடயங்களைக் கூட செய்வதாக உடன்படுவார்கள். இது எவருக்குமே நல்லதல்ல. இந்நிலையில் எவ்வாறு ‘இல்லை’ அல்லது ‘முடியாது’ என்பதை எடுத்துச் சொல்வது என்பதை விளக்குவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

எல்லோராலும் இவ்வாறு தன்னுறுதியுடன் ‘இல்லை’ எனக் கூறுவது கடினமாகும். நீங்கள் உண்மையில் மற்றவர்களுக்கு உதவி செய்கிறீர்கள், மற்றவர்களை பராமரிக்கிறீர்கள், அவர்களது தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றுகிறீர்கள், உங்களைச் சுற்றியுள்ள சூழல் பற்றிய கவனத்தைக் கொண்டிருக்கிறீர்கள். எவ்வித முரண்பாடும் இல்லாது எல்லாம் ‘நலமுடன்’ இருக்க வேண்டுமென விரும்புகிறீர்கள் என நீங்கள் எண்ணலாம். இந்நிலையில் சிலர் உங்களை பயன்படுத்திக் கொள்ள எண்ணுவார்கள். இவ்வாறு எல்லாருக்கும் உதவி செய்ய எண்ணுவதால் அநேகமான சந்தர்ப்பங்களில் உங்களது சொந்த விருப்பத்திற்கு மேலாக மற்றவர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதில் முன்னுரிமை கொடுப்பீர்கள். ஆனால் உள்ளுக்குள் மிகவும் குழப்பமாகவும், மனங்கசந்தும், புண்பட்டும் இருப்பதுடன் இது நியாயமற்றது என்பதை அறிவதுடன் உங்கள் நலனைப் பற்றி மற்றவர்கள் ஏன் சிந்திக்கத் தவறுகிறார்கள் எனவும் எண்ணுவீர்கள். இது வெளியில் மட்டுமல்லாது உங்கள் வீட்டில் கூட நிகழலாம். இவ்வாறு விடயங்கள் இனி மேலும் நடைபெறுவதை நிறுத்த வேண்டும் என அநேக தடவை உங்கள் மனதினுள் சொல்லிப் பார்த்துக் கொள்வீர்கள். ஆனால் பிரச்சனை என்னவென்றால் நீங்கள் மனதினுள் அவ்வாறு சொல்லிக் கொண்டாலும் உண்மையில் அவ்வாறு மறுத்துக் கூற முடியாததேயாகும். இதனால் மனதினுள் படிப்படியாக உங்களுக்குள் சேரும் இந்த குழப்பங்களும் மனப்புழுக்கங்களும் பெரிதாக வளர்வதுடன், ஒவ்வொரு தடவையும் இவ்வாறு உங்கள் எண்ணங்களுக்கு மாறாக நடைபெறும்போது உங்கள் முகத்தில் புன்முறுவலைப் போலியாக நீங்கள் தேக்கி வைத்துக் கொண்டாலும் உள்ளுக்குள் மனம் குமுறியபடிதான் இருக்கும்.

இறுதியாக ஒருநாள் இது போதும் என்ற நிலைக்கு நீங்கள் வந்து விடுவீர்கள். அடுத்த தரம் யாராவது உங்களை வேலைத் தளத்தில் தாமதித்து நின்று வேலை செய்யும்படி கூறினாலோ, அல்லது தமது பிள்ளைகளை சொல்லிக் கொள்ளாமல் உங்கள் வீட்டில் கொண்டு வந்து விட்டு பலமணி நேரம் தாமதித்து வந்தாலோ, அல்லது வீட்டில் கணவன் மனைவி இருவரும் வேலை முடிந்து வந்ததும் ஒருவர் மட்டும் வீட்டிலும் வேலை செய்ய மற்றவர் கால் மேல் கால் போட்டபடி தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தாலோ, பிள்ளைகளால் தொந்தரவோ அல்லது வேறு ஏதாவது அசௌகரியங்கள் ஏற்பட்டாலோ, நீங்கள் ஏதாவது எதிர்த்துச் சொல்லத்தான் போகிறீர்கள். எவ்வாறு இதனைக் கூறப் போகின்றீர்கள் என்பதை உங்கள் மனதிற்குள் பயிற்சி செய்து கொள்வீர்கள். நீங்கள் என்ன சொல்லப் போகின்றீர்கள் என்பதற்கும் அதற்கு அவர்கள் பதிலாக என்ன சொல்லப் போகின்றார்கள் என்பதும் உங்களுக்கு தெரிந்திருக்கும். ஆனால் இதற்கு துணிவு தேவை!

ஆனால் இத் தருணம் வந்ததும் நீங்கள் பயிற்சி செய்த எல்லா சொற்களும் உங்கள் தலையில் இருந்து போய்விடும். இந்த நாளை எதிர்பார்த்திருந்த நீங்கள் இந்த நபருக்கு எப்படியாவது சரியான முறையில் பாடம் கற்பிக்க வேண்டும் என தீர்மானித்து உங்கள் தாக்குதலை மனக்கட்டுப்பாடின்றி சரமாரியாக ஆரம்பிப்பீர்கள். பொதுவில் மிகவும் நிதானமாக இருந்த உங்கள் அணுகுமுறை தற்போது முழு அளவிலான தாக்குதலாக மாறிவிட்டது. ஆனால் உங்களால் இந்த கூச்சலை நிறுத்தவோ அல்லது தொடர்ந்து மனக்கட்டுப்பாட்டுடன் பேசவோ முடியாதிருக்கும். அல்லது எல்லாம் நடந்து முடிந்த பின் அளவுக்கு அதிகமாக குறிப்பிட்ட நபரிடம் மன்னிப்புக் கேட்பீர்கள்.

இதனால் தான் மற்றவரை காயப்படுத்தாது உங்கள் வார்த்தைகளையும் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொண்டு உங்கள் மறுப்பைத் தெரிவிப்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். ‘இல்லை’ என்று சொல்வது கடினமாக இருக்கிறதா? உங்களுக்கு தேவையானதை கேட்கிறீர்களா? ஓர் ‘கால் துடைப்பம்’ போல் நீங்கள் நடத்தப்படுவதாக அடிக்கடி உணர்கிறீர்களா? உங்கள் பிரதிபலிப்பு வலிந்து தாக்குதல் போன்று காணப்படுகின்றது என மக்கள் சில சமயம் கூறுகிறார்களா? நீங்கள் மற்றவர்களுடன் இன்னும் நன்றாக நடந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறீர்களா? இந்த கூற்றுக்களில் சிலவற்றையாவது நீங்கள் உங்களில் இனங்கண்டால், தன்னுறுதியுடன் சிந்திக்க, தொடர்பாட, நடந்து கொள்ளுவதற்கான வழிவகைகளை நீங்கள் விருத்தி செய்ய விரும்புவீர்கள்.

இதற்குப் பயிற்சி தேவை. தன்னுறுதியுடன் செயலாற்றுவதற்கான பயிற்சியானது ‘பெண் விடுதலை’க்கான இயக்கம் ஆரம்பித்ததைத் தொடர்ந்தே உண்மையில் ஆரம்பமானது.

ஆரம்பத்தில் ஐக்கிய அமெரிக்காவில் ஆண் ஆதிக்கம் நிறைந்த வேலைத் தளங்களில் உள்ள உலகில் பெண்களுக்கு அதிக தன்னம்பிக்கையையும் தன்னுறுதியுடன் செயல்படும் திறன்களை வளர்க்குமுகமாகவும் இப் பயிற்சி வகுப்புகள் ஆரம்பித்தன.

இவ்வாறான பயிற்சிகள் முதலில் மக்களை நல்ல மனநிலைக்கு இட்டுச் சென்ற போதும் அவர்கள் பழக்க தோஷத்தின் காரணமாக, குறுகிய காலத்தினுள்ளேயே மறுத்துக் கூற முடியாது மற்றவர்களிற்கு அடிபணிந்து போகும் நிலைக்குள்ளாகின்றனர். இந்நிலையானது உணவுக்கட்டுப்பாட்டை (Diet control) கடைப்பிடித்து பின் இடையில் கைவிடுபவர்கள் போன்றதேயாகும்.

உங்களால் முடியாததை மறுத்து நீங்கள் தன்னுறுதியுடன் செயலாற்றாது போனால், நீங்கள் ஆணோ, பெண்ணோ வாழ்க்கை உண்மையில் ஒரு சௌகரியமற்ற இடமாகவே மாறிவிடும். யாருடைய வாழ்க்கை இவ்வாறு பாதிக்கப்படுகின்றது என்பது அவர்களது குணவியல்புகளிலேயே தங்கியுள்ளது.

பொதுவில் மனிதர்கள் ஒவ்வொருவரும், மற்றவரிலிருந்து குணவியல்புகளில் வேறுபட்டவர்களாக உள்ளனர். மக்கள் நடந்து கொள்ளும் அடிப்படையில் அவர்களை மூன்று வகையாக பாகுபடுத்தலாம்.

- வலிந்து தாக்கும் மக்கள் (Aggressive people)
- பணிந்து போகும் மக்கள் (Passive people)
- தன்னுறுதியுடன் செயலாற்றும் மக்கள் (Assertive people)

### வலிந்து தாக்கும் மக்களின் குணவியல்புகள் (Characteristics of Aggressive people)

- மற்றவர்களை வீழ்த்தியாவது தான் நன்மையடைய எண்ணுதல்
- மற்றவர்களின் உணர்வுகள் பாதிக்கப்படும் என்பதைப் பற்றிச் சிந்தியாது தனது உணர்வுகளை வெளிப்படுத்தல்.
- தமது அபிப்பிராயங்களையும் (Opinions) தெரிவுகளையும் (Choices) மற்றவர்கள் மேல் திணித்தல்.
- தம்மைப் பற்றியும் தமது தேவைகள், விருப்பங்களைப் பற்றி மட்டுமே சிந்தித்தல்
- மற்றவர்கட்கு மரியாதை எதுவும் கொடுக்காதிருத்தல்.
- எப்போதும் தான் மட்டுமே ‘சரி’ என்றும் மற்ற எல்லாரும் ‘பிழை’ என்றும் நினைத்தல்.

> “ தன்னுறுதியுடன் செயலாற்றும் தன்மையற்ற மக்கள் *(Passive)* தமக்கு எந்த வேலையை மற்றவர்கள் இட்டாலும் எதுவும் மறுத்துச் சொல்ல மாட்டார்கள். அல்லது அவர்களால் செய்ய முடியாத விடயங்களைக் கூட செய்வதாக உடன்படுவார்கள். ”

72ம் பக்கம் பார்க்க...




கவிதைப் பட்டறை

கவிஞர்கள்:

தமிழில் கவிதை எழுதுவதற்குப் பயிற்சி வகுப்புகள்.

கட்டணம் ஏதுமில்லை

tamilworkshop@gmail.com

# தன்னுறுதியுடன்...

71ம் பக்கத் தொடர்ச்சி...

## பணிந்து போகும் மக்களின் குணவியல்புகள் (Characteristics of Passive people)

- தமது சொந்த பெறுமதியை உணராதவர்களாகவும், எப்போதும் தம்மைத் தாழ்த்தியே எண்ணிக் கொண்டிருத்தல்.
- எப்போதும் பாதிக்கப்பட்டு பதகளிப்புடன் இருந்தாலும் தமது உண்மையான உணர்வுகளை வெளிப்படுத்தாது இருத்தல். அவ்வாறு வெளிப்படுத்தினால் மற்றவர்கள் தம்மை விரும்ப மாட்டார்கள் என அஞ்சுதல்.
- தமக்கான தெரிவுகளை மற்றவர்கள் செய்ய அனுமதித்தல். இதன் மூலம் தமக்கு எது தேவையோ அதைப் பெற்றுக் கொள்வது இவர்கட்கு மிகவும் அரிதாகவே இருக்கும். தமது பிரச்சனைகளை தீர்க்க மற்றவர்கள் எதிர்பார்த்திருத்தல் அல்லது தான் என்ன செய்ய வேண்டுமென்பதை மற்றவர்கள் கூற வேண்டுமென எதிர்பார்த்தல்.
- எப்போதும் தவறு தன்னில் தான் என்றும், மற்றவர்கள் எப்போதும் சரியாகவே இருப்பார்கள் என்றும் எண்ணுதல்.
- தனது எதிர்பார்ப்புகட்கேற்ப மற்றவர்கள் வாழாதபடியால் எப்போதும் ஏமாற்றம் அடைதல்

வலிந்து தாக்கும் பண்புள்ள மக்கள் (Aggressive people) இவ்வாறு பணிந்து போகும் மக்களின் பலவீனத்தை நன்கு பயன்படுத்திக் கொள்வார்கள்.

## தன்னுறுதியுடன் செயலாற்றும் மக்களின் பண்புகள் (Characteristics of Assertive people)

- தன்னம்பிக்கையுடன் இருப்பதுடன் தனது விருப்பு, வெறுப்பு பற்றிய திட்டமான கருத்தைக் கொண்டிருத்தல்.
- கடுமையாகவோ, மனக்கசப்புடனோ நடந்து கொள்ளாது உண்மையாக தமது உணர்வுகளை வெளிப்படுத்தல். இவர்கள் இவ்வாறு உணர்வுகளை வெளிப்படுத்த நகைச்சுவையைப் பயன்படுத்துவர்.
- தமது பெறுமானங்களின் அடிப்படையில் தாம் என்ன செய்ய விரும்புகிறார்கள் அல்லது என்ன செய்ய விரும்பவில்லை என்பதை தெரிவு செய்வர். இதற்கெல்லாம் மற்றவரில் தங்கியிருக்க மாட்டார்கள்.
- மற்றவர்கள் அவர்களது இலக்குகளை அடைய அனுமதிப்பதுடன் அவர்களை ஊக்குவிப்பார்கள்.
- தம்மையும் பிறரையும் மதிப்பார்கள்.
- தம்மை நன்கு விளங்கிக் கொண்டு தம்மை நேசிப்பவராக இருப்பார்கள்.
- உதவியற்றவராக (helpless) அல்லது மன அழுத்தத்திற்கு (depressed) உட்பட்டவராக தம்மை உருவாக்கும் நடத்தைகளை தவிர்ப்பர். அதேநேரம் மற்றவரின் உரிமைகளைப் பாதிக்கும் செயல்களைச் செய்வதையும் தவிர்ப்பர்.
- எல்லாவற்றிற்கும் மேலாக சுயமதிப்பு (Self-esteem) உடையவராக இருப்பர்.

மேலே நோக்கிய வலிந்து தாக்குதல், பணிந்து போதல் ஆகிய குணவியல்புகளை எவ்வாறு சமநிலைக்குட்படுத்தி தன்னுறுதியுடன் செயல் படுவது என்பதை உதாரணங்கள் மூலம் பார்ப்போம்.

**உதாரணமாக, நபர் A:** 'இல்லை' என்று சொல்ல முடியாதவர் என எடுத்துக் கொள்வோம். அவர் தனக்கு ஒரு குறிப்பிட்ட புத்தகம் தேவையாக இருந்தாலும் மற்றவர்கள் கேட்கும்போது அதனை கொடுத்து விடுவார். தான் மற்றவர்களுக்கு உதவ வேண்டியது கட்டாயம் என A நம்புவார். அத்துடன் மற்றவர்கள் விரும்புவதை அவர் செய்யாவிட்டால் அவர்கள் தன்னை விரும்ப மாட்டார்கள் என கவலைப்படுவார்.

இறுதியாக மற்றவர்களின் கால் துடைப்பானாக (Doormat) பயன்படுவதற்கு தன்னைத் தானே அனுமதிப்பதையிட்டு A களைப்படைந்து விடுவார். இவர் 'இல்லை' என்று எவ்வாறு சொல்வது என்பது குறித்து சிந்திப்பதுடன் அதனை இன்னொரு நண்பருடன் பயிற்சி செய்து கொள்வார். அடுத்த தடவை யாராவது ஒருவர் தனது பொருளை கடனாக பெற முனையும் போது முகமலர்வுடன் ஆனால் உறுதியாக, 'எனக்குத் தேவை இருக்கும் போது எனது புத்தகங்களை இனி ஒருபோதும் கொடுக்கப் போவதில்லை' என கூறுவார். இவ்வாறு மறுப்பதனால் குற்றமனப்பான்மையாக உணருவேன் என எதிர்பார்த்த போதிலும் அவ்வாறான உணர்வு தனக்கு ஏற்படவில்லை என்பதைக் குறித்து A ஆச்சரியப்படுவார்.

**நபர் B:** தனக்கு எது தேவைப்படுகின்றது என்பதை கேட்பதற்கு கஷ்டப்படுவார். தனக்கு எந்த விடயங்களில் ஒரு கஷ்டம் வந்த போதிலும் வேறொரு நண்பரிடம் உதவி கேட்பதற்குப் பதிலாக தானே அதனை செய்து முடிப்பதற்கு முயல்வார். 'நான் இதனைச் செய்ய இயலுமாக இருக்க வேண்டும். உதவி கேட்டால் மற்றவர்கள் முட்டாளாக என்னை நினைப்பார்கள்... ஏனையோரும் அதிக வேலையாக இருப்பார்கள்...' என எண்ணுவார். பின்னர் கடந்த காலத்தில் தான் ஒரு நண்பருக்கு உதவி செய்ததை B நினைக்கும் போது தானே எல்லாவற்றையும் செய்ய வேண்டியதில்லை என்பதை அவர் உணர்வார். உதவி பெறுவதில் தவறில்லை என்பதை உணர்வதுடன் தனது நண்பனைத் தொலைபேசி மூலம் அழைப்பதற்கு முயல்வார். இன்று அவர் வேலையாக இருந்தால் இந்தக் கிழமை இறுதியில் நாம் சந்திக்கலாமா என இன்று கேட்போம் என எண்ணுவார்.

**நபர் C:** விமர்சனம் செய்யப்படுவதை வெறுக்கிறார். அவரது அறையில் தங்கியிருப்பவர் Cஇன் குடிக்கும் கோப்பை, கழுவும் தொட்டியில் 3 நாட்களாக கிடக்கின்றது என்று கூறினால், அதற்கு C கடுமையான வார்த்தைகளால் பதிலளிப்பார். "நீ எப்போதும் என்னில் தான் குற்றம் கண்டுபிடிக்கிறாய். குளியலறையை நீ பல நாட்களாக சுத்தம் செய்யவில்லை. நான் தான் இறுதியாக கழிவுத் தொட்டிகளை சுத்தப்படுத்தினேன்". என்று வாதாடுவதுடன் இந்த கருத்துப் பரிமாற்றம் ஓர் சண்டையாக மாறி மனத்தாங்கல் பல நாட்களுக்கு நீடிக்கும்.

தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்வதற்கான வாதங்கள் நிலைமையைச் சீர் செய்து கொள்ள உதவாது என C பின்னர் அறிவதுடன் இதற்கு எவ்வாறு வேறு விதமாக பதிலளிப்பது என்பதை யோசிப்பார். திரும்பவும் 'கழுவும் தொட்டி' பற்றி வாதங்கள் எழுந்தால் "என்னை மன்னித்துக் கொள், நான் பின்னேரம் அதனை சுத்தம் செய்யலாமா?" எனக் கேட்க வேண்டும் என தனக்குள் தீர்மானிப்பார். இது விமர்சனத்தை ஏற்றுக் கொண்டு பிரச்சனையைத் தீர்க்கும் ஒரு வழியாக அமையும்.

விமர்சனங்கள் இருந்தால், தம்மை பாதுகாக்கு முகமாகவும் ஆவேசமாகவும் பிரதிபலிப்பது வலிந்து தாக்குபவரின் இயல்பாகும். தன்னுறுதியுடனான பதிலானது, விமர்சனத்தைக் கேட்பதுடன் அந்த நிலையை நீங்கள் எவ்வாறு எடுத்துக் கொள்கிறீர்கள் என்பதை மற்றவருக்கு விபரிப்பதற்கு முன்பாக மற்றையவருடைய கண்ணோட்டத்தில் ஏற்றுக் கொள்வதாகும்.

இந்த உதாரணங்களில் தன்னுறுதி என்பது ஒவ்வொருவரும் மரியாதையுடன் நடத்தப்பட வேண்டிய உரிமை உள்ளவர்கள் என்றும், உணர்வுகளையும் அபிப்பிராயங்களையும் கொண்டிருக்கவும் வெளிப்படுத்தவும், அவர்களது கருத்துக்கள் கரிசனையுடன் கேட்கப்பட்டு கவனத்தில் எடுக்கப்படவும், குற்ற மனப்பான்மை இல்லாது 'இல்லை' என்று கூறவும், தவறுகள் இழைக்கவும், அவற்றைத் திருத்திக் கொள்ளவும், உதவி கேட்கவும், தமது மனத்தை மாற்றிக் கொள்ளவும், தமக்குத் தேவையானதைக் கேட்கவும், தமது சொந்த முன்னுரிமைகளை அமைக்கவும் - தாம் தன்னுறுதியுடன் செயலாற்றாதிருப்பதை தெரிவு செய்யவும் கூட உரிமை உண்டு எனும் அடிப்படையில் எடுத்துக்காட்டப்படுகின்றது.

> “ மிகவும் தன்னுறுதியுடன் இருப்பதற்கு பயிற்சி அவசியமானதாகும். தன்னுறுதியான பதில்களை ஓர் கண்ணாடிக்கு முன்பாக செல்லிப்பாருங்கள். மற்றவர் எவ்வாறு பதிலளிப்பார் என்பதையும் அதனை நீங்கள் எவ்வாறு சமாளிப்பீர்கள் என்பதையும் சிந்திப்பது முக்கியமானதாகும். ”

## நீங்கள் தன்னுறுதியுடன் செயல்படுவதற்கு உங்கள் உடல் மொழியும் உதவும். (Body language)

உடல் மொழி என்பதில் நீங்கள் எவ்வாறு இருக்கிறீர்கள் அல்லது நிற்கிறீர்கள் (Body Posture) என்பதும், நீங்கள் பயன்படுத்துகின்ற உடலசைவுகள் (Gestures), மற்றவரை எவ்வாறு பார்க்கிறீர்கள் என்பதும் உங்கள் குரலும் முக்கியமானவை. நீங்கள் கூனிக் குறுகி, அசௌகரியத்துடன், தாழ்ந்த குரலில் பேசுவதுடன், கண்களை நேராக பார்ப்பதைத் தவிர்ப்பீர்களாயின் உங்களை விட மற்றவர் மிக முக்கியமானவர் என்பதை நீங்கள் எடுத்துக் காட்டுவதாக அமையும். மறுபுறமாக, ஒரு நபருக்கு மிக அண்மையில் நெருங்கி நின்று அவர்களின் முகத்திற்கு நேரே சத்தம் போடுவீர்களாயின் நீங்கள் வலிந்து தாக்குபவர் என அவர்கள் எண்ண வேண்டி நேரிடலாம். தன்னுறுதியுடன் செயலாற்றுபவர்கள் நேராக நிமிர்ந்து நின்று சௌகரியமாக இருப்பதுடன் மற்றவரின் கண்களை நேராகப் பார்த்து வெளிப்படையாக தமது கருத்தை, மென்மையான ஆனால் உறுதியான குரலில் தெரிவிப்பார்கள்.

'நான் நினைக்கிறேன்...', 'நான் கூற விரும்புவது...' 'நான் இதை விரும்பவில்லை...' என்பது மற்றவரை குற்றம் சாட்டுவதற்குப் பதிலாக உங்கள் சொந்த எண்ணங்கட்கு நீங்களே பொறுப்பு எடுத்துக் கொள்வதை எடுத்துக் காட்டுகின்றது.

நீங்கள் ஆயத்தமாக இருப்பதாக உணரும் போது பேச முயல்வதே முக்கியமாகும். நீங்கள் வழக்கத்தை விட அதிக தகைப்புக்கு (Stressed) உட்பட்டிருக்கும் போது அல்லது கோபத்துடன் இருக்கும் போது பேச ஆரம்பிப்பது சிறந்ததல்ல. மறுபுறமாக, உங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்துவதைத் தாமதியாதிருப்பது முக்கியமானதாகும்.

மிகவும் தன்னுறுதியுடன் இருப்பதற்கு கற்றுக் கொள்வதற்கு பயிற்சி அவசியமானதாகும். தன்னுறுதியான பதில்களை ஓர் கண்ணாடிக்கு முன்பாக முயல்தல் அல்லது ஓர் நண்பரைக் கொண்டு அவர்களது கருத்துக்களைக் கேட்பது சிறந்ததாகும். மற்றவர் எவ்வாறு பதிலளிப்பார் என்பதை சிந்திப்பதும் அதனை நீங்கள் எவ்வாறு சமாளிப்பீர்கள் என்பதை சிந்திப்பதும் முக்கியமானதாகும்.

## நீங்கள் தன்னுறுதியுடன் செயலாற்ற விரும்பினால், பின்வரும் படிப்படியான அணுகுமுறையைப் பின்பற்றுங்கள்.

தொடர்பாடலின் போது நீங்கள் எவ்வாறு சாதாரணமாக நடந்து கொள்வீர்கள் என்பதை முதலில் விளங்கிக் கொள்ளுங்கள்.

- நீங்கள் பணிந்து போகின்றவரா? வலிந்து தாக்குபவரா? அல்லது இரண்டு குணாதிசயங்களும் கலந்த கலவையா?
- நீங்கள் நடந்து கொள்வதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் யாவை?
- நீங்கள் விரும்பப்பட மாட்டீர்கள் என அஞ்சுகின்றீர்களா?
- நீங்களும் பூரணமான ஒருவராக இருக்க வேண்டும் என எண்ணுகிறீர்களா?
- விமர்சிக்கப்படுவோம் என்பதைக் குறித்து குழப்பமுடன் இருக்கிறீர்களா?

இதனை எவ்வாறு வேறு முறையில் கையாளலாம்? என்ன நடக்க வேண்டுமென்று விரும்புகிறீர்கள்?

வேறு முறையில் நடப்பதற்கான சந்தர்ப்பத்தை இனங் காணுங்கள். பிரச்சனையான விடயங்களைப் பேச ஆரம்பிப்பதை விட முக்கியமல்லாத ஒன்றுடன் ஆரம்பிப்பது சிறந்ததாகும். அதே நேரம் மற்றவர்களை மாற்ற முடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

என்ன தீர்வை அடைய விரும்புகிறீர்கள் என உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள். இது நடைபெறக் கூடியதா? இது ஓர் பிரச்சனையைத் தீர்க்க உதவுமா? என்பதைச் சிந்தியுங்கள்.

நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள் என்பதைத் தீர்மானியுங்கள் 'நான்' எனும் கூற்றுக்களையே பாவியுங்கள். உங்களால் முடிந்தளவுக்கு திட்டவட்டமாக இருக்க முயலுங்கள். உதாரணமாக, 'நாங்கள் இன்று வெளியில் போய் வரலாமா' என்று கூறுவதை விடுத்து 'இன்று நான் திரைப்படம் பார்க்க விரும்புகிறேன்'' என்று கூறுங்கள்.

நீங்கள் எவ்வாறு கூறுகிறீர்கள் என்பதால் நீங்கள் எதைக் கூறுகிறீர்களோ அதற்கு வலுச் சேருங்கள். உங்கள் உடலசைவு உங்கள் குரல் பற்றி சிந்தியுங்கள். நீங்கள் சொல்வது மிக முக்கியமான கடுமையான விடயமாக இருந்தால் முகத்தை கடுமையாக வைத்துக் கொள்ளுங்கள். சிரித்துக் கொண்டே கூறுவீர்களாயின் அது முக்கியமல்ல என்ற கருத்தைக் கொடுத்து விடும்.

மற்றைய நபர் கேட்காதது போல் இருந்தால் அல்லது உங்கள் கதையை வேறு திசைக்கு திருப்புபவராக இருந்தால் உங்கள் கருத்தை உறுதியாக பற்றியிருங்கள். உங்கள் கருத்து கேட்கப்படும்வரை அமைதியாக அதனைத் திருப்பிக் கூறுங்கள்.

மற்றைய நபரின் கருத்துக்கும் செவி கொடுப்பதுடன், அவசியமெனின் ஒரு உடன்பாட்டுக்கு வரலாமா என்பதைக் குறித்து சிந்தியுங்கள்.

இதன் முடிவு குறித்து திருப்தியுடனிருக்கிறீர்களா? அடுத்த தரம் ஏதாவது வேறு வழியில் முயற்சிக்கலாமா என சிந்தியுங்கள்.

'இல்லை' என்பதை மற்றவரையும் உங்களையும் புண்படுத்தாது கூற வாழ்த்துக்கள்!

உசாத்துணை:-


http://en.wikipedia.org/wiki/Assertiveness
http://www.businessballs.com/self-confidence-assertiveness.htm
http://www.assertiveness.org.uk/
http://www.teamtechnology.co.uk/assertiveness/how-to-be-more-assertive.html


jeevathisairajah@thaiveedu.com

■ ■ ■


HONDA
CHECKERED FLAG EVENT
INDY-INSPIRED PERFORMANCE
YOUR BUDGET CAN HANDLE.
PURCHASE FINANCING
AS LOW AS
0.9%
FOR 5 YEARS
ON SELECT MODELS
Accord EX-L V6
model CP3689JN
CR-V EX-L
model RE4879JN
Civic EX-L Sedan
model FA1509JNX
ACCORD
LEASE FROM/APR
$298
@2.9%
PER MONTH FOR 48 MONTHS WITH $3,073 DOWN
ON APPROVED CREDIT
$25,290 MSRP FOR ACCORD LX
JUNE BONUS DOLLARS
UP TO $1,000
CIVIC
LEASE FROM/APR
$178
@1.9%
PER MONTH FOR 48 MONTHS WITH $2,544 DOWN
ON APPROVED CREDIT
$16,990 MSRP FOR CIVIC DX SEDAN
Civic 11
CR-V
LEASE FROM/APR
$298
@2.9%
PER MONTH FOR 48 MONTHS WITH $4,315 DOWN
ON APPROVED CREDIT
$27,790 MSRP FOR CR-V LX
JUNE BONUS DOLLARS
$1,500
ATHEESAN (SHAN) SARVANANTHAN
CELL (416)720-1184
FORMULA HONDA
2240 MARKHAM ROAD, SCARBOROUGH, ONTARIO M1B 2W4. TEL: 416-754-4555 EXT. 2705, FAX: 416-754-9465


உங்கள் வீட்டு நீரை சூரிய ஒளியில் வெப்பமாக்குங்கள்... உங்கள் பணத்தை மிச்சமாக்குங்கள்...
இதோ உங்களுக்காக
Solar Domestic Hot Water System
BSi
BRIGHT SOLAR INC.
FINANCE PLANS
TD
Prime Plus 2.75% (Over $10,000)
(Prime 2.5% effective Mar 2009)
Prime Plus 3.25% (Over $5,000)
(Prime 2.5% effective Mar 2009)
NO PAYMENT FOR 6 MONTHS !
உங்களுக்கான எமது விஷேட சலுகைகள்
$ 2500 தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் விலைக்கழிவுகள்
$ 150 வீட்டு மின் உபயோக கணிப்புப் பரிசோதனை கழிவுகள்
HRTC வரியிலிருந்து $ 1350.00 வரையிலான மீள் பெறும் உரிமை
இன்னும் பல...
உங்களது சேமிப்புகள் பாரியளவில் வளர்ச்சி பெற சரியான முதலீடு
நாம் உங்களது வீட்டு மின் உபயோக கணிப்புப் பரிசோதனைக்கு
50% செலுத்துவோம்
* condition apply
CSA# 232467
எமது பிரதான உற்பத்திகள்
சூரியசக்தி மூலம் வீட்டு நீரை வெப்பமாக்கும் முறை (Domestic)
சூரியசக்தி மூலம் வாயு வெப்பமாக்கும் முறை
Photovoltaic மின்சாரம்
காற்றலைகள்
புவி சார்ந்த வெப்பவியல் (Geothermal) மற்றும் உதிரிப்பாகங்கள்
BRIGHT SOLAR INC.
வந்து பாருங்கள், உங்களால் எவ்வளவு சேமிக்க முடியுமென்பதை நீங்களே உணர்ந்து கொள்ளுங்கள்..
5215, GTA Square, Finch Avenue East, Suite 257, Toronto,Ontario, Canada M1S 0C2
Tel: 416 754 8327
www.brightsolarinc.com
இயற்கையிலிருந்து இலவச வாழ்வாதார சக்தி

# Renewable Energy - Ecoaction

# ஒளியியல் மின்சாரம்

## Solar Panel Systems

## Photovoltaic



K. கண்ணன்
- Marketing Director -

பூகோள வெப்பமாக்குதலை தடைசெய்து அதற்கு பதிலாக வேறு ஒரு மாற்றீடான எல்லையற்ற மூலவளத்தை பயன்படுத்தி எமது நாளாந்த தேவைகளான வளியை சூடாக்குதலும் குளிரூட்டுதலும், நீரை சூடாக்குதலும் எதிர் காலத்தில் நடைபெறக் கூடிய சாத்தியமான ஓர் விடயம். வாயு, எண்ணை, புறப்பேன் (Propane) மின்சாரம் ஆகியவற்றிற்கு பதிலாக நாங்கள் பயன்படுத்தக்கூடிய மாற்றீடான ஓர் மூலவளம் சூரிய சக்தி என்பதாகும். இவ்வகையான, சக்தி வழக்கும் மூலவளத்தை பயன்படுத்தும் இந்த தொழில்நுட்பம், சூரிய Panel (Solar Panel) என அழைக்கப்படுகிறது.

இது நடைபெறக்கூடிய சாத்தியம் உண்டா என்று கேள்வி எழுவது வழக்கம். இது பற்றி அறிவதற்கு முன்பு, இவ்வாறான சிந்தனை எங்கிருந்து தோன்றியது என்பதை நாம் அறிய வேண்டும்.

1839ம் ஆண்டில் பிரெஞ்சு நாட்டு பௌதிக வியலாளரான அன்ரொயின் செசர் பெக்கரெல் (Antoine Cesar Becquerel) என்பவர் Photovoltaic cell என்ற மின்கலத்தை கண்டு பிடித்தார். ஆரம்பத்தில் இதன் வினைத்திறன் (efficiency) ஒரு சத வீதமாக மட்டுமே அமைந்தது. பின்னர் வெவ்வேறு விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புக்கள் இத்துடன் இணைக்கப்பட்டு பல மாற்றங்கள் செய்து புரட்சிகரமான மாற்றித்திற்கு உட்பட்டு Solar Panel உருவாகியது.

சூரிய வெப்ப சக்தியை பயன்படுத்தி நீரை சூடாக்குதல் 1767ம் ஆண்டில் Horace de Saussure என்பரால் உருவாக்கப்பட்டது. இச்செயல்பாடு பல்வேறு மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டு தற்போதைய சமுதாயத்தின் பயன்பாட்டுக்காக மாற்றமடைந்துள்ளது.

கடந்த பல வருடங்களாக சூரிய தொழில்நுட்பம் பல மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டு பல புதிய வாழ்க்கை முறைகள் தோன்றியுள்ளன. சூரிய வெப்பச் சக்தியை அடிப்படையாகக் கொண்ட அநேக கைத்தொழில்கள் வருடா வருடம் தமது உற்பத்தியை இரு மடங்காக்கி வருகின்றன. சுற்றுப்புறச் சூழலுக்கு சாதகமான இவ்வித தெரிவிற்கு அரசாங்கமும் ஊக்கமளித்து வருகிறது. உயிர்ச்சுவடுகளில் (Fossil) இருந்து எரிபொருள் பெறுவதற்கு மாற்றீடாக Solar Panel அமைப்புக்களை உபயோகிப்பதற்கு அரசு நிதியுதவி வழங்கி வருகிறது. ஏனெனில் ஒரு Grid இணைப்பு முறையில் இருந்து வெகு தொலைவில் சூரிய ஒளிச் சக்தி உபயோகிக்கும் ஓர் அமைப்பை நிறுவுவது இலகுவானது என்று அறியப்பட்டுள்ளது.



வாகனத் தரிப்பிடங்களில் பற்றுச் சீட்டுக்களை அச்சிடும் இயந்திரங்கள் (parking Ticket Printers) எலத்திரனியல் முறையில் தரவுகளை பார்வையிடக் கூடியதான அமைப்புக்கள் (Electronic Display) நடவடிக்கைகளை கண்காணிக்கும் புகைப்படக் கருவிகள் (Surveillance Camera,) என்பவை Grid என்ற அமைப்பில் இணைக்கப்படாமல் தனித்தனியே இயங்குதல் சிறந்தது என்று அறியப்பட்டுள்ளது. ஏனெனில் இவை Grid அமைப்பில் இணைக்கப்பட்டிருந்தால் மின்சாரம் தடைப்படும்போது, இக்கருவிகள் செயற்பட முடியாத நிலை ஏற்படும்.

Solar Panel System என்னும் இந்த புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நீரை வெப்ப மூட்டுதல், மின்சாரம் பிறப்பாக்குதல், காற்றை சூடாக்குதலும் குளிரூட்டுதலும் ஆகிய தேவைகளுக்கு பயன்படுத்தும் போது பொதுமக்கள் ஓர் புதிய அனுபவத்தை பெறமுடிகிறது. உயிர்ச்சுவடுகளில் இருந்து எரிபொருள் பெறுவதில் இருந்து மாற்றம் ஏற்பட்டு சூரிய வெப்பச் சக்தியை உபயோகிக்கும் வழக்கம் செயற்பட ஆரம்பிக்கும் போது இதற்கான சேவை வழங்கல் கட்டணமும் படிப்படியாக குறையும் வாய்ப்பு உருவாகிறது.

இந்த புதிய தொழில்நுட்பம் அவசரகால சூழ்நிலையில் பெருமளவு உதவியாக அமையும். உதாரணமாக மின்சாரம் தடைப்படும் போது உடனடியான ஓர் மாற்று வழி கிடைக்கக்கூடிய நிலை ஏற்படுகிறது.

Solar Panel System என்பதனை பாதிப்பது தனிப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் அமைகிறது. அது பொருளாதார அடிப்படையிலோ அல்லது சூழலியல் பாதுகாப்பு தொடர்பானதாகவோ அல்லது எரிபொருள் வாயு மின்சாரம் என்பவற்றை விநியோகிக்கும் நிறுவனங்களின் பிரத்தியேக உரிமையில் இருந்து விடுபடும் நோக்கமாகவோ அமையலாம்.

kannan.k@thaiveedu.com

■ ■ ■

## இம் மாதத்திற்குரிய முக்கிய குறிப்புக்கள்

யூலை மாதக் குறிப்புகள்

- நீண்ட விடுமுறையைக் பிரயோசனமான முறையில் கழிப்பதுடன் இம் மாதத்தை ஆரம்பியுங்கள்.
- ஜூலை 1 அன்று 142 வது கனடா தினம் .
- கோடை விடுமுறையில் உங்கள் வீட்டிற்கு வரக் கூடிய விருந்தினருக்காக அறைகளைத் தயார் செய்யுங்கள்.
- ஸ்ரோபெரி பழம் (Strawberry) பறித்தல் இம் மாத நடுப்பகுதியுடன் நிறைவடைகின்றது. Strawberry பறிக்க நினைப்பவர்கள் ஜூலை 15இற்கு முன்னர் சென்று பறிக்கவும்.
- ஜூலை நடுப்பகுதியிலிருந்து செரி பழம் (Cherry) பறிக்கும் நாள் ஆரம்பிக்கின்றது. உங்கள் நாட்களை அதற்கேற்ப தயார்படுத்திக் கொள்ளுங்கள்.
- விளக்குகளின் நிழற்றிகளை (Lamp shades) சுத்தப்படுத்துவதுடன், ஒரு பக்கம் மட்டுமே பயன்படுத்தப்படுவதனால் நிறம் மங்கிப் போவதைத் தவிர்ப்பதற்காக அதனை வேறு பக்கங்களிற்கு திருப்பி விடுங்கள். நிழற்றிகள் பழுதடைந்து போயிருந்தால் அவற்றை அகற்றி விடுங்கள்.
- இருள் திரைகள் (Blinds) மற்றும் நிழற்றிகளை (Shades) கழுவிச் சுத்திகரியுங்கள்
- படுக்கை மெத்தைகளை சமனான பாவனையை உறுதிப்படுத்துமுகமாக மாற்றிப் போடுங்கள்.
- வீட்டினுள் வைத்திருக்கும் தாவரங்களை குளியலறை அல்லது சமையலறை தொட்டியிலிட்டு (Sink) அவற்றிலிருக்கும் தூசு போகும்படியாக கழுவுங்கள்.
- பழைய தீந்தைகள் (Paints), நச்சுப் பொருட்கள் என்பவற்றை உங்கள் வீட்டிலிருந்து அகற்றுங்கள்.
- உங்கள் வீட்டில் நீச்சல் தடாகம் (pool or spa) இருந்தால், இயந்திரங்கள் நல்ல நிலையிலுள்ளனவா என சரிபாருங்கள்.
- நுளம்புத் தொல்லை காணப்பட்டால், சிட்ரனெல்லா எண்ணெய் உள்ள மெழுகுதிரிகளை அல்லது பயன்படுத்த முடியுமெனின் அங்கீகரிக்கப்பட்ட நுளம்புத் திரிகளை (Mosquito coils) பாவியுங்கள்.
- குளிர்சாதனப் பெட்டியின் கதவுகள் இறுக்கமாக மூடப்பட்டுள்ளதா என்பதை சரிபாருங்கள்
- பழங்களிலிருந்து ஊறுகாய்கள், வற்றல்களை தயார் செய்து பதப்படுத்துங்கள்
- சமையலறை அலுமாரிகளின் கறைகளை நீக்குதல், தீந்தையிடல் (painting) ஆகியவற்றை கோடை காலத்தில் மேற்கொள்ளுங்கள். கோடை காலத்தின் பகற்பொழுதில் இவை, இலகுவில் காய்ந்து விடும்
- புகைபோக்கிகளை சரிபாருங்கள்
- உற்பத்தியாளரால் கூறப்பட்டபடி, கனலடுப்பையும் (oven), குளிர்சாதனப் பெட்டியையும் (Fridge) சுத்தமாக்கவும்.
- முன்னைய இதழில் கூறியபடி இம் மாதமும் உங்கள் தோட்டத்தின் செடிகளுக்கு அளவுக்கு அதிகமாக நீர் விட வேண்டாம். அளவிற்கதிகமான நீர் விடப்படும் போது மண்ணில் நீர் தேங்கி நிற்க வழி ஏற்படும்.
- மாலையில் நிலம் காய்வதற்கு போதிய அவகாசம் இருப்பதால் அதிகாலையில் செடிகளுக்கு நீர் ஊற்றுங்கள்.

தொகுப்பு: மகேன் சிங்கராசா



# மலையைச் சுற்றிய கன்றுக் குட்டி

## முருகையன் பற்றிய நினைவுக் குறிப்பு



மெலிஞ்சிமுத்தன்

மரணத்தை எப்படி எழுதுவதென்று யாரும் எனக்கு சொல்லித் தந்ததில்லை.

சொல்லித் தந்தவர்களின் நுட்பங்களெல்லாம் வாழ்க்கைக்குள் மட்டுமே நின்று சுழன்றிருக்கின்றன. நான் மரண இருட்டைக் குடைய ஆசைப்படும் சுயம்பு.

கடந்துபோய்க்கொண்டிருக்கும் காலம் வீசியெறிந்திருக்கும் மரணப் புத்தகங்களின் குவியல் என் நுண்ணுணர்வின் மீது அதிர்வுகளை உண்டாக்கிக் கொண்டிருக்கையில் முருகையனென்ற கவிஞர் மரணமடைந்தார் என்ற செய்தியும் எனக்கு எதையோ குறிப்பால் உணர்த்திக் கொண்டிருக்கிறது. குறியீடுகளோடு பரீட்சயமான மனிதர்கள் குறியீடுகளாகவே மாறுதலில் ஒன்றும் புதுமை இல்லைதான்.

மரணம் பற்றி அவரோடு உரையாடியிருக்கிறேன். எப்போதுமே அவர் தனது சிந்தனை ஊன்றியெழுகின்ற தொடக்கப் புள்ளியை விட்டுத்தூரம் போவதில் நாட்டமிருந்தாலும் தான் தொடங்கிய புள்ளியை யாருடைய விவாதமும் உடைத்துவிடக் கூடாதென்பதில் அக்கறையாக இருப்பார்.

இராமுப்பிள்ளை முருகையன் என்ற கவிஞர். ஈழத்துக் கவிதை முன்னோடிகளுள் முக்கியமான ஒருவர், சிறந்த மொழி பெயர்ப்பாளர், தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவர், தாயகம் சஞ்சிகையின் ஆசிரியர் குழுவில் அங்கம் வகித்தவர், நாடகப் பிரதிகளை உருவாக்கியவர், என்றெல்லாம் நீண்டுகொண்டு போகும், அவர்பற்றிய பட்டியலொன்றைப் பதிய நான் தேவையில்லையென்றே நினைக்கிறேன்.

நான் எழுத முயல்வதெல்லாம் எனக்குத் தெரிந்த முருகையன் பற்றியதே. நீர்வேலி 'கந்தசுவாமி கோவில்" சந்தியில் இறங்கி மாக்சியவாதியென்று பலரால் புரிந்துகொள்-



எப்பட்ட அந்த மனிதருடனான உரையாடல்களை மீட்டுப் பார்த்தபடி நடந்த நடைக்குள் ஏற்பட்ட புரிதல்கள் பற்றியதே.

முருகையன் ஒரு நல்ல ஓவியன். அவரது வீட்டின் மறைவிடமொன்றில் நீர் வர்ணங்கள், தையல்நூல், குருகுமண் என்பவற்றால் உருவாக்கப்பட்ட பாரதியின் ஓவியமொன்று இருந்தது. அதனை அவரே வரைந்திருந்தார். அவரது வீட்டிற்கு ஒருமுறை சென்றிருந்த போது மிகுந்த கூச்சத்தோடு அதனை எனக் குக்காட்டினார். பாரதியின் கண்கள் இருக்க வேண்டிய இடத்தில் உங்கள் கண்களை வரைந்திருக்கிறீர்கள் என்றேன், சிரித்தார். அவர் பாரதியை மிகவும் நேசித்தார்.

பாரதி, பாரதிதாசன் அவர்களின் அறுந்து போகாத தொடர்ச்சியாகத் தாம் இருக்கிறோமென்ற தலைக்கனமற்ற தன்னிறைவொன்று அவருக்குள் இருந்தது. 'நீங்கள் எங்கு போனாலும் கவிஞனாக இருங்கள்" என்ற வாசகத்தை எப்போதுமே சொல்லிக் கொண்டிருப்பார். இலக்கியச் சர்ச்சையொன்றில் நான் மிகுந்த வேதனைக்குள்ளாகியிருந்த காலத்தில் எனக்கு தைரியத்தைத் தந்தவை அவரது கடிதங்களே, இந்த நிலையற்ற அரசியல் சூழல்களுக்குள் கவிதையை அடகு வைத்து விடாதீர்கள், என்று சொல்பவர்.

தனது அனுமதியின்றியே தனது பெயரினைப் பாவித்த அரசியல் கட்சிகளுக்கு தான் கொடுத்த பதிலடிகளைச் சொல்லிச் சிரிப்பார். வெளியே தன்னைப் பரத்தி வைத்திருந்த முருகையனின் சிந்தனை மூலத்தை துருவியபடியே கதை கேட்பேன். முருகையனிடம் போலித்தனத்தை நான் கண்டதில்லை. தனது ஆளத்தில் தான் கண்டடைந்த முடிவுகளை கொஞ்சம் எழிமையாக்கியே வெளியிடுவார், ஆனால் அந்த எழிமை புறச் சூழலில் கலைந்து போகாததாக இருக்கும்.

ஆரம்பங்களில் நவீன கவிதைகளின் மீது கடுமையான விமர்சனங்களை முன்வைத்திருந்த முருகையனின் விமர்சனப் போக்கு பிற்காலங்களில் தளர்வடைந்தபோது அவருக்குள் ஏற்பட்டிருந்த அகமாற்றம் அவதானிக்கப் பட வேண்டியது. அவர் சில தளர்வுகளோடு கடக்கத் தொடங்கினார், ஆயினும் அந்தரத்தில் இலக்கியத்தை கட்ட முடியாதென்று சொல்லிவந்த முருகையன், விஞ்ஞானத்தின் அடுத்த கட்டக் கண்டுபிடிப்புகளைப்பற்றி சிந்தித்தவர், ஓவியங்களுக்குள்ளும், கணிப்பொறியில் கலவை செய்து கடந்து போய்க் கொண்டிருக்கும் புகைப்படங்களை அவதானித்தவருமான அந்த மனிதர் தனக்குள் இருந்த ஆத்மீகத்திற்கு என்ன பெயர் வைத்திருந்தார் என்பதுதான் கடைசிவரைஎனக்குப் புரியாத ஒன்று.

முருகையன் எனக்கு முன்னால் நின்ற பெருமலைதான். ஆனால், நானோ இளங் கன்று. என்னுடைய சுயசிந்தனைக் கட்டுமானத்தில் நின்றவாறே அவரை அணுகியிருக்கிறேன்.

எங்களின் உரையாடலில் அவருக்கு உடன்பாடற்ற பக்கங்கள் வரும்போதெல்லாம் அருகிலிருந்து அவதானித்துக் கொண்டிருக்கும் ஒரு கவிஞரின் பக்கம் கையைக் காட்டி விட்டு அமைதியாகி விடுவார்.

முருகையன் வீட்டில் இன்னொரு கவிஞர் இருந்தார். அவர் முருகையனின் மரியாதைக் குரியவராக இருந்தார், அவர் சு. வில்வரெத்தினம் போன்றவர்களுக்கு மிகவும் பிடித்தமான இளங்கவிஞராய் இருந்தார். 'உரசல் ஓசைகள்" என்ற கவிதைத் தொகுப்பொன்றை அப்போது பவித்திரன் என்ற பெயரில் வெளியிட்டிருந்தார், அவர் முருகையனுக்கு மகனாகவும் இருந்தார். முருகையனைத் தேடிப் போனதில் எனக்குக்கிடைத்த ஒரு இனிய நண்பன் பவித்திரன் என்று அழைக்கப்படும் நாவலன். முருகையன், நாவலன், அம்மா மூவரையும் கூட்டிக்குண்டு தீவகத் தெருக்களில் திரிந்த நாள் என்வாழ்க்கையில் மறக்கமுடியாதது. அப்போதெல்லாம் முருகையனின் உதடுகளில், மஹாகவி, சில்லையூர் பற்றிய கதைகளே நிறைந்திருந்தது.

நாவலன் முருகையன் வீட்டிற்குள் வளர்ந்த இன்னொரு கவிதைமுகம். தன்னிடமிருக்கும் 'மனதின் மொழியை" எப்போதாவது எழுத்துக்குள் வைத்துக் கொண்டிருப்பவன். அவர்களோடு பளகிய அடுத்த ஆண்டில் எனது வெளிநாட்டுப் பயணமும் தீர்மானமானது. பயணம் சொல்லித் திரும்பும் போது நாவலன் எனது கையினுள் மரணம் பற்றியதொரு இரகசியக் கடிதத்தை புதைத்துவிட்டான். அந்த சிவப்பு மை கையெழுத்துப் பிரதி தந்த கனத்தோடே எனது பயணத்தைத் தொடர்ந்தேன். என் பயணத்தில் நான் நடுவழியில் நின்றபோது முருகையன் சொல்லச்சொல்ல நாவலன் எழுதிய கடிதம் எனது பயணத்திற்கான மன உறுதியைத் தந்தது. பின்னர் நாவலன் எழுதிய கடிதத்தில் 'அப்பாவின் மீது வயோதிபத்தின் திரை விழத்தொடங்கி விட்டது அவர் இப்போ மறதி மிக்கவராக மாறிவிட்டார்" என்று எழுதியிருந்தது.

எனது அடுத்தகட்டப் பயணமொன்றில் ஆற்றைக் கடந்தபோது, நாவலன் தந்த கடிதமும் ஆற்றோடு போனது. ஆயினும் அந்த இனிய நண்பனின் சிவப்பெழுத்து இன்னமும் நெஞ்சுக்குள் பதியப்பட்டிருக்கிறது.

முரண்களோடு சதுரங்கமாடிக்கொண்டிருந்த முருகையனின் இழப்பு பெரிய வெற்றிடத்தைத் தோற்றுவித்திருக்கிறது. அருமையான சிந்தனையாளன் நம்மிடமிருந்து பயணித்து விட்டார். ஆயினும் அந்த வெள்ளைச் சிரிப்பு மட்டும் இன்னமும் நம்முன்னே சாந்தமாய் சினேகித்துக் கொள்கிறது.

2002ல் முருகையன் கவிதைகளின் முழுத் தொகுப்பு வருவதற்கான முயற்சியொன்று நடந்தது. இன்னமும் அது கொண்டுவரப்படாதது கவலைக்குரியதே. அதற்கான வேலைகளைச் செய்வதே அந்தக் கவிஞனுக்கு நாம் இப்போ செய்யவேண்டிய மரியாதை என்று நினைக்கிறேன்.

மெலிஞ்சிமுத்தன்

melinchimuththan@thaiveedu.com

■ ■ ■




# சகல சட்டத் தேவைகளுக்கும்

**Real Estate Law**

Purchase, Sale & Mortgage

**Immigration Law**

Refugee Claim, Sponsorship, Work Permit & Student Permit

**Business Law & Commercial Law**

**Accident Benefit Claims**

**Translation Services**

Tamil, English & Sinhala languages



தமிழ் வழக்கறிஞர்

## Raphael Maharaja

Barrister, Solicitor & Notary Public

Tel: 416-847-7077
Fax: 416-847-7088

GTA SQUARE
5215 Finch Ave. East, Unit 219
Scarborough, ON
M1S 0C2

# அன்பென்று கொட்டு முரசே!

தோழர் சிவம் நினைவு நிகழ்வும் பேருரையும்



சமூக ஒடுக்குமுறைக்கு எதிராய்
போராளியாய் எழுந்து
தன் வாழ்நாள் முழுவதும்
மானிடத்தின் முன்னேற்றத்திற்காய் உழைத்த
**தோழர் கணேசமூர்த்தி சிவகுமாரன்**
(நெல்லியடி சிவம்)
அவர்களின் நினைவாய் நிகழ்வும் பேருரையும்.

நினைவுப் பேருரை ஆற்றுகை:
**பேராசிரியர் சிவசேகரம்**
(பொறியியல் பீடம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்,
இலங்கை)

**யூலை 04, 2009 மாலை 4:30 மணி**
**JULY 04, 2009 SATURDAY 4:30 PM**

**Everest Banquet & Convention Hall**
1199 Kennedy Road (@ Lawrence)
(One Block North of Lawrence Ave.)

தமிழ் வளத்துறைவள நிலையம்
TAMIL RESOURCE CENTRE (Thedakam)

For more info: thedakam@gmail.com

## For Buying and Selling

Commercial, Residential & Investments...
**Call: 416•522•3314**



**Sockalingam Prabaharan**
Sales Representative

PROPERTY MAX Realty Inc. Brokerage

3321 McNicoll Ave.
Toronto, ON M1V 5B3
Tel: 416 291 3000
Fax: 416 298 9963

For Listing Lowest Commission Starting from 1%

$369,800



Mccowan/Denison
3 Bedroom House, 3 washrooms, Spacious Corner Lot

$383,900



Mccowan/Denison
4 Bedroom House, 4 washrooms, Well Maintained Beautiful Bright House

$389,000



Kennedy/Denison
3 Bedroom House, 3 washrooms, Immaculate Home On Child-Safe Quiet

$394,900



Middlefield/Finch
4 Bedroom House, 4 washrooms, Absolutely Gorgeous. 4 Years New All Brick

$398,000



Middlefield/Finch
3 Bedroom House, 3 washrooms, .Beautiful 6 Yr New Approx.1750 Sqft

$409,900



Middlefield/Finch
4 Bedroom House, 3 washrooms, Absolutely Gorgeous 4 B/R Brick Cozy Detached Home

$539,900



14th/Highglen
4 Bedroom House, 5 washrooms, 9Ft Ceiling Remington Home, Fully Upgraded

$564,900



14th Ave/Markham
4 Bedroom House, 4 washrooms, Beautifull Executive Home On Quiet Street 9Ft

$488,900



Brimley/N. Lawrence
4 Bedroom House, 4 washrooms, Under 2 Years Old, Rare To Find Custom Built Home

from the firm foundations of creative photos

l a p h o t o g r a p h i e e s t u n a r t





digimedia creations

**karuna photography**

- Wedding Photography
- Bridal Portrait Sessions
- Custom Reception Slideshows
- DVD Slideshows
- Custom Designed Albums
- Parent Albums
- Digital Proofs
- Digital Retouching
- Framed Prints & Canvases

elegant memorable real

www.digimediaphoto.com

416.467.4952

# Carbon Monoxideம் அதன் தாக்கமும்

## Carbon Monoxide - 2



மோகன் சுப்பிரமணியம்
- வீடு விற்பனை முகவர் -

### COவை கண்டு பிடிக்கும் கருவியின் அபாய மணி ஒலி கேட்டதும் நாம் என்ன செய்யவேண்டும்.

அபாயமணி ஒலிக்கும் போது அதை அலட்சியப்படுத்தாதீர்கள். ஒவ்வொரு நேரமும் அபாயமணி ஒலிக்கும் போதும் அதை முக்கியமானதாக கருந்துங்கள். ஆரோக்கியமான ஒரு இணைஞன் COவினால் ஏற்படும் ஆரம்ப உடல்நல குறைபாடுகளை உணருவதற்கு முன்னமே COவை கண்டுபிடிக்கும் கருவியின் அபாயமணி ஒலித்துவிடும். மிகக் குறைந்த அளவிலான COவின் நச்சுத்தன்மை தாக்கினாலே இளம் குழந்தைகள், முதியோர், மற்றும் நுரையீரல், இதயநோய் உள்ளவர்கள் ஆபத்தான உடல் நலக்கோளாறால் பாதிப்படைவர்.
(உடல் நலம் மற்றும் சுகாதாரத்துறை கனடா, 1989).

- வீட்டில் பிராணிகள் உள்ளிட்ட அனைத்தும் வெளியெற்றப்பட வேண்டும். எத்தனைபேர் வெளியேறி இருக்கிறார்கள் என்று கவனியுங்கள்.
- யாருக்காவது ஃப்ளுகாய்ச்சல் போன்ற அறிகுறிகள் இருந்தால் எண் 911ஐ கூப்பிடுங்கள்.
- உற்பத்தி இடத்தை அகற்றி விடுங்கள் அல்லது அணைத்து விடுங்கள்.
- வீட்டை காற்றோட்டம் உள்ளதாக ஆக்குங்கள்.
- அலாரம் மணியை திரும்பவும் சீர் செய்து சரிபடுத்துங்கள்.
- அலாரம் மணி ஒலிப்பது நிற்பது வரை வீட்டில் திரும்பவும் குடியேறாதீர்கள்.
- எதிர்காலத்தில் இந்த மாதிரியான சூழ்நிலை ஏற்படாதவாறு நடவடிக்கை எடுங்கள்.

### COவின் நச்சுத்தன்மையால் உண்டாகும் அறிகுறிகள்

உங்கள் குடும்பத்தின் அனைத்து அங்கத்தினர்களும் COவின் நச்சுத்தன்மையால் உண்டாகும் அறிகுறிகளை அறிந்திருக்க வேண்டும்.

### லேசான பாதிப்பு

தலைவலி, மூக்கில் நீர் ஒழுகுதல், கண்களில் வலி போன்ற ஃப்ளு காய்ச்சலுக்கான அறிகுறிகள்.

### மிதமான பாதிப்பு

மந்தநிலை, மயக்கம் வாந்தி எடுத்தல். மனதில் கலவரம் மற்றும் குழப்பம் ஏற்படுதல். வீட்டை விட்டு உடனே வெளியெறுதல் அல்லது யாருடைய உதவியாவது நாடுதல் போன்ற விவேகமான முடிவுகளை பாதிப்படைந்த சிலருக்க எடுக்க முடியாதிருத்தல்.

### மிதமிஞ்சிய அளவு பாதிப்பு

உணர்வை இழத்தல், மூளை சேதமடைதல், மரணம் சம்பவித்தல்.

### COவின் குறைந்த அளவிலான நீண்டகால பாதிப்பு

கவனிக்கத்தக்க வகையிலான அறிகுறிகள் இதனால் ஏற்படாமல் இருந்தாலும், இன்னமும் இந்த மாதிரியான பாதிப்படையும் சூழ்நிலையை தவிர்க்க வேண்டும்.

### ஒரு கார்பன் மோனாக்ஸைட் கண்டு பிடிக்கும் கருவியை சோதனை செய்தல்

அனேகமான COவை கண்டு பிடிக்கும் கருவிகளில் ஒரு சோதனை பட்டன் இருக்கும். கருவி நல்லமுறையில் இயங்கி கொண்டிருக்கிறது என்பதற்கு வாரத்திற்கு ஒருமுறை அதை அமுக்கி பார்க்க வேண்டும். சிகரட்டிலிருந்து வரும் புகை அல்லது வாசனைக் குச்சி புகை போன்று COவின் உற்பத்தி இடத்தை திரைகள் உள்ள கண்டுபிடிக்கும் கருவிகள் என்றால் உடனே சோதனை செய்து விடமுடியும். COவின் உற்பத்தி இடத்தை 8 முதல் 10 அங்குலங்கள் தூரம் தள்ளிவையுங்கள். பின்னர் கருவியின் திரையைப் பாருங்கள். சிறிய அளவு COவின் இருப்பையும் கூட அது திரையில் காட்டி விடும். ஆனால் அபாயமணி இந்த குறைந்த அளவில் ஒலிக்காது. COவை கண்டுபிடிக்கும் கருவியை விற்பனை செய்யும் இடத்தில், அதை சோதனை செய்வதற்கான கருவிகளும் கிடைக்கின்றன. சோதனை செய்வதற்காக அதிக அளவிலான CO (1000ppm) அடங்கிய ஒரு vial மற்றும் ஒரு பிளாஸ்டிக் கூடாரம் ஆகியன வழங்கப்படும். அதிக அளவு CO இருந்தால் தான் கண்டு பிடிக்கும் கருவி அபாய மணியை ஒலிக்கும் என்று இந்த சோதனை நிரூபணம் செய்யும்.




### சோதனை திட்ட அளவுகளில் மாற்றங்கள்

கனடாவின் திட்டஅளவு நிர்ணய வாரியம் (CSA) மற்றும் அமெரிக்காவின் under writer's Laboratory & UL என்பன COவின் திட்ட அளவுகளையும் மற்றும் சோதனை முறையையும் ஒருங்கிணைத்துள்ளது. கண்டு பிடிக்கும் கருவியின் திரைகளில் 30 ppmக்கும் குறைவான CO அளவுகள் 2005ன் தரநிர்ணய அளவுகளின்படி தடுக்கப்பட்டுள்ளது. முன்னைய திட்ட அளவைக் காட்டிலும் அதிக அளவிலான COவின் அளவுகள் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தாது என்ற நிலையிலும், தீயணைக்கும் நிலையங்கள், அவசர மருத்துவ வசதி நிலையங்கள் போன்ற இடங்களுக்கு தேவையில்லாமல் தொலைபேசி அழைப்புகள் வருவதை குறைப்பதற்கு இந்த விதிமுறையின் பின்னணிகாரணம். COவை கண்டு பிடிக்கும் கருவியின் குறைபாடு, அல்லது மற்ற வாயுக்களின் வரத்து ஆகியன காரணமாக வரும் தொலைபேசி அழைப்புகளை இந்த நடவடிக்கை குறைத்துவிடுகிறது. அதன் விளைவாக CO அளவுகள் 70 ppm இருப்பது வரை புதிய அபாய மணிகள் ஒலிக்காது. மேலும் இந்த அளவுகள் கனடாவின் உடல் நலம் சம்பந்தமான வழிகாட்டும் விதிமுறைகளைப் பொறுத்த வரையில் அதிப்படியானவை அல்ல. ஒரு வீட்டில் CO அளவுகளின் உண்மையான நிலையை, கண்டுபிடிக்கும் கருவிகள் தங்களுடைய திரையில் காட்டி விடும். திரையில் குறைந்த அளவிலான CO காட்டப்படும் போது, நுரையீரல் கோளாறு உள்ளவர்களுக்கு அது மிக உதவியாக இருக்கும். இதனால் நோய் ஆபத்தான சூழ்நிலையை எட்டுவதை தவிர்க்க முடியும்.

குறைந்த அளவிலான COவை கண்டுபிடிக்கும் கருவிகளும் வணிக நிலையங்களில் விற்பனைக்கு கிடைக்கின்றன.

### கார்பன் மோனாக்ஸைட் அளவுகளும் விளைவுகளும்

- **COவின் அளவு 0-2:** வீடுகளில் உள்ளேயும் மற்றும் வெளியேயும் இயல்பான சூழ்நிலைகள்.
- **COவின் அளவு 11:** எட்டுமணி நேரத் திற்கும் மேல் தாங்கிக் கொள்ள கூடிய வீட்டினுள்ளே உள்ள அளவு.
- **COவின் அளவு 25:** எந்த எட்டு மணி நேரத்திற்கும் தொடர்ந்து ஆரோக்கியமான மனிதர்கள் தாங்க கூடிய, அனுமதிக்கப் பட்ட, உயர்ந்த பட்ச அளவு.
- **COவின் அளவு 70:** COவை கண்டு பிடிக்கும் கருவிகள் ஒன்று முதல் நான்கு மணி நேரங்களுக்குள் அபாய மணியை ஒலிக்க வேண்டும்.
- **COவின் அளவு 150:** COவை கண்டு பிடிக்கும் கருவிகள் 10 முதல் 50 நிமிடங்களுக்குள் அபாய மணியை ஒலிக்க வேண்டும்.
- **COவின் அளவு 200:** இரண்டு முதல் மூன்று மணி நேரங்களுக்குப் பிறகு லேசான தலைவலி, களைப்பு, மயக்கம் மற்றும் வாந்தி. 35 நிமிடங்களுக்குள் COவை கண்டு பிடிக்கும் அபாயமணி ஒலிக்க வேண்டும்.
- **COவின் அளவு 400:** நான்கு முதல் 15 நிமிடங்களுக்குள் COவை கண்டு பிடிக்கும் கருவிகள் அபாய மணியை ஒலிக்க வேண்டும்.
- **COவின் அளவு 800:** 45 நிமிடங்களுக்குள் மயக்கம், வாந்தி மற்றும் வலிப்புகள் மேலும் இரண்டு முதல் மூன்று மணி நேரத்திற்குள் மரணம் நேரிடலாம்.
- **COவின் அளவு 1600:** ஒரு மணி நேரத்திற்குள் மரணம் நேரிடலாம்.
- **COவின் அளவு 13000:** ஒன்று முதல் மூன்று நிமிடங்களுக்குப் பிறகு மரணம் நேரிடலாம்.

உசாத்துணை:
Exposure Guide lines for Residential Indoor Air Quality Health Canada 1989.
From CAN/CSA 6.19, Residential Carbon Monoxide Alarming Devices, 2001.
Carbon Monoxide Poisoning, Iowa state University of Science and Technology, AEN-172.

mohansubramaniyam@thaiveedu.com

■ ■ ■



# நாடு கடந்த தமிழீழ அரசுக்கான ஜனநாயகத் தேர்தல்



நடராஜா முரளிதரன்

அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளிலே புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களில் ஒருசாரார், இந்தப் பத்தியை எழுதிக்கொண்டிருக்கும் இக்கணம் வரை இலங்கையில் வாழும் தமிழ்மக்களுக்குச் சிறிலங்கா அரசுகள் தொடர்ந்து இழைத்து வரும் அநீதிகள் தொடர்பாகக், குறிப்பாகத் தற்போதைய ராஜபக்ச அரசின் தமிழ் மக்கள் மீதான மிலேச்சத்தனமான அடக்குமுறைகள் குறித்து நடவடிக்கை எடுக்கக்கோரி, தமிழ் பேசும் மக்களுக்கான சுயநிர்ணய உரிமை, தமிழ் பேசும் மக்கள் மீதான மனித உரிமை மீறல்கள் என்ற அடிப்படையில் தலையீடு செய்யக் கோரி கவன ஈர்ப்புப் போராட்டங்களை எவ்வித இடைநிறுத்தல்களும் இன்றித் தொடர்ச்சியாக அமெரிக்கத் தூதரக, அரசு அலுவலகங்களுக்கு முன்பாக நிகழ்த்தி வருகிறார்கள்.

விடுதலைப் புலிகள் அமைப்பு இராணுவரீதியாகக் களத்திலே தோற்கடிக்கப்பட்ட பின்னும் இந்தப் போராட்டம் எத்தகைய விட்டுக்கொடுப்பும் இன்றித் தொடருகின்றது. கடந்த மே மாதம் 19ம், 20ம் தேதிகளுக்கு முன்னர் இங்கு வாழும் தமிழ்மக்களுக்கு இத்தகைய போராட்டங்கள் தொடர்பாக இருந்த ஆர்வம் தற்போதைய சூழ்நிலையில் குன்றியிருந்த போதிலும் இந்தப் போராட்டங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

விடுமுறை நாட்களில், மாலை வேளைகளில் கணிசமான அளவு மக்கள் இந்தப் போராட்டங்களில் கலந்து கொள்ளக் கூடுகின்றார்கள். கடந்த வாரம் திங்கட்கிழமை மாலை வேளையில் எனது ஊரான காங்கேசன்துறையைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் அந்தப் போராட்டத்திலே தங்களை ஈடுபடுத்தியிருந்தார்கள். இவ்வாறான போராட்டங்களின் போது எழுப்பப்படும் பல்வேறு கோசங்களில் ஒன்றாக விடுதலைப் புலிகள் அமைப்பை அங்கீகரிக்குமாறு வேண்டுவதும், தடையை நீக்குமாறு கேட்பதும் வழக்கம். எவை எப்படியிருந்த போதிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைத் தொடர்ந்தும் பயங்கரவாத அமைப்பாக அமெரிக்கா அரசின் இராஜாங்கத் திணைக்களம் சென்ற கிழமை மீண்டும் அறிவித்துள்ளது.

அவ்வறிவிப்பில் விடுதலைப் புலிகளினால் அறிவிக்கப்பட்டுள்ள தற்காலிகக் கடல் கடந்த “தமிழ் ஈழ அரசு” என்ற அறிவிப்பினை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், தொடர்ந்து அந்த அமைப்பை ஓர் பயங்கரவாத அமைப்பாகவே கருதுவதாகவும் குறிப்பிடுகிறது அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம்.

இதேவேளை, பயங்கரவாதத்தைக் களைந்து ஜனநாயக ரீதியில் உரிமைகளை வென்றெடுக்கப் போவதாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கை வரவேற்கத் தக்கதெனவும், தமிழீழ விடுதலைப் புலிகள் மீது நம்பிக்கை ஏற்பட இன்னும் நீண்ட காலம் எடுக்கும் எனவும் அமெரிக்க ராஜாங்கத் திணைக்கள உயரதிகாரி “கிரெக் சுல்வியான” தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் இன்று சந்தித்துள்ள புதிய சவாலை எதிர்கொள்வதற்கு ஒரு பொதுக்கொள்கையின் கீழ் வடிவமைக்கப்பட்ட பொது வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதே இன்றைய காலச் சூழ்நிலையின் வரலாற்றுக் கட்டாயமாகும் என்ற தர்க்கத்தின் இயங்குதளத்தில் அங்கு வாழும் மக்களினது இன்றைய யதார்த்த நிலையினை அடிப்படையாக வைத்துச் சிந்திப்பதுதான் சரியானதும், நேர்மையானதும் என்ற வகையிலே விடுதலைப் புலிகள் அமைப்பின் அனைத்துலகத் தலைமை சிந்திப்பதாகத் தெரிகின்றது.

தாயகத்தின் தற்போதைய நிலையில் - சிறிலங்கா அரசின் தடுப்பு முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் மக்களினதும் போராளிகளினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தல், அவர்களின் நலன்களைப் பேணுதல், மக்கள் தமது வாழ்விடங்களில் விரைவாக மீளக்குடியேற வழி செய்தல், அவர்கள் தமது இயல்பு வாழ்வுக்குத் திரும்புவதற்கு ஆவன செய்தல், போரில் தமது உடல் உறுப்புக்களை இழந்திருக்கும் மக்களுக்கும், போராளிகளுக்கும் புது வாழ்வளித்தல் என்பன அதற்குள் உள்ளடக்கம்..

இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற இறுதிக் கட்ட யுத்தத்தின் போது அப்பாவிப் பொதுமக்களைப் புலிகள் மனிதக் கேடயமாகப் பயன்படுத்தியுள்ளதாக குற்றஞ்சாட்டியுள்ள



அமெரிக்க அரசு ஜனநாயக நெறிமுறையில் இணைந்து கொள்வது தொடர்பில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மெய்யான அர்ப்பணிப்பு இருக்க வேண்டும் எனவும், அவர்களது ஜனநாயகம் நோக்கிய பயணத்தை அமெரிக்க அரசு மிக உன்னிப்பாக அவதானிக்கும் எனவும் குறிப்பிடுகின்றது.

1997ம் ஆண்டு முதல் தமிழீழ விடுதலைப் புலிகளை ஓர் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பாகப் பிரகடனம் செய்து வந்துள்ளது அமெரிக்க அரசு.

இங்குதான் எனது கேள்விகள் எழுகின்றது. அமெரிக்கா போன்ற அரசுகளின் வெளிநாட்டுக் கொள்கையை இவ்வாறான போராட்டங்கள் முழுவதுமாக மாற்றியமைத்து விடுமா? இந்தக் கேள்விக்கு இல்லையென்ற பதிலைக் கூறுவதற்கு எவரும் மிகப் பெரிய அரசியல் ஞானம் படைத்தவராக இருக்க வேண்டிய அவசியமில்லை. மேலும் எமது பிராந்தியத்திலே புவியியல் ரீதியில் மிக நெருக்கமாக அமைந்துள்ள இந்தியா போன்ற பேரரசுகளின் மூலம் கிடைக்கப் பெறும் அரசியல், இராணுவ, பொருளாதார நலன்களைக் காட்டிலும் எம்மிடமிருந்து எதுவும் கிடைக்கப் போவதில்லை அமெரிக்க அரசுக்கு. எனவே குறுகிய கால நோக்கில் உடனடிக் கால அட்டவணைக்கான நிகழ்ச்சி நிரலின்படி தென்னாசியாவுக்கான இந்து மகாசமுத்திரத்தில் தற்காலிகமாக இந்தியாவின் மேலாண்மையை ஆதரித்தாக வேண்டிய கடப்பாடு அமெரிக்காவுக்கு உண்டு. இது ஒப்பீட்டளவில் தன்னால் முழுமையாக உடன்படவும், முரண்படவும் முடியாத நாடாகிய சீனாவைக் கட்டுப்படுத்த ஓரளவுக்கு உதவக் கூடும்.

இந்த அடிப்படையின் மீதே இவை தொடர்பான எமது மொழியாடல்களைக் கட்டமைக்க வேண்டும். நடந்து முடிந்த இனப் படுகொலையை நாம் உட்பட யாராலும் தடுத்து நிறுத்த முடியவில்லை. உலகம் எங்கும், தமிழ்நாட்டிலும் எழுச்சிமிகுந்த போராட்டங்கள் தமிழர்களால் நடத்தப்பட்டது. எத்தனையோ இராஜதந்திர நகர்வுகளை நாம் மேற்கொள்வதாகக் கருதிக்கொண்டு மிகுந்த நம்பிக்கையின் பேரில் செயற்பட்டோம். இருந்தபோதும் உலக நாடுகளை ஈழத்தமிழ் மக்களுக்கு ஆதரவாக வென்றெடுப்பதில் தோல்வியையே தழுவிக்கொண்டோம்.

தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டமை குறித்து அனைத்துலக அளவில் எழுந்த கண்டனங்கள் வெற்றுச் சுலோகங்களாக நம் கண் முன்னேயே வீழ்ந்து மடிந்தன. தவிர அந்தப் படுகொலையை தடுத்து நிறுத்தவோ அல்லது போராளி இயக்கத்தைப் பாதுகாக்கவோ யாருமே முன்வரவில்லை.

ஆனால் சிறிலங்கா அரசாங்கமோ தற்போதைய உலக ஒழுங்கை நன்கு புரிந்துகொண்டு இந்து சமுத்திரப் பிராந்தியப் புவிசார் அரசியலை நன்கு பயன்படுத்தியும், அனைத்துலக ஒழுங்கு முறைமை இயங்கும் நடைமுறையைக் கருத்திற்கொண்டும் உலக நாடுகளை அது தனது பக்கம் பெரும் அணியாகச் சேர்த்துக் கொண்டு தமிழர் தேசம் மீதான போரை நடத்தியது.

இந்த இராஜதந்திரக் காய்நகர்த்தல்களின் பின்னணியிலேதான் மே மாதம் 27 ஆம் தேதி நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான ஆணைக்குழுவின் சிறப்பு அமர்வில் சிறிலங்கா அரசு மேற்குலகின் எதிர்ப்பையும் மீறி வெற்றி ஈட்டியது. தொடர்ந்தும், அனைத்துலக சமூகத்தினை நுட்பமாக கையாண்டவாறு சிங்களப் பெருந்தேசியவாத மேலாண்மையை தமிழ் மக்கள் மீது திணிக்கவே சிறிலங்கா அரசு முயல்கிறது.

எனவே அடுத்த கட்டப் போராட்டத்தில் நாம் தனித்து நின்று செயற்பட்டு வெற்றி பெற முடியாது. பாதிப்புற்றிருக்கும் நமது மக்களுக்கு ஆதரவாக உலகை எவ்வாறு திருப்பப் போகிறோம்?

உலக ஒழுங்கு, அறத்தின் பாற்பட்டுச் சுழல்வதல்ல. அது தனது நலன்கள் என்ற அச்சில் தான் சுழன்று கொண்டிருப்பது. ஆகவே இத்தகைய உலக ஒழுங்கில் நமக்கு ஆதரவாக உலக நாடுகளை வென்றெடுப்பது சாத்தியமாகுமா? இவ்வாறான விமர்சனங்களையே தமிழ்த் தேசியச் சார்பாளர்கள் முன் வைக்கின்றார்கள்.

எனவேதான் நாம் புதிதாய், புதிய சூழலில் சிந்திக்கத் தலைப்பட வேண்டுமாயிருந்தால் தமிழ் மக்களுக்குள் உள்ளும், வெளியுமாய் ஜனநாயகச் சூழலுக்கான அத்திவாரம் கட்டமைக்கப்படுதல் வேண்டும். கேள்விகள், சந்தேகங்கள், மாற்றுக்கருத்துகள் ஆரோக்கியமான சமூக வாழ்வின் சகஜமான நிகழ்ச்சிப் போக்குகளாகும். வேகமாய் இயங்கிக் கொண்டிருக்கும் உலகில் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கும் என்ற விதியை நாம் ஏற்பவர்களாக இருக்கும் பட்சத்தில் புலம் பெயர் வாழ்தமிழ்மக்களால் தற்போது திட்டமிடப்பட்டிருக்கும் நாடு கடந்த நிலையில் தமிழீழ அரசுக்கான பிரதிநிதிகளைத் தேர்வு செய்ய தமிழ்மக்கள் சார்ந்த அனைத்துக் கட்சிகளும் பங்குபற்றுவதற்கான ஜனநாயகத் தேர்தல் ஒன்றினை நாம் ஏன் நிகழ்த்த முடியாது?

அவ்வாறு நிகழ்த்துவதன் மூலம் ஈழத்தமிழ் மக்களுடைய அரசியல் உரிமைப் போராட்டத்தினை வரலாற்றின் அடுத்த கட்டத்திற்கு நகர்த்த முடியும்.

muralitharan.n@thaiveedu.com

■ ■ ■

# எல்லாமும் எல்லோரும் பெற வேண்டும்

## Non Medical Insurance up to Age 85

- Life Insurance
- Critical Illness Insurance
- Disability Insurance
- Mortgage Insurance
- Home Equity Line of Credit
- RESP / RRSP



INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.

RBC Insurance

Manulife Financial

Unity Life of Canada

Canada Life



3 Bedroom + 1 Washroom
$ 184,900



3+1 Bedroom, 3 Washroom
$ 349,900



3 Bedroom + 2 Washroom
$ 229,000



3+1 Bedroom + 3 Washroom
$ 335,000



2 Bedroom + 1 Washroom
$ 199,000



3+1 Bedroom, 1 Washroom
$ 269,900



2+1 Bedroom + 2 Washroom
$ 227,000



3 Bedroom + 2 Washroom
$ 229,500



3 Bedroom +2 Washroom
$ 235,000



3+2 Bedroom, 2 Washroom
$ 274,900



3+1 Bedroom + 3 Washroom
$ 229,900



2 Bedroom + 1 Washroom
$ 189,900



2 Bedroom + 1 Washroom
$ 79,000



Gas Station
$ 199,000




3 Bedroom + 3 Washroom
$ 285,000



2 Bedroom + 2 Washroom
$ 88,888

Apex Creations - 416-297-0707

RE/MAX®
Rouge River Realty Ltd. Brokerage
Independently Owned and Operated
37-31 Tapscott Rd. Toronto, ON. M1B 4Y7
Tel : 416-321-1999 Fax : 416-321-2290

**Uthayan Nadarajah**
Broker
Direct : 416-727-9945



# பங்குச் சந்தை ஆய்வாளர்கள் அவசரப்படுகிறார்கள்

கடந்த 22ம் திகதி வட அமெரிக்க பங்குச் சந்தைகளில் ஏற்பட்ட பாரிய வீழ்ச்சி நிறுவனங்களின் லாபமீட்டும் தன்மை குறித்த பெரிய கேள்வியை எழுப்பி இருக்கிறது. 2009இலும் 2010இலும் எதிர்பார்த்தது போல இலாபமீட்ட முடியுமா என்ற கேள்வி, உலக பொருளாதாரம் உண்மையில் 2.9% வீழ்ச்சியடையும் என்ற உலகவங்கியின் எதிர்வு கூறலால் எழுந்திருக்கிறது. இதைத் தொடர்ந்து பங்குச்சந்தைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

March மாத தொடக்கத்தில் இருந்து கடந்த சந்தைகளில் இருந்த இறுக்கம் தளர்வடைந்தது. கோடிக்கணக்கான அரச முதலீடுகள் பொருளாதாரத்திற்கு இறைக்கப்பட்டன. வங்கிகள் வீழ்ச்சியடையாமல் இருக்க அரசாங்கங்கள் முண்டு கொடுத்தன. இதனால் வங்கிகள் ஒன்றுக்கொன்று கடன் கொடுக்கத் தொடங்கின.

இந்த நிலைகள் தெளிவடையத் தொடங்கிய நிலையில் நிறுவனங்கள் லாபமீட்டக்கூடிய தன்மை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், உண்மையில் நிலை அங்கு செல்லவில்லை எனவே. தற்போது SP 500 சுட்டியில் இருக்கும் 500 நிறுவனங்களில் லாபம் 34% வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே லாபமீட்டல் இப்படி வீழ்ச்சியடையும் போது சுட்டிகள் 40% வீதமளவில் உயர்ந்திருப்பது பல கேள்விகளை எழுப்பியுள்ளது.

இரண்டாவது காலாண்டில் நிலைமை இப்படி இருக்கும் போது மூன்றாவது காலாண்டில் 20% லாபம் வீழ்ச்சியடையும் என எதிர் பார்க்கப்படுகிறது. இப்படி எதிர்மறையான செய்திகள் நிறைய இருக்கும் போது சில நல்ல செய்திகளும் சந்தையில் இல்லாமல் இல்லை.

வங்கியில் கடன் தரும் நிலை சற்று தெளிவடைந்தால் வங்கிகள் லாபமீட்டுமெனவே பலரும் எதிர்பார்க்கிறார்கள். கடந்த ஆண்டு இருந்ததை விட வங்கிகள் வங்குரோத்து அடையும் சந்தர்ப்பம் மிகக் குறைவாகும். அத்துடன் அமெரிக்க அரசின் bail out பணத்தைப் பெற்றுக்கொண்ட வங்கிகள் சில அந்த பணத்தைத் திருப்பித் தர ஆரம்பித்துள்ளன. அத்துடன் இந்த Bail out திட்டத்தில் அமெரிக்க அரசு 4.5 Billion Dollar லாபமீட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இருந்த போதிலும் இந்த நேரத்தில் பொதுவாக ஏற்பட்டுள்ள கேள்வி நிறுவனங்கள் லாபமீட்டுவது குறைந்து வரும் இந்த நேரத்தில் இந்த நிறுவனங்களின் பங்குகளை வாங்குவது சிறந்த செயலா என பலரும் கேள்வி எழுப்புகிறார்கள்.

ஆனால், இந்த ஆண்டு முடிவில் இருந்து நிலைமை மாறி 2010இல் நிறுவனங்கள் இலாபமீட்டும் என சில ஆய்வாளர்கள் கூறி வரும் இந்த நிலையில் சந்தை கடந்த சில வாரங்களாக மிகவும் உயர்வடைந்தது.

மிகவும் சாதாரணமாக ஏற்படக்கூடிய மிகக் குறைந்த பொருளாதார வளர்ச்சி வீதம் கனடாவிலும் அமெரிக்காவிலும் நிறுவனங்களுக்கு லாபமீட்டக்கூடிய சூழலை தராது என்பதே சில ஆய்வாளர்களின் வாதமாகும்.

ஆனால், 2010இல் இனனொரு 40% பங்கு சந்தை தரும் என்று கூறும் ஆய்வாளர்களும் இல்லாமல் இல்லை. சில ஆய்வாளர்கள் SP 500 நிறுவனங்களுக்கு மிக கூடியளவு லாமீட்டலை எதிர்பார்க்கிறார்கள்.

இந்த இரு வித்தியாசமான ஆய்வாளர்களின் முடிவுகளுக்கு மத்தியில் முதலீட்டாளர்கள் மிகவும் குழப்பமடைந்திருக்கிறார்கள்.

RBC capital Market Miles zylock அவர்கள் மீதம் இருக்கும் இந்த வருடத்தில் பெரிய மாற்றம் எதையும் எதிர்பார்க்கவில்லை. 2010இல் மிக சாதாரணமான வளர்ச்சியை எதிர்பார்க்கும் அவர் 2010ல் பங்குச் சந்தைக்கு ஒரு 18% அதிகரிப்பையே எதிர்பார்க்கிறார்.

அத்துடன் வீழ்ச்சியடைந்திருக்கும் மூலவளப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் எனவும் அவர் எதிர்வுகூறியுள்ளார். பொருளாதார வளர்ச்சியில் கேள்வி அதிகரிக்கும் போது மூலப்பொருட்களின் விலை அதிகரிப்பது இயல்பானதே.

கடந்த March மாதத்தில் இருந்து இரண்டு மடங்காக மாறியுள்ள மூலவளப் பொருட்களின் விலைகளில் கூட ஒரு திருத்தம்

மாறன் செல்லையா
- நிதி திட்டமிடல் ஆலோசகர் -



ஏற்பட்டுள்ளது. ஆகவே, பெரும்பாலான ஆய்வாளர்கள் பொருளாதார நிலை பற்றி ஒரு உறுதியான சைகை தெரியும் மட்டும். பங்குச் சந்தையில் பெரிதாக உயர்ச்சி எதையும் எதிர்பார்க்க முடியாது என்றே கருதுகிறார்கள்.

maran.chelliah@thaiveedu.com

■ ■ ■

**தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

***E-mail:thaiveedu@gmail.com***
***Fax: 416-849-0594***
***Tel: 416-646-3422***



# BUY,..SELL HOMES , BUSINESS,LANDS..

## PAT Pushpakanthan 416.490 7653 (SOLD

**Real Estate BROKER**

## #1 Agent for 7 Years

EXPERIENCE! COMMITMENT! RESULTS!



**அனுபவம்! திறமை! நேர்மை!**

CENTURION AWARDS '03 -'08
Top producer 7 years
**Masters Hall of Fame Award**

## Open house/Sun 2-4 pm

**137 Rizal ave Markham**




**Luxury executive home in Boxgroove community**

2982/3242 Sq.Ft(270 Sq.Ft Of Raised Ceil. Of Fyr & Liv Rm)Open To Above Foyer, Coffered Ceiling In Din Rm, Harwood Combo, Modern Kitchen With Lots Of Upgrades,Sunken Liv.Rm W/17' Ceilg,Art Niche, Access To Mud Rm Frm/Grge,Mirrord Clst,Centre Islnd W/Raised Brkfs Bar,D V Gs Firepl, Pot Lights, Open Conceptw/ Decorative Columns & Lots Of Large Windows. Must See Property..Don't Miss.... **Stainless Steel Appliances**

**Excellent Family Business brigton ontario**

**COTTAGE / CAMPGROUND BUSINESS**

**With APPX 6 acres with 10 cottages,and 20 trailor homes**

1-2-3 Bedroom fully equipped Comfortable Housekeeping Cottages, Cable TV , 3 & 4 Pce. Bathrooms. Decks & Lawn chairs, Propane B.B.Q .. Bedding Provided and fully supplied kitchens, Elect heat, Municipal Water Boating,exclusive water front, Large storag D.grages



**வியாபாரம்**



**Cafetaria**
**Good income**
**Cafetaria In office building**

Century 21 Affiliate Realty Inc.
BROKERAGE
80 Corporate Dr. Suite 208. Toronto
Off 416-290 1200
WWW.PATPUSH.COM
email: rpushpakanthan@trebnet.com

**Scarborough**



Luxury Living At Its Best! Stunning Custom Home Flooded With Natural Light. Stone/Brick Exterior

**MARKHAM/STEELES**



Close To Shopping, Costco, Canadian Tire, Home Depot, Future Shop, No Frills, Original Owners

**BIMLEY/HUNTINGWOOD**



3 bdr sep ent. Beautiful Brick Bungalow On Quiet Street In Family Neighbourhood In Wexford Area. Situated On A Private Fenced Lot With Treed Fenced Backyard

**M.SIDE/ELLESMERE**




2bm/2wsrm Steps To Centennial College & UFT(Scar Campus) Close To Parks, Ttc & 401

**nielson/finch**




Scarborough
Newer condo t.home

**MARKHAM/DENISON**



4 bm/3 wsrm*Bright & Spacious*Location*Fully Fenced Yard*Walk To TTc/Schools/Shops/

**NORTH SCARBOROUGH**



Raised Bungalow, Close To Ttc, Very Large Finished & Separate Entrance Basement

**KENNEDY/EGLINGTON**




Condo Townhouse Very Well Maintained 6 Year Old Townhouse In Great Location

## CONDOS F0R SALE

**Warden/Finch**
3 bdrm 2 wrm condo apt
$159 900

**Mccovan/finch**
Luxary tridel bldg 2bdrm condo apt $179 900

**DON MILLS/EGLINGTON**
3 bdrm condo apt. fr
Sale Price :$159 800

**Mccowan Ellesmere**
2/3 bdrm condo apt. fr
Sale Price :frm $179000

**Pharmacy/ Finch**
1 bdrm condo apt. fr $77 000/-
2 Bdrm condo apt $ 129000

**nielson/finch**
வியாபாரம்
Convinience64 9... more
$59 000/-
scarborough

**MARKHAM/DENISON**
வியாபாரம்
Pizza & takeout
busy locn
Start your bus. today

**NORTH SCARBOROUGH**
முதலீடு
Industrial unit fr sale
Markham steeles

**NORTH SCARBOROUGH**
முதலீடு
Industrial unit fr sale
Scarborough



BOOK NOW !!! DOWN.town toronto

**87 houses available**
**Power of sale**

**Salem/Taunton**




4 BM/ 3 WSRM Beautiful Home , Many Upgrades.9 Ft Celings, Oak Stairs,House Shows 10+++.

**North Ajax**



3 bm/ 3wsrm Newer! Semi-Detached Tribute Built Home Located In North Ajax

**SCARBOROUGH**

$264000
NEWER HOME

3 Bedroom Townhouse. Family Room On Ground Floor Is Finished. Beautiful Hardwood Floo

**Birchmount/finch**




2+1 CONDO apt in very good location clse to shop finch 24 hr ttc



# வீடு வாங்க, விற்க அழையுங்கள்...

## Vasanthy Niranjan

*Real Estate Broker*

**416-845-8272**

**Markham & Denison**



**$269,000**
2+1 Bedroom, 0-5 Years
For Lease $1,400

**Finch & Warden**



**$149,000**
2 BR, Completely Renovated

**Sewells & McLevin**



**$260,000**
3 Bedroom | 2 Washroom

**Markham & Passmore**



**$314,900**
3+1 Bedroom, 3 Washroom

**Brimley/ 1 Block N. Of Steeles**



**$319,900**
3 Bedroom, 2 Washroom

**McCowan & Denison**



**$327,000**
3 Bedroom, 2 Washroom

**Brimley & Eglinton**



**$349,500**
3+2 Bedroom, 2 Washroom

**McCowan & Denison**



**$369,800**
3+2 Bedroom, 3 Washroom

**Denison & McCowan**



**$383,900**
4+2 Bedroom, 4 Washroom

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife Today Realty Ltd.**
Brokerage*
31 Progress Ave. Suite 210
Toronto, ON M1P 4S6
*Independently Owned and Operated. REALTOR

# INSURANCE SERVICE

## Life Insurance



உங்களுக்கு உகந்த காப்புறுதி
சகல காப்புறுதி நிறுவனங்களுடனும்
ஒப்பீடு செய்து தரப்படும்

**Thana Manickavasagar**
*Broker*
**Cell: 416-728-5772**



**மருத்துவப் பரிசோதனையற்ற காப்புறுதி**

**New Low Rates**
**Approved within 48 Hours**

**85 வயத்துக்கு உட்பட்ட யாரும் நிராகரிக்கப்பட மாட்டார்கள்**

Business: 416-290-1200
thana7@gmail.com
www.thana.ca

# சேமமான சாரதி

**தொடர் - 3**

சேமமான சாரதி பற்றி நான்கு கட்டளைகளை முன் இரு கட்டுரைகளில் கவனித்தீர்குள். அவற்றின் தொடர்ச்சியாக இதோ ஐந்தாவது கட்டளை.

### கட்டளை 5: போதையில் வாகனம் செலுத்தாதீர்

போதை என்பதற்கு Webster's Dictionaryயில் தரப்பட்டுள்ள விளக்கம் "ஒரு விடயத்தை மிகைப்படுத்தி, குறைவுபடுத்தி, வலி குறைந்ததாகவோ அல்லது கூடியதாகவே காட்டுவது" என குறிப்பிடப்பட்டுள்ளது. போதையில் வாகனம் செலுத்தும் போது உங்கள் வாகனம் செலுத்தும் அவதானம் குறைந்துவிடும், பொதுவாக போதை என்னும் போது நாங்கள் மதுபோதையை தான் குறிப்பிடுகின்றோம். ஆனால் போதை என்பது மதுவினால் மட்டுமல்ல மருந்துகளால், களைப்பினால், கஞ்சா போன்ற வஸ்துகளால், வருத்தங்களினால் ஏற்படலாம்.

சில வருடங்களுக்கு முன் ஒரு விபத்தில் சாரதி அங்கயீனத்திற்குள்ளானார். அவர் விபத்துக்குப் பின் வாகனம் செலுத்தி மேலும் கூடிய அங்கவீனங்களுக்கு உள்ளானார். அவர் பெற்றோல் தரும் பெடலை தடியினால் உந்தி வாகனத்தை செலுத்தி விபத்துக்குள்ளாகி தனக்கு மேலும் அங்கவீனங்களைப் பெற்றதுடன் பாதசாரி ஒருவர் மரணத்துக்கும் காரணமானார். இது தேவைதானா?.

பொதுவாக போதைக்கு காரணம் மதுவும், போதைவஸ்துமே. இது மனிதர் மூலைக்கு மயக்கத்தை முதலாவது "மிடர்" குடிக்கும் போதே கொடுக்கத் துவங்கிவிடும். இரத்தத்தில் 0.08% மது சேரும் வேளையில் வேறு எந்த நிபந்தனையும் இல்லாமல் ஒருவரை போதையில் வாகனம் செலுத்தியதாக சட்ட நடவடிக்கை எடுக்கலாம். ஆனால், மதுவின் பங்கு இரத்தத்தில் 0.04%ஆக இருக்கும் வேளையிலேயே சாரதியின் அவதானம் குறையத் தொடங்கிவிடும் என்று ஆராய்ச்சிகள் காட்டியுள்ளன. மேலும் எடை கூடியவருக்கு கூடிய அளவு மது இருப்பினும் மதுவின் விகிதம் இரத்தத்தில் குறைவாக இருக்கும் என்பது



தெளிவாக தெரியும். மதுவினால் வரும் போதையின் கூடிய விபரீதம் என்னவென்றால், என்ன என்ன அவதானங்கள் வாகனம் செலுத்தத் தேவையோ அவை அனைத்தையும் மது பாதிப்படையச் செய்கிறது. உதாரணத்திற்கு பார்வை மற்றும் பல விடயங்களை ஒரே நேரத்தில் அவதானிப்பது போன்றவை பாதிக்கப்படுகிறது. மேலும் மூளை, மற்றும் உடல் உறுப்புக்கள் வேலை செய்யும் வேகம் குறைக்கப்படுகிறது. இதனால் ஆபத்துக்கள் ஏற்படுகையில் அதற்கு தகுந்த மாற்று நடவடிக்கை பிந்துவதால் விபத்தில் முடிகிறது. எனவே ஆபத்து கூடிய தூரத்தில் காணத்தக்கதாய் இருக்க வேண்டும். விபத்திலிருந்து பிழைத்துக்கொள்வதற்கு. உதாரணத்திற்கு 70 MPHஇல் செலுத்தும் வாகனம் மேலதிகமாக 103 அடி சென்று தான் நிறுத்தமுடியும். இது நிச்சயமாக விபத்திற்கு காரணமாக அமைந்துவிடும்.

நாம் அனைவரும் வாகனம் செலுத்துகையில் ஆபத்து இல்லாமல் வாகனத்தை கையாள விரும்புவோம். எனவே நாம் வாகனத்தை செலுத்தத் துவங்குமுன்பு எனக்கு கவனமாக செலுத்த முடியுமா?, நான் போதிய அளவு ஓய்வு எடுத்துள்ளேனா?, எனக்கு வருத்தம் ஏதும் உள்ளதா?, எனது செலுத்தும் திறமையை பாதிக்கும் மருந்து ஏதும் பருகி உள்ளேனா?, எனது புலன்கள் வாகனம் செலுத்துவதற்கு ஆரோக்கியமாக உள்ளதா?, நான் குடித்து போதிய அளவு நேரம் அது செமிப்பதற்கு நேரம் விட்டுள்ளேனா? (பொதுவாக ஒரு பெக் செமிப்பதற்கு ஒரு மணித்தியாலம் வேண்டும். அந்த சமிபாட்டை எதுவிதத்திலும் விரைவுபடுத்த முடியாது), மூக்குக் கண்ணாடி அவசியமாயின் அருகில் உள்ளதா? இப்படி பலதரப்பட்ட கேள்விகளுக்கும் பிரணவ மந்திரமாகிய 'ஓம்' என்று பதில் தரப்பட்டால் தான் வாகனம் செலுத்த தகுதியுடையவராவீர்கள். இத்தனை கேள்விகளுக்கும் விடை ஒருசில வினாடிகளில் கொடுத்துவிட முடியும்.

ஒரு விடயம் உறுதியாக கூறலாம். எல்லாரும்
- வேகமாக வாகனத்தை செலுத்தாமல்,
- அவதானித்துச் செலுத்தி,
- போதை இல்லாமல் வாகனத்தை செலுத்தி,
- சீட் பெல்ட் அணிந்து வாகனத்தை செலுத்தி,

அத்துடன் வாகனத்தின் பாதுகாப்பு அமைப்புகளாகிய 'Air Bag' போன்றவை சரயான முறையில் இயங்குமானால் ஒருவருமே வாகனவிபத்தில் மரணிக்க நேரிடாது. மேலே குறிப்பிட்ட நான்கு விடயங்களை கூடிய சிரத்தையுடன் அவதானித்து செலுத்தினால் பெருமளவு விபத்துகளை தவிர்ப்பதுடன் 50,000 உயிர்களையும் காப்பாற்ற முடியும்.



செந்தூரன் புனிதவேல்
- காப்புறுதி முகவர் -

நாங்கள் யாவரும் மனிதர் தானே. மனிதர்கள் தவறு செய்வது இயல்புதான். ஆனால் தெரியாது செய்யும் தவறுகள் மன்னிக்கப் படலாம். தண்டிக்கப்படலாம். ஆனால் தெரிந்து செய்யும் தவறுகள் தண்டிக்கப்பட வேண்டும். மன்னிக்கக்கூடாது. தவறுகள் ஏற்படலாம். ஆனால் அவதானம் இல்லாது வாகனம் செலுத்தக்கூடாது. நாம் இயன்ற அளவு ஆபத்துகளை தவிர்த்து வாகனத்தை செலுத்த வேண்டும்.

எனவே நீங்கள் வாகனம் செலுத்துவதில் 100% கவனத்தை செலுத்துங்கள். அளவான வேகத்தில் செலுத்துங்கள். ஒருபோதும் போதையில் செலுத்தாதீர்கள். நீங்கள் நீண்ட காலம் ஆரோக்கியமாய் இருந்து வாகனம் செலுத்த வேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

senthuran.punithavel@thaiveedu.com

■ ■ ■

**தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

***E-mail:thaiveedu@gmail.com***
***Fax: 416-849-0594***
***Tel: 416-646-3422***



# வாழ்வை வளமாக்குவது எப்படி?



## சிறீதரன் துரைராஜா

- ஆயுட் காப்புறுதி முகவர் -

எங்கள் வாழ்வில் போதிய அளவுக்குப் பணத்தைச் சம்பாதித்து, ஓய்வு பெறுவதற்குப் பல வழிகள் உள்ளன. எங்களுக்கும் எங்கள் குடும்பத்தினருக்கும் போதிய அளவு பணத்தைச் சம்பாதித்து விட்டால் அமைதியாக ஓய்வு பெற முடியும். இதற்காக ஒவ்வொருவரும் தங்களுக்குத் தெரிந்த வழிகளில் பணத்தைச் சம்பாதிக்க முயற்சிப்பது வழக்கம். உழைக்கும் போது வருமானத்தின் ஒரு பகுதியைச் சரியான முறையில் சேமிப்பது, ஒரு வியாபாரத்தை ஆரம்பித்து அதன் மூலம் பணவரவை அதிகரிப்பது, அல்லது ஒவ்வொருவரின் திறமைகளைப் பயன்படுத்தி அதிக அளவில் பணத்தைச் சம்பாதிப்பது எனப் பல வழிகள் உண்டு. இவற்றை விட சிலர் குறுக்கு வழிகளில் பணத்தைச் சம்பாதிக்கும் வழிமுறைகளும் உண்டு. இப்படியாக ஒவ்வொரு தனி நபரும் பல்வெறு வழிகளில் பல திறமைகளைப் பயன்படுத்தி அவர்களின் குடும்பங்களைச் செல்வந்தர்களாக உயர்த்த முடியும்

ஒவ்வொருவரும் வாழ்வில் செல்வந்தர்களாக மாறுவதற்கு, ஒவ்வொருவரிடம் சில திறமைகள், தகமைகள், அல்லது ஆற்றல், அதிஷ்டம் போன்ற விடயங்கள் தேவைப்படும் அத்துடன் சில ஆபத்துக்களையும் எதிர்நோக்கவேண்டிய நிலைமைகளும் காணப்படும். அதாவது ஆபத்துக்கள் என்னவென்றால் வியாபாரத்தில் இலாபநட்டங்கள், முதலீடுட்டுத்திட்டங்களில், பங்குச்சந்தையில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள், தனிமனித உழைப்பில் உழைக்கும் ஆற்றல், கடின உழைப்பு போன்ற பல் வேறு காரணிகளில் கவனம் செலுத்த வேண்டும். தனிமனித உழைப்புக்கு உடல்ரீதியாகவும், உளரீதியாகவும் ஆரோக்கியமாக இருப்பதும் அவசியமாகின்றது.

ஆனால் ஆயுட்காப்புறுதி மூலம் எதுவித ஆற்றல்கள் அல்லது எதுவித திறமைகள் தகமைகள் உபயோகிக்காமல் தங்கள் குடும்பத்தைச் செல்வந்தராக்குவதற்கான இலகுவான வழி உள்ளது.

ஆயுட் காப்புறுதி முகவர் ஆயுட் காப்புறுதியின் நன்மைகள் பற்றிக் கூறுவது வியாபார நோக்குடன் கூறுவது போல இருப்பினும், ஆயுட்காப்புறுதியினை வாங்குவதால் எங்களுக்கு என்ன நன்மைகள் உள்ளது என்பதனைக் கருத்தில் கொள்ள வேண்டும். சிறிய வயதில் இருந்து ஒரு சிறு தொகைப்பணத்தை ஆயுட் காப்புறுதிக்காகவும் அத்துடன் ஒரு சிறிய தொகைப் பணத்தை சேமிப்புக்காகவும் ஒதுக்கினால் மிகவும் இலகுவாக எது வித ஆபத்துமின்றி தங்கள் குடும்பத்துக்குப் பெருந்தொகைப் பணத்தைக் கிடைக்கச் செய்யலாம்.

ஆயுட் காப்புறுதி மூலம் எப்படிப் பணத்தைச் சம்பாதிப்பது என அறிவதற்கு முன்பு ஆயுட் காப்புறுதி நிறுவனங்கள் எப்படிப் பணத்தைச் சம்பாதிக்கின்றன என்பதை தெரிந்துகொள்ள வேண்டும்.

ஆயுட் காப்புறுதி நிறுவனங்கள், ஒருவர் இறந்தாலும் அல்லது அதிககாலம் வாழ்ந்தாலும் இரண்டு வழிகளிலும் பணத்தைச் சம்பாதிக்கின்றது. மேலும் ஆயுட்காப்புறுதி நிறுவனங்கள் பல வழிகளில் பணத்தைச் சம்பாதிக்கின்றன. உதாரணமாக, காப்புறுதி நிறுவனங்கள் அனைத்தும் சகல ஆயுட் காப்புறுதித் திட்டங்கள், மருத்துவ காப்புறுதித் திட்டங்கள், ஓய்வூதிய சேமிப்புத் திட்டங்கள் போன்ற பல திட்டங்களை விற்பனை செய்கின்கின்றன. ஒருவர் மரணமடைத்தால் ஆயுட் காப்புறுதிப் பணம் மட்டுமே கொடுக்க வேண்டும். உதாரணமாக, கடந்த காலப்

> “ **ஆயுட் காப்புறுதி முகவர்**
>
> **ஆயுட் காப்புறுதியின் நன்மைகள் பற்றிக் கூறுவது**
>
> **வியாபார நோக்குடன் கூறுவது போல**
>
> **இருப்பினும்,**
>
> **ஆயுட்காப்புறுதியினை வாங்குவதால்**
>
> **எங்களுக்கு என்ன நன்மைகள் உள்ளது**
>
> **என்பதனைக் கருத்தில் கொள்ள வேண்டும்.** ”

புள்ளிவிபரங்களின் அடிப்படையில் மரணமடைபவர்களின் தொகை 2 சதவீதம் மட்டுமே. ஆனால் பணம் கட்டுபவர்களின் தொகை 98 சதவீதமாகும். காப்புறுதி நிறுவனங்களிடம் நாங்கள் செலுத்தும் மாதந்த கட்டுப்பணம் சேர்த்து கொண்டே இருக்கும். அந்தப் பணம் பல்வேறு முதவீட்டுத் திட்டங்களில் முதலீடு செய்யப்படும். ஒருவர் இறக்கும் போது கொடுக்கப்படும் ஆயுட்காப்புறுதியின் தொகை, ஆயுட்காப்புறுதி நிறுவனத்தைப் பொறுத்தவரையில் ஒரு சிறு பகுதியாகும். காரணம் பணம் செலுத்துபவர்களின் தொகை 98 சதவீதமும், மரணம் அடைந்து பணம் பெறுபவர்களின் தொகை 2 சதவீதமுமேயாகும். எனவே எல்லோரும் ஒரே நேரத்தில் மரணமடைவதில்லை. அதே சமயம் எல்லோரும் மாதாந்த ஆயுட்காப்புறுதிக் கட்டணத்தைச் செலுத்தத் தவறுவதுமில்லை.

இன்னுமொரு உதாரணம், ஆயுட்காப்புறுதி பெற்றுக் கொண்ட சிலர் தொடர்ந்து இருக்கும் காலங்களில் பணம் செலுத்தாமல் இடையில் தடைப்படுவதுண்டு. இப்படியொரு கட்டத்தில் நீங்கள் ஆயுட்காப்புறுதிக்கு கட்டிய பணம் ஆயுட்காப்புறுதி நிறுவனத்துக்கு இலவசமாக கிடைக்கின்றது. அத்துடன் பலர் தவனைக்காப்புறுதித்திட்டங்கள் பெற்றுக்கொள்வதுண்டு.

தவணைக் காப்புறுதிக்கு (TERM INSURANCE) கட்டும் பணத்தில் 98 சதவீதமான பணம் ஆயுட்காப்புறுதி நிறுவனத்திற்கு வருமானமாக கிடைக்கின்றது காரணம் தவணைக் காப்புறுதி பெற்றுக் கொண்டவர்கள் அந்தக் காலத் தவணைக்குள் இறக்காமல் இருந்தால் அதன் பின்பு காப்புறுதியை தொடராமல் விட்டால் காப்புறுதி நிறுவனம் எந்தப்பணமும் கொடுக்க வேண்டிய அவசியமில்லை உதாரணமாக அடமானக் கடன் காப்புறுதிகள் (Mortgage Insurance) அனைத்தும் காப்புறுதி நிறுவனத்திற்கு கிடைக்கும் இன்னுமொரு இலகுவான பணவருமானமாகும் காரணம் அடமானக் கடன் (Mortgage Insurance) எடுத்தவர்கள் எல்லொரும் மரணமடைவதில்லை.

இது போல ஒருவர் மரணமடைந்தாலும் ஆயுட்காப்புறுதி நிறுவனங்களுக்கு வேறு இலாபங்களும் உண்டு. ஒருவர் கொடிய நோய்களுக்கான காப்புறுதியைப் பெற்றிருந்தால் அல்லது மருத்துவக் காப்புறுதியை அல்லது ஊனமுற்றேருக்கான காப்புறுதியை (Disability Insurance), வாழும் போது பயன் பெறும் (Living Benefits) காப்புறுதித் திட்டங்களைப் பெற்றிருந்தால் அதன் கட்டுப் பணம் எதுவும் ஒருவர் இறந்த பின்பு ஆயுட் காப்புறுதி நிறுவனம் வழங்கவேண்டியதில்லை. எனவே ஒருவர் இருந்தாலும் அல்லது இறந்தாலும் ஆயுட் காப்புறுதி நிறுவனங்கள் பணம் சம்பாதித்துக் கொண்டே இருக்கும்.

எனவே ஆயுட் காப்புறுதி நிறுவனங்களிடம் எங்கள் காப்புறுதிப்பணத்தைக் கொடுப்பதற்கு ஏராளமான பணம் உள்ளது. உதாரணமாக மாதம் 50 டொலர் செலுத்தி எப்படி 100,000 டொலர் கிடைக்கும் என கலைப்பட வேண்டியதில்லை. எல்லோரும் ஒரு நாள் மரணம் அடைவதற்கு உத்தரவாதம் இருப்பதால் காப்புறுதிப்பணம் கிடைப்பதும் உத்தரவாதம் ஆகின்றது. ஆனால் நிரந்தர ஆயுட்காப்புறுதி மூலம் மட்டுமே அந்த உத்தரவாதத்தை கொடுக்க முடியும்.

ஒவ்வொருவரும் நிரந்தர ஆயுட்காலம் முழுவதும் நீடிக்கக் கூடிய ஒரு காப்புறுதித் திட்டத்தைப் பெற்றுக் கொள்வதன் மூலம் உங்கள் கட்டிய பணத்தைவிட பல மடங்கு அதிக பணம் உங்கள் குடும்பத்துக்கு கிடைப்பதை நிச்சயப்படுத்த முடியும்.

எப்போதாவது ஒரு நாள் ஆயுட் காப்புறுதி பெற்றுக் கொண்டால் போதும் என்று தாமதிப்பதால் சில ஆபத்துக்களை எதிர்கொள்ள வேண்டிய சூள்நிலைகளும் ஏற்படும். அண்மையில் நண்பர் ஒருவர் ஆயுட்காப்புறுதியை அதிகரிக்கவேண்டும் என்று கூறினார். அவர் ஆரம்பத்தில் 1,00,000 டாலர்கள் மட்டுமே வைத்திருந்தார். பின்பு வசதி வரும்போது ஆயுட் காப்புறுதியித் தொகையை அதிகரிக்கும் நொக்கத்துடன் இருந்தார். தற்போது அவர் தனது ஆயுட்காப்புறுதியை அதிகரிப்பதற்கான விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்தால் அவருக்கு உடல் ஆரேக்கியம் பாதிக்கப்பட்டிருந்த காரணத்தினால் அவரது ஆயுட்காப்புறுதியின் மாதாந்தக் கட்டணம் மிகவும் அதிகமாகி விட்டது. வழமையான காப்புறுதிக் கட்டணத்திலும் பார்க்க இரண்டு மடங்கு தொகை கட்டவேண்டியுள்ளது. எனவே அவரால் அவ்வளவு பணம் கட்ட முடியவில்லை.

நீங்கள் ஆரோக்கியமாகவும் இளமையாகவும் இருக்கும் போது, கூடிய அல்லது போதிய தொகைக்கு காப்புறுதி பெற்றுக்கொள்வது சாலச் சிறந்தது. அத்துடன் ஆயுட்காப்புறுதி பெறுவதைத் தாமதித்துக்கொண்டு போவதால் இப்படியான சந்தர்ப்பங்களில் ஆயுட்காப்புறுதியினைப் பெறமுடியாமல் போய்விடும்.

sritharan.t@thaiveedu.com,

■ ■ ■

**இறுக்கமான சூழலில் இலகுவான தீர்வு**

- நிரந்தர ஆயுட் காப்புறுதி
- கொடிய நோய்களுக்கான காப்புறுதி
- ஈட்டுக்கடன் காப்புறுதி
- வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறதி
- **RRSP** • **RESP**

RBC Insurance | INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. | Unity Life of Canada | Canada Life

**சிறீதரன் துரைராஜா**

காப்புறுதி முகவர்

Member of Million Dollar Round Table | MDRT The Premier Association of Financial Professionals®

**416.918.9771**

759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407

info@life100.ca



# மில்லியன் டொலருக்கான ஆயுட்காப்புறுதி

# மிகக் குறைந்த கட்டணத்தில்

- **வயோதிபர்களுக்கான காப்புறுதி - Non Medical Insurance**
  85 வயதுக்குட்பட்ட அனைவருக்கும் மருத்துவ பரிசோதனை வேண்டியதில்லை
- **ஆயுட்காப்புறுதி - Life Insurance**
  மாதாந்தக் கட்டணம் மாறாது.. கட்டிய பணத்தை மீளப்பெறமுடியும்
- **கொடிய நோய்களுக்கான காப்புறுதி - Critical Illness Insurance**
  கொடிய நோய்கள் ஏற்பட்டால் 2 மில்லியன் வரை காப்புறுதி
- **குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத்திட்டம் - RESP**
  20% - 40% அரச மானியத்துடன் 15% அதிக போனஸ்

## ஒரு மில்லியன் டொலருக்கு

# $28.80

## மாதாந்தம் *

Rate based on 30 year female elite - non smoker (10 year term insurance)

Rate for 30 year male elite - non smoker (10 year term insurance)
**$42.30** per month

Sun Life Financial
Canada Life
Industrial Alliance Insurance and Financial Services Inc.
RBC Financial Group
Assumption Life
Unity Life of Canada

## சிறீதரன் துரைராஜா

MDRT Member of Million Dollar Round Table

**416.918.9771**

LiLand Insurance Inc. 759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407



இறுக்கமான சூழலில் ஓர் இலகுவான தீர்வு

NEW CREDIT - BAD CREDIT - NO CREDIT
BANKRUPT - NO PROBLEM
On Line - Credit Approvel, All kind of Credit Repairs
உங்கள் வியாபார முதலீடு வீட்டு முதலீடு ஆகியவற்றுக்கான
பணத்தேவைகள் உடன் ஒழுங்கு செய்து தரப்படும்
Shan Kanapathipillai
416.890.2300
e-mail: shankana@juno.com
LIC: M08002487
CENTUM
Looking out for your best interest

• Real Estate Law
• Business Law
YASO SINNADURAI
BARRISTER & SOLICITOR, NOTARY PUBLIC
THE LAW OFFICES OF YASO SINNADURAI
2100 Ellesmere Rd., Suite 202
Scarborough, Ont. M1H3b7
Tel: 416•265•3456
Fax: 416•265•2770

ACCESS LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION
INJURED?
Car Accident (MVA) Claims
Work Accident (WSIB) Claims
Bankruptcy
416-733-8880

வீடு வாங்கவும், விற்கவும்.......
Ramanan Ramachandran
Real Estate Broker
Office: 416.298.3200
Cell: 416.670.6467
I ♥ Referrals
HomeLife Today Realty Ltd., Brokerage
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6
HOMELIFE
HIGHER STANDARDS
*INDEPENDENTLY OWNED AND OPERATED







இம்மாதப் புகைப்படக் கலைஞர்

**திருமதி கௌரி சதானந்தன்**

கனடா ஸ்காபரோவில் வதியும் எழுத்தாளரும், தட்டெழுத்தாளருமான இவர் தனது ஓய்வு நேரங்களில் புகைப்படத்துறையிலும் ஆர்வம்காட்டி வருகின்றார்.

**உங்களிடம் (நீங்கள் எடுத்த) அழகான புகைப்படங்கள் இருக்கின்றனவா? அவற்றை நாங்கள் பிரசுரிக்க விரும்புகிறோம்.**

புகைப்படம் எடுத்தவரின் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல், புகைப்படம், எடுக்கப்பட்ட காட்சி அல்லது எடுக்கப்பட்டவருடைய விபரங்கள் என்பவற்றுடன் நீங்கள் எடுத்த புகைப்படத்தையும் அனுப்பிவையுங்கள். அவை இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

• சுமார் 10 வருடங்கள் Scotia வங்கியில் மோட்கேஜ் அனுபவம்
• 7 நாட்களும்... 24 மணி நேரமும் நட்பான சேவை
• குறைந்த வட்டி வீதம் • 0% Down Payment
Scotiabank
Ragavan Ramanathan
Mortgage Development Manager
• New • Switch • Refinance
Tel: 416•579•7533
Fax: 416•579•9433
ragavan.ramanathan@scotiabank.com

Insurance Ocean
PROTECT YOURSELF AND YOUR LOVED ONES!
Product we serve:
• Accident Death Insurance • Affordable Life Insurance • Critical Illness Insurance
• Disability Income Insurance • Mortgage Insurance • Permanent Life Insurance
• Pet Insurance • Term Life Insurance • Travel Insurance • No Medical Exam Insurance
We provide free training and prepare you for the certification
Now hiring at Ocean Mortgage Include: Marketing Specialist, Sales Reps.
Call today 416-321-2300
Get the best rate online @
www.insuranceocean.com
digi